# என் வசம் நானில்லை



அருணா நந்தினி

Please share your novels and comments @
http://tamilbooks.veeserve.com/mybb/

# என் வசம் நானில்லை

## 1

நெற்றியில் பூத்திருந்த வியர்வை முத்துக்களைத் துடைத்தவாறே முன் அறைக்கு வந்தாள் மீனா.

விசாலம் படுக்கையில் சாய்ந்து அமர்ந்தபடி வார இதழைப் படித்துக் கொண்டிருந்தார்.

"பாட்டி... வேலை முடிந்து விட்டது. எல்லாம் தயாராக எடுத்து வைத்திருக்கிறேன்... சாப்பாடு சூடு ஆறாமல் இருக்க 'ஹாட் பேக்'கில் வைத்திருக்கிறேன். நீங்களும் தாத்தாவும் சீக்கிரமா சாப்பிட்டுவிடுங்கள். அப்புறம்... கிண்ணத்தில் நெய்யை உருக்கி வைத்திருக்கிறேன்... வரட்டுமா பாட்டி..." என்று விடைபெற்றாள்...

"என்ன சமைச்சே மீனா... 'கம்'மென்று பெருங்காய வாசனை வந்தது... அதான்... கேட்டேன்" விசாலம் கேட்டதும்...

"பொரிச்ச கூட்டு பாட்டி.... தாத்தாவிற்கு பிடிக்குமேன்னு புடலங்காய் கூட்டு பண்ணினேன்... மிளகு ரசமும்தான்... இன்னிக்கு அவசர வேலை இருக்கு பாட்டி.... இல்லேன்னா... நானே இருந்து பரிமாறியிருப்பேன்" என்றாள் மீனா.

"பரவாயில்லேம்மா... நின்னு சமைக்கத்தான் என்னால் முடியல்லே... முந்தி மாதிரி உடம்பு கேட்க மாட்டேன்கிறது மூட்டு வலி... பிராணன் போகிறது. தாத்தாவுக்கோ வக்கணையா சாப்பிடணும்... என்னவோ... எங்க அதிர்ஷ்டம்... நீ கிடைச்சே... வகை வகையா சமைச்சுப் போட்றேம்மா மீனா... அது போதும்."

பாட்டியின் பாராட்டுதலைப் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டாள் மீனா...

மேசை மீது வைத்திருந்த தனது கைப்பையை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் அவள்.

வீட்டிற்கு வெளியே வந்ததும் வெயில் 'சுள்' என்று உறைத்தது.

அதைப் பொருட்படுத்தும் மனநிலையில் அவள் இல்லை. அத்தைக்கு உடம்பு சரியில்லை. உடனே டாக்டரிடம் காட்டியாக வேண்டும்...

கோபியிடம் சொல்லிவிட்டு வந்திருந்தாள்... அவன் அழைத்துச் சென்றிருப்பானா... தெரியவில்லையே... அவனுக்குப் போன் பண்ணிக் கேட்கலாமே... எதிரே இருந்த டெலிபோன் 'பூத்'தை நோக்கி நடந்தாள். அவனுடைய 'செல்'லுக்கு தொடர்பு கொண்டாள் மீனா.



'ஞாபகம் வருதே... ஞாபகம் வருதே...' பாடல் ஒலித்தது. அது நின்று.. கோபியின் குரல் 'ஹலோ' என்றதும்...

"கோபி... நான்டா... மீனா... பேசறேன்.." என்றாள் அவள்.

"ஆங்... சொல்லு மீனா..."

"அத்தையை டாக்டர்கிட்டே கூட்டிக் கொண்டு போனாயா."

"இப்ப ஆஸ்பிடலில்தான் இருக்கேன்... அம்மாவை 'அட்மிட்' பண்ணியாகணுமாம் மீனா... டாக்டர் சொல்கிறார்."

எதிர்பார்த்ததுதான்.. இருந்தாலும் நெஞ்சில் அடைத்தது.

"மீனா... உடனே வருகிறாயா..."

"இதோ.. ஆட்டோ பிடித்துக் கொண்டு வருகிறேன்.." என்று வைத்து விட்டு ஆட்டோவைத் தேடினாள்.

நல்லவேளையாய் உடனே கிடைத்தது. நர்ஸிங் ஹோமின் பெயரைச் சொல்லிவிட்டுக் கண்களை மூடிக் கொண்டாள்.

போன மாதம் 'செக் அப்'பிற்கு டாக்டரிடம் அழைத்துச் சென்றபோதே டாக்டர் எச்சரித்தார்.

அத்தைக்கு நல்ல ஓய்வு தேவை... சத்தான உணவு தேவை என்று...

அத்தை கேட்டால் தானே... ஒரு நிமிஷம் சும்மா இருக்காமல் எதையாவது செய்து கொண்டிருப்பார். கேட்டால் உட்கார்ந்து பொழுது போக்கினால் உடம்பு துருப்பிடித்துப்போகும் என்ற வாதம்தான்.

மீனாவும் தன்னால் முடிந்த அளவு சத்தான பழங்களை வாங்கிக் கொண்டு போய் தருவாள்... ஆனால் அதைத் தின்றால்தானே... காடு வா.. வா என்கிற காலத்தில் இது எதுக்கும்மா... சின்னஞ்சிறுசுகள்... நீங்க சாப்பிட்டு திடமா இருக்கணும்...'' என்று மறுத்துவிடுவாள்.

என்ன செய்ய முடியும்... குதிரையை நீர் தொட்டி வரை அழைத்துச் செல்ல முடியும்... குடிக்க வைக்க முடியுமா... பெருமூச்சு விடுவாள் மீனா.

இருந்தாலும் தாயைப் போல பாசமும் பரிவும் காட்டும் அத்தை இப்படி தேய்பிறையாய் தேகம் குன்றிப் போவதைப் பார்க்கையில் உள்ளம் நெக்குருகிப் போனது.

மீனாவிற்கு பெற்றவர்களின் முகங்கள் மறந்தே போய் விட்டது. சிறுமியாக இருந்தபோதே இருவரும் ஒருவர் பின் ஒருவராக இறந்து போனார்கள்.

அனாதையாய் நின்ற குழந்தையை மாமாவும் அத்தையும் தத்து எடுத்துக் கொண்டனர். அவளைத் தங்கள் மகளாக நினைத்து வளர்த்தார்கள்.

அவர்களின் பிள்ளை கோபியும் மீனாவைத் தன் சகோதரியாகவே பாவித்தான்.

கோபிக்கு பதினெட்டு வயதிருக்கும்போது மறுபடியும் துன்பம் கதவைத் தட்டியது...

நன்றாக... திடமாக வளைய வந்த கோபியின் தந்தை திடீர் என்று இறந்து போனார்...

நெஞ்சைப் பிடித்துக் கொண்டு ''விமலா... கொஞ்சம் நீர் கொடேன்... என்னவோ செய்கிறது...'' என்றவர் அந்த நீர் வருமுன் தலையை சாய்த்தது தான் வேதனை.



அந்த அதிர்ச்சி விமலாவிற்கு மரண அடியாகிப் போனது... உள்ளமும் உடலும் ஒடுங்கிப் போனாள்.

ஏதோ கடனுக்கு வாழ்வதுபோல... விரக்தியாய்... விட்டேற்றியாய்... வாழ்க்கையில் எந்தவிதப் பிடிப்பும் இன்றி... உப்புச் சப்பில்லாத வாழ்க்கையாய்... நடைப் பிணமாய் வாழ்ந்தாள்.

அவளை சகஜ நிலைக்குக் கொண்டுவர கோபியும் மீனாவும் எவ்வளவோ முயன்றும் அது இயலவில்லை. நத்தையாய் தன் கூட்டுக்குள் சுருண்டு கிடந்தாள். மனம் நன்றாக இருந்தால்தானே உடம்பும் ஆரோக்கியமாக இருக்கும்...

அதுதான்.. மெல்ல மெல்ல தேகம் கரைந்து தேய்ந்தது... இதோ... இப்போது ஆஸ்பத்திரியில் 'அட்மிட்' ஆகும் வரை வந்து விட்டது.

இப்பவும் அத்தை அங்கே புலம்பிக் கொண்டிருப்பாள்... ''ஏம்ப்பா உனக்கு வீண் செலவு... எப்படியும் போகற உசிரு. அதை ஏன் நிறுத்தி வைக்கப் பார்க்கிறே... பேசாமல் என்னை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போப்பா...'' என்று கோபியை நச்சரித்துக் கொண்டிருப்பாள்...

அத்தைக்கு உறுத்தல்... அனாவசியமாய் மகனுக்கு செலவு வைக்கிறோமே என்று...

கோபிக்கும் கஷ்டம் தான்...

கோபி அப்படி ஒன்றும் பெரிய படிப்புப் படிக்கவில்லை. பி.ஏ. என்று அந்தப் படிப்பில் காலை வைத்துவிட்டு 'விலுக்'கென்று எடுத்து விட்டான்...

நன்றாகப் படித்தவர்களே இந்தக் காலத்தில் வேலைக்காக நாயாக அலையும்போது... அரை குறைப் படிப்பிற்கு

யார் வேலை தருவார்கள்... கோபிக்கு வேலை குதிரைக் கொம்பாகிப் போனது.

கடைசியில் எங்கேயோ ஸ்கூட்டர்... பைக் என்று இரு சக்கர வாகனங்களின் உதிரி பாகங்களை விற்கும் கடையில் வேலைக்குச் சேர்ந்தான்...

கை நிறைய சம்பளம் என்று இல்லாவிட்டாலும்... ஏதோ வயிற்றை நிரப்பும் அளவாவது வருவாய் வந்தது...

அவனது சுமையைக் குறைக்க எண்ணினாள் மீனா. அவளும் வேலை தேடி அலைந்தாள்... ஆனால் மனசு திருப்திப் படும்படியாய் எந்த வேலையும் கிடைக்க வில்லை. அவள் படித்த படிப்பு அப்படி...

டிப்ளமா இன் ஹவுஸ் கீப்பிங்!

அவளால் அதுதான் முடிந்தது... மாமா இருந்திருந்தால் மீனாவை நன்றாகப் படிக்க வைத்திருப்பார்... மீனா படிப்பில் சுட்டி என்பதால் நல்ல உயர் படிப்பு படிக்க வேண்டும் என்று உற்சாகமூட்டும் மனிதர்... 'சட்'டென்று மறைந்தது மீனாவின் துர்பாக்கியம் தான் என்று சொல்ல வேண்டும்.

ஏதோ 'ஸ்காலர்ஷிப்' கிடைத்து... அரசு 'பாலிடெக் னிக்'கில் இந்தப் படிப்பு முடித்தது அவள் செய்த புண்ணியம்தான். 'மேலே படி மீனா... நான் பணம் தர்றேன்'' என்று கோபி சொன்னாலும்... மீனா ஒப்ப வில்லை... அவனுக்கு மேலும் பாரமாக இருக்கக் கூடாது என்ற உறுதியுடன் இருந்தாள்.

அந்த நேரத்தில் தான் தானாகவே ஒரு வேலை வந்தது. கடவுள் கொடுத்த வரப்பிரசாதம் என்று நினைத்தாள் மீனா.



ஒரு வயதான தம்பதியினருக்கு சமைத்துப் போட்டு... அவர்களது வீட்டையும் கவனிக்கும் வேலை... நல்ல சம்பளம்... மறுக்க மனம் வருமா என்ன...

ஒரே மகன் டெல்லிக்கு மாற்றலாகி விட... குடும் பத்துடன் செல்ல வேண்டிய சூழ்நிலை... ஆனால் பெரியவர்களுக்கு அந்த வீட்டை விட்டு நகரவும் மனமில்லை.

சொந்த வீடு... அதுவும் பெரியவர் பிறந்து வளர்ந்த வீடு. கடைசி காலத்தில் அந்த வீட்டிலேயே உயிர் விட வேண்டும் என்ற எண்ணம்..

மேலும் விசாலம் பாட்டியின் ஆஸ்துமா உடம்புக்கு டெல்லி சீதோஷ்ணம் ஒத்து வருவது கஷ்டம்தான்.

எனவேதான் அவர்களுடைய மகன் புறப்படுவதற்கு முன் இந்த ஏற்பாடு செய்துவிட்டுச் சென்றான்.

அதுவும் மீனா தெரிந்த பெண்... நம்பகமானவள் என்ற நிம்மதியுடன் கிளம்பினான்.

மீனாவிற்கும் பரம சந்தோஷம்... மாமாவிற்கு தெரிந்த நண்பர் சேகர் மாமா சொன்னதும் ஒத்துக் கொண்டு விட்டாள்...

விசாலம் பாட்டியும் அவரது கணவரும் நல்ல மனி தர்கள். மீனாவை வேற்று மனுஷியாகவே கருதவில்லை. மீனாவின் புன்னகை ததும்பும் முகமும்... இனிய சுபாவமும்... பொறுப்பாய் நடந்து கொள்ளும் விதமும் ஈர்த்தன...

அவள் மீது அன்பைப் பொழிந்தனர் அந்த முதிய தம்பதியர்...

"அம்மா... நீங்க சொன்ன ஆஸ்பத்திரி வந்தாச்சு இறங்குங்க..." ஆட்டோ டிரைவரின் குரல் அவளை நினைவுலகத்திற்கு இழுக்க... அவசரமாய் இறங்கினாள் அவள் பணம் கொடுத்துவிட்டு மருத்துவமனைக்குள் விரைந்தாள். மனசு படபடத்தது...

விசாரித்துக் கொண்டு அத்தை இருந்த வார்டுக்குச் சென்றாள். அத்தைக்கு 'டிரிப்ஸ்' பொருத்தப்பட்டு இருந்தது. களைப்பில் உறங்கிக் கொண்டிருந்த அத்தையை வேதனையுடன் பார்த்தாள் 'கொழுக் மொழுக்' என்று அமுல் பேபி போல இருந்த அத்தையின் முகத்தில் இப்போது எத்தனை சுருக்கங்கள். கன்னங்களில் டொக்கு விழுந்து... கண்களின் கீழ் கருவளையங்கள் படர்ந்து... எண்பது வயது கிழவியின் தோற்றம்! இதயம் துடித்தது... இழந்து விடுவோமோ என்று உள்ளம் பதறியது.

கோபியைத் தேடியது கண்கள். எங்கே சென்று விட்டான். அதே நேரம் கோபியும் வந்தான்... வாடிய முகத்துடன்...

"என்ன சொன்னார்கள் கோபி... டாக்டர் வந்து பார்த்தார்தானே..."

"எல்லா டெஸ்ட்டும் எடுத்தாகி விட்டது.. மீனா... அம்மாவுக்கு 'கேன்சர்' இருக்கலாம்னு சந்தேகப்படுகிறார் டாக்டர்... அதற்கான 'டெஸ்ட்' எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது.. எனக்கு பயமா இருக்கு மீனா.. அம்மாவுக்கு எதுவும் ஆகாதே" குரலில் விம்மல் தெரிந்தது.

மீனாவிற்கு அதிர்ச்சி!



தலையில் இடிவிழுந்த மாதிரி இருந்தது... கேன்சரா... அத்தைக்கா... கடவுளே... கண்களில் சரசரவென்று கண்ணீர் வழிந்தது.

அடுத்ததாய் இன்னொரு இடி!

கோபி சொன்னான்... "உடனே முப்பதாயிரம் பணம் கட்ட வேண்டுமாம் மீனா... இன்னும் கட்ட வேண்டி வருமாம்... உடனே ஆபரேஷன் பண்ண வேண்டி வரும். அம்மாவின் உடலில் ரத்தம் குறைவு... அதற்கு மருந்து மாத்திரை கொடுத்து சரி பண்ணிவிட்டு ஆபரேஷன் பண்ணணுமாம்... தவிர 'கேன்சர்'னு ஊர்ஜிதம் ஆனா ஏதேதோ ட்ரீட்மென்ட் கொடுத்தாக வேண்டுமாம்...

பணத்தை ரெடி பண்ணிக் கொள்ளும்படி சொல்லி விட்டார் டாக்டர்... மீனா... அத்தனை பணத்திற்கு நாம எங்கே போவோம்னு எனக்குத் தெரியல்லை..." கண்கள் கலங்கியவாறு சொன்னான் கோபி.

மீனாவுக்கு மலைப்பு... ஆமாம்.. அத்தனை பணத்திற்கு எங்கே போவது... யார் கொடுப்பார்கள்.

விசாலம் பாட்டியிடம்... சே! கூடாது... நம்மீது இருக்கும் பாசமும் பரிவும் போய்விடும்... நல்ல அபிப்ராயம் மாறி விடும்...

கடவுளே... எங்களுக்கு வழிகாட்டேன்... யார் மூலமாவது எங்களுக்கு...

அப்போதுதான் 'பளிச்'சிட்டது... நளினா அக்கா! அவளை ஏன் மறந்து போனேன்...

நளினா அக்காவிடம் கேட்டால் நிச்சயம் உதவுவாள்.

உடனே தனக்குள் யானை பலம் வந்து சேர்ந்தது போல உணர்ந்தாள்.

''கோபி... கலங்காதே.. நிச்சயம் நமக்குப் பணம் கிடைக்கும்... எனக்கு அதில் நம்பிக்கை இருக்கிறது. நீ அம்மாவைப் பார்த்துக் கொள். நான் வருகிறேன்...''

''எங்கே...''

''வந்து சொல்கிறேன்.. பை...''

அவள் புறப்பட்டு சென்றாள்... அவளது வாழ்வில் நளினா மூலம் திருப்பம் வரப்போகிறது... அதுவும் எந்த மாதிரி... என்று அப்போது அவள் உணர்ந்திருக்கவில்லை...

விதியின் விளையாட்டு ஆரம்பம் ஆனது...

## 2



ஓடாத குறையாய் விரைந்தாள் மீனா.

மனம் அடித்துக் கொண்டது... பணம் கிடைக்குமா... நளினா அக்கா வீட்டில் இருப்பாளா... ஒருவேளை... எங்கேயாவது போயிருந்தால்...

நம்பிக்கையும்... அவநம்பிக்கையும் மாறிமாறி ஆட்டுவிக்க... படபடத்த நெஞ்சுடன் சென்றாள்.

எதிரே... கண்ணில்லாத ஒரு பிச்சைக்காரன் கையேந்தி வருவதைக்கண்டு பரிதாபப்பட்டு.. தன் கைப்பையிலிருந்து ஒரு ரூபாயை எடுத்து போட்டுவிட்டு நடந்தாள்.

குறுக்குத் தெருவில் நுழைந்து... கொஞ்ச தூரம் நடந்ததும் திருப்பம் வந்தது. வரிசையாய் பங்களா வீடுகள்...



ஒரு வீட்டைக் காட்டிலும் இன்னொரு வீடு அமைப்பிலும் அழகிலும் மிஞ்சும் வண்ணம் இருந்தது.

மூன்று வீடு தள்ளிப்போய்... நான்காவது பங்களாவின் கேட்டைத் திறந்தாள்.

அவளைப் பார்த்ததும் விசுவாசத்துடன் ஓடிவரும் நாய்க்குட்டியாய் கூர்க்கா குடுகுடுவென்று வந்து வினயமாய் நின்று சல்யூட் அடித்தான்.

''அம்மா இருக்காங்களா'' என்று கேட்டாள் மீனா.

''இருக்கிறார்கள்'' என்று அவன் சொன்னதும் நிம்மதியடைந்தாள்.

மீனாவின் வரவைப் பார்த்ததும் நளினாவின் முகத்தில் வியப்பு...

''என்ன மீனா... திடீர்னு வந்திருக்கே... என்ன விஷயம்... சரி... வெயில்ல வந்திருக்கே. முதல்ல ஏதாவது 'ஜில்'லுன்னு குடி... ஏய்... வனஜா... போய் ஐஸ் போட்டு சர்பத் கொண்டு வா...'' என்றாள்.

நளினாவின் சிநேகிதி என்ற முறையில் மீனாவிற்கு அந்த வீட்டில் வரவேற்பும் உபசரிப்பும் இருக்கும்.

நளினாவும் மீனாவைப் போல ஏழைதான்... இளமைப் பருவத்தில் எந்த வசதியையும் கண்டவள் இல்லை... அவளின் ஒரே மூலதனம் அழகுமட்டுமே.. தன் சாதுர்யத்தால் அந்த அழகை உபயோகித்து... தன் வாழ்க்கைத் தரத்தையே மாற்றிக் கொண்டதுதான் சாமர்த்தியம்! இப்போது அவள் ஒரு பெரிய தொழிலதிபரின் மனைவி... கோடீசுவரனின் பட்டத்து ராணி! நளினா... மீனாவை விட ஏழு வயது மூத்தவள்...

வயது முப்பதைத் தொட்டாலும்... தன் மேனியை 'சிக்'கென்று வைத்திருந்தாள்.

'ஜிம்'மில் உடற்பயிற்சியும்... அழகு நிலையத்தில் மூலிகை சிகிச்சையும்... வேளா வேளைக்கு உயர் சத்து உணவும்... தரமான விலையுயர்ந்த அழகு சாதனங்களின் உபயமும் தான் அதற்குக் காரணங்கள்... இப்போது பணத்தைப் பற்றிய கவலை தான் இல்லையே...

அவள் எள் என்றால் எண்ணெயுடன் நிற்கும் கணவர் சக்ரபாணி... அவள் ஆசைகளையெல்லாம் பூர்த்தி செய்யத் தயாராக இருந்தார். அவள் கண்பட்ட வஸ்துகள் அனைத்தையும் வாங்கி... அவளது காலடியில் குவித்தார்.

பலவிதமான தங்க... வைர நகை செட்டுகள்... விலையுயர்ந்த ஆடைகள்... எல்லாவற்றையும் அள்ளி வந்து கொட்டினார். அவளும் அதற்காகத்தானே அவரை மணந்தது. அவள் ஆசைப்பட்ட சொர்க்க வாழ்வு அவளுக்கு கிடைத்துவிட்ட கர்வம்...

இப்போதும் அந்த கர்வத்துடன்தான் ஒய்யாரமாய் உட்கார்ந்திருந்தாள். எத்தனை அழகு இந்த நளினா அக்கா! அவளுக்கு முப்பது வயது என்றால் யாராவது நம்புவார்களா என்ன... மேனியழகை கட்டிக் காப்பதில் அவளுக்கு நிகர் அவளேதான்... செல்வச் செழிப்பு அவளின் மேனியில் வர்ண ஜாலத்தையல்லவா வாரித் தெளித்திருக்கிறது... செல்வச் சீமானின் மனைவியாச்சே!

அதுதான் தோகை விரித்த மயில் மாதிரி இருக்கிறாள்...

ஒரு தடவை குனிந்து தன்னையும் பார்த்துக் கொண்டாள் மீனா.



மலிவான விலையில் வாங்கிய சேலை... என்ன.. 'பளிச்'சென்றா இருக்கும்... பெருமூச்சு விட்டாள்.

வெயிலில் அலைந்து... அலைந்து தன் சருமம் வரட்டென்று உலர்ந்து போயிருப்பதைப் பார்த்துவிட்டு நளினாவை ஏறிட்டுப் பார்த்தாள்.

வெண்ணெயாய் வழவழத்த பட்டுப் போன்ற சருமம்! விலை உயர்ந்த அழகு சாதனங்களின் கை வண்ணம்! பல ஆயிரங்களை விழுங்கி ஏப்பம் விட்டிருக்கும் அந்த சாமந்தி நிறச் சேலை அவள் மேனியின் வளைவு நெளிவுகளை தெளிவாய்... அம்சமாய் காட்டியது. அதே நிற ஸ்லீவ்லெஸ் சோளியில் வாழைத் தண்டு கைகள் மொழுமொழு என்று இருந்தன...

இதென்ன... என்றைக்கும் இல்லாத ஒப்பீடு...

நளினா அக்கா எங்கே... நான் எங்கே...

என்னவோ சொல்வார்களே... யானை மேல் அம்பாரி சவாரி என்றால் அதில் போகிறவர்களின் பாக்கியம். பாமரன் பார்த்து பெருமூச்சு விட்டு என்ன பயன்... மலையும் மடுவும் சமமாகாதே!

ஊகூம்... தலையை சிலுப்பிக் கொண்டாள்... வந்த விஷயத்தை கவனிக்க வேண்டும்... பாவம்... அத்தை அங்கே உயிருக்குப் போராடும் நேரத்தில்... இதென்ன குப்பை நினைவுகள்... பணிப் பெண் கொண்டு வந்து நீட்டிய ஆரஞ்சு சர்பத்தை வாங்கிப் பருகினாள்.

வெயிலின் களைப்புக்கு மிகவும் இதமாய்... இனிமையாய் இருந்தது...

அவள் பருகி முடிக்கும் வரை காத்திருந்தாள் நளினா...

''ம்ம்... இப்ப சொல்லு மீனா... என்ன விஷயம்னு...'' சற்றுத் தயங்கிவிட்டு... தன் அத்தையின் நிலையை எடுத்துச் சொன்னாள் மீனா.

''திடீர் என்று இப்படி ஆகிவிட்டதுக்கா... இந்த இக்கட்டான நிலையில் எனக்கு உங்க நினைவுதான் வந்தது. அதான்.. ஓடிவந்தேன்...''

புருவங்களை உயர்த்தி யோசித்தாள் நளினா.

பணம் என்றதும் தயக்கமா... வயிற்றைக் கலக்கியது மீனாவிற்கு...

''திடீர் என்று சொன்னால் எப்படி... என்கிட்டே 'கேஷாக' இப்ப எதுவும் இல்லையே மீனா...''

''மாமாவிடம்...''

சக்ரபாணியை அவள் அழைப்பது அப்படித்தான்.

சக்ரபாணிக்கு வயது அம்பத்தைந்து... அவருக்கு நளினா இரண்டாவது மனைவி.

முதல் மனைவி இறந்த பின்பு திருமணமே வேண்டாம் என்று இருந்தவர்... நளினாவை ஏதோ ஒரு விழாவில் பார்த்து விட்டு தன் வைராக்கியத்தை கைவிட்டார்...

அவர் தன் விருப்பத்தை சொன்னதுமே நளினா சம்மதித்து விட்டாள்... சக்ரபாணியின் செல்வமும்... அந்தஸ்தும் அவளை உடனே சம்மதிக்க வைத்து விட்டது.

நளினாவை மணந்த பின்பு தான் சக்ரபாணியின் சந்திப்பு.. மீனாவும் நளினாவும் ஒரே ஊர்தான்... ஒரே தெருவாசிகள். அந்தப் பழக்கத்தின் காரணமாய் மீனாவைத் தன் வீட்டிற்கு அழைத்தாள்... ஏதாவது



விருந்து... விழா என்றால் மீனாவும் அவளுக்கு உதவுவது வழக்கம். சக்ரபாணிக்கு ஒரு மகன் இருந்தான்... அப்பாவின் செல்லப் பிள்ளையாக இருந்தவன்...

தந்தையின் மறுமணம் அவனை உலுக்கிப் போட்டது. அப்பா இன்னொரு திருமணம் செய்து கொண்டார் என்ற கோபத்தைவிட... தகுதியில்லாத ஒருத்தியை... டாம்பீகக்காரியை தன் தாயின் இடத்திற்கு கொண்டு வந்து விட்டாரே என்ற கொதிப்புத்தான்...

குத்து விளக்கு எரிந்த இடத்தில் மின் விளக்கை வைத்தது போல... பகட்டு மட்டுமே... அழகு இல்லையே...

அம்மன் சிலை வீற்றிருந்த இடத்தில் அலங்கார பொம்மையை நிறுத்தினதுபோல... கவர்ச்சி மட்டுமே... பரவசம் இல்லையே...

வேதனை மனதைக் கொத்திப்பிடுங்க... அந்த வீட்டில் தங்கவும் விருப்பம் இல்லாமல் வேறு வீட்டிற்குச் சென்று விட்டான்.

நளினாவைப் பார்த்த கணமே வினோத் புரிந்து கொண்டான். தந்தையிடம் இருக்கும் பணம் தான் காரணம்... உண்மையில் தந்தை மீது சுத்தமாய் பிரியம் இல்லை...

திருமணம் ஆகி வீட்டினுள் காலையெடுத்து வைத்தவளின் கண்கள் அலைந்து ஒவ்வொரு பொருள் மீதும் ஆசையாய் படிவதைக் கண்டு முகம் சுளித்தான்...

பேசாமல்... தன் தந்தை ஒற்றையாகவே இருந்திருக்கலாம் என்று தோன்றியது...

மீனா அங்கு அடிக்கடி வந்தாலும் வினோத்தின் பரிச்சயம் இல்லை... ஏதோ ஒரு விருந்தின்போது பார்த்ததுதான்.

ஆனால் சக்ரபாணிக்கு மீனாவை ரொம்பவும் பிடித்திருந்தது... அவளைப்போல ஒரு மகள் தனக்கு இல்லையே என்ற ஏக்கம் அவருக்கு வந்ததும் நிஜம். மீனாவின் அடக்கமும்... ஆர்பாட்டமில்லாத அமைதியும்... வேலைகளைக் கருத்தாகச் செய்யும் திறனும் பார்த்து விட்டு... இவள் எனக்கு மகளாக இருந்திருக்கக் கூடாதா என்று நினைப்பது வழக்கம்.

அந்த அன்பில் நளினாவிடம் அவ்வப்போது பணம் தந்து மீனாவிற்கு நல்ல புடவைகளையும்... நகைகளையும் வாங்கித் தரச் சொல்வார்... ஆனால் நளினாவோ அந்தப் பணத்தை செலவழித்து விட்டு... ஓ! வாங்கித் தந்தேனே என்று சொல்லி விடுவாள்.

மனசாட்சியின் முள் குத்துதலுக்காக... தன் சேலைகளில் பழையதானவைகளைக் கொடுத்து... கவரிங் நகைகளையும் வாங்கித் தந்து விடுவாள்.

மீனாவிற்கும் தன்மான உணர்வு அதிகம்... சக்ரபாணி தான் வாங்கித் தரச் சொன்னார் என்றால் வாங்க மறுத்து விடுவாள் என்பது நிச்சயம்.

இப்பவும் வெகு சங்கோஜமாய் தான் கேட்டாள்...

வேறு வழியில்லையே...

"வேண்டாம் மீனா.. அவர்கிட்டே கேட்க முடியாது... ஏற்கனவே நிறைய பணம் வாங்கி செலவு பண்ணி விட்டேன். நான் பணத்தை நீராக செலவழிப்பதாய் வினோத் கண்டனம் செய்கிறான். இப்படியே செல்வத்தைக் கரைத்து என் கணவரை ஓட்டாண்டியாக்கி விடுவேனாம்... பார்... இந்த லட்சணத்தில் உனக்குப் பணம்



வாங்கிக் கொடுத்தேன் என்று அவனுக்குத் தெரிந்தால்... வேறு வினையே வேண்டாம்... பாம்பாய் கொத்திப் பிடுங்கி விடுவான்."

நம்பிக்கையெல்லாம் வடிந்து... அந்த இடத்தில் நிராசைக் குடி கொள்ள.. எழுந்தாள் மீனா...

"நான் வரட்டுமா அக்கா..." என்று புறப்பட்டாள். நெஞ்சுக் கூட்டுக்குள் துக்கம் முட்டிக் கொண்டு வந்தது... இனி என்ன செய்வது... அத்தையை எப்படிக் காப்பாற்றுவேன்...

தளர்ச்சியுடன் வெளியே வந்தாள்...

அதே நேரம் 'செல்' ஒலிக்க... அதை எடுத்து காதில் வைத்தாள் நளினா...

அவள் முகம் மாறியது... மறுமுனையில் தொடர்பு அறுந்ததும் நெற்றியை விரலால் அழுத்தினாள்...

புதிய தலைவலியா... இதற்கு என்ன வழி...

சட்டென்று யோசனை... முகத்தில் 'பல்ப்' எரிந்தது...

பணிப்பெண் வனஜாவைக் கூவியழைத்தாள்.

"போய் மீனாவை உடனே அழைத்து வா... ஓடு..." என்று கட்டளையிட்டாள்.

பத்து நிமிடங்களில் மீனாவும் வந்தாள்.

"ஆங்... மீனா.. திடீர் என்று ஒரு யோசனை வந்தது. எனக்குத் தெரிந்தவர்... குடும்ப நண்பர் அவரிடம் கேட்டுப் பார்க்கலாமே என்று நினைத்தேன்.. அவரிடம் உடனேப் பேசியும் பார்த்தாச்சு... அவர் உனக்கு உதவ சம்மதித்து விட்டார்... ஒரு லட்சம் கூடத் தருவார்.. அத்தனை நல்லவர்..."

கண்களை விரித்தாள் மீனா...

"என்னக்கா... முன்பின் தெரியாத ஒருத்திக்கு ஒரு லட்சம் தருகிறாரா... நம்ப முடியவில்லையே. இந்தக் காலத்தில் இப்படியும் ஒருத்தரா... வியப்பாக இருக் கிறதுக்கா..."

"அதான்... நல்லவர்னு சொன்னேனே... 'பாண்ட் பேப்பர்' செக் எதுவும் வாங்காமலே பணம் தருவார் என்றால் பாரேன்..."

"அப்போ... ஷூயூரிட்டின்னு..."

"ஒரு மண்ணும் தேவையில்லை மீனா.. என்னை நம்பித் தருவார்.. போதுமா.. உனக்கு ஒரு லட்சம் தேவையா..."

"அய்யோ... அவ்வளவு எல்லாம் வேண்டாம்க்கா... ஒரு அம்பதாயிரம் போதும். அத்தைக்கு மருத்துவ செலவுக்கு அவ்வளவு தேவைப்படும்..."

"அவ்வளவுதானே... கவலையை விடு... நீ தைரியமா போ மீனா... எந்த ஆஸ்பத்திரின்னு சொல்... நானே கொண்டு வந்து தருகிறேன்.. ஓகே..."

"உங்களுக்கு எப்படி நன்றி சொல்வேன்னு தெரியல்லே நளினாக்கா..." கண்கள் கசிய சொன்னாள் மீனா.

"நான் உனக்கு சிநேகிதிடீ.... தெரிஞ்சுக்கோ..."

"தாங்க்ஸ்க்கா... அப்போ ஆஸ்பத்திரியில் நீங்க வரும் வரை நான் காத்திருப்பேன்..."

மீனா புறப்பட்டுச் செல்ல...

நளினாவின் முகத்தில் வெற்றியின் களிப்பு தெரிந்தது. பலியாடு கிடைத்து விட்டது...



ஒரே கல்லில் இரண்டு மாங்காய் தான்...

சிரித்துக் கொண்டாள் நளினா...

# 3

நேரம் ஆக ஆக டென்ஷன் அதிகமாகியது மீனா விற்கும் கோபிக்கும்.

"என்ன மீனா... உன் நளினா அக்காவைக் காணோம். வருவது நிச்சயமா... எனக்கென்னவோ சந்தேகம் தான்..." கோபி புலம்பினான்.

மீனாவிற்கும் படபடப்புதான்... என்றாலும் அதை அடக்கிக் கொண்டாள்.

"நிச்சயம் வருவார்கள் கோபி... பணத்தை 'அரேன்ஜ்' பண்ண வேண்டாமா..."

"வந்தா சரி... அம்மாவை உடனே அட்மிட் பண்ணி யாக வேண்டும்."

"அதோ... நளினா அக்கா... நான் சொல்லலை... வந்து விடுவார்கள்னு..." என்று சொன்னவள் முகம் மலர்ந்து வரவேற்றாள்.

நளினா அருகில் வந்ததும் லாவண்டரின் இனிய நறுமணம் நாசியை வருடி கிறங்க வைத்தது.

அந்த மருத்துவமனையில் வந்து போனவர்களின் கண்கள் நளினாவை வெறிப்பதைக் கண்டாள் மீனா...

ஏதோ சினிமா நடிகையைப் போல அதீத ஒப்பனையுடன் ஒயிலாய் வந்திருந்த நளினா அந்த சூழ்நிலைக்குச் சற்றும் பொருந்தாதவளாய் தெரிந்தாள்.

''மீனா... நீ கேட்ட மாதிரி அம்பதாயிரம் கொண்டு வந்திருக்கேன்... இன்னும் வேணும்னாலும் கேள்... கொண்டு வந்து தருகிறேன்...'' என்றாள் நளினா.

''இல்லேக்கா... இதுவே போதும்... இதைத் திருப்பித் தருவதே பிரம்ம பிரயத்தனம் தான்... எப்படியோ சமாளித்துக் கொள்கிறோம். ரொம்ப நன்றி நளினாக்கா... இந்த உதவியை ஜென்மத்திற்கும் மறக்க மாட்டேன்'' கண்களில் நன்றி வழிய சொன்னாள் மீனா.

''அடடா... என்ன இது மீனா... உன்னைக் கேட்டேனா... பணத்தை எப்போ திருப்பித் தருவேன்னு... நீ தரவே வேண்டாம்... புன்னகையுடன் சொன்னாள் நளினா. திகைப்புடன் பார்த்தாள் மீனா... பணத்தைத் திருப்பித் தர வேண்டாமா...

அதைப் பார்த்துவிட்டு நளினா அவளைத் தட்டிக் கொடுத்தாள். ''முதல்ல உன் அத்தையைக் கவனி... அப்புறம் பேசுவோம். நான் வர்றேன் மீனா...''

அவள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தாள் மீனா.. அவளால் நம்பவும் முடியவில்லை... அம்பதாயிரம் ரூபாய்.... சும்மாவா... நளினா வந்து போனது கனவா... இல்லை பிரமையா என்பதுபோல ஒரு பிரமிப்பு...

ஆனால் நளினா வந்தது நிஜம் என்பதை அவள் விட்டுச் சென்ற லாவண்டரின் மணம் நாசியை வருடி சொன்னது. நளினா அக்கா சொன்னது போல அந்த மனிதர்



கொடையாளியாகத்தான் இருக்க முடியும்... கலியுக வள்ளல்! அதை வாங்கித் தந்த அக்காவிற்கும் கூட நல்ல மனம்தான். இந்தக் காலத்திலும்... வட்டியைப் பிழிந்து வாங்கும் மனிதர்கள் இடையே... இப்படி அசலும் வேண்டாம் என்று சொல்லும் மனிதரும் இருக்கிறார் என்றால்... அது விந்தை தான்! எப்படியோ... அத்தையோட சிகிச்சைக்கு வழி கிடைத்தது.

சந்தோஷமாய் கோபியிடம் வந்தாள்.

நளினா சொன்னதை அவனிடம் சொன்னபோது... அவனது முகம் மலர்ந்து போனது.

''ஏன் மீனா.. அந்த நளினா அக்கா இன்னும் பணம் வேணும் என்றாள் கேள் என்கிறாளே... வாங்கிக்கக் கூடாதா...'' என்றான் அவன்.

''எதுக்கு கோபி... இப்போதைக்கு இந்தப் பணம் கிடைத்ததேன்னு திருப்திப் படணும்... ரொம்பவும் ஆசைப்படக்கூடாது. வா.. இப்ப... டாக்டரிடம் போகலாம்...'' என்று நடந்தாள் அவள்.

அவனுடன் நடந்தவாறு சொன்னான் கோபி.

''இல்லே... மீனா... உன்கிட்டே ஒரு விஷயம் சொல்ல நான் மறந்து விட்டேன். என்னோட 'ஷாப்' 'ஓனர்' வேலு இருக்கார் இல்லையா. அவர் இந்தக் கடையை விற்று விட்டு தன் சொந்த ஊருக்குப் போகப் போறாராம். யாராவது நல்ல 'பார்ட்டி' கிடைத்தால் கொடுத்து விடலாம்னு அவர் எண்ணம். அதை ஏன் நான் வாங்கி... சொந்தத் தொழில் பண்ணக் கூடாது... எத்தனை நாள் இப்படி எடுபிடி மாதிரி கைகட்டி வேலை பார்ப்பது. ம்ம்... அதான் மீனா... சொல்றேன்.''

''வேண்டாம் கோபி... இப்பவே என் மனசுக்கு உறுத்தலாய் இருக்கு... வட்டியும் வேண்டாம்... அசலும் வேண்டாம்னு சொல்லியதால்... ஏதோ கையேந்தி பிச்சை வாங்கின மாதிரி உடம்பெல்லாம் கூசுகிறது... ஊகூம்... வேண்டவே வேண்டாம்...'' உறுதியான குரலில் மறுத்தாள் அவள்.

''அய்யோ... மீனா... வலிய வந்த ஸ்ரீதேவியை உதறித் தள்ளலாம்னு சொல்கிறாயே... இப்ப 'பாங்கில்' வேலை இல்லாதவர்களுக்கு பண உதவி கொடுக்கிறதில்லையா... அந்த மாதிரின்னு வச்சுக்கோயேன்... அவர்கள் என்ன வட்டியைக் கட்டுகிறார்களா.. இல்லை அசலைத் திருப்பித் தருகிறார்களா... ப்ளீஸ் மீனா... அதிர்ஷ்டம் ஒருமுறை தான் கதவைத் தட்டுமாம். சொல்வார்கள்... அதை பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் அது முட்டாள் தனம்... புரிஞ்சுக்கோ.''

நின்று... மூச்சை பெரிதாய் இழுத்து விட்டாள் மீனா.

''கோபி... முதல்ல அத்தை விஷயம்... அப்புறம் தான் மத்தது எல்லாமே...'' என்றாள்.

''சரி... அந்த விஷயத்தையும் பின்னால கவனி...'' என்றான் விடாமல்.

பணத்தை கட்டிவிட்டு டாக்டரிடம் சென்றனர் இருவரும்...

அடுத்த நாளே ஆப்ரேஷன் என்றார் டாக்டர்...

டாக்டரின் அறையில்... டாக்டரின் எதிரே அமர்ந்திருந்தனர் மீனாவும் கோபியும்...

டாக்டர் என்ன சொல்லப் போகிறாரோ என்ற தவிப்பு இருவரிடமும்...



'லேப்' டெஸ்ட் முடிவுகள் அடங்கிய ஃபைலை திருப்பிப் பார்த்துவிட்டு... டாக்டர் தொண்டையை கனைத்துக் கொண்டார்.

''கோபி... உங்கம்மாவோட நிலைமை ரொம்ப மோசமாகத்தான் இருக்கிறது.. உங்கம்மாவை நீங்க முதல்லேயே அழைத்து வந்திருக்க வேண்டும். இப்போ 'கேன்சர்' முற்றிப் போய் பரவிவிட்டது... மார்பகங்களை நீக்கிவிட்டாலும்... முற்றிலுமாய் அழிக்க முடியவில்லை... அதுவும் உங்கம்மா 'வீக்'காக இருக்கிறார்கள். 'கீமோ தெரபி' 'ரேடியேஷன்' போன்ற சிகிச்சைகளைத் தாங்கிக் கொள்ளும் சக்தியும் இல்லை... எங்களால் ஆன முயற்சிகளை எல்லாம் செய்து... நாட்களைத் தள்ளிப் போட முடியும்... ஆனா... வருடங்களை ஊகூம் முடியாது... மிஞ்சி மிஞ்சிப் போனால் ஆறு... அல்லது ஏழு மாதங்கள்தான்... அதற்கு மேல்... சந்தேகம் தான்...''

எச்சிலைக் கூட்டி முழுங்கினான் கோபி.... இதயம் இரும்பாய் கனத்தது... அம்மாவை இழக்கப் போகும் வேதனையும் துயரமும் அவனை அலைக்கழித்தது.

மீனா பெண்... கண்ணீர் ஒரு வரப்பிரசாதமாய் நெஞ்சின் சுமையை குறைத்தது. இருந்தும் தவிப்பு... தாய்க்குத் தாயாய் இருந்து தன்னை வளர்த்த அத்தையைப் பறிகொடுக்கப் போகிறோம் என்ற துக்கம் நெஞ்சை அழுத்தியது.

''ஐம் சாரி... வெரி சாரி... எங்களால் மரணத்தைத் தள்ளிப் போட முடியுமே தவிர நிறுத்த முடியாது... நான் சொல்வது எல்லாம்... அவர்கள் இருக்கப் போகும் கொஞ்ச காலத்தையும் நிம்மதியாய்... மகிழ்ச்சியாய்

கழிக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்... 'பேஷண்டை' 'டிஸ்சார்ஜ்' செய்து வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போகலாம்... 'ட்ரீட்மெண்ட்'டுக்கு என்றைக்கு வரணும்... 'செக் அப்'புக்கு எப்போது அழைத்து வர வேண்டும் என்று சொல்வார்கள்... அதன்படி செய்யுங்கள்...'' என்று தலையசைத்தார் டாக்டர்.

இரும்புக் குண்டாய் மனம் கனக்க இருவரும் வெளிவந்தனர்...

கிழிந்த நாராய் படுத்திருந்த அத்தையைப் பார்த்ததும் அழுகைப் பீறிட்டது மீனாவிற்கு.

''கோபி... எப்போ வீட்டுக்குப் போகலாம்னு டாக்டரைக் கேட்டாயாப்பா... எனக்கு போதும் போதும்னு ஆயிடுச்சுப்பா இந்த ஆஸ்பத்திரி வாசம்... சிகிச்சைன்னு சொல்லி உடம்பைக் குத்திக் கிளறுகிறாங்க... என்னால தாங்க முடியலேப்பா... என்னைக் கூட்டிட்டுப் போய் வீட்ல விட்டுடுடா... போற உசுரு அங்கேயே போகட்டும்...'' தீனக்குரலில் தாய் சொன்னதும் உடைந்து போனான் கோபி...

''என்னடா... ஏண்டா அழறே... மீனா... ஏன் இப்படி அழறான்... நீயும் தான்... ஓ! டாக்டர் சொல்லிட்டாரா... நான் பிழைக்க மாட்டேன்னு... அசடுகளா... என்னிக்காவது போற உசிருதானே... இப்படி அரையும் குறையுமாய் வாழறதை விடப் போறதுதான்ப்பா நல்லது... அழாதீங்கடா கண்ணுகளா...'' தழுதழுத்த குரலில் அத்தை சொல்ல... ஓடிப்போய் அருகில் அமர்ந்தாள் மீனா.

இதமாய் அவளது கரத்தை வருடியவாறு சொன்னாள்.



''அத்தை... நான் வேண்டற கடவுள் நிச்சயம் உங்களைப் பிழைக்க வைப்பார்... பாருங்களேன்...''

''சுத்த பேத்தல் இது... என்னோட உடம்பு இருக்கிற நிலையில் நான் போறதே மேல்... உங்களுக்குப் பாரமா இருக்க எனக்கு மனசில்லைம்மா... அந்த கற்பகாம்பா மனசு வச்சு என்னை அழைச்சுக்கணும்... சீக்கிரமா... அதுதான் என்னோட ஆசை...'' என்றாள் அந்த முதியவள்...

கண்களைத் துடைத்துக் கொண்டாள் மீனா... ''கோபி... நீ போய் 'டிஸ்சார்ஜ்' செய்யறதுக்கு போய் சொல்லி எல்லாம் தயார் பண்ணு... எவ்வளவு பணம் கட்டணும்னு கேட்டு விட்டு கட்டிடு... நான் எல்லாவற்றையும் 'பேக்' பண்ணி விடுகிறேன்... அப்புறம் அத்தைக்கு மருந்து மாத்திரை பட்டியல் கொடுப்பாங்க. அதையும் வாங்கி வந்துவிடு...'' தன் கைப் பையிலிருந்து பணக்கட்டை எடுத்துத் தந்தாள்.

அவன் சென்றதும் கொண்டு வந்திருந்த உடைமைகளை 'பேக்' பண்ண ஆரம்பித்தாள்.

''மீனா...'' என்று அழைத்தாள் அத்தை.

''என்னத்தை...'' பிளாஸ்கை எடுத்துக் கூடையில் வைத்தவாறு கேட்டாள்.

''உன்கிட்டே பேசணும்மா...''

அருகில் வந்து அமர்ந்தாள் மீனா.

''சொல்லுங்க அத்தை...''

''உனக்கு ஒரு கல்யாணம் செய்து வைக்காமலே போறேனே என்ற கவலை எனக்கு அரிக்குதும்மா... உங்க

இரண்டு பேரையும் கல்யாணக் கோலத்தில் பார்க்காமல் போறேனேங்கற ஏக்கம் நிறைய... அதுக்கெல்லாம் நான் கொடுத்து வைக்கல்லே.''

''அத்தை... நீங்க ரொம்ப பேசக்கூடாது.. ஓய்வு அவசியம்னு டாக்டர் சொல்லியிருக்கிறார்...''

''இல்லேம்மா... நான் பேசியாகணும்... எந்த நேரத்தில் எனக்கு எது நடக்குமோ.. தெரியாது... மீனா.. நீ சின்ன பொண்ணுதான்... ஆனா உங்கிட்டே விவேகம் இருக்கு. எதையும் திட்டமிட்டு பொறுப்பா நடந்துக்கறே. ஆனா கோபி... இன்னும் சின்னப் பிள்ளைத்தனமா.. கொஞ்சமும் பொறுப்பில்லாம இருக்கிறான். அவன் வயசில எல்லா பசங்களும் கல்யாணம் பண்ணிக் கொண்டு குடித்தனம் நடத்தறாங்க. இவன் இன்னும் ஒரு நல்ல வேலையைத் தேடிக்காம... சின்னப் பிள்ளைத் தனமா எடுபிடியாட்டம் வேலை பார்க்கிறான்... இந்த வேலையை நம்பி எந்தப் பொண்ணு கழுத்தை நீட்டுவா... சொல்லு... நீதான் மீனா அவனுக்கு எடுத்துச் சொல்லணும்... ஒரு நல்ல வேலையா தேடிக்கச் சொல்லும்மா... இத்தனை நாள் தெரியல்லே... உங்களை விட்டுப் போகப் போறேன்னு... தெரிஞ்சதும் மனசு கிடந்து தவிக்கிறது... எனக்கு உயிர் போறதே என்ற பயம் கிடையாது... பிள்ளைகளோட எதிர்காலம் பத்திதான் கவலை... சிட்டுக் குருவிகளா திரிய வேண்டிய வயசில் வாழ்க்கையோட போராட வேண்டிய தலைவிதி உங்களுக்கு... அதை நினைச்சாத்தான் என் நெஞ்சு துடிக்குதும்மா...''

அத்தையின் கண்ணீரைத் துடைத்தாள் மீனா.



''அழாதீங்க... அத்தை. எல்லாம் நல்லபடியா நிச்சயம் நடக்கும்... நீங்கதான் அடிக்கடி சொல்லுவீங்களே... எல்லாம் அவன் செயல்னு... இதுவும் அதுதான்... கோபிக்கு ஒரு நல்ல எதிர்காலம் இருக்கிறதுன்னு என் மனம் சொல்கிறது... நான் இருக்கிறேன் அத்தை. அவனுக்கு ஒரு நல்ல சகோதரியாய்... என்னை நம்புங்க அத்தை... இப்போ எதைப் பத்தியும் கவலைப்படாமல் சந்தோஷமா இருங்க...''

குழந்தைக்கு சமாதானம் சொல்வது போல பேசினாள் மீனா...

அத்தை அமைதியடைந்தாலும்... அவள் மனதில் அமைதி இல்லை...

எதிர்காலம் பயமுறுத்தியது.

நாளை? என்ற கேள்விக்குறி கொக்கியாய் குடைந்தது. எல்லாம் அவன் செயல் தான்!

# 4

விசாலம் பாட்டிக்கு மனக்குறைதான்.. அற்புதமான பெண் மீனா... என்ன அருமையாய் கவனித்துக் கொண்டாள்...

இப்படி ஒரு நல்ல பெண்ணை அனுப்பி வைத்த இறைவனுக்கு எத்தனை தடவை நன்றி சொல்லியிருப்பாள்...

ஆனால் இப்போது திருஷ்டிபட்டதுபோல மாதிரி.. 'திடும்' என்று வந்து இனி என்னால் வர முடியாது என்கிறாளே... மனம் நொந்து போனாள் பாட்டி...

''அம்மா... மீனா.. உன்னுடைய சம்பளம் போதவில்லைன்னா வெளிப்படையா சொல்லிடும்மா.. வேணும்னா இன்னும் ஒரு ஆயிரம் ரூபாய் சேர்த்து தர்றேன்... வரமாட்டேன்னு மாத்திரம் சொல்லிடாதேம்மா...'' என்றாள் கரகரத்த குரலில்.

''இல்லை.. பாட்டி... என் அத்தைக்கு ஆப்ரேஷன் ஆகி வீட்டில் படுத்திருக்கிறார்கள். அவரை கவனித்துக் கொள்ள வேண்டும். 'டைம்' பார்த்து மாத்திரை... சத்தான உணவு தர வேண்டும். அவருக்கு 'இன்ஃபெக்ஷன்' ஆகாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமாம். டாக்டர் சொல்லியிருக்கிறார்கள். ஆஸ்பத்திரிக்கு 'செக் அப்' பண்ண கூட்டிப் போகணும்... என்னை விட்டா அவங்களுக்கு யாரும் இல்லை பாட்டி... அதான்.. சொல்லிவிட்டுப் போகலாம்னு வந்தேன்...''

''சரிம்மா... இனியும் வற்புறுத்த விரும்பவில்லை... நீ சொல்ற மாதிரி உன் அத்தைக்கும் ஒரு துணை வேண்டும். எங்களுக்குத்தான் கொடுப்பினை இல்லை... உன்னுடைய நட்பையும் அன்பையும் நிலையாய் பெற முடியாமல் போனது... போகட்டும்... எங்களை மறக்க மாட்டாய் தானே...''

புன்சிரிப்புடன் இல்லை என்று தலையசைத்தாள் மீனா.

''இரும்மா... குங்கும் வச்சுண்டு போவேயாம்...''



வலிக்கும் முட்டியைத் தேய்த்தவாறு நடந்த அந்த முதியவரைப் பரிதாபத்துடன் பார்த்தாள்.

நல்லவர்... இனிமையான சுபாவம்... இங்கு வேலை பார்ப்பதும் மனசுக்கு இதமாய் இருந்தது. இரண்டு புதிய ஜீவன்களை கவனித்துக் கொள்ளும் சந்தோஷம்!

அதுவும் போய்விட்டது.

மீனா அடுக்களைக்குள் சென்று பார்த்தாள்.

பாலை மட்டும் காய்ச்சி இருந்தாள் பாட்டி... தாத்தாவைக் காணோம்...

டிபன் பண்ணின சுவடு இல்லை... சாப்பிட்டார்களோ இல்லையோ... மனம் இரக்கப்பட்டது.

உடனே மளமளவென்று வேலையை ஆரம்பித்தாள் அவள்.

''மீனா... எங்கே இருக்கே.. இங்கே வா'' என்று அழைத்தது பாட்டியின் குரல்.

''வர்ரேன் பாட்டி...'' என்று குரல் கொடுத்துவிட்டு... கூவிய குக்கரின் தலையைத் தட்டினாள். ஸ்டவ்வின் இன்னொரு உலையில் சீரக ரசம் கொதித்தது. அதை இறக்கி வைத்துவிட்டு உளுந்து அப்பளத்தை சுட்டு வைத்தாள்...

குக்கரை அணைத்து விட்டு கையைத் துடைத்தவாறே வெளிவந்த மீனாவை வியப்புடன் பார்த்தாள் விசாலம். 'அடுப்படியிலா இருந்தே... அடடா... நான் வீடு முழுக்க சுத்திவிட்டு... நீ போயிட்டேயோன்னு நினைச்சேன்... இதோ.. இதை வாங்கிக்கோம்மா. சட்டென்று புதிசா எதையும் வாங்க முடியலைம்மா... இருந்ததை வச்சுத் தர்றேன்...'' என்று தட்டை நீட்டினாள்.

வெத்திலை.. பாக்கு.. பழம் அதன் மேல் பட்டு ரவிக்கை.. இன்னும் பணம்... இரண்டு ஐநூறு ரூபாய் நோட்டுக்கள்!

"எதுக்கு பாட்டி இதெல்லாம்..." சங்கோஜத்துடன் சொன்னாள் மீனா.

"வேண்டாம்னு சொல்லாதேம்மா... ஆஸ்பத்திரி... மருந்துன்னு உனக்கு நிறைய செலவாகியிருக்கும்... இப்போதைக்கு எத்தனை பணம் இருந்தாலும் பத்தாது... உங்க அத்தைக்கு சத்தான பழம்... டானிக் இதற்காகவாவது உதவட்டும். மறுக்காமல் வாங்கிக் கோம்மா."

வாங்கிக் கொண்ட மீனா பாட்டியின் கால்களில் விழுந்து நமஸ்கரித்தாள்.

"சீக்கிரமே நல்ல புருஷன் அமைந்து... அமோகமா இருக்கணும்... கல்யாணத்துக்குக் கூப்பிடுவாய் தானே..."

முகம் சிவந்து போய் தலையசைத்தாள்.

உள்ளுக்குள்... கல்யாணமா... எனக்கா... இப்போ திருக்கும் நிலையில் அது நடக்கற விஷயமா என்ன... என்று எண்ணம் ஓடியது.

"பாட்டி.... சாதம் வைத்து ரசமும் பண்ணியிருக் கிறேன்... அப்பளம் சுட்டு வைத்திருக்கேன்" என்றாள்.

"அதற்குள்ளா... என்ன சமர்த்துப் பெண்ணடி நீ... உன்னை பர்மெனட்டா' வச்சுக்க எனக்கு கொடுத்து வைக்கவில்லைங்கறதுதான் வருத்தமா இருக்கும்மா..." என்றாள் பாட்டி.... கொஞ்சம் வாட்டத்துடன்...



"நான் வர்ரேன் பாட்டி.... தாத்தாகிட்டே சொல் லிடுங்கோ..."

அந்த வீட்டை விட்டுப் போனபோது மனசுக்குள் வெறுமை. நல்லவர்களின் நட்பு நீடிக்காதோ...

அடுத்து நளினா அக்காவோட வீட்டுக்குப் போக வேண்டும். நளினா அக்காவின் உதவிக்கு நன்றி சொல்லியாக வேண்டும்...

உலகில் நளினாவைப் போல... விசாலம் பாட்டி போல நல்லவர்கள் இருப்பதால்தான் இன்னும் மழை பெய்கிறது...

நன்றி உணர்வில் இதயம் தத்தளிக்க நளினாவைத் தேடிப் போனாள் மீனா.

அதே நேரம்... நளினா ஸ்ரீகாந்தைத் தேடிச் சென்று கொண்டிருந்தாள்.

இதயம் பட்டாம் பூச்சியாய் சிறகடிக்க... மனம் வண்டாய் இசைபாட.... துள்ளும் நடையுடன் அவனை சந்திக்கப் போய்க் கொண்டிருந்தாள் நளினா.

எங்கே ஸ்ரீகாந்தை இழக்க வேண்டி வருமோ என்று பயந்தது இல்லை என்று ஆனதில் உண்டான சந்தோஷம்.

நளினா... ஸ்ரீகாந்தின் பழக்கம் கல்லூரியில் ஆரம்ப மானது. இருவரும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள்.. நட்பு காதலாக மாறியது... அப்போதைய நிலையில் ஏழையான நளினிக்கு மத்திய வர்க்க குடும்பத்தைச் சேர்ந்த... ஓரளவு வசதியான ஸ்ரீகாந்த் தேவனாகத் தெரிந்தான்.

கல்லூரிப் படிப்பு முடிந்து மேற்படிப்பு படிக்க ஹைதராபாத்துக்குப் புறப்பட்டவன்... படிப்பு முடிந்ததும் கல்யாணம் என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

ஆனால் வந்ததும் தான் தெரிந்தது... நளினாவிற்கு வேறொருத்தனுடன் திருமணம் ஆகிவிட்டது என்று. முதலில் கொதித்துப் போனான் அவன்.

சக்ரபாணியின் பணத்திற்காகவே நளினா அவரை மணந்திருப்பினும்... அதை மறைத்துவிட்டு நடித்தாள் அவள்.

கண்களில் நீர் வழிய... அவள் அவனுக்காகவே காத்திருந்ததாகவும்... சக்ரபாணிக்கு கழுத்தை நீட்டும் கட்டாயத்திற்கு தான் தள்ளப்பட்டதையும்... தனக்கு இந்தத் திருமணத்தில் சுத்தமாய் மனமில்லை என்று சொன்னதும் அப்படியே உருகிப் போனான் ஸ்ரீகாந்த்.

அவளது கண்ணீரும்... பசப்பு வார்த்தைகளும் அவனது மனதை அப்படியே கற்பூரமாய் கரைத்து விட்டன..

இன்னும் அவளையே நினைத்துக் கொண்டிருப்பதாய் அவன் கூறியதும் அவள் குளிர்ந்து போனாள்... உள்ளம் கர்வத்தில் எக்காளமிட்டது...

கட்டழகு ஆண் மகன் தன் அழகில் மயங்கி... தன்னையே நினைத்து உருகிக் கொண்டிருக்கிறான் என்ற எண்ணத்தில் தலை கனத்துப் போனது.

பணத்திற்கு சக்ரபாணி என்றால்... இளமைக்கும் காதலுக்கும் ஸ்ரீகாந்த் என்று நினைத்தாள்.

கடலைப் போன்ற செல்வத்திற்கு சொந்தமான சக்ரபாணியை மணந்த அவள்... ஸ்ரீகாந்தின் நினைவாகவே இருந்தாள்.



அவன் ஏதோ ஒரு கம்பெனியில் வேலை பார்த்ததால் அவனை அடிக்கடி சந்திக்கவும் முடியவில்லை... அவனை சந்திக்கும் விஷயம் தன் கணவனுக்குத் தெரியக் கூடாது என்பதில் சிரமப்பட்டாள்.

அதிர்ஷ்டக் காற்று அவள் பக்கமாய் வீசியது.

கம்பெனி நிர்வாகத்தை கவனித்துக் கொள்ள ஒரு பொறுப்பான.. எம்.பி.ஏ. படிப்பை திறமையாய் முடித்திருக்கும் ஒருவரை நியமிக்க வேண்டி ஒரு விளம்பரம் தர வேண்டும் என்று சக்ரபாணி சொல்லவும்... அந்தப் பொன்னான சமயத்தை நழுவ விடாமல்... தன்னுடன் படித்த ஸ்ரீகாந்த்தைப் பற்றிக் குறிப்பிட்டாள்.

இருவரின் சந்திப்பிற்கும் ஏற்பாடு செய்தாள்... தன்னுடன் படித்தவன்... இப்போது சிபாரிசுக்காக தன்னை சந்தித்திருக்கிறான் என்பது மட்டுமே அவள் கணவனுக்கு சொன்னது...

பாவம்... அவரும் அதை நம்பினார்.

ஆனால்... வினோத் நம்பவில்லை.

அவர்கள் இருவரிடையே வெறும் நட்புறவு கிடையாது.

ஏதோ விஷயம் இருக்கிறது என்று மனப்பட்சி சொன்னது. ஸ்ரீகாந்த் வேலையில் அமர்ந்ததும்... வினோத்தின் வேலை அவர்களைக் கூர்ந்து கவனிப்பது என்றானது. அலுவலக விஷயமாய் ஸ்ரீகாந்த் அவ்வப் போது நளினாவின் வீட்டிற்கு வரவேண்டி வரும்... சக்ரபாணியிடம் அந்தரங்கமாய் அலுவலக சம்பந்தமாய் பேசிவிட்டுச் செல்வான்.

அவனது திறமையும்... பணியில் இருந்த ஆர்வமும் சக்ரபாணியை வெகுவாய் கவர்ந்தன...

தன் மகன் வினோத் இவனைப்போல ஆர்வமாய் செயல்படக் கூடாதா என்று தோன்றியது.

வினோத் திறமைசாலிதான்.. ஆனால் ஸ்ரீகாந்த் போல் கடுமையாய் உழைப்பவன் இல்லை...

சக்ரபாணி... ஸ்ரீகாந்திடம் தன்னைப் பார்த்தார். இளம் வயதில் அவரும் இப்படித்தான்... ஒரு லட்சிய வெறியுடன் கடுமையாய் உழைத்தார்... அதனால் தான் உச்சிக்கு வந்து நிலைத்து நிற்க முடிந்தது.

ஸ்ரீகாந்த்தும் ஒரு நாள் உச்சியைத் தொடுவான் என்பது நிச்சயம்... அவனை நம்பி தன் கம்பெனி முழுவதையும் ஒப்படைக்கலாம் என்ற நம்பிக்கையும் வந்தது. அந்த மனநிறைவில் தான் அவனிடம் முக்கியப் பொறுப்புகளை ஒப்படைத்து விட்டு 'ஹாயாக' ஓய்வெடுக்க ஆரம்பித்தார்...

ஓய்வில்லாத உழைப்பும்... அதனால் வந்த மன அழுத்தமும் காரணமாகி லேசாய் நெஞ்சு வலிக்க ஆரம்பித்ததால்... மருத்துவமனைக்குப் போனார்.

டாக்டரின் அறிவுரைப்படி அவருக்கு ஓய்வு மிகவும் தேவைப்பட்டது.

வேலைகளிலிருந்து மட்டுமல்ல... தாம்பத்தியத்திலு மிருந்து தான்...

ஆக இரண்டு வருடங்களாய் நளினா வெறும் அலங்கார மனைவியாய்... பெயருக்கு மட்டுமே என்று ஆனாள்.



இந்த நிலையில் தான் ஸ்ரீகாந்த் வேலையில் சேர்ந் தான். அலுவலக கட்டிடத்தில்... அனைத்து ஊழியர் களின் முன்னிலையில் அவள் ஸ்ரீகாந்தின் எஜமானி யம்மா... வெறும் முதலாளி... தொழிலாளி என்ற உறவு... பார்வைகள் மட்டுமே கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும்.

அதே போலத்தான் சக்ரபாணியின் முன்னேயும்... ஸ்ரீகாந்த் எட்டியே நின்றான். சக்ரபாணிக்குத் துளியும் சந்தேகம் எழக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வுதான்.

ஆனால் அதே சந்தேகம் வினோத்திற்கு எழக்கூடும் என்பதை இருவருமே மறந்து போனார்கள்.

நளினா அடிக்கடி ஸ்ரீகாந்த் அறைக்குச் செல் வதையும்... கான்டீனுக்கு ஒருவர் பின்னே இன்னொருவர் தொடர்வதையும் கவனிக்கத் தவறவில்லை...

அவனது உள்ளம் உலைக்களமானது.

என்ன அக்கிரமம்... கட்டிய கணவனுக்கு மோசம் செய்கிறாளே இந்த மினுக்கி...

இவள் என் சித்தியா... சே!

இதை நிறுத்த வேண்டும்... நிலைமை அசிங்கமாகி... அனைவருக்கும் தெரிந்து காறித் துப்புமுன் நிறுத்தியாக வேண்டும்.

அந்த வேகத்தில் நேரே ஸ்ரீகாந்திடம் சென்று எச் சரித்தான்...

அவர்களின் நெருக்கம் தனக்கு தெரிந்து விட்டது என்று சொன்னதும் ஸ்ரீகாந்தின் முகம் பேயறைந்தது போல மாறியது...

இனியும் தொடர்ந்தால்... அவன் கதி அதோ கதிதான் என்று எச்சரிக்கையும் விடுத்தான்.

நளினாவின் எந்த செயலையும் சந்தேகத்துடன் பார்க்கும் வினோத்... இளைஞனான ஸ்ரீகாந்தை நளினா அழைத்து வந்து வேலைக்கு அமர்த்தியதையும் சந்தேகத்துடனே பார்த்தான்.

பூனை தன் கண்ணை மூடிக்கொண்டு பூலோகமே இருட்டாக இருக்கிறது என்று நினைத்ததாமே...

அதே மாதிரிதான்... தங்களை மறந்தவர்களாய்... யாரும் தம்மை கவனிக்கவில்லை என்ற தைரியத்தில் சல்லாபமாய் இருந்தனர் காதலர்கள்...

வினோத்திற்கு தெரிந்து விட்டது என்ற விஷயத்தை உடனே அவன் நளினாவிற்கு தெரியப்படுத்த... அவள் நடுங்கிப் போனாள்...

கடவுளே... இலைமறைவு... காய் மறைவாய் இருந்த உறவு எப்படி வெளிப்பட்டது. எப்படி அஜாக்கிரதையாய் இருந்து விட்டோம்... குழம்பினாள் நளினா. ஸ்ரீகாந்த் ஒரு முடிவுக்கு வந்தவனாய் பேசினான். "இதோ பார் நளினா. போதும் இந்த கண்ணாமூச்சி விளையாட்டு. தலைக்கு மேல் வெள்ளம் என்று ஆன பிறகு இன்னும் எதுக்கு மூடுமந்திரம். வெளிப்படையாகவே நம் காதலை ஒத்துக் கொண்டு விடுவோம். பேசாமல் 'டிவோர்ஸ்' வாங்கி விடு... நாம் புது வாழ்க்கையை ஆரம்பிப்போம்."

அதைக் கேட்டு நளினியின் முகம் மாறியது.

"என்ன பேசுகிறீர்கள் ஸ்ரீ... ஏற்கனவே நோயாளி... இந்த விஷயம் தெரிந்தால் அவ்வளவுதான். அவருடைய



சாவிற்கு நான் காரணமான பின்பு எப்படி நிம்மதியாய் வாழ்வேன். இல்லை... சந்தோஷமாகத்தான் வாழ முடியுமா... சொல்லுங்க... குற்ற உணர்வு என்னைக் குத்திக் கிழித்து விடுமே..."

உண்மையில் அதுவல்ல காரணம் என்று அவளது மனதுக்குத்தான் தெரியும்... இவளே விரும்பி டிவோர்ஸ் செய்தால் ஜீவனாம்சம் கிடைக்காதே... அதைவிட... அப்படி... இப்படி என்று கொஞ்சம் காலத்தை தள்ளி விட்டால்... பணக்கார விதவையாக வாழலாம்... அப்புறம் சில மாதங்கள் துக்கம் காத்து விட்டு ஸ்ரீகாந்தை மணந்து கொள்ளலாம்.

புத்திசாலித்தனத்துடன் நடந்து கொண்டால் எல்லாம் வசப்படும்... எதற்கும் அவசரப்படக்கூடாது... ஆத்திரக் காரனுக்கு புத்தி மட்டு என்று சொல்வார்களே...

அமைதியாய் செயல்பட வேண்டும்... அதே சமயம் பணத்திற்கு ஆசைப்பட்டுத்தான் சக்ரபாணியுடன் வாழ விரும்புகிறேன் என்று ஸ்ரீகாந்த் நினைத்து விடக் கூடாது... அப்புறம் அவள் மீது வெறுப்பு வந்து விடும்...

அதனால்தான் மனசாட்சி... குற்ற உணர்வு... என்றெல்லாம் பயமுறுத்தி தன் எண்ணத்தை நிறைவேற்றத் துணிந்தாள்.

"அப்போ... என்ன செய்யலாம் என்கிறாய்..."

"கொஞ்ச நாள் நாம் சந்திக்காமல் இருப்பது நல்லது என்று நினைக்கிறேன் ஸ்ரீ... வினோத் லேசுபட்டவனில்லை. நம்மை கையும் களவுமாய் பிடிக்க காத்துக் கொண்டிருப்பான். அதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது டார்லிங். ஓகே!"

ஸ்ரீகாந்தின் தாடை இறுகியது. பொங்கி வந்த எரிச்சலையும் ஆத்திரத்தையும் அடக்கிக் கொள்ள முயன்றான்.

யாரோ ஒருவனால் என் வாழ்க்கையின்பம் பறிபோகிறதே. இவன் யார்... எங்களை ஆட்டி வைக்க...

''ப்ளீஸ் ஸ்ரீ... கொஞ்சம் புரிந்து கொள்ளுங்களேன்...'' கெஞ்சும் குரலில் கேட்டாள் நளினா...

பெருமூச்சு விட்டான் அவன்... ''உன்னைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியாது நளினா... அதனால் பார்க்கிறேன்...'' என்றான் கரகரத்த குரலில்.

''எனக்கு மட்டும் இல்லையா... உங்களுடன் இருந்தால் போதும்... மத்தது எல்லாம் துச்சமா நினைக்கிறேன் ஸ்ரீ...''

கண்களில் தாபம் தெரிய அவள் சொன்னதும்... அவளை இழுத்து அணைத்துக் கொள்ள வேண்டும் என்று எழுந்த வேகத்தை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான்.

அதே நேரத்தில் 'செல்' ஒலிக்க... பேசினான்.

அவன் முகம் மாறியது...

''எந்த நர்ஸிங் ஹோம்... இதோ... வருகிறேன்'' என்றவன் நளினாவிடம் திரும்பி ''என் தாய் ஹாஸ்பிடலில் அட்மிட் ஆகியிருக்கிறா... உடனே போக வேண்டும்... வினோத்திடம் சொல்லிவிடு... வருகிறேன்..'' என்று புறப்பட்டான்...

''நானும் வருகிறேனே...'' என்றவளை வேண்டாம் என்று தடுத்துவிட்டு... அங்கிருந்து கிளம்பினான்...



நளினாவிற்கு ஏமாற்றமாக இருந்தது... இருவரைச் சுற்றியும் போர்த்தியிருந்த அழகான மாயவலை பட்டென்று அறுந்து போனதுபோல உணர்ந்தாள்.

அவன் முகத்தில் தெரிந்த தாபம்... கண்களில் தெரிந்த காதல்... நிமிடத்தில் காணாமல் போனதே...

ஏன்தான் அந்த ஃபோன் கால் வந்ததோ... சே... எரிச்சல் வந்தது...

இருக்கட்டும்... எங்கே போய்விடப் போகிறார்... ஸ்ரீகாந்த் என்னுடையவர்... எனக்கே சொந்தம் என்ற கர்வமும் கூட எழுந்தது.

ஆனால் அந்த கர்வத்திற்கு உலை வைத்தது போல.... அடுத்து நடந்தது... அது...

## 5

மரணத்தின் வாசலைத் தொட்டுவிட்டு வந்த தாயின் வேண்டுகோளைக் கேட்டு தவித்துப் போனான் ஸ்ரீகாந்த். அதை எப்படி நிறைவேற்றுவது... என்ற தவிப்பு.

மகனைத் திருமணக்கோலத்தில் பார்க்க வேண்டும் என்று துடித்தாள் சாரதா...

''எனக்குன்னு இருப்பது நீ ஒருத்தன்தான்டா... உனக்கு ஒரு கல்யாணம் செய்துவிட்டால் அப்புறம் நிம்மதியா கண்ணை மூடிடுவேன் கண்ணா... அம்மா

வோட இந்த ஆசையை நிறைவேத்த மாட்டாயா... ஒரு நல்ல பொண்ணா... வீட்டுக்கேத்த மகாலட்சுமியா... ஒரு மருமகள் வரனும்னு எனக்கு ஆசைடா. சரின்னு சொல்லுப்பா...''

தாயின் வார்த்தைகள் ஸ்ரீகாந்தின் நெஞ்சை அறுத்தன. செத்துப் பிழைத்திருக்கும் தாயின் ஆசையைப் பூர்த்தி செய்ய விடாமல்... நளினா மீதிருந்த மோகம் அவனைக் கட்டிப் போட்டிருந்தது...

வேறு எந்தப் பெண்ணையும் மனைவியாய் ஏற்றுக் கொள்ள மனம் மறுத்தது...

என் வாழ்க்கையில் நளினாவிற்கு மட்டுமே இடம் உண்டு. இந்தப் பிறவி மட்டும் இல்லை... ஏழு ஜென்மங்களுக்கும் அவள் தான் என் இதய ராணி... அவளைத் தவிர வேறு யாருக்கும் இல்லை. அந்த உரிமை...

ஆனால் இதைத் தாயிடம் சொல்ல முடியுமா... சொன்னாலும் ஏற்றுக் கொள்வாளா... திருமணமாகிய வள்... கணவனுடன் வாழ்ந்தவள்.. அவள் தனக்கு மருமகளா என்று கொதித்துப் போகமாட்டாளா... அது ஒருபுறம் இருக்கட்டும். நளினா இன்னும் சுதந்திரப் பறவையாகவில்லையே... மணவிலக்கைப் பெற்றால் தானே முடியும்... அவளும் இப்போது முடியாது என்று காலம் தாழ்த்துகிறாளே...

வாழ்க்கை சிக்கலாகிப் போன நூற்கண்டாகத் தெரிந்தது முடியைப் பிய்த்துக் கொள்ள வேண்டும் போல இருந்தது.



என்ன செய்வது என்று புரியாமல் விழித்தான். ஆனால் தொடர்ந்து சாரதா கல்யாணப் பேச்செடுத்து நச்சரிக்கவும் பொறுக்க முடியாமல் நளினாவிற்கு போன் செய்தான்...

''இப்போ என்ன செய்வது நளினா... என் அம்மா விடுவதாய் இல்லை... எனக்குத் திருமணம் செய்து விட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள்... இனி உன் முடிவில் தான் இருக்கிறது...'' என்றான் உறுதியாக.

அந்த நேரத்தில் தான் பணம் கேட்டு வந்திருந்தாள் மீனா... பணம் இல்லையென்று சொல்லி அனுப்பிய வளுக்கு ஐடியா பளிச்சிட்டது... அட! இப்படிச் செய்தால் என்ன... தற்காலிகமாய் இந்த பிரச்சனையை அடக்கி வைக்க இதுதான் சிறந்த வழி... ஆமாம்.. அப்படித்தான் செய்ய வேண்டும்...

மனதுக்குள் திட்டம் உருவாகியதும் உள்ளுக்குள் சந்தோஷம் கரை புரண்டோடியது...

உடனே தாராளமாய் பணத்தைக் கொடுத்து மீனாவை நெகிழச் செய்தாள்...

பலி கொடுப்பதற்கு முன் ஆட்டிற்கு இலை தழையைப் போடுவதுபோல... பாவம்... அது புரியாமல் நளினா அக்காவிற்கு நல்ல மனம் என்று சான்றிதழையும் கொடுத்தாள் மீனா... 'கடன் பட்டவள் ஒன்று சொன்னபடி செய்ய வேண்டும்...' இல்லாவிட்டால் வாங்கிய பணத்தை நிச்சயம் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

மீனாவால் பணத்தைத் திருப்பித் தர முடியாது... அது மட்டும் நிச்சயம்... வேறு வழியில்லாமல் மசிந்துதான் ஆக வேண்டும்.

எண்ணியபடியே நடந்து விட்டால்... வினோத்தின் வாயை மூடி விடலாம்...

அடுத்து ஸ்ரீகாந்த் மீனாவை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார். அது நிச்சயம். ஆகையினால் அந்த விஷயத்தில் பயம் இல்லைதான்... அந்தக் கிழவி இப்பவோ அப்பவோ என்று இருக்கிறாள். ஏற்கனவே எமபுரிக்குப் போய் கதவைத் தட்டி விட்டுத் திரும்பியவள்... இன்னும் எத்தனை நாள் இருக்கப் போகிறாள்... அதுவரைக்கும் நாடகம் தொடரட்டும். இங்கேயும் அதே கதைதான்... மறுபடியும் அட்டாக் வரலாம் என்று டாக்டர் அச்சுறுத்தியிருக்கிறார்.

அதுவரையில் அவருக்கு மனைவியாய் பெயருக்கு இருக்க வேண்டும்... அவரும் பாவம்... ரொம்ப நாள் இருக்கப் போவது இல்லைதான்... அப்புறம் என்ன... பணமும் வருகிறது. காதலனும் கிடைப்பான்...

அதுவரைக்கும் பொறுமை அவசியம்... யெஸ்... காரியத்தில் வெற்றியடைய வேண்டும் என்றால் பொறுத்துத்தான் ஆக வேண்டும்...

மீனாவிடம் பேசி... பக்குவமாய் எடுத்துக் கூறி இதற்கு ஒப்பவைக்க வேண்டும்... சொல்கிற விதத்தில் சொன்னால் இசைய மாட்டாளா...

அதற்கு முன்னால் இது பற்றி ஸ்ரீகாந்திடம் பேச வேண்டும்... அவர்தான் கிடைக்க மாட்டேன் என்கிறாரே... அம்மாவை 'டிஸ்சார்ஜ்' செய்யும் வரை ஆபீஸ் பக்கம் வர முடியாது என்று சொல்லி விட்டார்...

சரி... ஹாஸ்பிடலுக்குப் போய் பார்த்துப் பேசலாம் என்றால் அதுவும் முடியாது... ஸ்ரீகாந்த் அதை விரும்பவும்



மாட்டார். தாய்க்குச் சந்தேகம் எழக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வு. தவிர... அங்கு மனம் விட்டுப் பேசவும் முடியாதே...

இருக்கட்டும்... அவர் ஆபீஸுக்கு வந்ததும் சந்தித்துப் பேசி... இந்த விஷயத்தைத் தெளிவு படுத்துகிறேன். அவரது தாயின் அவசரத்திற்கு ஒப்பியே ஆக வேண்டும் என்று நாட்களைத் தள்ளியவள்... இதோ... வேலைக்கு வந்திருக்கும் ஸ்ரீகாந்தை சந்திப்பதற்கு சென்றாள்.

அவனது 'கேபினின்' கதவைச் சத்தமின்றி மூடிவிட்டு அவனை நோக்கி விரைந்தவள் "ஹேய்... டார்லிங்... ஹௌ ஆர் யூ..." என்று சொல்லியவாறு அவனை அணைத்துக் கொண்டாள்.

"உஷ்... இது ஆபீஸ் நளினா... இங்கே சுவற்றிற்கும் காது இருக்கும்... கதவிற்கும் கண்ணிருக்கும். பிஹேவ் யுவர் செல்ஃப்" என்று அதட்டினான் ஸ்ரீகாந்த்.

"என்ன ஸ்ரீ... பார்த்து எத்தனை நாளாச்சுன்னு ஓடி வந்து அணைத்தால்... இப்படியா விரட்டுவது..." என்று செல்லமாய் அவள் சிணுங்கவும்...

உடனே... அவனது குரலில் ஐஸ்க்ரீம் குழைவு தெரிந்தது.

"இல்லேம்மா... நாம் ஜாக்கிரதையா இருக்க வேண்டும் என்று பேசி வைத்திருப்பதை உனக்கு நினைவு படுத்தினேன். எனக்கு மட்டும் ஆசையில்லையா நளின்... இருபத்து நாலு மணி நேரமும் உன் நினைவிலே இருக்கிறேனாக்கும்... இந்த லாவண்டரின் வாசனைக்கு என்னமாய் ஏங்கினேன் தெரியுமா..."

"அட... தெரிந்திருந்தால்... ஒரு பெரிய 'சென்ட்' பாட்டிலை வாங்கி வந்து தந்திருப்பேனே... தினமும் அதை வாசனைப் பிடியுங்கள் என்று..." என்றாள் குறும்பாய்...

அவள் சிரிக்கும் அழகைக் கண் கொட்டாமல் பார்த்து.. ரசித்துக் கொண்டிருந்தான் ஸ்ரீகாந்த்.

கைகள் பரபரத்தன... இதயம் வேகமாய் துடித்தது... அவளை இழுத்து... இறுக அணைத்துக் கொள்ள மாட்டோமா என்று ஒருவித தவிப்பு ஊடுருவியது...

எங்கே... தன் கட்டுப்பாட்டை இழந்து விடுவேனோ என்ற அச்சத்தில் கரங்களை பேன்ட் பாக்கெட்டினுள் நுழைத்துக் கொண்டான்.

அவனது தவிப்பையும்... படும் அவதியையும் கண்ட நளினா உள்ளுக்குள் பெருமிதம் அடைந்தாள்.

அந்த அளவு தனது வனப்பும்... கவர்ச்சியும் அவனைப் பாடாய் படுத்துகிறது என்பதில் அவளுக்கு கர்வம்...

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தனர். எத்தனை நேரமோ...

போன் அழைப்பில்... பார்வைகளிடையே படர்ந்திருந்த மின்னோட்டம் பட்டென்று அறுந்துவிட... இருவரும் உஷாரானார்கள்... யாரிடமிருந்து...

இது அலுவலகம்... ஜாக்கிரதை என்று எச்சரிக்கும் அபாய சங்காய் உணர்ந்தார்கள்.

அவன் பேசி முடிக்கட்டும் என்று காத்திருந்தாள்.

அவன்... தன் கண்களால் அவளது மேனியை... தன் இதயத்தை சுண்டி இழுக்கும் வனப்பை ரசித்தவாறு பேசிக் கொண்டிருந்தான்.



அது தெரிந்தும்... தெரியாதவள் போல... சுவற்றில் மாட்டியிருந்த அழகான ஓவியத்தை ரசித்துக் கொண்டிருந்தாள் நளினா... இல்லை.. இல்லை.. ரசிப்பதுபோல் ஒரு பாவனை! ரிஸீவரைக் கீழே வைத்துவிட்டு கேட்டான் அவன்.

"சொல் நளின்... என்ன இந்த திடீர் வருகை..."

அங்கிருந்த குஷன் நாற்காலியில் அமர்ந்து... தன் வடிவான கால்களை... ஒன்றின் மேல் மற்றொன்றைப் போட்டுக் கொண்டவள் கொஞ்சலாய் கேட்டாள்... "ஏன் வரக்கூடாதா..."

"ஓ! தாராளமாய்... இது உன் ஆபீஸ்... உன் கம்பெனி... உனக்கு எப்போது வேண்டுமானாலும் வர உரிமை இருக்கிறதுதான்... ஆனால் என் அறைக்குள் இப்படி வந்து ரொம்ப நேரம் தங்கறதுதான் வேண்டாமேன்னு சொல்கிறேன்.. வெறும் வாயை மெல்லும் மனிதர்களுக்கு அவல் கொடுத்த மாதிரி இருக்கும் நளின்... அதான்... சொல்கிறேன்."

"அய்யே... எதுக்கு இந்த அநாவசிய பயம்... ஸ்ரீ.. அதுக்குத்தான் ஒரு நல்ல ஐடியாவோட வந்திருக்கேன்..."

"வெரிகுட்... சக்ரபாணிக்கு 'டிவோர்ஸ்' கொடுக்க முடிவு பண்ணி விட்டாய்... அப்படித்தானே... இப்போதாவது நல்ல முடிவு எடுத்தாயே... தாங்க் காட்!"

சில்லறைகளை சிதற விட்டதுபோல சிரித்தாள் நளினா.

"அடடா... கம்பெனி நிர்வாகத்தில் உங்களுக்கு இருக்கும் அறிவும் திறமையும் சம்சார வாழ்க்கையில்

இல்லையே... ஸ்ரீ... உங்க அம்மாவுக்கு இன்ஸ்டன்ட் மருமகள் வேணும்... ஆனா... என் விஷயத்தில்... அப்படி இல்லையே... 'டிவோர்ஸ்' எல்லாம் உடனடியா கிடைத்து விடாது... அது கிடைக்காமல் நாம் திருமணம் செய்து கொண்டால்... அது செல்லாது.. அதையெல்லாம் விடுங்க. ஸ்ரீ... ஏற்கனவே மணமானவளை உங்கம்மா மருமகளாய் ஏற்றுக் கொள்வார்களா... சொல்லுங்க...'' என்று வினவினாள்.

நெற்றியைத் தேய்த்துக் கொண்டான் ஸ்ரீகாந்த்.

ஆமாம்... அதை நான் யோசிக்கவில்லையே... அந்த அளவு என் மூளை மங்கிவிட்டதா...

அப்போ... இந்தப் பிரச்சனைக்கு என்ன தீர்வு... அங்கே அம்மாவோட நச்சரிப்பு வேறு...

அவனது குழப்பத்தை கொஞ்ச நேரம் ரசித்தவள்... நிதானமாகச் சொன்னாள்.

''ஆங்! அதற்குத்தான் ஒரு நல்ல ப்ளானோட வந்திருக்கேன்... டியர்...''

என்ன அது என்பதுபோல தன் புருவங்களை உயர்த்தினான் அவன்.

''வேறொருத்தியை நீங்க மணந்துக்கணும்...'' அதிர்ந்து போய் பார்த்தான் அவன்.

''என்ன உளர்றே நளினா...''

''நான் சொல்வதை முழுவதுமாய் கேட்டு விட்டு அப்புறம் பேசுங்க ஸ்ரீ... இது தற்காலிக உறவுதான்... நிரந்தர பந்தம் கிடையாது... உங்க அம்மாவோ திருப்திக்காக... என் கணவரின் நன்மைக்காக... அ



விட வினோத்தின் வாயை அடைக்க இந்த ஏற்பாடு... நம்மைப் பற்றிய சந்தேகம் அவனுக்கு வரக்கூடாது என்றால் இப்படித்தான் செய்யணும் ஸ்ரீ.. இல்லை... அவன் ஏதாவது வாயைத் திறந்து என் கணவர்கிட்டே சொல்லி விட்டால் அதுவே அவரது உயிருக்கு எமனாகி விடும்... அந்த உறுத்தல் நமக்கு வேண்டாம் ஸ்ரீ.''

பற்களைக் கடித்தான் ஸ்ரீகாந்த்...

''ஓகோ. அப்புறம்... நீ உன் வழி... நான் என் வழின்னு பிரிந்து விடலாம் என்கிறாயா. அது முடியாது... முடியவே முடியாது...'' உறுமினான் அவன்.

பதிலுக்கு புன்னகையுடன் சொன்னாள் நளினா.

''நான் அப்படிச் சொல்லவில்லையே ஸ்ரீ... சந்தர்ப்பமும் சூழ்நிலையும் நம்மை ஒன்று சேர விடாமல் தடுக்கின்றது. எந்த நேரத்திலும் என் கணவருக்கு மாரடைப்பு வரலாம்... நோயாளியான அவரை 'அம்போ'ன்னு விட்டு விட்டு வர எனக்கு விருப்பம் இல்லை ஸ்ரீ...''

''பத்தினி தெய்வம்?''

''அப்படியே வைத்துக் கொள்ளுங்கள்... என்னுடைய நிலைமையைச் சொன்னேன். அவ்வளவுதான்... தவிர உங்க அம்மாவிற்காக அவசர மருமகள் தேவை... அதுவும் கன்னிப் பெண்ணாய்... இதைச் சொல்லக் கூடாதுதான். இருந்தும் சொல்லித்தான் ஆக வேண்டும். உங்கள் அம்மாவும் நோயுடன் போராடி ஜெயிப்பது கஷ்டம் தான். சாரி... ஸ்ரீ... 'ப்ராக்டிக்கலா' திங்க் பண்ணிப் பாருங்க...

அவங்களை எத்தனை நாள் சமாளிப்பீங்க... நான் சொல்வது பெயருக்கு கல்யாணம்தான்.. எனக்கு விடுதலை கிடைக்கும் வரையில்தான் அதுவும்... அப்புறம் அவளுக்கு பணத்தைக் கொடுத்து அனுப்பி விடலாம்...'' வரட்டுச் சிரிப்பை உதிர்த்தான் அவன்.

''ஏதோ கதையில் வருகிற மாதிரி இருக்கு உன் பேச்சு... பெயருக்கு மனைவியா... இந்த உடன்பாட்டிற்கு யார் வருவார்கள் நளினா... முட்டாள்தனமான ஐடியாவை விடு...''

''ஒருவேளை அப்படி ஒரு பெண் முன் வந்தால்...''

''அப்போது பார்த்துக் கொள்ளலாம். இப்போ நம் விஷயத்திற்கு வருவோம்... நாம் மறுபடியும் எங்கே சந்திக்கலாம் சொல்லு... இந்தச் சூழ்நிலை எனக்கு மூச்சு முட்டுகிறது நளினா... சிரமப்பட்டு என் கைகளை அடக்கிக் கொண்டு இருக்கிறேன் தெரியுமா.. எங்கே யாவது... யாரும் இல்லாத இடத்தில்... நீயும் நானும் மட்டுமே.. சிட்டுக்குருவிகள் மாதிரி சிறகடித்துப் பறக்க வேண்டும்... எந்த இடையூறும் இல்லாமல் இரண்டு பேரும் ஜாலியாக இருக்க வேண்டும் என்று மனம் தவிக்கிறது... ஆனால்...''

''பொறுமை... ஸ்ரீ... பொறுமை அவசியம்... நான் நினைக்கறபடி எல்லாம் நடந்தால்... தினமும் நமக்கு கொண்டாட்டம்தான்... நல்ல சேதியுடன் வருகிறேன். காத்திருங்கள்...'' செல்லமாய் அவனது கன்னத்தை வருடிவிட்டுப் புறப்பட்டாள்.

அவன் தனது ஏக்கத்தை பெருமூச்சில் வெளியேற்றி னான்.



காரை போர்டிகோவில் நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்த நளினா... மீனா தனக்காக அரை மணி நேரமாக காத்துக் கொண்டிருக்கிறாள் என்று அறிந்ததும் அவளைப் பார்க்க விரைந்தாள்.

''மீனா... ரொம்ப நேரமாய் காத்துக் கொண்டு இருக்கிறாய் போல... சாரி... அவசர வேலையாய் போயிருந்தேன். அதான் லேட்... ஆமாம்.. உன் அத்தை இப்போ பரவாயில்லையா... எழுந்து நடக்கிறார்களா...'' என்று கேட்டாள்.

''பரவாயில்லை அக்கா... அதுக்குத்தான் நன்றி சொல்லி விட்டுப் போகலாம் என்று வந்தேன்... நீங்கள் செய்த உதவியால் தான் அத்தை இப்போது உயிருடன் இருப்பதும்.''

''நான் ஒண்ணும் உனக்குப் பணம் தரவில்லையே மீனா... தந்தவர் வேறு யாரோ... எனக்கு எதுக்கு இந்த நன்றி.''

''உண்மைதான் நளினா அக்கா... அவருக்கு என் நன்றியைச் சொல்வீர்களா... எந்த வட்டியுமின்றி... எந்த ஷூயூரிட்டியும் இல்லாமல்... எந்தவித நிபந்தனையும் போடாமல் ஒருவர் பணம் தந்திருக்கிறார் என்றால்... உண்மையில் அவருக்கு உயர்ந்த உள்ளம் தான் அக்கா.'' கலகலவென்று சிரித்துவிட்டுச் சொன்னாள் நளினா.

''சாரி.. மீனா... நீ சொன்ன மாதிரி வட்டியில்லாமல்... ஷூயூரிட்டி இல்லாமல் பணம் கொடுத்தது என்னவோ நிஜம்... ஆனால் ஒரு நிபந்தனை மட்டுமே இருக்கு... அதை உனக்கு சொல்லவில்லை... ஹாஸ்பிடலுக்கு

போகும் அவசரத்தில் இருந்தாய் பார்... அதனால்தான்... கண்களை விரித்தாள் மீனா.

"என்ன நிபந்தனை அது... நளினா அக்கா..."

சிறிது தயங்கி விட்டுச் சொன்னாள் நளினா.

"அவருக்கு மனைவியா இருக்க வேண்டும்... அதாவது பெயருக்கு மனைவியாய்..."

திடீரென்று நளினா அக்கா உளற ஆரம்பித்து விட்டாளா... இல்லை 'ஜோக்' அடிக்கிறாளா...

குழம்பிப் போய் பார்த்தாள் மீனா...

"என்ன அப்படிப் பார்க்கிறாய் மீனா... உண்மைதான் அவருக்கு உடனே ஒரு மனைவி வேண்டும்... அது ஏன் நீயாக இருக்கக் கூடாது... ம்ம்..." என்றாள் நளினா.

மீனாவிற்கு தலையை சுற்றிக் கொண்டு வந்தது போல இருந்தது. அப்படியே இருக்கையில் சாய்ந்து கொண்டாள்.

## 6



**மீ**னா இப்படி ஒரு இடியை... அதுவும் 'திடும்' என்று விழுந்த இடியை... எதிர்பார்க்கவும் இல்லை... மிகவும் ஆடிப் போனாள்...

எப்படி வீடு வந்து சேர்ந்தாள் என்று அவளுக்கேத் தெரியாதுதான்...



நளினாவின் வார்த்தைகள் காதில் ரீங்காரமிட்ட வண்ணமே இருந்தன.

"இதோ பார் மீனா... உனக்குப் பணம் அவசரத் தேவையாக இருந்தது... அவருக்கு இப்போ மனைவி என்று ஒருத்தி அவசியம்... விருப்பம் இருந்தால் ஒப்புக் கொள். இல்லையென்றால் மறுத்துவிடு... பணத்தை அவருக்கு திருப்பிக் கொடுத்து விட்டால் போதும்... இது ஒன்றும் கட்டாயக் கல்யாணம் இல்லை... மீனா..."

யாருடனோ கல்யாணம்! முகமறியாதவன். ஊர் பெயர் எதுவும் தெரியாது... நல்லவனா கெட்டவனா என்றும் தெரியாது... நளினா அக்காவிற்குத் தெரிந்தவன் என்ற தகுதி மட்டுமே... வேண்டவே வேண்டாம்... அதை விட.... அந்தப் பணத்தைத் திருப்பித் தந்து விடலாமே...

"அவரை மணந்து கொண்டால் பங்களா மாதிரி வீடு... சொகுசான வாழ்க்கை... காரில் பயணம்... அலுக்க சலிக்க பணம் வரவு... எல்லாமே கிடைக்கும்... நல்லா யோசி மீனா... அவருக்கும் அப்படியொன்றும் வயதாகவில்லை. முப்பது ஆகிறது... திருமணமே வேண்டாம் என்று இருந்தவர். இப்போ ஒப்புக் கொண்டிருக்கிறார்..."

அங்கே தானே இடிக்கிறது... பணமும் வசதியும் இருப்பவர்... அதுவும் இளைஞர்.. அவரை மணந்து கொள்ள நான் நீ என்று போட்டி போட்டுக் கொண்டு வருவார்களே... அவருடைய தகுதிக்கு ஏற்ற பெண்கள் கிடைக்க வாய்ப்பிருக்கையில்... ஏழையான... அவருடைய தகுதிக்கும்... படிப்பிற்கும் சமமில்லாத என்னை மணக்க முன் வருவது என்றால்... ஊகூம்... எதுவோ சரியில்லை...

ஒரு வேளை... உடம்புக்குள் வியாதியை வைத்துக் கொண்டு இல்லை... போதைப் பழக்கம் ஏதாவது இருந்து... கடவுளே... அந்த 'யாரோ' ஒருவரை நினைத்து நான் ஏன் குழம்பித் தவிக்கிறேன்...

என்னிடம் இருந்த அமைதியும் நிதானமும் எங்கே போயிற்று. தெளிந்த நீரோடையாய் இருந்த என் வாழ்க்கை... ஏன் கல்லடிபட்டக் குட்டையாய் குழம்பிப் போனது... சே!

ஏதாவது ஒரு வேலையில் மூழ்கினால்தான் மனம் சமனப்படும்... வேலையைத் தேடினாள்.

ஆஸ்பத்திரிக்கும் வீட்டிற்குமாய் ஓடியலைந்ததில் துணிகள் அம்பாரமாய் குவிந்திருந்தன... அவற்றைத் துவைத்துக் காயப் போட்டால் என்ன...

உடனே பரபரவென்று செயல்பட்டாள் மீனா... சோப்புப் பவுடரில் அழுக்குத் துணிகளை நனைத்து ஊற வைத்து... அத்தைக்கு கோதுமை ரவை கஞ்சி வைத்துத் தந்தாள்...

ஊறிய துணிகளுக்கு சோப்பு போட்டு... துவைத்து... நன்றாக அலசும்போதுதான் கோபி அங்கு வந்தான்.

''என்ன செய்கிறாய் மீனா... எனக்கு சூடாய் காபி போட்டுக் கொடேன்... தலை வலிக்கிறது...'' என்றான் அவன்.

''இதோ...'' என்று கைகளை கழுவிக் கொண்டு காபி கலந்து வரச் சென்றாள் மீனா.

காபி டம்ளரை அவனிடம் கொடுத்த போதுதான் கவனித்தாள். அவன் முகத்தில் வாட்டமும்... சோர்வும்...



பாவம்... ரொம்ப வேலை போலிருக்கிறது... அத்தை சொல்வது போல இந்த வேலையில் கோபிக்கு ஆதாயம் எதுவும் இல்லைதான்...

''மீனா... எனக்கு இருக்கிற வேலையும் போயிடும் போல இருக்கு...''

திடீர் என்று ஒரு குண்டைப் போட்டான் கோபி.

''என்ன சொல்றே கோபி...'' அதிர்ந்தவளாய்க் கேட்டாள் மீனா...

''ஆமாம் மீனா... யாரோ ஒரு நல்ல பார்ட்டி வந்திருக்காம்... கடையை அவர்களுக்கு விற்றுவிடப் போகிறாராம். எங்க 'ஓனர்...' அந்தப் பார்ட்டி அவரோட ஆள்களையே வேலைக்கு வைத்துக் கொள்ளப் போகிறா ராம்... எங்களோட எதிர்காலம் 'டணால்' தான்... ப்ச்சு... வாழ்க்கையே கசந்து விட்டது மீனா... எதுக்கு உயிர் வாழணும்னுகூட தோணுகிறது'' விரக்தியில் புலம்பினான் கோபி.

''என்ன பேச்சு இது கோபி... ஒரு ஆண் பிள்ளைப் பேசறப் பேச்சா இது... இந்தக் காலத்தில் பெண்களே துணிச்சலா சமாளிக்கிறாங்க... உனக்கென்ன வந்தது... சுத்தக் கோழைத்தனமா இருக்கு... நீ பேசறது... தெரிஞ்சுக்கோ...'' என்று கடிந்து கொண்டாள் மீனா.

''என்னோட 'ஃபீலிங்' உனக்குத் தெரியாது மீனா.. உத்தியோகம் புருஷ லட்சணம்னு சொல்வாங்க... அந்த உத்தியோகமே இல்லைன்னு ஆச்சுன்னா... அது அசிங்கம் இல்லையா... சொல்லு... எனக்கு வேறு எந்த வேலையும் தெரியாதே மீனா...''

''மன உறுதியும் கூட புருஷ லட்சணம் தான். மனதை எதற்கும் தளர விடக் கூடாது. கோபி... வேலை போய் விட்டால் வாழ்க்கையே ஸ்தம்பித்து விடாது.. உனக்கு வருகிற கஷ்டங்களும் சிரமங்களும் தான் அனுபவப் பாடங்கள்... தண்ணியோட போறது வீரம் இல்லை... எதிர் நீச்சல் போட்டுக் கரையேறினாதான் வெற்றி... அதே மாதிரிதான்... நமக்கு வர்ற கஷ்டங்களையெல்லாம் சமாளிச்சு... ஜெயிக்கணும்... எப்படி சமாளிக்கலாம்னு யோசி... தீர்வு கிடைக்கும் கோபி...''

சிரித்தான் அவன்.. ''என் கையில் மந்திரக்கோல் ஏதும் இல்லை மீனா... மாயா ஜாலங்கள் நடக்க... நான் வெறும் கையில் முழம் போடுகிறவன். என்னோட கனவு... லட்சியம், என்னவோ வெறும் கனவாகவே இருந்து விடும் போல இருக்கிறது. அது என்னவோ நிஜம்...'' அவனது குரலில் நிராசைத் தெரிந்தது. மீனாவின் மனம் வலித்தது.

பாவம்... வேலை இழந்த வேதனை... நொந்து போய் பேசுகிறான். சற்று முன் நானும் குழம்பித் தவிக்க வில்லையா...

பெருமூச்சு விட்டாள்.

மறுபடியும் மறுபடியும் ஏதாவது ஒரு பிரச்சனை... சங்கிலித் தொடர் மாதிரி...

கடவுளுக்குப் பொழுது போகவில்லையோ... அது தான் இப்படி விளையாடுகிறாரோ... அவருக்கு ஏழை களின் வாழ்க்கை 'மெகா சீரியலாகி விட்டது போலும்!'

தெய்வமே... ஏன் ஏழைகளை மட்டும் சோதிக்கிறாய்.. வேதனைப்பட்டு.. பட்டு உணர்வுகள் மரத்துப்



போயிருக்கும். உறைக்காது... பரவாயில்லை என்ற எண்ணத்தினாலா...

''ஏய்... நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். நீ எதையோ யோசித்துக் கொண்டிருக்கே... என்ன பகல் கனவா... யாராவது மன்மதராஜா குதிரை சவாரி வருகிற மாதிரியாக்கும்...'' கோபியின் கிண்டல் குரலில் கவனத்தைத் திருப்பினாள் அவள்.

''ஆங்... என்ன கேட்டே கோபி...''

''அந்தக் கடையை நான் வாங்கினா என்ன என்று கேட்டேன்...''

அவள் வியப்புடன் கேட்டாள். ''அதற்குப் பணம்...?''

''அதான்... நளினா அக்கா இருக்கிறாளே... அவளிடம் கேட்டுப் பாரேன்...''

மறுபடியும் நளினாவா... ஏற்கனவே அந்த நிபந்தனை விழிகளை உருட்டி பயமுறுத்திக் கொண்டிருந்தது. திரும்பவும்...

ஊகூம்... முடியாது என்று தலையாட்டினாள் மீனா...

''ஒவ்வொருத்தரும் அண்ணனுக்காக ஏதேதோ உதவி செய்கிறார்கள்... எனக்காக இதை செய்யக் கூடாதா மீனா...'' கெஞ்சும் குரலில் கேட்டான் கோபி...

''அய்யோ... கோபி... என் கஷ்டத்தைப் புரிந்து கொள்ளாமல் இப்படிப் பேசுகிறாயே...'' மனம் புலம் பியது.

''சரி... வேண்டாம்... விடு... நான் எப்படியோ தொலைகிறேன்...'' கோபத்துடன் அங்கிருந்து சென்ற வனை வெறித்துப் பார்த்தாள்.

பின்பு பெருமூச்சை இழுத்து விட்டுவிட்டு தன் வேலையில் இறங்கினாள்...

மறுநாள் காலையில்.. அத்தைக்கு பால் கொண்டு வந்து கொடுத்தபோது கவனித்தாள்...

அத்தைக்கு சுரம்... கொதித்துக் கொண்டிருந்தது.

''அய்யோ... அத்தை... என்னை அழைத்துச் சொல்லியிருக்கக் கூடாதா... இராத்திரியெல்லாம் காய்ச்சல் இருந்திருக்கு.. ஒரு வார்த்தை சொல்லாமல் இருந்திருக்கிறீர்களே அத்தை... புறப்படுங்க அத்தை. டாக்டர் கிட்டே போகலாம்...'' பதறிப்போய் எழுப்பினாள்.

''வேணாம்மா... மறுபடியும் ஆஸ்பத்திரின்னு போகப் பிடிக்கவில்லை... ஊசி குத்தி குத்தி உடம்பெல்லாம் புண்ணாகிப் போயிருக்கு... இனியும் தாளாதும்மா.. இப்படியே இரண்டு மூன்று நாள் கிடந்து போயிடறேன்... ஆஸ்பத்திரி வாசனையே வேணாம் மீனா...''

''இல்லை அத்தை... நீங்க பட்ற வேதனையைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கச் சொல்கிறீர்களா புறப்படுங்க... போகலாம்...''

அத்தையை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றாள்... அவரை சோதித்த மருத்துவரின் முகத்தில் கலவரம் தெரிந்தது...

''உடனே 'அட்மிட்' செய்தாக வேண்டும்... மார்பில் தையல் போட்ட இடத்தில் 'இன்ஃபெக்ஷன்' ஆகி இருக்கிறது. தவிர... மறுபடியும் ஒரு 'டெஸ்ட்' எடுக்க வேண்டும்... கான்சர் பரவியிருக்கலாம்... நான் ஏற்கனவே சொன்ன மாதிரி 'ட்ரீட்மெண்ட்'டுக்கு தாங்குகிற சக்தி



இவரது உடம்புக்கு இல்லைம்மா... எங்களால் முடிந்த அளவு செய்கிறோம்... ஸிஸ்டர்... இந்தப் பேஷண்டை உடனே 'அட்மிட்' பண்ணிட்டு... நான் எழுதித் தரும் 'டெஸ்டை' உடனே எடுத்துவிடச் சொல்லுங்கள். இது அவசர கேஸ்... புரிந்ததா...'' காகிதத்தில் அவசரமாய் கிறுக்கியவாறு சொன்னார் டாக்டர்.

வயிற்றுக்குள் பகீர் என்றது மீனாவிற்கு... மறுபடியும் 'அட்மிட்'டா... மீண்டும் 'டெஸ்டா' கடவுளே! வறண்ட தொண்டையை லேசாய் கனைத்துக் கொண்டு கேட்டாள்.

''டாக்டர்... அத்தையை 'அட்மிட்' பண்ண... இந்த 'டெஸ்ட்'டுக்கெல்லாம் எவ்வளவு பணம் தேவைப் படும்...''

பரிதாபமாய் பார்த்தார் டாக்டர். ''ஏம்மா... பணம் ஏதும் கொண்டு வரவில்லையா...''

''காய்ச்சல் என்றதும் அப்படியே அழைத்து வந்து விட்டேன். போய் பணத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். எவ்வளவு என்று சொன்னால்...''

''பாரம்மா... உன் அத்தையின் நிலையைப் பார்த்தால் இன்னும் ஒரு வாரம் இங்கே இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது... அப்புறம் 'டெஸ்ட்...' ஒண்ணு செய்ய வேண்டும்... தேவையிருந்தால் 'ஸ்பெஷலிஸ்டை வரவழைப்போம். எல்லாவற்றிற்கும் சேர்த்து முப்பதாயிரம் ஆகலாம். பரவாயில்லை... அட்மிட் செய்து விட்டு வந்து பணத்தைக் கட்டும்மா. நான் சிபாரிசு செய்கிறேன்... இது எமர்ஜென்ஸி கேஸ்... உடனே சேர்த்தாக வேண்டும்... காலம் தாழ்த்தினால் ஆபத்து...''

மனதளவில் சோர்ந்து போனாள் மீனா... முப்ப தாயிரம்... எங்கே போவது...

கழுதை கெட்டால் குட்டிச்சுவர் என்பது மாதிரி திரும்ப நளினா அக்காவா... மறுபடியும் அந்த முகமறியா மனிதரிடம் இருந்தா...

வேறு வழியில்லையே... ஏழை மீனாவை நம்பி யார் கொடுப்பார்கள்...

அத்தையை வார்டில் விட்டுவிட்டு நர்ஸிடம் சொல்லி விட்டுப் புறப்பட்டாள் மீனா...

நோயின் மிகுதியாலோ என்னவோ... உணர்வின்றி மயங்கிக் கிடந்தாள் அத்தை... மீனாவிற்கு பரிதாபமும் அதன் கூடவே வேதனையும் எழுந்தது.

இத்தனைக் கஷ்டப்படுகிறோம்... அத்தையைக் காப்பாற்ற முடியுமா... இனியும் காலம் தாழ்த்தக் கூடாது...

நளினா அக்காவைப் பார்த்து பணம் கேட்க வேண் டும்... அப்புறம் மற்றதைப் பத்தி யோசிக்கலாம்...

உறுதியுடன் நடந்தாள் மீனா...

பணமும் கிடைத்தது... உடம்பெல்லாம் கூச அதை வாங்கிக் கொண்டாள்...

"அப்புறம்... என்ன முடிவு எடுத்தே மீனா... உனக்கு ஒப்புதல் தானே... இல்லாவிட்டால் நீ மறுபடியும் வந்திருக்க மாட்டாயே..." விடாப்பிடியாய் கேட்டாள் நளினா.

ஒரு நிமிடம் தயங்கிவிட்டு கேட்டாள்.. மீனா.



"அக்கா... ஆண் பிள்ளைகள் வரதட்சணையா பணம் வாங்கிக் கொண்டு தாலிக்கட்டுவது வழக்கம். நீங்கள் சொல்லும் அந்த மனிதர் பணம் கொடுத்து மனைவியைப் பெறுகிறாரே... ஏன்... அவருக்கு பெண் கொடுக்க யாரும் முன் வரவில்லையா என்ன... இத்தனைக்கும் அவரிடம் பணம்... வசதி... படிப்பு... நல்ல வேலைன்னு அத்தனை தகுதிகளும் இருக்கிறதே.. ஏன் பெரிய இடத்து சம்பந்த மாக அவர் பார்க்கவில்லை..."

"அதற்குக் காரணம் இருக்கிறது மீனா... அதாவது அம்மா நோயாளி... அவரைப் பார்த்துக் கொள்ள ஒருத்தி வேணும்... அதுதான்..."

"அதற்கு ஒரு நர்ஸ் போதுமே..."

"போதும் தான்... ஆனால் அந்த அம்மா ஒத்துக் கொள்ளவில்லையே... நான் கண்ணை மூடுவதற்குள் உனக்குக் கல்யாணம் பண்ணிப் பார்க்க வேண்டும் என்று அவரது தாய் புலம்பித் தீர்க்கிறார்களாம்... கல்யாணமே வேண்டாம் என்று இருந்த மனிதர் அம்மாவின் ஆசைக்காக ஒப்புக் கொண்டிருக்கிறார்... இந்தக் காலத்தில்... மாமியாரை எந்த மருமகள் அன்பாக நடத்துகிறாள். அதுவும் படுக்கை நோயாளி வேறு... கரிசனத்துடன் இருக்க வேண்டுமே... பணக்காரப் பெண் என்றால் எனக்கென்ன தலை விதியான்னு பிறந்த வீட்டுக்குப் போய் விடுவாள். ஏழையாக இருந்தாலும் நல்ல மனம் படைத்தவளாய் இருந்தால் போதும் என்ற எண்ணம் ஸ்ரீகாந்திற்கு... என்னைக் கேட்டதும் உன் நினைவு வந்தது.. சொன்னேன்.

இது தற்காலிக ஏற்பாடுதான்... ஒரு ஒப்பந்தம் மாதிரின்னு வைத்துக் கொள்ளேன்... கொஞ்ச காலமே வாழப் போகிற அவருடைய அம்மாவின் விருப்பத்திற்காக மட்டுமே இந்த செட் அப்... மற்றபடி அவரோட கைவிரலும் உன் மேல் படாது... போதுமா...''

''இப்ப புரிகிறது நளினா அக்கா... அவருக்கு ஏன் திருமணத்தில் இஷ்டமில்லைன்னு... குடும்ப வாழ்க்கையில் ஈடுபடக்கூடாதுன்னு டாக்டர் எச்சரித்திருக்க வேண்டும். ஒருவேளை ஆண்மையும்...''

'வள்'ளென்று இரைந்தாள் நளினா...

''வாயை மூடு... எதையோ கற்பனை செய்து கொண்டு கன்னாபின்னா என்று பேசாதே... உனக்கு அவரைப் பற்றி என்ன தெரியும்... ஆணுக்குரிய மிடுக்கும்... ஆண்மையும் அவரிடம் நிறையவே இருக்கிறது... ஏதோ இறங்கி வந்தால்...''

மீனா வியந்தாள்... அவரைப் பற்றிப் பேசினால் நளினா அக்காவிற்கு ஏன் இப்படிக் கோபம் வருகிறது... அந்த 'யாரோ' ஒருத்தருக்கு ஏன் இப்படிப் பரிந்து பேசுகிறாள்...

''நான் ஏதாவது தப்பா...''

''லீவ் இட்... இப்ப உனக்குப் பணம் வேண்டும்... அவருக்கு ஒரு மனைவி வேண்டும்... விருப்பம் என்றால் ஒத்துக் கொள். உனக்கு மொத்தமாய் இரண்டு லட்சம் கொடுக்கத் தயாராய் இருக்கிறார்... ஒப்புக் கொள்ள மனமில்லை என்றால்... வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுக்கப் பார்.. ஏதோ... உனக்கு நன்மை செய்யலாம் என்று பார்த்தால்...''



காரமாய் பொரிந்து தள்ளினாள் நளினா...

இரண்டு லட்சம்! வாங்கியது எண்பதாயிரம் கழிய இன்னும் ஒரு லட்சத்து இருபதாயிரம்!

என்னவெல்லாம் செய்யலாம்... அத்தைக்கு ட்ரீட்மெண்ட்டுக்கு... கோபியின் கடைக்கு... இன்னும்...

இந்த சந்தர்ப்பத்தை நழுவ விடுவதா... ஆனால் அந்த 'யாரோ...? அவன் எப்படியோ... சாடிஸ்ட்டாகக்கூட இருக்கலாம்... ஏன் 'சைகோ'வாகக் கூட இருக்கலாம். எப்படி நம்புவது...

ஆனால் கடவுளே காட்டிய வழி மாதிரி... திடீர் அதிர்ஷ்டமாய் பணம் வருகிறதே... இந்த சந்தர்ப்பத்தை நழுவ விடலாமா... மனம் கடிகாரப் பெண்டுலமாய் ஆடியது... முடிவில் பணத்தின் பக்கம் நிலை குத்தி நின்றது.

அவள் ஒப்புக் கொண்டாள்.

உடனே நளினாவின் மலர்ந்த வதனத்தில் 'பளிச்' சிட்ட மின்னல்...! அந்த ஆள் நளினாவிற்கு அத்தனை வேண்டியவரா! அவர் யாராக இருக்க வேண்டும். ஆர்வம் அவளுள் குடைந்தது...

## 7



மருத்துவமனையின் ஒரு ஓரமாய் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தாள் மீனா.

அவளுள் படபடப்பு... பரபரப்பு...

நான் எடுத்த முடிவு சரிதானா என்ற படபடப்பு!

கோபியிடம் உன் கனவு நிறைவேறப் போகிறது என்று சொன்னதும் அவன் என்ன சொல்வான்.. எப்படி எடுத்துக் கொள்வான் என்பதைக் காண விழையும் பரபரப்பு...

கோபிக்காக காத்துக் கொண்டிருந்தாள்.

மருத்துவமனையில் அத்தையை அட்மிட் பண்ணிய தற்கான பணத்தைக் கட்டியாகி விட்டது... மளிகைக் கடை லிஸ்ட் மாதிரி டாக்டர் எழுதித் தந்த மருந்துப் பட்டியலில் குறிப்பிட்டிருந்த மருந்துகளையெல்லாம் வாங்கி வந்து அடுக்கி வைத்தாகி விட்டது.

அத்தைக்குத் தேவையான ஆர்லிக்ஸ், பழங்கள்... நைட்டீஸ் எல்லாமே தயார்...

அந்தப் பணம் இல்லாமல் இருந்திருந்தால்... இதையெல்லாம் செய்திருக்க முடியாதே... ஒரு வகையில் தான் எடுத்த முடிவு நல்லதுதான்...

கண்கள் வாசல் பக்கமாய் அலைந்தன...

இன்னும் கோபியைக் காணோம்.

பக்கத்து வீட்டில் சாவியைக் கொடுத்து விபரத்தையும் சொல்லிவிட்டு வந்திருக்கிறாள்...

ஆனால்... எங்கே சுற்றிக் கொண்டிருக்கிறானோ...

கால்மணி நேரம் கழிய... அவன் கலவரத்துடன் ஓடி வருவது தெரிந்ததும் புன்னகையுடன் பார்த்தாள்.

அருகில் வந்து... மேல் மூச்சு வாங்க நின்றான்.



''அம்மாவுக்கு என்ன ஆச்சு மீனா... நேத்தெல்லாம் நன்றாகத் தானே இருந்தாங்க...'' என்று கேட்டான்.

''காலையில் உடம்பு நெருப்பாய் கொதித்தது... அவங்களால கண்களைத் திறக்கவும் முடியவில்லை. அதான்... இங்கே அழைத்து வந்து விட்டேன். உடனே 'அட்மிட்' பண்ணியாக வேண்டும் என்று டாக்டர் சொல்லி விட்டார்கள்... 'டெஸ்ட்'க்கும் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்.''

''மறுபடியும் 'டெஸ்டா...' என்ன மீனா... சரி.. பணத்திற்கு என்ன செய்தாய்... நளினா அக்காவா...''

ஆம் என்று தலையசைத்தாள்.

அவன் முகத்தில் வாட்டம் தெரிந்தது.

''ப்ச்சு... நான் கையாலாகாதவன் மீனா.. அம்மாவிற்கு பிரயோஜனமில்லாத பிள்ளை... பெத்த பிள்ளை.. இப்படி உதவாக்கரையாக இருக்கிறேன்... பெறாத பொண்ணா எல்லாத்தையும் செய்கிறே... எனக்கு வெட்கமா இருக்கு'' கோபியின் குரலில் இயலாமை தெரிந்தது.

''உஷ்... முதலில் இந்த சுய பச்சாதாபத்தை விடு கோபி... பணம் முக்கியம் தான்... ஆனால் பணம் மட்டுமே முக்கியமில்லை. ஒரு தாய்க்கு தன் பிள்ளை அருகில் இருந்தால் போதும்... நீ அத்தை கிட்ட அன்பாப் பேசி எத்தனை நாள் ஆச்சு... எப்பவும் உன் வேலை... உன் நண்பர்கள் என்ற வட்டம் தான்... முதல்ல அத்தை கிட்டே உட்கார்ந்து இதமா பேசு.. உடம்பு பரவாயில்லையாம்மான்னு அக்கறையா விசாரி... அதுதான்

மருந்து மாத்திரையை விட வேலை செய்யும்...'' என்று விரட்டினாள் அவள்.

''ஆமா மீனா... பணத்துக்கு...''

''முதல்ல அம்மா... அப்புறம் தான் மத்த பேச்சு...''

கால்மணி நேரம் கழித்து வந்தான் கோபி...

''நீ சொன்ன மாதிரி அக்கறையா விசாரிச்சேன் மீனா... அம்மா முகத்தில் என்ன சந்தோஷம் தெரியுமா... கண்களில் பிரகாசம் வேறு... ஆனா... நர்ஸ் வந்து பேஷண்ட் தூங்கணும்... வெளியே போங்கன்னு அனுப்பிட்டா...'' என்றவாறு அவளது அருகில் அமர்ந்து கொண்டான்...

''சரி... பணம் கட்டியாச்சா...'' என்றான்.

''கட்டியாகி விட்டது... நாளைக்கு நீ வேலைக்குப் போகணுமா கோபி...''

''இனிமே எங்கே, வேலை... இன்னும் இரண்டு நாள்ல புது ஆள் ஓனராகி விடப் போகிறான்... எங்களுக் கெல்லாம் 'கல்தா' தான்...''

''அதுசரி... உன் ஓனருக்கு இதில் விருப்பமா...''

''சுத்தமா இல்லை... இத்தனை வருஷமா நடத்தி வந்த 'ஷாப்' யாரோ ஒரு புதுப் பார்ட்டிக்குப் போகிறதே என்ற வருத்தம் அவருக்கு... நீங்க மூணு பேரும் முதல் போட்டு இதை வாங்கியிருக்கக் கூடாதா பசங்களா... அவங்க வந்து உங்களை வெளியேற்றப் போகிறதை நினைச்சா மனசில் போட்டு அறுக்கிறது...'' என்று புலம்புகிறார்... என்ன செய்ய... அதற்கெல்லாம் கொடுப்பினை



வேண்டும். இல்லையா மீனா... எனக்கு அதுதான் சுத்தமா இல்லையே.''

''ஏன் இல்லை... உனக்கு அந்த அதிர்ஷ்டம் இருக்கு கோபி. நாளையே உன் ஓனரைப் பார்த்துப் பேசு. அவர் ஒப்புக் கொண்டால் உடனே அட்வான்ஸ் செய்து விடலாம்... என்ன சொல்கிறாய்...''

அவள் சொல்வதைக் கேட்டு திகைத்தான் கோபி.

''என்ன ஆச்சு உனக்கு மீனா. ஏதேதோ பேத்தறே.''

''இல்லே கோபி... நளினா அக்கா பணத்தை ஏற்பாடு செய்து தருவதாய் கூறியிருக்கிறாள். அந்தத் தைரியத்தில் தான் சொல்கிறேன்... எப்பப் பணம் வேணும்னு சொல்லு... கொண்டு வந்து தருகிறேன்... என்ன...'' மகிழ்ச்சியில் அவன் திக்கு முக்காடுவது கண்டு.. அவள் புன்னகைத் தாள்.

அவனது முகத்தில் தெரியும் இந்த ஆனந்தத்திற்காக எதையும் செய்யலாம்... ஆம்... எதை வேண்டு மானாலும்... தான் எடுத்த முடிவு தவறானதோ என்று உள்ளுக்குள் உறுத்திக் கொண்டிருந்த நெருடல் இப்போது முற்றிலுமாய் மாயமாகி... நிம்மதி வந்தது...

கோபியின் வாழ்க்கை ஒளி மயமாக ஆனால் அதுவே போதும்... அத்தைக்கும் திருப்தியாகும்...

''ஏன் மீனா... அத்தனைப் பணத்தையும் நளினா கொடுக்கிறாள் என்றால் என்னால் நம்ப முடியவில்லை... அத்தனை லேசில் பணம் தரமாட்டாளே... கண்டிஷன் ஏதும் சொல்லாமலா கொடுத்திருக்கிறாள்...'' சந்தேகத் துடன் கேட்டான் கோபி...

கொஞ்சம் தயங்கி விட்டுச் சொன்னாள். "ஒரு கண்டிஷன் இருக்கிறது... அதுக்கு ஒப்புக் கொண்டு தான் வாங்கிக் கொண்டேன்..."

"என்ன அது... அவள் வீட்டில் உழைக்கனுமா..."

"அது இல்லை..."

"பின்னே... அவள் பின்னால் எடுபிடியா சுத்தனு மாக்கும்..."

"ஊகும்..."

"அது என்ன நிபந்தனை..."

"அவளுக்குத் தெரிந்த ஒருத்தரைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமாம்..." நிபந்தனையில் பாதி மட்டுமே சொன்னாள் மீனா... மீதியை சொன்னால் தாங்க மாட்டானே... கோபி அதிர்ந்து போனான்...

"என்ன கூத்து இது... கல்யாணமா... பணத்துக்கும் இந்தக் கல்யாணத்திற்கும் என்ன சம்பந்தம்... மீனா... எனக்கு என்னவோ சரியாகப் படவில்லை... இந்தப் பணமும் வேண்டாம். இந்தத் திடீர் திருமணமும் வேண்டாம்..."

"அதெப்படி கோபி... அந்த நிபந்தனைக்கு ஒப்பித் தான் இந்தப் பணத்தை நான் வாங்கியது... இப்போது எப்படி பின் வாங்க முடியும்... சரி... இத்தனை பணத் தையும் எப்படித் திருப்பித் தருவது... அதை யோசித் தாயா..."

"அதுக்காக... யாரோ ஒருவனுக்கு கழுத்தை நீட்டப் போகிறாயா.. அவன் பணத்தைக் கொடுத்து பெண்ணை



விலைக்கு வாங்க வேண்டிய அவசியம் என்ன... இத்தனை பணத்தையும் அள்ளித் தரும் அந்தப் பெரிய மனுஷன். கை சொடுக்கினால் பெண்கள்... அதுவும் பணக்கார இளம் பெண்கள் க்யூவில் நிற்க மாட்டார்களா... அவன் யார்.. முரடனா... திருடனா... கடத்தல் மன்னனா... கஞ்சா பேர் வழியா... இல்லை குடிகாரனா... ஏன்... பெண் பித்தனாகக் கூட இருக்கலாம் இல்லையா..."

கலகலவென்று சிரித்தாள் மீனா.

"முதல்ல நிறைய சினிமா பார்ப்பதை நிறுத்து...

உன் புத்தி ஜேம்ஸ்பாண்ட் மாதிரி கிரிமினலா யோசிக்கிறது."

நளினா அக்கா சொல்வதைப் பார்த்தால் அப்படி ஒன்றும் மோசமானவராய் படவில்லை. "படுக்கையில் இருக்கும் தாய்க்கு மகனை மணக் கோலத்தில் பார்க்கும் ஆசை... அதனால்தான் இந்த அவசரக் கல்யாணம்... போதுமா..." என்றாள் அவள்.

"போதாதே மீனா... அப்படியே அவசரம் என்றாலும்... பணத்தைத் தந்து ஒரு ஏழைப் பெண்ணை சம்மதிக்க வைத்து... ஊகூம்... ஏதோ சரியில்லை மீனா..."

"எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது... எதுவும் பேசாமல் கேன்டீனுக்கு வா... பசி வயிற்றைக் கிள்ளு கிறது..."

மீனாவின் கரத்தை எடுத்துக் கொண்டான் கோபி...

"மீனா... எனக்கு உதவுகிறேன் என்று நீ போய் பள்ளத்தில் விழுந்து விடுவாயோ என்கிற அச்சம் தான்

எனக்கு.. கூலி வேலை செய்து கூட நான் பிழைத்துக் கொள்வேன்... தியாகம் செய்வதாய் நினைத்து உன் வாழ்க்கையை பலி கொடுத்துவிட வேண்டாம்மா... உனக்கு ஏதாவது என்றால் என்னால் தாங்க முடியாது... என் கூட பிறக்கா விட்டாலும் நீ என் உயிர் தங்கை... உன் சந்தோஷம் தான் எனக்கு முக்கியம்... வாங்கிய பணத்திற்கு அவகாசம் கேட்கலாம்.. நீயும் நானும் உழைத்து திருப்பிக் கொடுத்து விடலாம்... நல்லா யோசிடா..."

உணர்ச்சி மிகுதியில் குரல் கரகரத்தது அவனுக்கு...

நெகிழ்ந்து போனாள் மீனா...

மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.

"எனக்கும் உன் சந்தோஷம்தான் முக்கியம் கோபி... அதற்காக எது வேண்டுமானாலும் செய்யத் தயார்தான்... எத்தகையவனாக இருக்கட்டும்... கழுத்தை நீட்டவும் ரெடி... அவன் அழகற்ற குரூபியாக இருந்தாலும் சரி... எலும்புக் கூடாக இருந்தாலும் சரி... கட்டையாக.. குட்டையாக இருப்பினும் ஓ.கே... நல்ல விஷயங் களுக்காக சில தியாகங்களைச் செய்வதில் தப்பில்லை. என் மீது உயிரையே வைத்திருக்கும் கோபியின் எதிர் காலம் நல்லதாய் அமைய வேண்டும்... அது போதும்..."

அந்த நம்பிக்கையில் மனதில் தெம்பு கூட... குதூகலமாய் கோபியுடன் சென்றாள் மீனா...

அத்தையின் உடல் நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லை. டாக்டர் கோபியையும் மீனாவையும் அழைத்து



சொல்லி விட்டார். இனி எதுவும் செய்ய முடியாது... புற்றுநோய் வேகமாய் பரவிவிட்டது. கீமோ தெரபியும் கஷ்டம்தான்... வீண் செலவு மட்டுமல்ல... அதனால் நோயாளிக்கு ரணவேதனைதான் தவிர பிரயோசன மில்லை... அதைவிட நிம்மதியாக கண்களை மூடட்டும்...

எதிர்பார்த்ததுதான் என்றாலும் இதயம் வலித்தது... அத்தை மெல்ல மெல்ல செத்துக் கொண்டு இருக்கிறாள்... அந்தக் காலன் அடியெடுத்து வைத்து விட்டான்... இனி அவனைத் தடுக்க முடியாது...

கோபியின் முகம் வேதனையில் மாறியது... மீனா ஆறுதலாய் அவனது கரத்தை அழுத்தினாள்.

மரணம் என்பது ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கை ஏட்டின் முடிவுரை... அதை சந்தித்தே ஆக வேண்டும்...

"மீனா... என்னால்..." கோபியின் குரல் தழுதழுத்தது.

"உஷ்... மனதை கெட்டியாக்கிக் கொள்ள வேண்டும் கோபி. அத்தை இருக்கும் வரை நாம் நம் வேதனையை வெளிக்காட்டிக் கொள்ளக்கூடாது அவங்களை நாம் சந்தோஷமாய் வச்சுக்கணும். அவங்களுக்கு எந்தக் குறையும் இருக்கக் கூடாது... அத்தை நிம்மதியா இறக்க வேண்டும்... அதுதான் முக்கியம்.. முதல்ல அத்தைக் கிட்ட நீ ஷாப்புக்கு முதலாளி ஆயிட்டேன்னு சொல்லணும்... அவங்களோட மனசு நிறைஞ்சுடும்... வா... என்னோட..." என்றாள் அவள்.

உண்மைதான்... அத்தையின் முகம் மகிழ்ச்சியில் ஜொலித்தது.

"உண்மையாடா கோபி... அம்மாடி! நான் கும்பிட்ட தெய்வம் கைவிடவில்லை... உனக்கு நல்ல வாழ்க்கையை

அமைச்சுக் கொடுத்து விட்டான்... இனிமே எனக்கு உன்னைப் பத்திக் கவலை இல்லை...'' கண்களில் துளிர்த்த கண்ணீரை முந்தானையில் துடைத்தவாறு சொன்னாள் அத்தை...

''அதே மாதிரி... நம்ம மீனாப் பொண்ணுக்கும் ஒரு நல்ல வரன் கிடைச்சுட்டா... இந்த கட்டை வேகும்...''

''அத்தை... அந்த விஷயமா உங்ககிட்ட சொல்லலாம்னு இருந்தேன்.. நளினா அக்காவுக்கு தெரிந்தவர் ஒருத்தர் இருக்காராம்... படித்தவராம்... நல்ல வேலையில் இருக்கிறார்... அவருக்கு... நான்...'' எப்படி சொல்வது என்று திணறினாள் மீனா.

அதைக்கேட்டு ஆனந்தத்தில் திக்கு முக்காடினாள் அத்தை.

''இன்னிக்கு என்ன... ஒரே சந்தோஷமான விஷயமா... வருகிறது... மீனா.. இதெல்லாம் உண்மைதானா.. இல்லை... என்னை சந்தோஷப்படுத்தறதுக்காக சொல்றேயா...'' யோசனையுடன் கேட்டாள் மூத்தவள்.

''இல்லை அத்தை... இப்ப சொன்னதெல்லாம் சத்தியம். நீங்க சம்மதித்தா போதும்... உடனே கல்யாணம்.. ஆனா தடபுடல் கல்யாணம் இல்லை அத்தை... எளிமையாதான்... என்ன சொல்றீங்க அத்தை...''

''நான் சொல்றதுக்கு என்னம்மா இருக்கு... நான் கண் மூடுவதற்குள் உன் கல்யாணத்தைப் பார்க்கணும்னு துடிச்சேன். அது நடக்க இருக்கிறதுன்னா... எனக்கு பரம சந்தோஷம்தான்... எப்பம்மா கல்யாணம்...''

''தெரியல்லே அத்தை... கூடிய சீக்கிரம் இருக்கும்... ஆனா... எனக்குத்தான் மனசில்லை... உங்களை



விட்டுட்டு எப்படி போவதுன்னு கவலையாக இருக்கு...'' மீனாவின் குரல் உணர்ச்சியில் தழுதழுத்தது...

''ச்சீ... அசடு... அது அது... அந்தந்த நேரத்தில் நடக்கத் தான் வேணும்... எத்தனைக் காலம் உன்னைக் கன்னியா வச்சுக்க முடியும்... ஏதோ... அந்தப் புண்ணியவதி நளினா வாலே இப்படி ஒரு நல்லவழி உனக்கு கிடைச்சதேன்னு நினைச்சு சந்தோஷப்படறேன்.. ஆனா... ஒரே ஒரு வருத்தம்தான் எனக்கு... நான் இருக்கும் இருப்பில் உன் கல்யாணத்தை நேரில் பார்க்க முடியாதேங்கறதுதான். அந்தக் கொடுப்பினை எனக்கு இல்லாமல் போச்சே...'' துயரம் தொண்டையை அடைத்தது...

''கவலைப் படாதீங்க அத்தை... கல்யாணம் முடிந்ததும் உங்ககிட்ட ஆசீர்வாதம் வாங்க வருவோம்... சரியா...'' என்று கேட்ட வளர்ப்பு மகளை வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தாள் அத்தை...

அவள் முகத்தில் தெரிந்தது அன்பின் ஜொலிப்பு!

ஒருவேளை... அது அணையப் போகும் விளக்கின் பிரகாசமோ...

அன்று இரவு... மீனா தூக்கம் இல்லாமல் தவித்தாள். ஏதோ தவிப்பு... எதிர்காலம் பற்றிய பயம்... இனி வாழ்க்கைப் படகு என்னவாகுமோ என்ற தத்தளிப்பு... 'டைட்டானிக்' கப்பலின் கதிதானோ என்ற பீதி... அத்தனையும் மீறி... இனி அத்தைக்கு யார் துணை... என்ற கவலை...

கோபியால் முடியுமா... ஒத்தாசையாக இருக்கலாம்... ஆனால்... அத்தைக்கு உடம்பு துடைத்துவிட்டு...

'பெட்சோர்' வராமல் பவுடர் போட்டு... இயற்கை அழைப்புக்கு உதவியாய்.. ஊகூம்... நிச்சயம் ஒரு பெண் துணை அவசியம்தான். நாளைக்கே ஏற்பாடு செய்ய வேண்டும்... கையில் பணம் நிறைய இருக்கிறது. ஒரு நல்ல நர்ஸாக ஏற்பாடு செய்து விட்டால் போச்சு...

அந்த தீர்மானத்தில் மனம் சமனப்பட்டது...

பணம் இருந்துவிட்டால் எதையும் சாதிக்கலாம் என்ற தெம்பு வந்து விடுகிறது என்பது உண்மைதான். அந்தப் பணத்தை அள்ளித் தந்தவனுக்கு நன்றி... மானசீகமாய் அவனை... தான் மணக்கப் போகும் மனிதனை நன்றியுடன் நினைத்தாள்...

அவர் எப்படிப்பட்டவர்... எப்படி இருப்பார்... நினைப்பில் மனம் படபடக்க... கண்களை மூடிக் கொண்டாள்...

மெல்ல நித்திரை அவளை வருடிக் கொடுத்தது.

# 8

அழகாய் விடிந்த அந்த காலைப் பொழுதில்... மீனாவின் திருமணம் எளிமையாய் நடந்தேறியது. ரிஜிஸ்டர் ஆபீஸில் பதிவு செய்யப்பட்டு... மீனாவின் கழுத்தில் மஞ்சள் கயிற்றை முடிச்சிட்டான் ஸ்ரீகாந்த்.

தாயின் உடல் நிலைதான் இந்த எளிமையான... அவசரத் திருமணத்திற்குக் காரணம் என்பதை



அனைவரும் ஏற்றுக் கொண்டாலும்... வினோத் அதை நம்பத் தயாராக இல்லை... அதைக் கட்டுக் கதை என்றே நினைத்தான்.

முதன் முறையாக... மணப்பெண்ணாக நின்ற மீனாவைக் கூர்ந்து கவனித்தான்.

பாவம்... மருட்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்... பணக்காரத்துவம் அவளை அச்சுறுத்தியதோ என்னவோ.

அவனது பார்வை ஸ்ரீகாந்த் மீது தாவியது... தாடை இறுக நின்றிருந்தான் அவன்...

என்னதான் தாய்க்காக இந்தத் திருமணம் என்றாலும்... ஏழைப் பெண்ணை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்... தியாகமா... இல்லை நடிப்பா... யார் கண்ணுக்கு இந்த மைப்பூச்சு...

எரிச்சலுடன் திரும்பினான் வினோத்.

நளினா புன்னகையுடன் நின்றிருந்தாள்... வெற்றிப் புன்னகையோ... கசப்புடன் நினைத்தான்.

ம்ம்... பார்க்கலாம்.. எத்தனை நாள் இந்த புதுசாயத்தின் அருமை... ஒரு நாள் வெளுக்கத்தான் போகிறது.

ஆனால்... பாவம் இந்தப் பெண்.. பெயர் என்ன... ம்ம்... ஆங்... மீனா... பலியாடாகி விட்டாள் என்பது தான் பரிதாபம். இதற்காக எவ்வளவு பணம் கொடுக்கப் பட்டதோ...

இவனுக்கும் என்ன அவசரத் தேவையோ... இப்படி தன் வாழ்க்கையை பலி கொடுக்க... மீனாவிற்காக அவன் பரிதாபப்பட்டான்.

உண்மையில் மீனா பலியாட்டின் நிலையில் தான் இருந்தாள்... கணவன் என்ற புதிய உறவு நிலைக்கு வந்தவனை ஓரக்கண்ணால் பார்த்தாள்.

மனம் சில்லிட்டது... அவனது முகத்தில் துளியும் சிரிப்பில்லை. விஷத்தைக் குடித்தவன் போல இருந்தது அவன் முகம். விருப்பம் இல்லாத மணமாகவே இருக்கட்டும்... அதற்காக இப்படியா... பாறை மாதிரி இறுகியிருப்பது...

கோபி அவள் காதில் கிசுகிசுத்தான்.

''உண்மையில் இந்தத் திருமணம் அவசியம்தானா மீனா...''

''உனக்கு எதற்கு இந்த திடீர் சந்தேகம்...'' என்று கேட்டாள் அவள்.

''மாப்பிள்ளை முகத்தில் சின்னச் சிரிப்பும் காணோமே... நீ எட்டிக்காயா என்ன... கசந்து வழிகிறது முகம்..'' முகம் சுளித்தான் கோபி...

அது உண்மைதான் என்றாலும்... கோபியிடம் விட்டுக் கொடுக்காமல் பேசினாள்...

''பாவம் கோபி... தாயாருக்கு உடம்பு சரியில்லை. இந்தத் திருமணத்திற்கு அவரால் வர முடியவில்லையே என்ற வருத்தமாகவும் இருக்கலாம். இல்லையா...''

''ஊகூம்.. ஏதோ சரியில்லைன்னு படுகிறது மீனா...'' என்றான் கோபி.

மீனாவிற்கும் அதே எண்ணம் தான்.. இருந்தும் அதை வெளிக்காட்டாமல் இருக்க முயற்சித்தாள்.



பள்ளியில் பிரெஞ்சு புரட்சியைப் பற்றிப் படித்திருக்கிறாள் ராஜ வம்சத்தினரைக் கூண்டோடு கொன்று போட்ட பெரும் புரட்சி!

'கில்லட்டின்' எந்திரத்தில் அவர்களின் தலையைத் துண்டாடிய கொடூரம்!

அதே மாதிரி.. 'கில்லட்டின்' முன்னால் நிற்பது மாதிரி ஒரு உணர்வு...

ஆயிற்று... தலைக் கொடுத்தாகி விட்டது... இனி பின் வாங்க முடியாது... ஆவது ஆகட்டும்...

அந்த நினைப்பில் தலை நிமிர்ந்து நின்றாள் அவள். திருமணத்திற்கு நான்கு நாட்கள் இருந்தபோது நளினா... மீனாவையும் ஸ்ரீகாந்த்தையும் சந்திக்க வைத்தாள். தான் நினைத்து பயந்த மாதிரி இல்லாமல் ஆள் களையாகவே இருக்கிறார்தான்... உள்ளூர நிம்மதி உண்டானது.. ஆனால் அன்றைக்கு அவன் கல்போல இறுகி இருக்கவில்லை.

அவளிடம் இதமாய் பேசினான்.

மீனாவிற்கு தான் வியர்த்து வழிந்தது. வருங்காலக் கணவன் என்று முன்பின் தெரியாதவனை நினைக்கையில் உதறல்தான் ஏற்பட்டது.

உதறிவிட்டு ஓடிவிடலாமா என்றுகூட தோன்றியது. ஆனால் பயத்தில் அவளால் அடியெடுத்தும் வைக்க முடியவில்லை.

ஏதோ அவன் பாயக் காத்திருக்கும் வேங்கை மாதிரியும், தான் பயத்துடன்.. மருண்டு போய் நிற்கும் புள்ளிமான் போலவும் அவளுக்குப் பட்டது.

அவன் கேட்டதற்கு பதில் சொல்லவும் தடுமாறினாள்.

அவன் மறுபடியும் நிபந்தனையை நினைவுபடுத்தினான்.

பெயருக்குத்தான் மனைவி... தாயாரைக் கவனிக்க... வீட்டை நிர்வகிக்க... அவ்வளவு போதும்..

அதுவும் இரண்டு வருடங்கள் மட்டுமே... அத்தனையும் தாய்க்காகத்தான்... கெடு முடிந்ததும் அவள் வழி அவளுக்கு... பிரிந்து செல்லும்போது... அவளின் எதிர்காலத்திற்காக ஒரு லட்சம் அவளுக்கு கொடுக்கப்படும்... அத்துடன் உறவு முறிந்து விட வேண்டும்... மீனாவிற்கு வியப்பு...

பணம் இருந்தால் எதையும் சாதிக்கலாம்!

பணம் கொடுத்து பெண்ணை விலைக்கு வாங்கி... மீண்டும் பணம் கொடுத்து மனைவியை விலக்க முடியும்..!

அதே பணத்தால் ஊர் வாயையும் மூடிவிட முடியும்! அதன் பிறகு கனவில் நடப்பதுபோல எல்லாமே நடந்தது. ஸ்ரீகாந்த் ஒரு குறிப்பிட்டத் தொகையை... திருமணத்திற்கு தேவையானதை வாங்கிக்கொள்ள மீனாவிடம் தந்தான். விலை உயர்ந்த பட்டுப்புடவை... அதற்கு ஏற்றதாய்... பொருத்தமானதாய் நகைகள்... அலங்கார சாதனங்கள்... கைப்பை... செருப்பு இத்யாதிகளை வாங்கிக் கொள்ளச் சொன்னான். அழகான 'டைட்டன்' கடிகாரத்தை அவளுக்கு வாங்கியும் தந்தான்...

மாயா ஜாலம் போல்... எல்லாம் தலை கீழாய் மாறிப் போன வித்தை! எந்த தேவதை வந்து மந்திரக் கோலை



அசைத்ததோ... மீனாவின் வாழ்க்கைத் தடமே மாறி விட்டது... சின்டரெல்லாவைப்போல... ஆனால்... சின்டரெல்லாவிற்கு கெடு நடு இரவு பன்னிரண்டு மணி வரை...

மீனாவிற்கு இரண்டு வருடங்கள்!

ஒரே ஒரு வித்தியாசம்... பிரின்ஸ் சார்மிங் சின்டெரல்லாவைப் பார்த்து கிறங்கி நின்றான்... ஆனால் இங்கே... ஸ்ரீகாந்த் கடுப்பாய் வெறித்து நிற்கிறான்... அவனது கரத்தைப் பிடித்து வாழ்த்து கூறும்போது அவனது உதட்டில் சிறு புன்னகை... போலி புன்னகை!

அனைவருக்கும் ஐந்து நட்சத்திர ஓட்டலில் விருந்து... மீனா எத்தனை வற்புறுத்தியும் கோபி இருக்காமல் புறப்பட்டு விட்டான்.

பணக்கார விருந்து தனக்கு செரிக்காது என்று...

நேரே ஸ்ரீகாந்த் தாயிடம் சென்று... அவரது கால்களில் விழுந்து நமஸ்கரித்தனர்...

தன் பேச்சுக்கு மதிப்புத் தந்து மணந்து கொண்டானே பிள்ளை என்ற திருப்தியில் அவர்களை மனதார வாழ்த்தினாள் தாய்.

மருமகளை அன்புடன் அணைத்துக் கொண்டு...

''இந்த வீட்டிற்கு விளக்கேத்த வந்த மகாலட்சுமி நீ... மகராசியா இருக்கணும்...'' என்று நிறைந்த மனதுடன் ஆசிர்வதித்தாள்...

''புது மருமகள் நீ வரும்போது இப்படி எதுக்கும் லாயக்கில்லாமல் இருக்கிறேனேன்னு வேதனையா இருக்கு. என் பிள்ளைக்கும் என் அருமை மருமகளுக்கும்

உட்கார வைத்து விருந்து சமைத்துப் போடணும்னு மனசில் துடிப்பு இருந்தாலும்... உடம்பு கேட்க மாட்டேன்கிறதேம்மா... என்னால் ஆசி மட்டுமே வழங்க முடியும்... மீனா... என்னை மன்னிச்சிடும்மா...'' கண்ணீர் மல்க சொன்ன மாமியாரை பரிவுடன் அணைத்துக் கொண்டாள் மீனா.

''என்ன அத்தை இது... என்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு... வயதில் பெரியவங்க நீங்க... உங்களுக்கு பணிவிடை செய்ய வேண்டியது என்னோட கடமையில்லையா...'' என்றாள் அவள்.

மனதுக்குள்... அதற்குத்தானே உங்கள் மகனை மணந்து கொண்டதும்... கைநீட்டி பணம் வாங்கி விட்டேன். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டுமே... என்று நினைத்துக் கொண்டாள்...

''ஸ்ரீகாந்த்... மீனாவோட அத்தைக்கும் முடியல லேன்னு சொன்னேயே... மீனாவை அழைத்துக் கொண்டு போய் ஆசீர்வாதம் வாங்கிக்கோப்பா... பாவம்... தாயாக இருந்து வளர்த்தவங்க... மனசு குளிரும்...''

சாரதா சொன்னதும் நன்றியுடன் பார்த்தாள் மீனா. மாமியார் நல்லவர்... இளகிய மனமும் புரிந்து கொள்ளும் பக்குவமும் இருக்கிறது...

தற்காலிக உறவுதான்... இருந்தும் அது நல்ல உறவாக அமைந்ததே...

ஏதோ இந்த வீட்டில் ஒரு ஜீவனாவது தன்னை மதித்துப் பேசுகிறதே என்ற நிறைவு ஏற்பட்டது.

தாய் சொல்லைத் தட்டாமல் மீனாவை அழைத்துக் கொண்டு அவள் வீட்டிற்குச் சென்றான் ஸ்ரீகாந்



ஜோடியாய் இருவரையும் பார்த்ததும் உணர்ச்சி வசப்பட்டுப் போனாள் அத்தை...

அவள் கண்கள் கலங்கிப் போயின...

''இப்படி மாலையும் கழுத்துமாய் நிற்கிறதைப் பார்க்க உன்னைப் பெற்றவர்கள் இல்லையே என்று வருத்தமாய் இருக்கு மீனா... கண்ணுக்கு லட்சணமான புருஷன்... பொருத்தமான ஜோடியாய் நிற்கறதைப் பார்க்க அவங்களுக்குக் கொடுத்து வைக்கல்லே... இப்பத்தான் என் மனசு நிறைஞ்சிருக்கு... நீங்க ரெண்டு பேரும் மனமொத்த தம்பதிகளாய் நீண்ட காலம் வாழணும்...''

'அய்யோ... அத்தை... உண்மை புரியாமல் இப்படி வாழ்த்துகிறீர்கள்... நாங்க போட்டிருப்பது வேஷம். இந்த வேஷம் கொஞ்ச நாள்ல கலைந்து விடும்... இரண்டு வருஷம் தான் எங்க உறவோட ஆயுசு... அப்புறம்... என் வழி தனி வழி... இதில் எப்படி மனமொத்து வாழ்வது...'

உள்ளுக்குள் குமைந்தாள் மீனா.

''தீபா... மாப்பிள்ளைக்கு குடிக்க ஏதாவது கொண்டு வாம்மா...''

அதற்குள் தீபாவே பசும் பாலுடன் வந்தாள்.

''எப்படி இருக்கீங்க மீனா... என்னோட வாழ்த்துக்கள்.

உங்க முகத்தில் கல்யாணக்களை வந்து விட்டது மீனா...

அதெப்படி திருமணம் ஆயிட்டா தனி சோபை வந்து விடுகிறது'' என்று பரிகாசம் செய்தாள் அவள்.

தீபா... வந்த சில நாட்களிலேயே அந்த வீட்டில் ஒருத்தியாக மாறிவிட்டாள்... அதில் மீனாவுக்கும் சந்தோஷம்.

தனக்கு திருமணம் ஆனால் அத்தையின் கதியென்ன என்ற கேள்வி அவளைக் குடைந்தெடுத்தது.

ஒரு நல்ல நர்ஸாகப் பார்த்து வைத்தால்தான்... தான் நிம்மதியாக இருக்க முடியும் என்ற தீர்மானத்தில் 'ஃப்ரீ அட்'டில் விளம்பரம் கொடுத்தாள் மீனா.

அதற்கு தொலைபேசி வழியாகவும்... கடிதம் வாயிலாகவும் சிலர் தொடர்பு கொண்டனர்...

ஏனோ அவளுக்கு திருப்தியாக இல்லை... சிலர் இரண்டு மணி நேரம் என்றால் ஆயிரம் ரூபாய்... நான்கு மணி நேரம் என்றால் இரண்டாயிரம் என்று பேரம் பேசினர்... சிலரோ தங்குவதற்கு தனியிடம்... வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறை... மாதம் இத்தனை சம்பளம் என்று நிபந்தனை வேறு... படித்து விட்டு மலைத்துப் போனாள்...

யாரோ ஒருத்தி... மருந்தும் மாத்திரையும் தருவது மட்டும் தன் பணி... மற்ற வேலைகளுக்கு ஒப்புதல் இல்லை. சம்மதம் என்றால் தயார் என்று எழுதியிருப்பதைப் படித்த மீனாவிற்கு தலைச் சுற்றியது...

நர்ஸ் வேலை என்பது நோயாளிக்கு ஆதரவாய் இருந்து... பரிவு காட்டி... அன்புடன் பணிவிடை செய்வதல்லவா... ஆனால்... விண்ணப்பித்திருக்கும் அனைவரும் வெறும் பணம் மட்டுமே குறியாய் இருக்கிறார்களே... கடவுளே... ஒரு நல்ல ஆத்மா கிடைக்காதா என்று ஏங்கினாள்... இரண்டு நாட்களுக்குப் பின் ஒரு 'ஃபோன் கால்' வந்தது.

''உங்களிடம் பேசவேண்டும்... எங்கே சந்திப்பது...'' என்று தயக்கத்துடன் கேட்டது ஒரு குரல்.



இடத்தைச் சொன்னாள் மீனா.

ஆரவாரம் இல்லாத அந்த சின்னப் பூங்காவில் பொறுமையாய் காத்திருக்கும் அந்தப் பெண்ணைப் பார்த்ததுமே மீனாவிற்கு மிகவும் பிடித்துவிட்டது. முகத்தில் அமைதி... தோற்றத்தில் எளிமை... பேச்சில் இதம்... பதட்டமோ... படபடப்போ இன்றி நிதானமாகப் பேசினாள் அந்தப் பெண்.

''என் பெயர் தீபா... 'அட்'டில் உங்களது விளம்பரத்தைப் படித்தேன்.. அதற்காக...''

''நீங்கள், நர்ஸா...'' என்று இடைமறித்துக் கேட்டாள் மீனா...''

''சாரிங்க... 'ஆம்' என்று சொல்ல முடியாத நிலை... 'நர்ஸிங்' கோர்ஸுக்கு சேர்ந்தது உண்மை... அதை முடிக்காமல் போனது என் துர்பாக்கியம்னுதான் சொல்லணும்... எங்கம்மாவிற்கு 'ஸ்ட்ரோக்' வந்து வீட்டை கவனிக்கறதுக்கு யாரும் இல்லாம போனதால் என் படிப்பு இரண்டாம் வருஷத்தோடு முடிந்து போச்சு... எங்கம்மாவை கவனிச்சது மட்டும் தான் என்னோட எக்ஸ்பீரியன்ஸ் மேடம்... இப்ப எங்க வீடு இருக்கிற நிலைமையில் நானும் சம்பாதிச்சே ஆகணும். எங்கப்பாவோட சம்பாத்தியத்தில் நோயாளி மனைவியையும்... மகனோட படிப்பையும் சமாளிக்க முடியாது... ஆனா... என்னோட அரைகுறை படிப்புக்கு யாரும் வேலை கொடுப்பதாய் இல்லை... 'ஃப்ரீ அட்'டில் உங்க விளம்பரத்தைப் பார்த்தேன். முயன்று பார்க்கலாமேன்னுதான்...''

அந்தப் பெண்ணின் வெளிப்படையான பேச்சும்... அணுகும் முறையும் பிடித்துப் போனது மீனாவிற்கு.

வியாபார நோக்கில்லாமல்... பேரம் பேசாமல்... தன் நிலையை எடுத்துரைத்து அவள் கேட்ட விதம்... மீனாவைக் கவர்ந்ததால் உடனே ஒப்புக் கொண்டு விட்டாள்.

மீனாவின் நம்பிக்கையும் பொய்யாக வில்லை... வெறும் சம்பளத்திற்காக மட்டும் வேலை செய்யாமல்... உண்மையான அன்புடன் நோயாளியை கவனித்துக் கொண்டாள்...

சொல்லாமலே வீட்டு வேலைகளையும் செய்தாள்...

''நீங்க இதுக்காக சம்பளத்தைக் கூட்ட வேண்டாம் மீனா... இது ஒரு சேவையாக இருக்கட்டும்... நர்ஸிங் வேலைக்கு நான் படிக்க விரும்பிய காரணமே... நோயாளிகளுக்கு சேவை செய்வதில் கிடைக்கும் ஆத்ம திருப்திக்காகத்தான் மீனா... அந்த எண்ணம் தான் ஈடேறாமல் போய் விட்டது. அட்லீஸ்ட் அத்தைக்காவது என்னாலானது செய்து புண்ணியம் தேடிக் கொள்கிறேன்...''

மீனா நெகிழ்ந்து போனாள்...

கடவுளே... இப்படிப்பட்ட ஒரு புண்ணியவதியை இங்கு அனுப்பி வைத்ததற்கு உனக்கு கோடி நன்றி... மனதுக்குள் நினைத்தாள்...

இனி அத்தையைப் பற்றிய கவலை இல்லை... ஏன் கோபியைப் பற்றியும்தான்... மன நிம்மதியுடன் பெருமூச்சு விட்டாள்.

''ஹனிமூனுக்கு எங்கே போகிறதாய் ஐடியா... மீனா...'' கோபியின் குரல் அவளது கவனத்தைத் திருப்பியது... ஹனிமூனா! உதறலுடன் கணவனின்



முகத்தை ஏறிட்டாள். அவனது தாடையின் இறுகல் அவளை அச்சுறுத்தியது.

அந்தக் கேள்வியே தப்போ... சே! சமயம் தெரியாமல் கோபி கேட்டு விட்டானே...

''இன்னும் அதைப்பத்தி யோசிக்கவில்லை கோபி... அங்கே அத்தைக்கு உடம்பு சரியா இல்லை... இந்த நிலையில் அவரைத் தனியாய் விட்டுட்டு போக முடியாது... இல்லையா... அதான்'' என்று சமாளித்தாள் அவள்...

மனைவியைப் பார்த்த ஸ்ரீகாந்தின் பார்வையில் வியப்புடன் பாராட்டும் தெரிந்தது... விட்டுக் கொடுக்காமல் பேசுகிறாளே... அந்தப் பார்வையை சந்தித்த மீனாவின் உள்ளம் குளிர்ந்து போனது.

## 9



''வாட் இஸ் திஸ் நான்ஸென்ஸ் நளினா... கல்யாணம் ஆனா ஹனிமூன் போயே ஆக வேண்டும் என்ற சட்டம் இருக்கிறதா... சுத்தப் பிதற்றலாக இருக்கிறது உன் யோசனை'' கடுகடுத்த ஸ்ரீகாந்தின் கரத்தை எடுத்த தன் மென் விரல்களால் தடவிக் கொடுத்தாள் நளினா...

''என்ன ஸ்ரீ... எனக்கு மட்டும் என்ன... அதில் விருப்பமாக்கும் மீனாவோட நீங்க சேர்ந்து செல்வதைப் பார்க்கிறபோது ஆத்திரமாக இருக்கு... உரிமையை

யாருக்கோ கொடுத்துவிட்டு தனிமையில் நான் துடிப்பது எனக்குத்தான் தெரியும்... உங்க இரண்டு பேரையும் கணவன் - மனைவி என்று ஒப்புக்கொள்ள மனம் வரமாட்டேன்கிறது தெரியுமா... இருந்தும்... ஏன் சொல்றேன் என்று கொஞ்சம் புரிஞ்சுக்கோங்க... ஸ்ரீ... ப்ளீஸ்... கல்யாணம் ஆகி பத்து நாள் ஆகியும் நீங்க ரெண்டு பேரும் எங்கேயும் போகாமல் இருப்பதைப் பார்த்து வினோத்திற்கு சந்தேகம் வந்திருக்கு... என் காதுபட பேசுகிறான் ஸ்ரீ... இது உண்மைக் கல்யாணமா... இல்லை 'செட் அப்'பான்னு... அவன் வாயை அடக்கணும்னா... நீங்க ஹனிமூனுக்கு போயே ஆகணும். சும்மா பேருக்குத்தான்.. போலி தேன் நிலவு! எல்லாம் நம் நன்மைக்குத்தான் டியர்... நாய் வேஷம் போட்டாச்சு... குரைச்சுத்தான் தீரணும்.. வேறு வழியில்லை ஸ்ரீ..."

"என்னை நாய் என்று மறைமுகமாய் சொல்கிறாயா..."

'களுக்' என்று சிரித்தாள் அவள்... "ஏதோ உதாரணத்துக்கு சொன்னேன் ஸ்ரீ... நாய் ஒண்ணும் கேவலமானப் பிராணியில்லை... நன்றியுள்ள ஜீவன்... நீங்களும் அப்படித்தானே. எனக்கும் நாய் என்றால் ரொம்பப் பிடிக்கும்.. அதுவும் கம்பீரமான... மிடுக்கான ஜெர்மன் ஷெப்பர்டு!" பரிகாசத்துடன் அவனது கன்னத்தை செல்லமாய் தட்டிச் சொன்னாள். ஸ்ரீகாந்தின் எரிச்சலும் கோபமும் மாயமாகிப் போனது. சட்டென்று அவளது கரத்தைப் பிடித்து முத்தமிட்டான். 'நளினா...' என்று அழைத்த குரலில் தாபம் இருந்தது.

"நாம் இருவரும் எங்கேயாவது போய் தனியாய் ஜாலியாய் இருக்கலாமா... ஏதாவது ரிசார்ட்டுக்குப் போகலாமே..." குழைந்து போய் கேட்டான் அவன்...



"சரிதான்... மீனாவுடன் திருமணம்... என்னுடன் ஹனிமூனாக்கும்... அறிவு மயங்கி விட்டதா... ஸ்ரீ..." கேலியுடன் கேட்டாள்.

"நீ அருகில் இருந்தால்.. அது வேலை செய்ய அடம் பிடிக்கிறதே நளினா..."

"அப்போ... நான் போகிறேன்... அப்போதுதான் அறிவுப் பூர்வமா யோசிப்பீங்க... இனிமேல் தான் நாம் எச்சரிக்கையா நடக்க வேண்டும் ஸ்ரீ... எள்ளளவும் யாருக்கும் சந்தேகம் வரக்கூடாது. முக்கியமாய் அந்த வினோத்திற்கு... நம்மை கையும் களவுமாய் பிடிக்க வேண்டும் என்று காத்துக் கொண்டிருக்கிறான். நீங்க மீனாவுடன் பழகறதை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருப்பதை நானும் கவனித்தேன். மீனா கிட்டே நீங்க சகஜமாக இருக்கப் பாருங்க... டியர்."

"எப்படி... அவன் முன்னால்... அன்புக் கணவன் மாதிரி கட்டியணைக்க வேண்டுமா... இல்லை கன்னத்தில் முத்தமிடட்டுமா..."

"செய்வீங்க... அப்படியே என் நகங்களால் பிராண்டி விட மாட்டேன்..." கண்களை விழித்து அவள் சொன்னதும்...

'பக்' என்று சிரித்து விட்டான் ஸ்ரீகாந்த்.

"என் செல்ல காட்டுப் பூனையைப் பத்தி எனக்குத் தெரியாதா..." அவளது மூக்கைப் பிடித்துத் திருகினான்...

அவனது 'செல்' ஒலிக்க... எடுத்து காதில் வைத்தான்...

"எஸ்... ஓகே..." என்ற ஒரு வார்த்தை பதிலில் நளினா புரியாமல் அவனைப் பார்க்க...

"யாரோ... கிளையண்ட்.. அரைமணி நேரமா காத்திருக்கிறாராம்... அனுப்பட்டுமா என்று கேட்கிறாள் மிஸ்... சுமா... சரியென்றேன்... சே... கரடி மாதிரி..." எரிச்சலுடன் சொன்னான் அவன்.

"அப்ப... நான் புறப்படுகிறேன். நாம் ரொம்ப நேரம் பேசினாலும் அது மத்தவங்களுக்கு சந்தேகத்தைத் தரும். யாரு கண்டா... இங்கே உளவு பார்க்க யாரையாவது ஏற்பாடு செய்திருப்பான் வினோத்... கில்லாடி அவன்... அப்புறம்... நான் சொன்னதை மறக்காமல் செய்யுங்க.. ஹனிமூன் விஷயம்... அப்படிப் பார்க்காதீங்க ஸ்ரீ... நான் எரிந்து சாம்பலாகி விடுவேன்... அப்புறம் அதை அள்ளி உங்க பாக்கெட்டில் நிரப்பிக்க வேண்டும்... பை!"

தன் நெற்றியைத் தேய்த்துக் கொண்டான் ஸ்ரீகாந்த். தேனிலவு!

தேய் நிலவாய் ஆகிவிட்ட வாழ்க்கையில் இந்த தேனிலவு ஒரு கேடு...

போயாக வேண்டும் என்ற சட்டம்... கண் துடைப்பு வேலை! சந்தோஷத்தை காவு கொடுத்துவிட்டு... எங்கே போய் அதைக் கொண்டாடுவது... மயானத்திலா... ஆமாம்... அதுதான் பொருத்தமாக இருக்கும்.. சே!

பற்களை நறநறவென்று கடித்தான்...

எதுக்காகவோ பயந்து வீட்டையே கொளுத்தியது போல... யாருக்காகவோ அஞ்சி. வாழ்க்கையை நாசமாக்கிக் கொண்டு விட்டோமே...

"மே ஐ கம் இன்" கதவில் தட்டலுடன் குரல் கேட்க...

"யெஸ்... கம் இன்..." என்றான் மிடுக்காய்... தன் இருக்கையில் கம்பீரமாய் அமர்ந்தவாறு...



அந்த ஐந்து நட்சத்திர ஓட்டலின்... தேனிலவு தம்பதியினருக்காகவே பிரத்யேகமாய் அமைந்த அழகிய அறையை மிரண்டு போய் பார்த்துக் கொண்டிருந்தாள் மீனா... அறையின் பகட்டும்... பணக்காரத்தனமும் அவளை மிரட்டின - கோவாவிற்கு தேனிலவிற்காக புறப்படுகிறோம் என்ற செய்தியை மீனாவிடம் அவன் சொன்னபோது அவன் முகத்தில் வேப்பங்காயை விழுங்கிய கசப்புத் தெரிந்தது.

"வேண்டாமே" என்று சொல்ல நினைத்தாள்.. ஆனால் சொல்லுவதற்கு தயக்கம்... பயமும்தான்.

பணத்தை வாரிக் கொடுத்திருக்கிறான்.. அவன் என்ன முடிவு செய்தாலும் சம்மதிக்கத்தான் வேண்டும்...

அடிமை சாசனம் எழுதிக் கொடுத்தாகி விட்டது... அடங்கித்தான் போகவேண்டும்.

சாரதாவிற்கு ஒரு நல்ல துணையை ஏற்பாடு செய்து விட்டுப் புறப்பட்டனர்.

இந்த மாதிரி உயர்ந்த ரக ஓட்டலில் தங்கி வழக்கமில்லை ஆதலால்... ஒவ்வொன்றையும் அதிசயமாய் பார்த்தாள் அவள்.

வழுக்கும் சுத்தமான பளிங்குத் தரை.. பெரிய ஹால். உயர்ந்த ரக சோபாக்கள்... அலங்கார சர விளக்குகள்... பித்தளை சட்டியில் சிரிக்கும் வண்ணப் பூக்கள்... சீருடையில் வணங்கி நிற்கும் பணியாட்கள்...

வண்ணத்துப் பூச்சிகளாய் உலவும் பெண் ஊழியர்கள்.

இதுவரையில் சினிமாவில் மட்டுமே பார்த்து பிரமித்த வசதிகளை இப்போது தன் கண் முன்னே காண்பதை அவளால் நம்ப முடியவில்லை.

வெளியில் இப்படி என்றால்... அறையினுள் சொல்லவே வேண்டாம். அறையா அது... ஊகூம்... தனி வீடு.

உட்கார்ந்து பேசும் இடத்தில் அமர்ந்தால் புதையும் சோபாக்கள்.. 'டைனிங் ஸ்பேஸ்' படுக்கை அறை பாத்ரூம்... அம்மாடி!

சமையலறைதான் இல்லை...

ஒரு பக்கம் டிரஸ்ஸிங் டேபிள்... அதில் பதித்த அழகிய பெரிய கண்ணாடி.... பித்தளை கைப்பிடி மினுமினுக்கும் சுவற்றுடன் பதித்த 'வார்ட்ரோப்!' நான்கு பக்கமும் பொருத்தப்பட்ட அலங்கார விளக்குகள்... கலர் டி.வி. பூச்சாடிகள்... குளுகுளு வசதி!

பிரமிப்புடன் மீனாவின் பார்வை சுற்றி வந்தது.

இந்த அறையில் ஆறில் ஒரு பங்கு கூட தன் வீடு இருக்காது போல...

அடுத்து அவளது கண்கள் அகன்ற பெரிய கட்டிலின் மேல் பதிந்தன.

விலை உயர்ந்த கட்டில்! பூ மெத்தை... அதன் மேல் பூ வேலை செய்த கண் கவரும் விரிப்புகள்...

உடம்பை இதமாய் பிடித்து விடும் மென்மையுடன்... படுத்தால் வருடித் தரும் சுகத்துடன்... நிச்சயம் உடனே தூங்கி விடலாம் தான்...

இத்தனை வசதிகளையும் அனுபவிக்கும் அதிர்ஷ்டம் தனக்குக் கிடைக்கும் என்று கனவிலும் அவள் நினைக்கவில்லை... குருட்டு அதிர்ஷ்டம்!



தன் ஷூக்களைக் கழட்டிவிட்டு உள்ளே வந்த ஸ்ரீகாந்த் கட்டிலைப் பார்த்தபடி நின்றிருந்த மீனாவைக் கண்டான். புருவச் சுளிப்புடன் கேட்டான்.

''என்ன மீனா... நிபந்தனையின் நினைவா...'' என்று கேலியாக கேட்க... அவனது குரல் கேட்டு சட்டென்று திரும்பினாள் அவள்.

அவனது வார்த்தைகளின் அர்த்தத்தை உணர்ந்து முகம் மாறினாள் மீனா.

''ஸாரி... இந்த மாதிரி பெரிய ஓட்டலுக்கெல்லாம் சென்று வழக்கமில்லை. அதுதான்... இந்தக் கட்டிலில் படுத்தவுடன் ஆழ்ந்த நித்திரையில் மூழ்கி விடலாம் என்று நினைத்தேன். படுத்தால் அலுப்பே தெரியாது இல்லையா...''

அதைக் கேட்ட ஸ்ரீகாந்தின் முகத்தில் வியப்பு தெரிந்தது.

மனதில் இருப்பதை 'பட்'டென்று சொல்கிறாளே... இவள் வெகுளியா... அப்பாவியா... இல்லை... தனது ஏழ்மையைக் காரணம் காட்டி தன் அனுதாபத்தை சம்பாதிக்கப் பார்க்கும் தந்திரக்காரியா!

அவனது பார்வையிலிருந்து தன் கண்களை திருப்பினாள். அருகே இருந்த சன்னல் வழியே வெளியுலகைப் பார்த்தாள். வெளியே இருக்கும் அனைத்து ஜீவன்களும் சந்தோஷமாய் இருப்பது போல பட்டது...

மேலே.. வானத்தில் சிறகுகளை பரப்பி வட்டமிடும் பறவையினங்கள்... மரங்களில் ஓடிப் பிடித்து விளையாடும் அணிற் பிள்ளைகள்...

பூக்களைச் சுற்றி வரும் பட்டாம் பூச்சிகள்...

அதோ... வானத்தின் நீலத்தை சிறைப் பிடித்துக் காட்டும் நீச்சல் குளம்... அதில் ஜலக்கிரீடை செய்யும் உல்லாசிகள்... குளக்கரையில் வண்ணக் குடை கீழ் ஓய்வை அனுபவிக்கும் சுகப்பிறவிகள்...

நீச்சல் உடையில்... இந்த உலகமே என் காலடியில் தான் என்ற நிமிர்வுடன் ஒய்யாரமாய் நடக்கும் இளம் பெண்கள்...

பார்த்துக் கொண்டிருந்த மீனாவின் கண்கள் விரிந்தன.

தங்களது மேனியழகை கூச்சமின்றி வெட்ட வெளிச்சமாக்கிக் கொண்டு நடக்கும் அந்தப் பெண்களை... அங்கிருந்த ஆண்கள் விழுங்குவது போல பார்ப்பது கண்டு... உள்ளம் கூசியவளாய் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள் மீனா. பார்த்த காட்சியில் முகமெல்லாம் சிவந்து போனது. அப்போதுதான் அவள் உணர்ந்தாள்... தன் கணவனின் பார்வை தன் மீது நிலைக் குத்தியிருப்பதை...

பட்டிக்காடு என்று நினைத்திருப்பாரோ... ஒரு வேளை தனக்கு ஏற்றவளாக இல்லை என்றுகூட எண்ணியிருக்கலாம்.

இருந்து விட்டுப் போகட்டும்... அவனுக்கு டம்மி மனைவி வேண்டியிருந்தது... தனக்குப் பணம் தேவைப் பட்டது. இந்தப் போலி தாம்பத்தியத்தில் 'கணவன்' என்று நடிப்பவர் என்ன நினைத்தால் எனக்கு என்ன...

ஸ்ரீகாந்த் கொடுத்த பணம்தான் அத்தைக்கு மருந்தும் மாத்திரையும் வாங்க உதவியது... ஏன்... அத்தையை கவனிக்க ஒரு நர்ஸும் வைக்க முடிந்தது...



அது மட்டும் அல்லாமல்... கோபியின் வாழ்க்கை கூட உயர்ந்து விட்டதே... அது போதாதா...

கோபிக்குத்தான்... பாவம்... தாளவில்லை... குற்ற உணர்வில் தவிக்கிறான்...

''மீனா... என்னவோ... உன்னை விற்று இந்தப் பணத்தை வாங்கினது மாதிரி என்னைக் குடையுது.. என்னால் தான் உன் வாழ்க்கைப் பாழாகி விட்ட தோன்னு குறுகுறுப்பு...'' என்றானே...

அவனைச் சமாதானப்படுத்த என்னவெல்லாம் செய்ய வேண்டி வந்தது.

நல்லவேளையாய் அவனுக்கு இந்த திருமண ஒப்பந்தத்தைப் பற்றி இன்னும் தெரியாது... இதுக்கு ஆயுசு இரண்டு வருடம் தான்னு தெரிந்தால்... அப்படியே கூனிக் குறுகிப் போயிடுவான்.

வேண்டாம்.. அவனுக்கு அது தெரியவேக் கூடாது. ''முகம் கழுவ வேண்டும்'' என்றாள்... ''அதோ அங்கே பாத்ரூம் இருக்கிறது... போய் வா...'' ஸ்ரீகாந்தின் குரல் அவளைத் தட்டியெழுப்பியது.

சோப்பையும் டவலையும் எடுத்துக்கொண்டு அவன் கைநீட்டிக் காட்டிய குளியலறையை நோக்கி விரைந்தாள்.

அடேயப்பா... குளியலறையா! இத்தனை அழகுடன்... படு சுத்தமாய்... பளபளவென்று விளக்கொளியில் மினு மினுக்கும் இளநீல நிற டைல்ஸ்... அப்போதுதான் கட்டியது போல... அசுத்தம் இன்றி தூய்மையாய் இருந்தது அறை... குளிப்பதற்கு 'பாத் டப்...' ஷவர்...

சுவற்றில் அழகிய கண்ணாடி அருகே புத்தம் புது 'பிங்க்' டவல்...

எதிலும் சுத்தம்... எல்லாவற்றிலும் சுத்தம்.

கண்ணாடியில் முகத்தைப் பார்த்தாள். தலைக் கூந்தல் கலைந்து... முகத்தில் அலுப்பினால் வந்தவாட்டம்... வெய்யிலின் தாக்கத்தில் முகத்தில் எண்ணெய் வழிசல். இத்தனை அலங்கோலமாகவா இந்த ஓட்டலுக்குள் வந்தேன்... ஸ்ரீகாந்த் என்ன நினைத்திருப்பார்... அந்த நினைவில் முகம் சுணுங்கியது.

நன்றாக முகம் கழுவிக் கொண்டு வெளிவந்தாள்.

நிலைக் கண்ணாடியின் முன் அமர்ந்து கூந்தலை நன்றாக வாரி... அழகாய் பின்னலிட்டாள்... முகத்திற்கு லேசாய் பவுடரைத் தடவி... நெற்றியில் பிந்தியிட்டாள்... அத்துடன் முடிந்தது ஒப்பனை.

குளியலறையிலிருந்து குளித்து விட்டு வந்த ஸ்ரீகாந்திற்கு தன் அலங்காரத்தை முடித்துக் கொண்டு நின்றிருக்கும் மீனாவைப் பார்த்து வியப்பு!

பத்து நிமிடங்களுக்குள் மேக் அப் முடிந்ததா... எந்தப் பெண்ணுமே குறைந்த பட்சம் அரை மணி நேரம் எடுத்துக் கொள்வாளே.. இவள்...

பரவாயில்லை... கொஞ்சம் வித்தியாசமானவள்தான்.

அறைக்கே காபியை வரவழைத்து இருவரும் அருந்தினார்கள்...

ஸ்ரீகாந்திற்கு நளினாவின் நினைப்பு வந்தது.

மீனாவிற்கு பதில் என் இனிய காதலி இருந்திருந்தால்... பொழுது எத்தனை இனிமையாய் கழிந்



திருக்கும்... ஒருவரையொருவர் சீண்டிக் கொண்டு... கொஞ்சியும் குலாவியும்... சே! விதி ஏன் இப்படி விளையாடுகிறது.

ஏன் அவளை இன்னொருவருக்கு மனைவியாக்கியது. எத்தனை கனவுகளுடன் காத்திருந்தேன்! அவளை மணந்து கொண்டு தேனிலவிற்கு மொரீஷியஸ் தீவுக்குப் போக வேண்டும்... என் உள்ளத்து ஆசைகளையெல்லாம் வெளிக்காட்டி அவளை என் அன்பில் மூழ்கடித்து திக்கு முக்காட வைக்க வேண்டும். என் வாழ்வில் நீ ஒருத்தி தான்... நீ மட்டும்தான் என்று என் செய்கைகளினால் அவளுக்கு புரிய வைக்க வேண்டும் என்ற கற்பனைகள் அனைத்துமே மண்ணைக் கவ்வி விட்டதே!

மனம் நொந்து புலம்பியது...

இளம் காதலர்களைப் பிரித்து வாழ்க்கையை கூறு போட்டு கந்தர்கோளம் ஆக்கிய அந்த இறைவன் மீது கோபம் கோபமாக வந்தது... இப்படியா... மோசம் பண்ணுவான்...

என் நளினா இருக்க வேண்டிய இடத்தில் யாரோ ஒருத்தி... பார்த்து பழகியிராதவள்...

அவளைப் பற்றி எதுவுமே தெரியாது... ப்ச்சு... தெரிந்து என்ன ஆக வேண்டும்... சுவாரஸ்யமில்லாத உறவு...

அவளும் அதேபோல்தான் எண்ணுகிறாளோ...

விருப்பமில்லாமல் இந்தத் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டு இருக்க வேண்டும்... அதற்கு என்ன காரணம் இருக்கும்... பணத்தேவை என்று நளினா சொன்னது உண்மையாக இருந்தாலும்...

அவளைக் கேட்க வேண்டும் என்ற ஆர்வம் உந்தினாலும் இப்போது எதுவும் கேட்கக் கூடாது... அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று அடக்கிக் கொண்டான்.

சோர்ந்து தெரிகிறாள்... பாவம்... உணவு உண்டபின் சாவகாசமாகப் பேசும்போது பேச்சுவாக்கில் கேட்கலாம்... ஆனால்... இரவு உணவுக்குப் பின்பு... மீனாவிடம் பேசவும் 'மூட்' இல்லாமல் போய்விடும் என்று அப்போது அவன் அறியவில்லை...

# 10

ஒன்பது மணிக்கு நளினியிடம் இருந்து கால் வந்தது. "ஸ்ரீ டார்லிங்!" கிள்ளையாய் கொஞ்சும் குரலில் அவள் அழைத்ததும்... ஸ்ரீகாந்த் எல்லாவற்றையும் மறந்தான்...

தேனிலவு... ஓட்டல்... மீனா... எல்லாமே... அப்படியே வெண்ணெயாய் கரைந்து... நெய்யாய் உருகிப் போனான்.

"நளினா... நளினா டியர்..."

"எப்படி இருக்கு உங்க தேனிலவு ஸ்ரீ..." சொல்லிவிட்டு 'களுக்' என்று சிரித்தாள் அவள்...

"போலி தேனிலவுன்னு சொல்லேன்... உனக்கு என் அவஸ்தை சிரிப்பாக இருக்கிறது இல்லே... இந்த சித்ரஹிம்சை எனக்குத் தேவையா நளினா... தேனிலவு பத்தி எத்தனை கனவுகளோட இருந்தேன்... அத்தனை



யும் பொசுங்கி சாம்பலாகி விட்டது சே! இப்போ... நீ அங்கே... நான் இங்கே... இரண்டு பேருக்கும் நடுவே பள்ளம் அகலமாகிக் கொண்டு போகிற மாதிரி தோன்றுகிறது எனக்கு..."

"ப்ளீஸ் டார்லிங்... நிலைமையை யோசித்துப் பாருங்களேன். இதெல்லாம் நம் நன்மைக்குத் தானே..."

"ப்ச்சு.. எனக்கென்னவோ அப்படிப் படவில்லை... நீ சரியென்று ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் நாம் இரண்டு பேரும் இப்போது ஜாலியா தேனிலவில் இருந்திருப்போம்... இப்படித் தொலைவில் இருந்து கொண்டு பேச வேண்டிய அவசியம் இருந்திருக்காது நளினா..."

"சரி... உங்கம்மாவுக்கு... சம்மதம் இருந்திருக்குமா ஸ்ரீ. இல்லை... என்னை தன் மருமகளா ஏத்துக் கொண்டிருப்பார்களா... திருமணமாகி... வேறு ஒருத்தரோட குடும்பம் நடத்திய ஒருத்தியை... அதுவும் கணவனை உதறி விட்டு வந்த ஒருத்தியை தன் மருமகளாய் எந்தத் தாய் ஏத்துப்பாங்க... ம்ம்... உங்கம்மா இருக்கும் நிலையில் இதயம் வெடித்து உயிரை விட்டுடுவாங்க... இங்கே என் கணவருக்கும் அதே நிலைதான்... பாருங்க ஸ்ரீ... நாம நிதர்சனத்தை சந்தித்தே ஆகணும்... நாம் சேரும் காலம் வரப்போகிறது... சேர்ந்தே தீருவோம்... அது மட்டும் நிச்சயம்."

"அதுதான் எப்போ..."

"அதை என் வாயால் சொல்லப் பிடிக்கவில்லை ஸ்ரீ... நீங்களே புரிந்து கொள்ளுங்கள்..."

அவள் மறைமுகமாய் எதை உணர்த்துகிறாள் என்பதை நன்றாக உணர்ந்தான் அவன்.

அவனது தாயும் நோயாளி... சக்ரபாணியும் இதய நோயாளி... எப்போது வேண்டுமானாலும்... எதுவும் நடக்கலாம்... அதுவரை காத்திருக்க வேண்டும்...

அவனது உள்ளம் பொருமியது...

"ஸ்ரீ... என்ன பேச்சையே காணோம்... என் மீது கோபமா... என்ன டியர்... எனக்கு மட்டும் என்ன... இப்படிப் பிரிந்து இருக்கணும்னு ஆசையா... இப்பவே ஓடி வந்து உங்களைப் பார்க்கணும்... உங்க அணைப்பில் இருக்கணும்னு துடியாத் துடிக்கிறேன்... ஆனால்... நமக்குன்னு கடமைகள் இருக்கே டியர்... அதை மறந்து விட முடியுமா... போகட்டும்... டின்னர் ஆச்சா..."

"ம்ம்..."

"என்ன... தொண்டைக் கட்டிக் கொண்டு விட்டதா..." மின்டோ ப்ளஸ் சாப்பிடுங்க ஸ்ரீ... சரியாகி விடும்..."

"கிண்டல்... ம்ம் இங்கே உன்னையே நினைத்து ஏங்கிக் கொண்டு இருக்கிறேன்.. உனக்கு அது பரிகாச மாய் இருக்கு... இல்லே..." எரிச்சலுடன் கேட்டான் அவன்.

உண்டியலைக் குலுக்கினாற் போல் சிரித்தாள் நளினா.

"அடடா... கட்டிய மனைவி அருகில் இருக்கையில் காதலியை நினைத்து உருகும் தேனிலவுக் கணவன் நீங்கள் மட்டும் தான் இருக்க முடியும்" அவளது குரலில் பெருமிதம் தெறித்தது.

"என் தலைவிதி அது!"



"சரி... கொஞ்சம் எட்டியே இருங்கள் அவளிட மிருந்து.. உங்கள் விரல் அவள் மீது பட்டாலும் பொறுக்க மாட்டேன். என்ன... தெரிந்ததா ஸ்ரீ... நீங்க எனக்கு மட்டுமே சொந்தம். ஆமாம்... சொல்லிவிட்டேன்..."

"வார்த்தைகளால் அணைக்கும் வித்தை உனக்கு மட்டுமே தெரியும் நளினா... நான் உன் அருகில் இல்லையே..."

"தேனிலவு நாடகம் முடியட்டும். யாருக்கும் சந்தேகம் வராமல் சந்திப்போம் ஸ்ரீ... ஓ.கே... இப்போ... போய்... சமர்த்தாய் என் நினைவுடன் தூங்குங்கள்... குட்நைட்... ஸ்வீட் ட்ரீம்ஸ்..." அவனது தாபத்தைக் கிளறிவிட்டு விட்டு, ஒரு சிருங்கார சிரிப்புடன் தொடர்பைத் துண்டித்தாள்.

மீனா உடை மாற்றிக் கொண்டு வந்து பார்த்தபோது ஸ்ரீகாந்தின் முகபாவம் மாறிப் போயிருந்தது...

விட்டத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு படுத்திருந்தான் அவன்...

என்ன செய்வது என்று தெரியாமல் மௌனமாக சோபாவில் அமர்ந்தாள்.

புதிய இடம்... புதிய உறவு... புதிய மனிதன்... என்ன பேசுவது... ஒன்றும் புரியவில்லை. அதுவும் எங்கேயோ வெறித்துக் கொண்டிருப்பவனிடம் எப்படிப் பேச முடியும். ப்ச்சு.

தன் வீட்டின் நினைவு அப்போது வந்தது.

அத்தை எப்படி இருக்கிறாரோ... டாக்டரிடம் செக்-அப்பிற்கு அழைத்துச் செல்லும்படி தீபாவிடம்

சொல்லியதை... மறக்காமல் செய்திருப்பாளா... போன் பண்ணிக் கேட்க வேண்டும்...

கோபி... பாவம்... புதுக்கடைத் திறப்பில் அலைந்து கொண்டு இருப்பான்... கடையை அலங்கரிக்க வேண் டும்... நவீனப் படுத்த வேண்டும்... என்று சொல்லிக் கொண்டிருந்தானே... அதில் மும்முரமாய் இருப்பதில் என்னைப் பற்றிய நினைவும் இருக்காது...

எப்படியோ... அவனது கனவும் ஈடேறியது. அத்தை யின் மனசும் குளிர்ந்தது. அது போதும்...

நினைவோட்டத்தில் ஆழ்ந்தவளை மெல்ல மெல்ல உறக்கம் வருடித்தர... சோபாவில் தலை சாய்த்து கண்களை மூடிக் கொண்டாள்.

திருமண நாள் என்ற பரபரப்பிலும்... அதன் டென்ஷனிலும் ஏற்கனவே அலுத்திருந்த உடல்... தொடர்ந்து பயணப்பட்டதில் ஏற்பட்ட களைப்பில் கட்டையாய் மரத்திருந்தது... உடல் மட்டுமா... உள்ள மும் தான்... பேசுவதற்கு யாரும் இல்லாத சூழ்நிலையில் ஏற்பட்ட சலிப்பு!

எப்போது உறங்கினாள்... அவளுக்கேத் தெரியாது.

தூக்கத்தில் அப்படியே சரிந்தவள்... அந்த சோபாவில் ஒருக்களித்தவாறு படுத்துக் கொண்டாள்.

நளினியின் நினைவில் தன்னை மறந்து கிடந்தவன் திடீர் என்று மீனாவும் அங்கு இருக்கிறாள் என்று உறைக்க எழுந்து அமர்ந்தான்...

ஆமாம்... மீனா எங்கே...

கட்டிலுக்கு எதிர்ப்புறமாய் சோபா திரும்பி இருந்த தால்... அதில் மீனா படுத்திருந்தது அவனது கண்ணில் படவில்லை.



பால்கனியைத் திறந்து பார்த்தான்... அங்கில்லை. பாத்ரூமின் கதவு திறந்து கிடந்தது... வாசல் கதவும் மூடிக் கிடந்தது... பின் எங்கே அவள்... திரும்பும்போது தான் பார்த்தான்.

தன் கையை மடக்கி தலையணையாக்கிக் கொண்டு... மெய்மறந்து உறங்கிக் கொண்டிருந்தாள் அவள்... அழுகை ஓய்ந்து... சுருண்டு போய் படுத்துறங்கும் குழந்தை மாதிரி...

அவன் உள்ளத்தில் ஏதோ பிழிவது போன்ற உணர்வு. பாவம்... பணத்தின் தேவைக்காக இந்தத் திருமணத் திற்கு ஒப்புக் கொண்டிருக்கிறாள்.

என்னை முழுவதுமாய் நம்பி என்னுடன் வந்திருக் கிறாள். இவளை அலட்சியம் செய்கிறேனே... சே!

தாய் தந்தை இல்லாதவள் என்று நளினா சொல்லி யிருந்ததும் நினைவுக்கு வந்தது... இதுவரை வாழ்க்கை யில் எந்தவித சுகமோ... சந்தோஷமோ அனுபவிக் காதவள்...

அதுதான் சொன்னாளே...

இந்த மாதிரி பெரிய ஓட்டலுக்கு வந்ததே இல்லை... இந்தக் கட்டிலில் படுத்துக் கொண்டால் ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்து விடலாம் என்று...

இந்தக் கட்டிலில் படுத்துறங்க ஆசையாக இருந் தாளோ என்னவோ... நான் படுத்திருப்பதைக் கண்டு பயந்து போய் சோபாவில் படுத்து விட்டாள் போலும்...

மழைக்கு ஒதுங்கிய சின்ன நாய்க்குட்டியொன்று சுருண்டு உறங்குவதுபோல உடம்பை ஒடுங்கிக் கொண்டு தூங்கும் அவளின் அருகே சென்றான்.

மென்மையாய்... அவளது உறக்கம் கலையாமல்.. தூக்கி... பூமாலையாய் தாங்கிச் சென்று கட்டிலுக்குச் சென்றான். தன் உறக்கத்திற்கு கொஞ்சம் இடையூறு ஏற்படவும் சிணுங்கியவளாய் அவனுடன் ஒண்டினாள் அவள்.

தூக்க கலக்கத்திலும் அவளது விரல்கள் அவனது சட்டையை இறுகப் பற்றிக் கொண்டன...

அவளை மெதுவாய் படுக்கையில் கிடத்தினான் ஸ்ரீகாந்த். மெத்தென்ற படுக்கையின் ஸ்பரிசம் தந்த சுகத்தில் அப்படியே ஆழ்ந்து உறங்கிப் போனாள் மீனா.

ஸ்ரீகாந்திற்கு சுத்தமாய் தூக்கமில்லை...

இறைவனின் லீலையை... விதியின் விசித்திர விளையாட்டையே நினைத்து... நினைத்து நொந்து கொண்டிருந்தான்.

மனைவி என்ற உரிமையில்லாத ஒருத்திக்கு படுக்கையில் இடம் கொடுத்த மனம்... மனைவியாய் வந்தவளுக்கு உரிமை தர மறுக்கும் விநோதம்!

பெருமூச்சு விட்டான் அவன்.

கோவாவை சுற்றிப் பார்க்க கிளம்பினார்கள் மீனாவும் ஸ்ரீகாந்தும்... மங்கேஷ் கோவில்... புகழ் பெற்ற தேவாலயம்...

அழகான கடற்கரை என்று நேரம் கழிந்ததே தெரியவில்லை...

ஒவ்வொன்றையும் குதூகலத்துடன் ரசித்துப் பார்த்தாள் மீனா...



இதுநாள் வரை சுற்றுலா என்று எந்த ஊருக்கும் போனதில்லை...

இதுதான் முதல் அனுபவம்...

தன் கவலையை மறந்து... தன் குழப்பங்களை மறந்து... கேள்விக்குறியாய் நிற்கும் தன் எதிர்காலத்தை மறந்து சிறு குழந்தையைப் போல ஆர்வத்துடன் திரிந்தாள் அவள்.

ஸ்ரீகாந்த் தன்னை வியப்புடன் பார்ப்பதைக் கண்டு வெட்கத்துடன் சொன்னாள்.

''சாரி.. நான் எந்த ஊருக்கும் போனதில்லை... கிணற்றுத் தவளையாக இருந்து விட்டேன்.. இப்படி உல்லாசமாய் சுற்றுவது சந்தோஷமா இருக்கு... என்னை அழைத்து வந்ததற்கு ரொம்ப நன்றி...''

அவளது வார்த்தைகளில்... கண்களில் தெரிந்த நன்றி உணர்வில் அவனது நெஞ்சம் கரைந்து போனது.

இந்தப் பேதைப் பெண்ணை வருத்தி என்ன பிரயோசனம்... குழந்தையாய் மாறி குதூகலத்துடன் வளைய வரும் இவளின் சந்தோஷத்தை ஏன் கெடுக்க வேண்டும்... வாழ்க்கையில் எந்த மகிழ்ச்சியையும்... வசதிகளையும் அறியாத பெண்... இப்போதாவது மகிழ்ச்சியைப் பார்க்கட்டும்...

அந்த எண்ணத்தில் அவளுடன் கலகலப்பாய் பேச ஆரம்பித்தான்... ஒவ்வொரு இடத்தையும் சுற்றிப் பார்க்கும் போது வழிகாட்டி போல இருந்து விளக்கினான்.

கோவாவின் சரித்திரம்... போர்த்துக்கீசியர் ஆக்ரமிப்பு... அவரது நாகரீகம்... வாழ்க்கை முறை... செயிண்ட்

சேவியர் தேவாலயத்தின் அற்புதம் என்று சுவாரஸ்யமாய் எடுத்துரைக்க... சின்னப்பிள்ளை போல ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டாள்.

கடற்கரைக் கடைகளில் விற்ற அழகிய வேலைப்பாடு அமைந்த கலைப் பொருட்களை அவள் ஆசையாய் நின்று பார்ப்பதைக் கண்டு... அவற்றை வாங்கிக் கொடுத்தான்.

முதலில் வாங்கத் தயங்கியவள்.. போகப் போக மலர்ந்த முகத்துடன் வாங்கிக் கொண்டாள்.

அப்படியொன்றும் விலையுயர்ந்த பொருட்கள் இல்லை. எளிமையான கண்ணாடி வளையல்கள்.. மரத்தினால் செய்த கப்பல்... சிப்பிகள் பதித்த கைப்பை... மூங்கில் கூடை.... எல்லாமே ஐம்பது... அறுபது ரூபாயில் அடக்கம்...

அவனையும் அறியாமல் குரங்கு மனம் நளினா பக்கம் தாவியது.

நளினாவிற்கு இந்த மாதிரி அல்பமான... மலிவான பொருள்களில் விருப்பம் இல்லை... அவள் வாங்க நினைப்பது எல்லாமே தங்கம்... வைரம்... பிளாட்டினம்... பல ஆயிரங்களை விழுங்கும் சமாச்சாரங்கள்... உடைகளிலும்தான்... இந்த மாதிரி பொருள்களை அவள் துச்சமாக நினைப்பாள்.

சே! திடீரென்று எதுக்கு இந்த ஒப்பீடல்!

நளினா விஷயமே தனி... அவளோட ரசனையே தனிதான்...

நளினாவிற்கு இந்தப் பெண் இணையே இல்லை தான்.



தன்னை அழகுபடுத்திக் கொள்வதில்... கவர்ச்சி யழகில்...

ஒய்யாரமாய் உடை உடுத்துவதில்... இதயத்தை வசப் படுத்தும் காந்தப் புன்னகையில்...இன்னும்...

அவள் மட்டும் என் அருகில் இருந்திருந்தால் இந்த இடமே சொர்க்கபுரியாகி இருக்குமே...

நளினா... நளினா டார்லிங்... ஜுரம் கண்டவனைப் போல உடலில் தகிப்பு... நளினாவின் பெயரை தாரக மந்திரமாய் முனகியது நெஞ்சம்.

அவளது நினைவில் உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் மின் அதிர்வு!

அந்த வினோத்தின் மேல் கோபம் கோபமாய் வந்தது... அவனால் வந்த சிக்கல்தானே இத்தனையும்... அவனை... பற்களைக் கடித்து ஆத்திரத்தை அடக்கப் பார்த்தான்.

அதே சமயம் மீனா அவனிடம் எதையோ கேட்க... சிவந்த கண்களுடன்... முகத்தில் கோபம் கனலாய் எரிக்க அவள் பக்கம் திரும்பினான்.

அவனது சினத்தைக் கண்டு விட்டு நடுங்கிப் போனாள் மீனா...

'என்ன தப்பு செய்தேன்.. இப்படி இவருக்கு திடீர் என்று கோபம் வர... ஒருவேளை.. ஒருவேளை... எனக்கு இந்தப் பொருள்களை வாங்கித் தந்ததை விரும்பாமலா...' தத்தளித்தது அவள் மனம்...

அச்சத்துடன் அவனைப் பார்த்துவிட்டு ஒதுங்கிச் சென்றாள் அவள்...

அதைக் கவனித்த ஸ்ரீகாந்திற்கு அவள் மீது இரக்கம் வந்தது. முதல் நாள் அவள் சுருண்டு படுத்திருந்த கோலம் நினைவுக்கு வந்தது.

'நளினியிடம் இருந்து ஃபோன் வராமல் இருந்திருந் தால் இவளிடம் சகஜமாய் பேசியிருக்கலாம்... சே... நளினாவின் குரலில் எல்லாமே மறந்து போனது. இன்றைக்காவது இதமாய் பேசி அவளைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்...' என்று தீர்மானித்தான்.

ஒதுங்கிச் சென்ற மீனாவிடம் பேச்சுக் கொடுத்தான்.

''ஏதோ கேட்க வந்தாயே மீனா.. என்ன அது...''

''எதுவும் இல்லையே...''

''பொய்... ஏதோ சொல்ல வந்து... மென்று விழுங்கி விட்டாய்... என்ன அது சொல்லேன்.. பசியா... தாகமா.. இல்லை ஏதாவது வாங்கணுமா... தயங்காமல் சொல் மீனா...''

''வந்து... நல்ல ஷர்ட் ஒண்ணு வாங்கணும்... அதற்கு பணம் தந்து விடுகிறேன்... நீங்களே தேர்ந்து எடுத்து தருவீர்களா...''

''யாருக்கு...''

''கோபிக்கு... என் அத்தை பிள்ளை அவன்..''

''யாரது... நம் திருமணத்திற்கு வந்தானே... ஒல்லியாய்.. உயரமாய்.. அவனுக்கா...''

தலையசைத்தாள் அவள்.

''அவனுக்குத்தானே நீ பணம் கொடுத்தது... உன் வாழ்க்கையை தானம் செய்து அவனுக்கு உதவியிருக் கேன்னா... அத்தனை முக்கியமானவனா என்ன...''



''எனக்கு கோபி மீது உயிர்... அவனுக்கும் நான் என்றால் பஞ்சபிராணன்...'' உணர்ச்சியில் அவளது குரல் கரகரத்தது.

''பின்... அவனையே மணந்து கொண்டிருக்கலாமே... ஏன் செய்யவில்லை... ஒருவேளை பணம் வேண்டும் என்பதற்காக உன்னை விட்டுக் கொடுத்து விட்டானா மீனா...''

உதட்டைக் கடித்து தன் சினத்தை அடக்கினாள் அவள். கோபிக்கும் தனக்கும் இடையே இருக்கும் தூய்மையான சகோதர பாசத்தை இவருக்கு விளக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தோன்றியது.

கோபியைப் பற்றித் தரக் குறைவாய் அவன் பேசுவதை அவள் விரும்பவும் இல்லை...

ஸ்ரீகாந்த் விடாமல் கேட்டான்.

''அது சரி... உன் கோபிக்கு அத்தனை பணத்திற்கு என்ன அவசியம் என்று நான் தெரிந்து கொள்ளலாமா...''

''ஓ! நீங்கள் அதை கேலியாய் கேட்காமல் இருந் தால்...'' அவளது கண்களில் லேசாய் எட்டிப் பார்த்த கோபத்தைக் கண்டு அவனுக்கு சிரிப்பு வந்தது.

''பரவாயில்லையே... மீனுக்குக் கூட கோபம் வருமா, என்ன நான் என்னவோ.. பயந்தாங் கொள்ளியாக்கும் என்று நினைத்தேன்...'' என்றான் பரிகாசமாய்...

அதில் அவளது கோபம் தணிந்து போனது...

அவளும் அதே பரிகாசக் குரலில் சொன்னாள்.

''கோபம் என்பது ஆண்களுக்கு மட்டும்தான் ஏக போக உரிமை என்று நினைத்தீர்களாக்கும்...''

அவளது பேச்சை ரசித்தவன்... விளையாட்டாய் கன்னத்தில் போட்டுக் கொண்டான். "தப்பு... தப்பு... சரி... இப்போது சொல்... அந்தப் பணம் முழுக்க கோபிக்குக் கொடுத்து விட்டாயா மீனா... உனக்கு என்று எதையும் வைத்துக் கொள்ளவில்லையா..." என்று கேட்டான்...

அவன் அத்தனை அக்கறையாய் கேட்டது அவளுக்கு வியப்பைத் தந்தாலும்... ஒருவேளை... நான் கொடுத்த பணத்தை எந்த விதத்தில் செலவு செய்தாள் என்று அறியும் ஆர்வத்தினாலும் இருக்கலாம் என்று சமாதானம் செய்து கொண்டாள்.

"எனக்கு இருப்பது அத்தையும்... கோபியும் தான்... அனாதையான என்னைப் பார்த்துக் கொண்டதும் அவர்கள் தான்... நீங்கள் கொடுத்த பணம்... அத்தையின் ஆஸ்பத்திரி செலவுக்கும்... கோபியின் புதுக்கடைக்கும் உதவியது... இன்னும் கொஞ்சம் மிஞ்சியிருக்கு... அது அத்தையை கவனித்துக் கொள்ளும் தீபாவிற்கு மாத சம்பளத்திற்கு என்று ஒதுக்கி வைத்துவிட்டேன்.."

அவளை ஆச்சர்யத்துடன் பார்த்தான் ஸ்ரீகாந்த்... தன்னைப் பற்றி நினைக்காமல்... மற்றவர்களின் நலன் கருதி தன் வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கிறாள் என்றால்... அத்தனை பெருந்தன்மையா இவளுக்கு... இல்லை... அந்த கோபியின் மீது இருக்கும் அன்பில் இந்த தியாகச் செயலா...

அது சரி... அவன்... கோபி... இவளுடைய பரந்த மனப்பான்மையை... தியாக மனத்தை பயன்படுத்திக் கொள்கிறான் என்றால்... அவன் எத்தகையவன்... சரியான சுயநலக்காரனாய் இருப்பான் போலும்...



பாவம்.. இந்த வெகுளிப் பெண் அதை புரிந்து கொள்ளாமல் கிறுக்குத் தனமாய் பணத்தை அள்ளிக் கொடுத்து விட்டு ஏமாந்து நிற்கிறதே...

நாளையைப் பற்றிய சிந்தனை இல்லாமல்...

நாளையப் பற்றிய சிந்தனை!... எதிர்காலம்... அடக் கடவுளே... என்ன நினைப்பு இது...

மீனாவுக்கும் எனக்கும் இடையே இருக்கும் இந்த பந்தமே நிரந்தரமில்லை... கொஞ்ச நாள் எனக்கு மனைவியாய் இருக்க வந்திருப்பவள்... அறுந்து போகும் இந்த உறவுக்குப் பின் எதிர்காலம் என்ன என்று தெரியாமல் நானே விழிக்கிறேன்... எங்கிருந்தோ வந்தவளின் எதிர்காலத்தைப் பற்றி எதுக்குக் கவலைப்பட வேண்டும்.. அது அவளோட பிரச்சனை தலையை உதறியவன்... நளினா இப்போது என்ன செய்து கொண் டிருப்பாள்... என்று யோசிக்க ஆரம்பித்தான்.

எத்தனை தொலைவில் இருக்கிறாள்... இன்னும் ஒரு நாள். மறுநாளில் அவளைக் காணப் போகிறோம் என்ற நினைப்பில் இதயம் துள்ளியது...

ஒட்டலுக்கு போய் சேரும் வரை அவளைப் பற்றிய சிந்தனையேதான்... அதில் மெய் மறந்து கிடந்தவனை தட்டி எழுப்பியது டெலிபோன் 'ரிங்' ஓசை.

சலிப்பாய் எடுத்து காதில் வைத்தவனின் முகம் மாறியது. அவனது பார்வை பரிதாபத்துடன் மீனாவின் மீது படர்ந்தது...

பாவம்... இந்தச் செய்தியை எப்படித் தாங்குவாளோ... தவிப்புடன் அவளருகே சென்றான்..

# 11

இறுதி யாத்திரைக்கு புறப்பட்டு விட்ட அத்தையைக் கண்ணீருடன் வழியனுப்பி வைத்தாள் மீனா.

தன்னை வளர்த்து ஆளாக்கிய ஜீவன்... பாசத்தை மழையாய் பொழிந்து... தாயுமாகி இருந்தவள்... போயாச்சு... இனி அந்த அன்பு உயிரைப் பார்க்கவே முடியாது என்ற வேதனை அவளைப் பிழிந்தது.

அத்தை இறந்து விட்ட செய்தியை கோவாவில் ஸ்ரீகாந்த் சொன்னதும் துடித்துப் போனாள் மீனா...

அய்யோ... தாய்க்குத் தாயாய் இருந்து சீராட்டி வளர்த்தவள் இனி இல்லையா... துக்கப் பந்து தொண்டையை அடைத்தது அவளுக்கு.

"ப்ளீஸ்... உடனே போக வேண்டும்..." கெஞ்சும் பார்வையுடன் அவள் சொன்னதும்... உடனே 'டிராவல்ஸ்'க்கு போன் செய்து விசாரித்தான்... அவனும் விரும்பியதும் அது தானே.

எப்போதடா இந்த போலி தேனிலவு முடியும்... புறப்படுவோம் என்று தவித்துக் கொண்டிருந்தவனாயிற்றே...

உடனே நளினாவை சந்திக்க வேண்டும்... அவளது மதிமுகத்தைப் பார்க்க வேண்டும் என்ற பரிதவிப்பு!

உடனே பரபரப்புடன் செயல்பட்டான்...

மீனா செயலற்று ஓய்ந்து கிடந்தாள்...



மனத்திரையில் அத்தையின் நினைவு... உயிரற்ற கட்டையாய் கிடப்பாள் என்ற நினைப்பு சுழன்றடிக்க... கண்களை மூடிக் கொண்டாள்... இமைகள் கரித்தன...

கடைசி நேரத்தில் அத்தையின் அருகே இல்லாமல் போனேனே கோபியாவது அருகில் இருந்தானா என்று தெரியவில்லையே... பாவம் அத்தை.. உயிர் பிரியும் போது என்ன நினைத்தாரோ... என்ன சொல்ல விரும்பினாரோ... அவர் அருகில் இல்லாமல் போனது என் துர்பாக்கியம்...

வேதனையின் விளிம்பில் இருந்தவளுக்கு அந்த விமானப் பயணம் சலிப்பாக இருந்தது.

அத்தையின் முக தரிசனமாவது கிடைக்குமா என்ற தவிப்பில் அந்தப் பயணம் நீண்டு கொண்டு செல்வது போல பிரமை.

வீடு வந்து சேரும் வரை சிரமப்பட்டு அழுகையை அடக்கிக் கொண்டு வந்தவள்... தரையில் கிடந்த அத்தையின் அசையாத உடலைப் பார்த்ததும் அடங்கிக் கிடந்த அழுகை பீறிட்டு வந்தது... அத்தையின் உடல் மீது விழுந்து கதறினாள். அருகில் இருந்த பெண்மணி அவளை அரவணைத்து சமாதானப்படுத்தினாள்.

"என்னம்மா மீனா... இப்படி நீ அழுதால்... கோபிக்கு யாரு ஆறுதல் சொல்வது... இந்த மட்டும் உன் அத்தை ரண வேதனை ஏதும் படாமல் போனாளேன்னு நினைச்சு சமாதானம் பண்ணிக்கோம்மா... இனி நடக்க வேண்டியதைப் பார்க்கணுமில்லே... இத்தனை நேரம் உனக்காக இப்படி உடம்பை, ஐஸில் வச்சிருந்தாச்சு.. இனியும் தாங்காதும்மா..."

கண்களைத் துடைத்துக் கொண்டாள் மீனா...

உண்மைதான்... நோய் கண்ட உடம்பு... இனிமேலும் வைக்க முடியாதுதான்... இப்பவே உடம்பில் மாற்றம்... சரி... அடுத்து என்ன... திகைப்புடன் கோபி பக்கம் திரும்பினாள். அவன் சுருணையாய் சுருண்டு கிடந்தான். பாவம். தாயின் இழப்பு... அவனால் தாங்கும் சக்தி இல்லை...

ஸ்ரீகாந்த் அவளை விட்டு விட்டுச் சென்றான். அத்துடன் என் கடமை முடிந்து விட்டது என்ற நினைப்பில்...

ஆனால் சாரதா அதை ஏற்கவில்லை...

"அந்த வீட்டின் மாப்பிள்ளைடா நீ... உனக்கும் சில பொறுப்புகள் இருக்கு... இப்படி கையை உதறிவிட்டு வந்தால் எப்படி.... பார்க்கப் போனா... நீயே இருந்து எல்லாவற்றையும் இழுத்துப் போட்டு செய்திருக்கணும். இப்படி மீனாவை அம்போன்னு விட்டு விட்டு வந்து விட்டாயே... கல்யாணம் பண்ணிட்டா மட்டும் போதாது. கடமைகளைச் செய்தாகணும். போ.. முதல்ல போய் அவங்களுக்கு உதவியா இரு... அவங்களுக்கு ஏகப்பட்ட செலவு இருக்கு... பாவம்... பணம் இருக்கிறதோ... இல்லையோ... நீயே செலவுகளை ஏத்துக் கொண்டு காரியங்களை நடத்தணும்... ஸ்ரீகாந்த்..."

தாயின் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து மறுபடியும் மீனாவின் வீட்டிற்குச் சென்றான் பிள்ளை...

தாய் சொன்ன மாதிரியே... அங்கே காரியங்களை எடுத்துச் செய்ய யாரும் இல்லாமல்... அத்தையின் உடல் அந்த இடத்திலே கிடந்தது.



உடனே கோபியை அழைத்து... அவனிடம் கட்டு பணத்தைக் கொடுத்து... காரியங்களை கவனிக்கச் சொன்னான்.

நன்றிப் பார்வையுடன் வாங்கிக் கொண்டவன் மீனாவிடம் சென்றான்.

அப்புறம் காரியங்கள் மளமளவென்று நடந்தேறின.

இதோ... அத்தையும் கிளம்பியாச்சு...

இந்த பூமியில் தன் கடமைகளை முடித்துக் கொண்டு... தன் கர்மங்களை எல்லாம் தீர்த்து விட்டு... இனி அந்த அன்பு ஜீவனைப் பார்க்கவே முடியாது...

உள்ளம் வலிக்க... முட்டிக் கொண்டு வந்த துக்கம் அழுகையாய் மாற... முழங்காலில் முகம் புதைத்துக் கொண்டு அழுதாள்...

ஸ்ரீகாந்த் எட்டி நின்று அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் அமர்ந்திருந்த கோலம் அவனது மனதை என்னவோ செய்தது... எதையோ பறி கொடுத்து விட்டு தவிக்கும் சிறுமியாய்.. தன்னந்தனியாய் தத்தளிக்கும் சிறு பிள்ளையாய்... பரிதாபத்தோற்றம்!

மெல்ல அவளருகில் சென்று 'மீனா...' என்று அழைத்தான் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

கலைந்த கேசமும்... சிவந்த கண்களும்... அழுததால் வீங்கிய இமைகளும்... கண்ணீரால் கழுவப்பட்டு பளபளத்த கன்னங்களும்... துடிக்கும் இதழ்களும் அவனது இதயத்தைப் புரட்டிப் போட்டது...

இந்த நேரத்தில் அவளிடம் ஆறுதலாய் பேசா விட்டால்...தான் மனிதப் பிறவியே இல்லைதான் என்று அப்போது தோன்றியது.

குனிந்து அவளைத் தன் இரு கரங்களால் எழுப்பி னான்.

அவளைத் தன் மேல் சாய்த்துக் கொண்டு ஆறுதலாய் தோளை வருடினான்.

முதன் முதலாய்.. ஆணின் ஸ்பரிசம்! அவளையும் அறியாமல் ஒரு மின்னோட்டமாய் ஊடுருவல்... புறாவின் உடம்பு போல மேனி அதிர்ந்தது... பயத்துடன் விலக முயன்றாள். ஆனால் ஸ்ரீகாந்த் விடவில்லை. அவனது அணைப்பு இன்னும் கொஞ்சம் இறுகியது.

''என்னால் புரிந்து கொள்ள முடிகிறது மீனா... எந்த அளவுக்கு உன் வேதனை என்று... என்ன செய்வது... மரணத்தை யாராலும் தடுத்து நிறுத்த முடியாதே... உன் அத்தை இருந்து அவஸ்தைப் படுவதைவிட போனது மேல் என்று நினைத்து மனதைத் தேற்றிக் கொள்ளணும். விரும்பினால் இங்கு இருந்து விட்டு வா... இல்லை. இங்கே இருந்தால் அத்தையின் நினைவு வாட்டும் என்று நினைத்தால் என்னோட கிளம்பு... உன்னோட நிம்மதி தான் முக்கியம்.'' பரிவுடன் சொன்னான் அவன்.

மீனா அவனை மலைப்புடன் பார்த்தாள்... பேசுவது தன் கணவனா. அவனுக்கு இப்படியும் பேச வருமா என்ன... அதை அவனும் உணர்ந்தான்... தன் கரத்தை விலக்கிக் கொண்டு நகர்ந்தான்.

அவனுக்கும் வியப்பு தான்.



நான் நினைத்தது என்ன... நடப்பது என்ன...

ஊருக்கு வந்ததும் மீனாவை உதறிவிட்டு ஓட வேண்டும்.. நளினாவின் மதிமுகத்தைப் பார்த்து உள்ளம் குளிர வேண்டும். இன்னும்... ஆனால் நிலைமை என்னவோ தலைகீழ்!

என்னோடு கிளம்பு என்று என் வாயால் சொல்கிறேன். எனக்கு என்ன ஆயிற்று...

மீனா நிராதரவாய் இருக்கிறாளே என்று பரிதாபத் நிலாலா... தக்கத் துணை இல்லையே என்ற அக்கறையா... இல்லை... தாலி கட்டிவிட்ட உரிமையா... எது என்னை அப்படிப் பேச வைத்தது...

அவள் யாரோ.. நான் யாரோ... என்று இருக்க முடியவில்லையே... என்னையும் அறியாமல்... கணவன் என்ற பதவி என்னை அப்படிப் பேச வைத்ததோ... இருக்கலாம்.

அப்படியே இருந்தாலும்... மீனா நளினாவின் இடத்தைப் பிடிக்க முடியாது. அது மட்டும் நிச்சயம்...

ஒரு கணவனின் கடமைகளை மட்டும் செய்கிறேன் அவ்வளவுதான். மற்றபடி ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை... தனக்குள்ளே அவன் ஆயிரம் சமாதானங்கள் சொல்லிக் கொண்டான்.

கணவனின் அழைப்புக்கு இணங்கி அவனுடன் புறப்பட்டு விட்டாள் மீனா... புறப்படுவதற்கு முன்... கோபிக்கு ஆறுதலாய் பேசினாள்... அவனை விட்டுச் செல்கிறோமே என்ற வருத்தமும் வந்தது.

கோபி அனாதையாய்... ஒற்றையாய் நிற்பதைக் கண்டு இதயம் விண்டு போனது... கண்களில் திரைக் கட்டியது...

அவனுக்கும் ஒரு துணை இருந்தால்... எனக்கு ஸ்ரீகாந்த் இருப்பதுபோல... என்ற நினைப்பு எழுந்த மறுகணமே திடுக்கிட்டாள்...

இது என்ன விசித்திரமான நினைப்பு...

ஸ்ரீகாந்த் துணையா... எத்தனை நாளுக்கு...

நிரந்தரமில்லாத ஒன்றையா துணை என்று நினைக்கிறேன்...

சே! இந்த உறவு அறுபட்டதும்... மீண்டும் தனிமை தான் என்பதை எப்படி மறந்தேன்...

கோபியை போல நானும் அப்போது ஒற்றையாய்... அனாதையாய் நிற்க வேண்டி வருமே... அதை ஏன் மறந்தேன்...

ஊகூம்... எனக்கு கோபியும்... கோபிக்கு நானும் இருக்கும் வரை நாங்கள் அனாதை இல்லையே... அதை நினைக்காமல்... ஸ்ரீகாந்த் இரண்டு வார்த்தைகள் அன்பாய் பேசியதும் ஏதோ கனவு காண்கிறேனே. எல்லாமே நிரந்தரம் என்று கற்பனைப் படகில் நீந்துகிறேனே... முட்டாள்... மடச்சி... மட்டி.... தன்னையே கடிந்து கொண்டாள்.

வீடு வரும் வரை இருவரிடையே மௌனராகம் மட்டுமே...

சாரதா மருமகளை அருகில் அமர்த்திக் கொண்டு வாஞ்சையுடன் சொன்னாள்.



"அத்தையை இழந்தது வருத்தமாகத்தான் இருக்கும்... வளர்த்தவள் இல்லையாம்மா... இப்ப... நான் உனக்கு இருக்கேன் மீனா... என்னை உன் அம்மாவா நினைத்துக் கொள். நீ எனக்கு மருமகள் இல்லை... மகளே தான்... புரிக்கதா..."

மீனாவின் உள்ளம் நெகிழ்ந்தது...

அத்தை வடிவத்தில் ஒரு அன்னை கிடைத்திருக்கிறாரே... அது போதும்...

அந்த அத்தையின் தாய்மை அன்பில் திக்கு முக்காடிப் போனாள் மீனா... அந்த அன்பிற்கு கைமாறாகப் பார்த்துப் பார்த்து பணிவிடை செய்தாள்.

சாரதாவும் மருமகளை இருத்திக் கொண்டு ஏதேதோ சொல்வார். எல்லாம் அவரது வாழ்க்கை சம்பவங்கள் தான்...

திருமணம் ஆகி பல வருடங்கள் ஆகியும் தனக்கு குழந்தைப்பேறு இல்லாமல் தவித்தது... ஊராரின் கேலிப் பார்வையில் புழுவாய் துடித்தது... ராமேசுவரம் சென்று ஏதேதோ பரிகாரம் செய்ததும் பிள்ளை வயிற்றில் தங்கியது... பிரசவத்தில் சிக்கல் ஏற்பட்டு சிரமத்துடன் மகனைப் பெற்றெடுத்தது... அதற்குப் பிறகும் உடம்பு தேறாமல் ஒன்று மாற்றி ஒன்று என்று பாடாய் படுத்தி... அவளைப் பலவீனமாக்கியது... எல்லாவற்றையும் கதையாகச் சொல்ல அதை ஆர்வத்துடன் கேட்டாள் மீனா.

அதுவும்... கணவனைப் பற்றி சொன்னபோது... அவரது முகத்தில் சுடர்விட்ட பெருமிதம்...

எத்தனை அந்நியோன்னியமாய் வாழ்ந்திருக்க வேண்டும்! பெரிய வக்கீல்... சிக்கலான வழக்குகளை வெகு எளிதாக முடித்து கீர்த்தியடைந்தவர்... மனைவி மீது அத்தனை அன்பு... மனைவியை உள்ளங்கையில் வைத்துத் தாங்கியவர்... ஏதோ ஒரு வழக்கு சம்பந்தமாய் கொச்சினுக்குச் சென்றவரை ரயில் விபத்து பலி கொண்டதுதான் கொடுமை...

சொல்லும்போது சாரதாவின் முகத்தில் வாட்டம் தெரிந்தது.

கணவன் இறந்துபோன வேதனையில் உடல் ஆரோக்கியம் மேலும் சீர்கெட்டுவிட... சர்க்கரை வியாதி... இரத்த அழுத்தம்... மூட்டு வலி... ஆர்த் தரைட்டீஸ்... எல்லாமே கைகோர்த்துக் கொண்டு ஆட்டம் போட்டதால்... இன்னும் எத்தனை நாள் வாழப் போகிறோம் என்ற கவலையில் மகனை சீக்கிரம் கல்யாணம் பண்ணிக் கொள்ளும்படி வற்புறுத்த... அவனும் மீனாவை மணந்து அழைத்து வந்து விட்டான்... தனக்கு ஒரு நல்ல மருமகளைத் தேர்ந்தெடுத்த மகனுக்கு புகழாரத்தை சூட்டும்போது அந்த முதியவரின் முகத்தில் தெரிந்த மலர்ச்சியைப் பார்த்து உள்ளுக்குள் குன்றினாள்.

அய்யோ... இந்த நல்ல உள்ளத்தை ஏமாற்றுகிறேனே... இது அடுக்குமா... நாங்கள் போடுவது வேடம் என்று தெரியாமல் ஏதேதோ நினைத்து மகிழ்ந்து போகிறாரே... இந்த நாடகம் எத்தனை நாளைக்கு தாங்கும்... குற்ற உணர்வு புழுவாய் குடைந்தது.

அத்தை இன்னும் சொல்லிக் கொண்டிருப்பதை உணர்ந்து கவனத்தைத் திருப்பினாள்.



ஒரே மகன் என்பதால் அதிகம் செல்லம் கொடுத்து விட்டாராம்... அதைப் பற்றி சொல்லிக் கொண்டிருந் தார். இள வயதில் தந்தையை இழந்ததால்... அந்தக் குறை அவனுக்குத் தெரியக்கூடாது என்று நினைத்து அவன் விரும்பியதை எல்லாம் நிறைவேற்றினாராம்.

பணத்திற்கு தன் கணவர் எந்தக் குறையும் வைக்க வில்லை... நிறைய சேமிப்பு செய்திருந்ததால் சிரமங்கள் படவில்லை என்றார் அவர்.

'ஓகோ... அதனால்தான் அய்யா பணத்தை வாரிக் கொடுத்தாராக்கும்... மனைவியை விலை கொடுத்து வாங்க பணம் விளையாடியிருக்கிறது... பாவம்... இந்த தாய்க்கு மகனின் கண்ணாமூச்சி விளையாட்டுத் தெரிய வரவில்லை...'

அதே சமயம்... பெற்றவளுக்காக ஒரு திடீர் மனை வியைக் கொண்டு வந்திருக்கிறான் என்று நினைத்த போது... ஸ்ரீகாந்தின் மீதிருந்த தப்பான எண்ணம் கொஞ்சம் குறைந்தது...

நோயாளித் தாயைத் திருப்தி செய்ய எண்ணுவதில் தவறில்லையே... அம்மாவின் மனம் கோணக் கூடாது என்பதால் இப்படி ஒரு விபரீத விளையாட்டில் இறங்கி விட்டார்... அதைப் பார்க்கும்போது அவர் மீது எந்தக் குற்றமும் இல்லைதான்...

ஆனால் இந்த விஷயம் அத்தைக்கு தெரியவே கூடாது. மருமகள் என்று வந்தவள் வெறும் டம்மிதான். உண்மையானவள் இல்லை... நிரந்தரமானவளும் கிடை யாது என்று தெரிய வந்தால்...

ஊகூம்... கூடாது... மனம் ஒடிந்து விடுவார்... ஏற்கனவே வியாதிகளின் கூடாக இருக்கும் இவருக்கு எதுவும் தெரியாமல் இருப்பதே நல்லது.

அதுவரை நான் நடிக்கத் தான் வேண்டும்.

நாடகமே உலகம்... நாமெல்லோரும் நடிகர்கள் என்பது பொய்யில்லை... சத்தியமான வார்த்தைகள் தாம்!

ஒரு நல்ல ஆத்மாவை சந்தோஷமாய் வாழ வைக்கத் தானே இந்த நடிப்பு... பரவாயில்லை... தெய்வத்தின் அருளால் அவர் தெம்புடன் எழுந்து நடமாடினால் அது போதும்... அதுதான் வேண்டும்...

பத்து நாட்கள் சென்றிருக்கும்.

புதுமண தம்பதியினரை விருந்துக்கு அழைத்திருந்தார் சக்ரபாணி... நளினாவும் சம்பிரதாயத்திற்கு அழைத்தாள்.

"போய் வாம்மா... எனக்காக வீட்டில் அடைந்து கிடக்க வேண்டாம்... சின்னஞ் சிறுசுகள்... சந்தோஷமாக வெளியே சுற்றாமல் இப்படி நோயாளியுடன் பொழுதைக் கழித்தால் எப்படிம்மா... நீ புறப்படு... எனக்குத் துணையா இன்னிக்கு வேலைக்காரி இருப்பா..."

சாரதா இருவரையும் வற்புறுத்தி அனுப்பி வைத்தாள்.

"வாம்மா... மிஸஸ்... ஸ்ரீகாந்த்... என்ன... எங்களையெல்லாம் மறந்து விட்டாயா..." என்று பரிகாசத்துடன் வரவேற்றார் சக்ரபாணி.

"அதெல்லாம் இல்லை மாமா... அத்தைக்கு உடம்பு சரியில்லை. அவருக்குத் துணையா இருக்க வேண்டும். அதான். உங்களை எப்படி மறக்க முடியும்... மாமா..." என்றாள் பதிலுக்கு.



"அநுசரி... கோவா பயணம் எப்படி இருந்தது. என்ஜாய் பண்ணினீர்களா.. கோவா அழகான இடம்... என்ன ஸ்ரீகாந்த்... மீனாவை எல்லா இடத்திற்கு அழைத்துப் போனாய் தானே... அடடா.. நான் ஒரு மடையன்.. தேனிலவு ஜோடியிடம் கேட்கிற கேள்வியா இது... ஊர்ச் சுற்றிப் பார்க்க உங்களுக்கு நேரம் எங்கே இருந்திருக்கும்... என்ன நளினா... நான் சொன்னது கரெக்ட் தானே..." என்று சொல்லிவிட்டுக் கண்ணடிக்க...

அந்தப் பேச்சு நளினாவிற்கு ரசிக்கவில்லை. இதென்ன கண்றாவி பேச்சு...

ஸ்ரீகாந்தைப் பார்த்தாள்.

அவன் மீனாவைப் பார்த்து ஏதோ ஒரு அர்த்தத்தில் புன்னகைக்க... அவளும் அதைப் புரிந்து கொண்டு புன்சிரிப்பை உதிர்த்தாள்...

அவர்களைப் பொறுத்தவரை அது வேடிக்கைப் பேச்சு... புதுமண ஜோடியைப் பார்த்து எல்லோரும் சொல்லும் பரிகாச வார்த்தைகள் தான்...

ஆனால் எதுவுமே நடக்கவில்லை என்பது அவர்கள் மட்டும் அறிந்தது.

இருவரின் பார்வைகளின் சங்கமத்தில் ரகசிய பரிமாற்றம் அரங்கேறியதை நளினா கவனிக்கத் தவறவில்லை.

"நம் ரகசியம்... இது நமக்குள்ளே இருக்கட்டும்.. என்ன..."

"பயப்படாதீர்கள்... அதை வெளியில் காட்டிக் கொள்ள மாட்டேன்."

அந்த மௌன பாஷையைப் பார்த்த நளினாவின் உள்ளத்தில் எரிமலை வெடிப்பு... தீப்பிழம்பாய் குமுறல்...

ஸ்ரீகாந்த் கொடுத்த வாக்கைத் தவறி விட்டாரோ... அவர் மீனாவை... சே!

அதற்கு மேல் அவளால் எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை. அக்னிக் குழம்பினுள் முக்கி எடுத்தது போல இதயம் கொதித்தது. ஸ்ரீகாந்த் என்னுடையவர். எனக்கு... எனக்கு மட்டுமே சொந்தம்... எத்தனை மீனாக்கள் வரட்டுமே... எங்களைப் பிரிக்கவே முடியாது... மனதிற்குள் உறுதி எழுந்தது.

விருந்திற்கு அதிசயமாய் வினோத் வந்திருந்தான்...

ஸ்ரீகாந்தையும் மீனாவையும் பார்த்ததும் வியப்பு...

ஓ! விருந்திற்கா... உதட்டில் ஏளன சுளிப்பு எட்டிப் பார்த்தது...

உணவு தயாராகி விட்டதா என்று அறிய நளினா உள்ளே செல்ல... மீனா எழுந்தாள்.

ஸ்ரீகாந்த்தும் சக்ரபாணியும் அலுவலக விஷயங்களை அலசிக் கொண்டிருந்ததால் அதில் ஆர்வமின்றி, வெளியே வந்தாள்.

'சில்'லென்ற காற்று மேனியைத் தழுவி சிலிர்க்க வைத்தது... பூச்சட்டிகள் அழகாய்... வரிசையாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன... காம்பவுண்ட் சுவர் மீது போகன் வில்லா படர்ந்து... காகிதப் பூக்கள் கண்களைச் சிமிட்டின. பட்டாம் பூச்சிகளும்... வண்ணத்துப் பூச்சிகளும் சுற்றிவந்த அழகை ரசித்தாள்...

"ஹலோ... மிஸஸ் ஸ்ரீகாந்த்... இயற்கையை ரசித்துக் கொண்டிருக்கிறீர்களா..."



குரல் கேட்டு திரும்பிய மீனா தன்னிடம் பேசியது வினோத் என்று தெரிய... ஆச்சர்யமடைந்தாள். வினோத்தா... நளினாவின் தோழி என்று அலட்சியமாய் பார்ப்பவன்... ஏழையான தன்னை மூக்கின் கீழே பார்ப்பவன்... இப்போது... தானே வலிய வந்து பேசுகிறான் என்றால்... உலகமகா அதிசயம் தான்!

"ஹலோ மிஸ்டர் வினோத்... கொஞ்சம் காற்று வாங்கலாம் என்று வந்தேன்... ஆனால்... இதை விசாரிப்பதற்கு மட்டுமே நீங்கள் இங்கு வரவில்லை என்று நினைக்கிறேன்... எதையோ சொல்லவோ... இல்லே கேட்கறதுக்கோ வந்திருக்கீங்க. அப்படித்தானே..." என்றாள் அவள்.

வினோத்தின் புருவங்கள் மேல் எழும்பின.

"உங்களை என்னவோ நினைத்தேன்... என் அருமை சித்தியின் சிநேகிதி அவர்களைப் போலவேத்தான் இருக்க முடியும்... இருப்பாள் என்று எண்ணியது தப்புன்னு இப்ப புரிகிறது... புத்திசாலியான ஒருத்தியை சந்தித்ததில் எனக்கு ரொம்ப சந்தோஷம்..."

"சாரி... நளினா என் தோழி... என் தோழியைப் பற்றி இப்படி என்னிடம் மட்டமாகப் பேசுவது நாகரீகமில்லை மிஸ்டர் வினோத்... அது எனக்குப் பிடிக்கவும் பிடிக்காது..." அவன் சிரித்து விட்டான்.

"அம்பேல்... உங்ககிட்டே பேசும்போது.. கொஞ்சம் யோசிச்சு தான் பேச வேண்டும்.. மிஸஸ் மீனா... இல்லா விட்டால் அழகாய் காலை வாரி விடுவீர்கள்..."

அதற்கு அவளும் சிரித்து விட்டாள்.

தலைகனம் படைத்தவன்... பணக்கார மமதை யுடையவன் என்று அவனைப் பற்றி நினைத்திருந்த மீனாவிற்கு... இப்படி தன்னுடன் வெகு சகஜமாய்... சரிக்கு சரியாய் பேசுவது கண்டதும் அந்தத் தவறான கணிப்பு மாறி விட்டது.

''மீனா... ஸ்ரீகாந்தை உங்களுக்கு முன்பே தெரியுமா என்ன...'' என்ற வினோத்தின் கேள்விக்கு...

''இல்லை... நளினா அக்காவின் மூலம் தான் பரிச்சயம்...'' என்றாள்.

''ஆ... நினைத்தேன்.''

''ஏன்...''

''இல்லை... உங்கள் நளினா அக்காவின் மனம் சொக்கத் தங்கமாச்சே... அந்த நல்ல மனம் யாருக்கும் வராது... அவரோட வேலையாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தேன்... அது சரிதான்...''

''மீண்டும் குத்தல்!'' முகம் சுளித்தாள் அவள்.

''மறுபடியும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். நான் சொன்னதை மறந்து விடுங்கள் மீனா... உங்கள் திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டதாகவே இருக்கட்டும்...''

''உங்களுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை... கரெக்ட்.''

''ஏன் கேட்கிறீர்கள்...''

''திருமணம் ஆகாதவர்கள் தான் அதை விளை யாட்டாய் நினைத்துப் பேசுவார்கள்.. உண்மையில்



ஒருவரின் வாழ்க்கையில் சந்தோஷத்தையும்... மன நிறைவையும் தருவது திருமணம் தான்...'' விட்டுக் கொடுக்காமல் பேசினாள் அவள்.

அவளை உற்றுப் பார்த்துவிட்டு... நிதானமாய் வினவினான் வினோத்.

''ஏன் மீனா... உண்மையிலேயே நீ சந்தோஷமாகத் தான் இருக்கிறாயா...''

அவனையும் அறியாமல் ஒருமையில் தன்னை அழைத்ததை உணர்ந்தாள் மீனா...

அதைப் பொருட்படுத்தாது பதில் சொன்னாள்.

''இதில் என்ன சந்தேகம்.. நான் ரொம்பவும் மகிழ்ச்சி யாகத்தான் இருக்கிறேன்... கண் நிறைந்த கணவர்... நிம்மதியான குடும்ப வாழ்க்கை. இதைவிட வேறு என்ன வேண்டும் ஒரு பெண்ணுக்கு...'' என்றாள் புன்னகையுடன்.

அவள் உண்மையை சொல்கிறாளா... இல்லை உள்ளதை மறைத்துப் பேசுகிறாளா... புரியாமல் அவளைப் பார்த்தான்.

உணவு பரிமாறத் தயார் என்ற அழைப்பு வர... இருவரும் உள்ளே சென்றனர்...

வினோத்தின் விசித்திரக் கேள்வியும்... அவனது விநோதமான பார்வையும் மீனாவைக் குழம்பச் செய்தது... ஏன் அந்தக் கேள்வி... எதற்கு அந்தப் பார்வை... ஏதோ உள்ளர்த்தம் இருப்பது போலத் தெரிகிறதே... அது என்ன... கேள்விகள் குடைந்தன.

விருந்து முடிந்து விடைபெற்றுக் கொண்டு கிளம்பும் வரை வினோத் பக்கம் திரும்பாமல் இருந்தாள் மீனா...

# 12

சொல்லாமற் கொள்ளாமல் திடீர் என்று வந்து இறங்கிய சித்தி கௌரியையும் அவளது மகள் புவனாவையும் பார்த்ததும் ஸ்ரீகாந்திற்கு வெகு ஆச்சர்யம்.

அக்காவிற்கு உடம்பு சரியில்லாமல் ஆஸ்பத்திரியில் சேர்த்த விஷயத்தையும் தனக்குத் தெரிவிக்கவில்லை... அவனுடைய திடீர் கல்யாணத்தைப் பற்றியும் அறிவிக்கவில்லை என்று சண்டை போடவே வந்தது மாதிரி பிலுபிலுவென்று பிடித்துக் கொண்டாள் சித்தி...

''நாங்கள் எல்லோரும் உங்களுக்கு இல்லை என்று ஆகி விட்டோமா... வேற்று மனிதர்கள் என்று நினைத்து எங்களை ஒதுக்கி விட்டீர்களா.. ஏன் அக்கா... நீயாவது ஒரு கடிதாசி எழுதியிருக்கக் கூடாதா... புவனாவோட அப்பா எவ்வளவு வருத்தப்பட்டார் தெரியுமா... சொந்தம்னு எதுக்கு இருக்கோம்... நல்லது... கெட்டதுக்கு வந்து உதவத்தானே... என்ன சமாதானம் சொன்னாலும் என் மனசு ஆறாதுக்கா... உன் பிள்ளை இப்ப பெரிய மனுஷனாயிட்டான் பாரு... அதான்...'' தங்கையை சமாதானம் படுத்துவதற்குள் சாரதாவிற்கு போதும் போதும் என்றாகிவிட்டது...

மீனாவைப் பார்த்ததும் கௌரிக்கும் புவனாவிற்கும் பிடித்துப் போனது.

''நல்ல மருமகளாய் உனக்கு கிடைச்சுட்டா.. அக்கா... இந்தக் காலத்தில் இப்படி அடக்கமாய்... குடும்ப



பொண்ணா லட்சணமாய் அமைவது அபூர்வம் அக்கா... அந்தவரைக்கும் நீ ரொம்ப கொடுத்து வைத்தவள் தான்... கடைசிவரைக்கும் உன்னை நல்லா வச்சுப்பா உன் அருமை மருமகள்... பார்த்தாலே தெரிகிறது..'' என்று மெச்சும் குரலில் கௌரி சொல்லவும்...

மருமகளைப் பெருமிதத்துடன் பார்த்தாள் சாரதா...

காபியை கலந்து வந்து புன்னகையுடன் விருந்தாளிகளுக்கு கொடுத்தாள் மீனா...

எளிமையான வாயில் புடவையில் கூட லட்சணமாக இருந்தாள் மீனா... அசர வைக்கும் அழகு இல்லையென்றாலும்... அவளது முகத்தில் அலாதியான.. அமைதியான ஒரு தெய்வீக அழகு இருந்தது... திருமணம் தந்த களையோ!... நெற்றியில் குங்குமமும்... கழுத்தில் இருந்த மஞ்சள் சரடும் அவளது வதனத்தின் வசீகரத்தைக் கூட்டிக் காட்டின. எல்லாவற்றையும் விட.... எப்போதும் சிரித்த முகமும்... இதழ்களில் புன்னகையுமாய் இருக்கிறாளே!... அதைச் சொல்ல வேண்டும்...

''என்ன அண்ணி... வலையில் சிக்காத விலாங்கு மீனாய் இருந்த என் அண்ணனை எப்படி வளைத்துப் பிடித்தீர்கள். நான் கல்யாணம் பண்ணிக் கொண்டால் அது லவ் மேரேஜ் தான் என்று பீற்றிக் கொண்டாரே... என் அண்ணா... அவர் பல்டி அடித்தது எப்படி... அதை முதலில் கேட்க வேணும்... எங்கே.. என் அருமை அண்ணா...'' என்று புவனா கிண்டல் செய்ய...

''என் மருமகள் உன் அண்ணனை ஒன்றும் வளைத்துப் போடவில்லை... அவன்தான் பார்த்ததும் மயங்கி விட்டான். தெரிஞ்சுக்கோ...'' என்று பெருமையுடன் சொன்னாள் சாரதா...

அது உண்மையில்லை என்றாலும்... அதைக் காட்டிக் கொள்ள விரும்பாமல் வெட்கத்துடன் புன்னகைத்தாள் மீனா...

அதைப் பார்த்த கௌரியும் ''நீ சொல்வதும் உண்மை தான்.. அக்கா... நம் மருமகள் முகத்தில் ஏதோ ஒரு தனிக் களை இருக்கு... மகாலட்சுமி மாதிரி அம்சமா இருக்கிறாள்... ஸ்ரீகாந்த் கொடுத்து வைத்தவன் தான்..'' என்றாள்.

புவனா அண்ணியிடம் ஒட்டிக் கொண்டாள்.

இருவரையும் உட்கார வைத்து.. வகை வகையாய் சமைத்து... பரிமாறினாள் மீனா.

அவளது கைமணத்தை வெகுவாய் பாராட்டிய கௌரிக்கு கணவரின் நினைவு வந்துவிட்டது.

''உன் மாமா இல்லையேன்னு இருக்கு மீனா... அவருக்கு வக்கணையா சாப்பிடணும்... நாக்கு படு நீளம்.. ஏய்... புவன்... பாரு... உன் அண்ணி எப்படி அருமையா சமைக்கிறான்னு... உனக்கு அடுக்களைன்னா அலர்ஜி... என்னிக்கு இந்த மாதிரி சமைக்கப் போறேயோ... அம்மா மீனா... இங்கே இருக்கும் வரை... புவனாவை இழுத்து வைத்துக் கொண்டு நாலு ஐயிட்டம் கத்துக் கொடேன்... என்னால் முடியாததை நீயாவது சாதித்துக் காட்டும்மா...'' என்றாள் அவள்.

''அவ்வளவு தானேம்மா.. நானே செய்து விடுவேன்... நாலு ஐயிட்டம் தானே... இதோ பாருங்கள்...'' என்று எழுந்து சென்ற புவனா... சிறிது நேரத்தில் எதை எதையோ எடுத்துக் கொண்டு வந்து வைத்தாள்.



''என்னடீ இது...''

''நாலு ஐயிட்டம்... தயிர் பச்சடி.... சாலட்.... மசால் பப்பட்.... இன்னொன்னு... ம்ம்... லஸ்ஸி... எப்படி....''

''கிழிச்சே... சமையல்னா சமைக்கிறது... இப்படி பச்சையாக் கொண்டு வைக்கிறது இல்லை... எப்படித் தான் மாமியார் வீட்டில் நல்ல பெயர் எடுக்கப் போகிறாயோ தெரியல்லே... உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்ததுடன் சரி... அப்புறம் திரும்பிக் கூட பார்க்க மாட்டேன்... வந்தா என்னைக் கிழி கிழின்னு கிழித்து விடுவார்கள்... இப்படியா பொண்ணை வளர்ப் பான்னு... உங்க அண்ணியைப் பார்த்து கத்துக்கோ...''

''எல்லாம் தானா வந்துடும் அத்தை... பார்த்துக் கொண்டே இருங்க... புகுந்த வீட்டில் எல்லோரும் புகழும்படி புவனா நடந்துப்பா.. எல்லாம் அம்மா இருக்கிறாங்க என்கிற சோம்பல்தான்.. பொறுப்புன்னு வந்தா எல்லாம் அதுவா வந்து விடும்...'' என்று புவனாவிற்கு பரிந்தாள் மீனா..

''கரெக்ட்.. அண்ணி... நீங்க புரிந்து கொண்ட அளவு அம்மா புரிஞ்சுக்கவில்லையே... ஏன் அண்ணி.. உங்களுக்கு 'பாவ் பஜ்ஜி' பண்ணத் தெரியுமா... ப்ளீஸ் அண்ணி.. எனக்குப் பண்ணித் தருவீர்களா..''

''ஏய்... தின்னிக் கழுதை... அண்ணிக்கு வேறு வேலை எதுவும் இல்லையா... நீ கேட்கறதை எல்லாம் சமைத்துக் கொடுக்க.. மீனா... அவ கேட்கறதுக்கு எல்லாம் 'சரி'ன்னு சொன்னே.... ஒரு பெரிய பட்டியலையே நீட்டுவா. வேண்டாம்.. எது கேட்டாலும் தெரியாதுன்னு சொல்லிடு...''

புவனா தாயைப் பார்த்து முகம் சுளிக்க... மீனா சிரித்தாள்.

ஆபீஸிலிருந்து ஸ்ரீகாந்த் வந்ததும் மீனாவைப் பற்றிப் புகழ்ந்து தள்ளினாள் கௌரி.

புவனாவும் அண்ணி புராணம் பாட.... ஸ்ரீகாந்திற்கு ஒரே வியப்பு!

அதெப்படி.... அனைவரின் அன்பையும் வாரி.. வழித்துப் பெற்றுக் கொள்கிறாளே...

அங்கே சக்ரபாணி... மீனாவைப் பார்த்ததும் பாசத்தில் உருகுகிறார்.

அம்மாவோ... சொல்லவும் வேண்டாம்... மருமகளை மெச்சி... புகழாரம் சூட்டி.... கொண்டாடுகிறார்...

இப்போ வந்த கௌரி சித்தியும்... புவனாவும்... அவளைத் தலையில் தூக்கிக் கொண்டாடுகிறார்கள் என்றால்... அதெப்படி தன்னிடம் பழகும் அனைவரையும் காந்தமாய் கவர்ந்து... இப்படி மீனாப் புராணம் பாடும்படி செய்கிறாள்... ஏதாவது சொக்குப் பொடி வைத்திருக்கிறாளா என்ன...

"அண்ணா... இப்படி அண்ணியைத் தின்று விடுவது போல பார்த்தால் திருஷ்டி விழுந்து விடும்..." புவனாவின் குரலில் கேலி தெரிந்தது.

அப்போதுதான் உணர்ந்தான்... தன் மனைவியை குறுகுறுவென்று பார்த்துக் கொண்டிருக்கிறேனா...

"அவன் மனைவியை அவன் பார்க்கிறான். திருஷ்டி யாவது மண்ணாவது... நீ நல்லா பார்த்து ரசிடா... இந்த மக்குக்குக் கல்யாணம் ஆனா அப்போ தெரியும்..." என்று மகளின் தலையில் செல்லமாய் குட்டு வைக்க...



"கரெக்டா சொன்னீர்கள்.. நம்ம புவனா மக்கு என்று... ஏய்.. மக்கு புவன்..." என்று அவனும் கிண்டல் செய்தான்.

இதில் மீனாவிற்கு என்ன திகைப்பு என்றால்... யாரும் இல்லாதபோது 'உர்ரான் கோட்டானைப் போல 'குர்' என்று இருக்கும் தன் கணவருக்கு எல்லோர் முன்னே எப்படி இயல்பாய் பழக முடிகிறது.

அடேயப்பா... அருமையான நடிப்பு... என்னவோ காதலால் கசிந்துருகி... கணமும் பிரிந்திருக்க முடியாத கணவன் மாதிரி வழிகிறார்... யாருக்கும் சந்தேகம் எழாது.. அப்படி இருக்க இவருடைய பேச்சும் செயலும்... நடிகர் திலகம் தான்! மனதுக்குள் அந்த நடிப்பை ரசித்தாள்.

அன்று இரவும் இப்படித்தான்.

கேரம் ஆடினார்கள்.

புவனாவும் ஸ்ரீகாந்தும் ஒரு கட்சி... கௌரியும் மீனாவும் ஒரு கட்சி...

கேரம் விளையாட்டில் தான் சாம்பியன்... தன்னை வெல்ல முடியாது... அதுவும் பெண்களால் என்று ஜம்பமாய் ஆட ஆரம்பித்தான் ஸ்ரீகாந்த்.

ஆனால் அந்த ஆட்டத்தில் தன்னை விட தன் மனைவி திறமைசாலி என்பதை பிறகுதான் உணர்ந்தான். காய்களை மளமளவென்று பவுச்சில் தள்ளிவிட்டு புன்னகைத்தாள் மீனா... கௌரியும் புவனாவும் கைத்தட்டி அவளைப் பாராட்டினார்கள்...

அசட்டுச் சிரிப்புடன் ஒத்துக் கொண்டான் ஸ்ரீகாந்த்.

"உன் அண்ணி இத்தனை திறமைசாலி என்று தெரியாமல் காலரைத் தூக்கிப் பேசினது தப்புதான்...

தப்பு... தப்பு...'' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டான்...

''இன்னும் உன்னுள் என்ன என்ன திறமைகளை ஒளித்து வைத்திருக்கிறாய் மீனா...'' என்று கேட்ட அவனது பார்வையில் மெச்சுதல் தெரிந்தது.

''அதை வெளியே சொன்னால் சுவாரஸ்யம் இருக்காது அண்ணா... ஒவ்வொண்ணா வெளிவரும்போது நீயே புரிந்து கொள்வது பெஸ்ட். இல்லையா அண்ணி...'' என்றாள் புவனா.

''எப்போதும் நான் தான் திறமைசாலின்னு நினைக்கக் கூடாது புவனா... வல்லவனுக்கு வல்லவன் இந்த வையகத்தில் உண்டு. உங்க அண்ணாவுக்கு... இந்த பெண்களை சுலபமா ஜெயிச்சுடலாம்ங்கற எண்ணம்... அது நடக்கவில்லை பார்!'' என்று காய்களை அடுக்கிய வாறு... கொஞ்சம் குறும்புடன் மீனா சொல்ல...

''நல்லா சொன்னே மீனா... இதுக்கு என்னடா சொல்றே... தோல்வியை ஒப்புக் கொள்கிறாய் தானே...'' என்று சித்தியும் ஒத்து ஊத...

''நோ சான்ஸ்... இந்த ஆட்டத்தில் மீனாவை ஜெயித்துக் காட்டுகிறேன் பாருங்கள்... ஏதோ... போகட்டும்... பெண் ஆயிற்றேன்னு விட்டுக் கொடுத் தேன்... இந்த தடவை ஜெயலட்சுமி என் பக்கம்...''

''ஆனா... நான் அண்ணி பக்கம்... நானும் அண்ணியும் ஒரு கட்சி...''

''அப்படியா... இப்ப பார். நான் ஜெயிக்கிறதை... பெண்கள் பலவீனமானவர்கள் என்று விட்டுக் கொடுத்தது தப்பாகி விட்டது...'' என்று காய்களைக் குறி பார்த்தான் ஸ்ரீகாந்த்.



''உன் அண்ணாவின் முகத்தில் மண் தெரிகிறதான்னு பார்... புவனா...'' என்று குறும்பாய் கேட்டாள் மீனா...

''ஏன்...''

''இல்லை... குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று வீராப்பு பேசுகிறாரே... அதான்...'' அதைக் கேட்டதும் புவனாவும் சித்தியும் 'கொல்' லென்று சிரிக்க...

அவள் தலையை செல்லமாய் தட்டிய ஸ்ரீகாந்த்... ''இந்த ஆட்டத்தில் பார்... என் கைவரிசையை...'' என்று ஆட மும்முரமானான்...

சொன்னபடியே ஜெயித்தும் காட்டிவிட்டு... காலரை உயர்த்தினான்.

அன்று முழுவதும் பொழுது கழிந்ததே தெரியவில்லை.

மீனாவிற்கு உள்ளுக்குள் கிளுகிளுப்பு.

குறுகுறுப்பாய் தன்னைப் பார்த்த ஸ்ரீகாந்த்தின் முகம் அப்படியே அவளது எண்ணத்தில் பதிந்து போனது... தலைமேல் செல்லமாய் தட்டிய நினைவும் வெல்லமாய் இனிக்கச் செய்தது...

மெல்லியதாய்... இழையாய் சின்ன ஏக்கம் எட்டிப் பார்த்தது. ஸ்ரீகாந்த் உண்மையிலேயே அன்புக் கணவ னாய் இருந்தால்... 'அக்ரிமெண்ட்' தம்பதியினராய் இல்லாமல் ஆதர்ஷ தம்பதியினராய் இருந்திருந்தால்...

அப்போதுதான் சுரீர் என்று உறைத்தது...

அவளது இதயத்தில் ஸ்ரீகாந்த் குடியேறி விட்டான்!... உள்ளத்துள் உரிமையுடன் உட்கார்ந்து விட்டான்... நெஞ்சில் நிலைகொண்டு விட்டான்...

எப்போது... அதுதான் தெரியவில்லை. எப்படி என்றும் புரியவில்லை. அவன் மனதிலும் இதே மாதிரி சலனம் வந்திருக்குமா... அதுவும் தெரியவில்லையே.

அவளால் நம்பவும் முடியவில்லை.

அறிமுகமில்லாதவனை மணக்க வேண்டுமே என்று முகம் சுளித்த தனக்குள் இத்தனை சீக்கிரம் மாற்றமா...

அதெப்படி.. மஞ்சள் சரடின் ஈரம் காய்வதற்குள் மனம் மாறி விட்டது என்றால்... தாலிக் கயிறுக்கு அத்தனை மகிமையா... இதைத்தான் தாலி பாக்கியம் என்கிறார்களா... நினைக்க... நினைக்க அவளுக்கு வியப்பாக இருந்தது.

தொடர்ந்து வேறு யோசனைகள்... ஒருவேளை ஸ்ரீகாந்த் தன்னை நேசிக்காவிட்டால்... வெறும் அக்ரிமெண்ட் மனைவி என்ற நினைப்பில் இருந்தால்... அதைத் தாள முடியுமா. இப்படி ஒரு அருமையான குடும்ப வாழ்க்கையை அனுபவித்து விட்டு மறுபடியும் தனிமைக்கு செல்ல முடியுமா... கடவுளே...

அவரது அன்பை நான் பெறும்படி செய்... என்னை தன் வாழ்க்கைத் துணையாய் ஏற்றுக் கொள்ளும்படி செய்... மனம் உருகி வேண்டினாள்...

வேண்டுதல் நிச்சயம் பலிக்கும் என்ற நம்பிக்கையில் உறக்கம் வந்து தாலாட்டியது...

அதே சமயம்... ஸ்ரீகாந்த் 'செல்போனில்' நளினாவிடம் காதலாய் கசிந்துருகி... பேசிக் கொண்டிருந்தான்...



# 13

கௌரியின் கணவர் சேதுமாதவன் திருச்சியிலிருந்து போன் செய்தார். கௌரியையும்... புவனாவையும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டவர். அப்படியே புதுமணத் தம்பதியினரையும் விருந்தாட அழைப்பு விடுத்தார். டாக்டரிடம் மருத்துவ ஆலோசனை கேட்டுக் கொண்ட பின்... சாரதாவை வசதியாக காரில் அமர்த்திக் கொண்டு ஊருக்குக் கிளம்பினார்கள்.

தென்னூரில் இருந்தது வீடு...

அந்தக் கால வீடு... விசாலமான பெரிய வீடு.. வீட்டின் உள்ளே நவீன வசதிகளுடன்... ஏ.ஸி பொருத்தப்பட்டு மொஸைக் தரையும்... கண்ணைக் கவரும் வண்ணம் கொண்ட சுவருமாய் 'பளிச்'சென்று இருந்தது வீடு.. வீட்டைச் சுற்றிலும் பசுமைப் புரட்சி! வாழை, மாதுளை, மா, பலா, சப்போட்டா என்று தளதளவென்று செழிப்பாய்.. செருக்காய் நிற்கும் பழமரங்கள்.

நறுமணம் வீசும் செண்பகம்... மனதை மயக்கும் பாரிஜாதம்... கிறங்க வைக்கும் மல்லிகை... கிளுகிளுக்க வைத்த ஜாதி... பட்டன் ரோஸ்.. செம்பருத்தி என்று காற்றையே கதம்பமாக்கும் மலர்வாசம்...

சுற்றுச் சூழலை குளுகுளுவென்று வைத்திருக்கும் இயற்கையை ரசித்துக் கொண்டிருந்த மீனாவிடம் கேட்டாள் புவனா.

"அண்ணி... எங்க வீடு எப்படி..."

"சூப்பர்... புவன்... ரொம்ப அழகா இருக்கு... காத்தும் அருமையா வீசுகிறது... ஏ.ஸி.யே வேண்டாம் போலிருக்கு..." என்றாள் மீனா.

"இயற்கையான காத்துக்கு முன்னால் ஏ.ஸி.யாவது... மண்ணாவது... அதெல்லாம் வீண்... இப்பத்தானே இந்த ஏ.ஸி.யெல்லாம்.. மீனா... எங்க சின்ன வயசில்... நாங்க பார்த்த ஏ.ஸி. எது தெரியுமா... வெட்டி வேர் தட்டியை ஈரத்துடன் கட்டித் தொங்க விட்டிருப்போம்... காற்றில் அது ஆடும் போதெல்லாம்... அடடா.. என்னமாய் சிலுசிலுவென்று வெட்டிவேர் மணத்தோட காத்து வரும் தெரியுமா.. அதுக்கு ஈடா எதுவுமே இல்லை.. என்ன கௌரி... உனக்கு நினைவிருக்கு தானே..." என்று சாரதா கேட்கவும்...

"ஓ... அது மட்டுமா... அம்மா மணலைக் கொட்டி... பெரிய பானையை அதில் வைத்து... கிணத்து தண்ணீரை ஊத்தி... அதோட நன்னாரி வேரையும் போட்டு... பானையை சுத்தி ஈரத் துணியை போர்த்தி வைத்துடுவா. அப்புறம் அந்தத் தண்ணீரை மொண்டு குடிப்போமே... ஆகா... அற்புதம்... தேவாமிர்தமாய் இருக்கும் தண்ணீர்... இப்போதெல்லாம் ஃப்ரிஜ், தண்ணீர் குடித்து... குடித்து தொண்டைதான் கட்டிக் கொள்கிறது..." என்று பெருமூச்சு விட்டாள் கௌரி...

சேதுமாதவன் மலர்ந்த முகத்துடன் அவர்களை வரவேற்றார்.

"வாம்மா... புது மருமகளே... நம்ம பையன் எப்படி.... சரியா கவனிச்சுக்கிறானா...? இல்லை... ஆபீஸ்...



வேலைன்னு அங்கேயே கிடக்கிறானா... ஏன்னா... அவனுக்கு ஆபீஸ் தான் உலகம்... ஆபீஸே கதின்னு கிடப்பான்... இப்ப எப்படி... உன்னை சுத்தி வர்றானா... இல்லை... அப்படியே தானா..." என்று கலகலப்பாய் பேசிய அவரை பார்த்த உடனே பிடித்துப் போனது.

குடும்பத்தில் அனைவருமே அன்பானவர்கள் தான்... நல்ல உள்ளம் கொண்ட இவர்களை சந்திக்க வைத்த இறைவனுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். தாங்க் காட்! இப்போது என்னைச் சுற்றியும் உறவினர் வட்டம்... எனக்கும் சுற்றம்... சொந்தம் என்று வந்து விட்டது... நான் அனாதை மீனா இல்லை... அது போதும்... கண்களின் ஈரக் கசிவை யாரும் அறியா வண்ணம் துடைத்துக் கொண்டாள்.

"மீனா... இவன் என் சீமந்த புத்திரன் ஸ்ரீநாத்... டேய் ஸ்ரீநாத்... இவள் உன் அண்ணி... மீனா..." ஸ்ரீநாத்.. புவனாவைவிட இரண்டு வயது சிறியவன். டென்னிஸ் ஆட்டத்தில் ஆர்வம் என்பதால் டென்னிஸ் மட்டை எப்போதும் அவனது கையில் இருக்கும்... இப்போதும் தான்...

"ஹாய்.. அண்ணி... ஹாய் அண்ணா... கங்கிராட்ஸ் எங்களை அழைக்காமலே கல்யாணம் செய்து கொண்டதற்கு ஆனாலும் இது ரொம்ப அநியாயம் அண்ணா... என்னவெல்லாம் கற்பனை செய்திருந்தேன் தெரியுமா. உங்க கல்யாணத்தில் கலாட்டா செய்து கலக்கணும்... என் காமெராவில் விதவிதமாய் உங்களை போட்டோ எடுத்துக் காட்டணும்... உங்க ரெண்டு பேரையும் செம கிண்டல் செய்து விளையாடணும்... எல்லாத்தையும்

விட.... வித விதமாய் டிரெஸ் பண்ணி எல்லோரையும் அசத்தனும் என்றெல்லாம் நினைத்தோம்... போச்சு... எல்லாம் பெயிலியர் ஆச்சு. இல்லே புவனா...'' படபடவென்று பொரிந்தான் ஸ்ரீநாத்.

''போகட்டும் விடுடா... எனக்கும் உனக்கு மேல் கோபம் இருந்தது ஸ்ரீநாத்... ஆனா... இப்பத்தான் புரியுது... ஏன் உன் அண்ணா அவசரத் திருமணம் செய்து கொண்டான் என்று... ஊரைக் கூட்டி... உறவினரை அழைத்து... சம்பிரதாயமா திருமணம் பண்ணிக்க அவனுக்குப் பொறுமை இல்லை... அதான்... சட்டு புட்டுன்னு தாலிக் கட்டி விட்டான்... என்னடா... புது மாப்பிள்ளே... மீனாவைப் பார்த்ததும் எங்களையெல்லாம் மறந்துட்டே போலிருக்கிறது...''

சேதுமாதவன் ஸ்ரீகாந்தையும் மீனாவையும் தமாஷ் செய்ய... மீனாவிற்கு தவிப்பாக இருந்தது.

உண்மையிலேயே தான் அழகி இல்லை என்று நினைத்தாள். அதுவும் வண்ண மயில் நளினா மாதிரி பிரமிக்க வைக்கும் அழகு இல்லைதான்.

ஆனால்... இங்கே... கௌரி சித்தியின் குடும்பத்தினர் தன்னை அழகு சுந்தரியாக அல்லவா கருதுகிறார்கள்.

ஒரு வேளை... அது விளையாட்டுப் பேச்சோ... இல்லை... அன்பின் மிகுதியால் அவர்களது கண்களுக்கு அப்படித் தெரிகிறேனா...

இருக்கலாம்.. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சாமே. அது போலத்தான்...

சரி... ஸ்ரீகாந்தின் கண்களுக்கு நான் எப்படித் தெரிகிறேன் என்று தெரியவில்லையே... இவர்களைப்



போலத்தானா... இல்லை... பத்தோடு பதினொன்று எனும் கணக்கா... யார் கண்டது... ஏதேதோ நினைவோட்டம்...

அந்த வீட்டின் கலகலப்பான சூழ்நிலையில்... அவர்கள் அந்நியர்களாகத் தோன்றவில்லை மீனாவிற்கு...

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாய் பொழுது போனது...

ஒரு நாள் மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையார் கோவில்... ஒரு நாள் ஸ்ரீரங்க பெருமாள் தரிசனம். ஒரு நாள் முழுக்க கடை வீதி அலசல்... இன்னும் ஊர் முழுக்க உலா வந்தனர். திருமணப் பரிசாக மீனாவிற்கு தர அழகானதொருப் பட்டுப் புடவையும்... முத்தும் கெம்புமாய் இழைத்த நகை செட்டும்.. ஸ்ரீகாந்திற்கு ஒரு ரேமாண்ட் சூட்டும்... பிரேஸ்லெட்டும் வாங்கினார்கள்.

அன்று இரவு சேதுவின் உறவினர் வீட்டில் எல்லோரையும் ஏதோ ஒரு விசேஷத்திற்காக அனைவரையும் அழைத்திருந்ததால்... அன்றைக்கே அவற்றை வைத்துக் கொடுத்து விட்டு... அணியும்படி சொன்னார்கள்.

புடவைக்குப் பொருத்தமான ரவிக்கையை கௌரி வீட்டிலேயே தைத்துக் கொடுத்ததால்... உடுத்திக் கொள்ள வசதியானது.

காலை உணவு முடிந்ததும்.. மீனாவை அழைத்துக் கொண்டு எங்கோ சென்றாள் புவனா.

''எங்கே...'' என்று விசாரித்த ஸ்ரீகாந்திடம்...

''உஷ்... அது மட்டும் ரகசியம்...'' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டாள்.

அவர்கள் திரும்பி வரும்போது மதியம் மணி ஒன்று...

புவனாவுடன் வந்தவளை திகைப்புடன் வெறித்துப் பார்த்தான். ஸ்ரீகாந்த்... மீனாவா..!

அவனது தீர்க்கமான பார்வையைக் கண்டு முகம் சிவந்தாள்.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள் அண்ணா... சாட்சாத் உங்க மனைவியேதான்..." அவன் கண் முன் சொடுக்கிய வாறு சொன்னாள் புவனா.

எளிமையாய்... வெறும் பொட்டு மட்டுமே இட்டு... படிய படிய கூந்தலை வாரி... பின்னலிடும் மீனாவா...

"எப்படி இந்த மாற்றம்!" ஆச்சர்யத்துடன் கேட்டான் அவன்.

"ப்யூட்டி பார்லர் வேறு எதற்கு இருக்கு... என் தோழி நடத்தும் ப்யூட்டி பார்லருக்குப் போனோம்... எங்க அண்ணியின் அழகை வெளிக்கொண்டு வரணும்டீ.. என் அண்ணா அப்படியே மதி மயங்கிடணும்... அதுக்கு என்ன செய்வியோ அதை செய்ன்னு சொன்னேன். அண்ணிக்கு இஷ்டமில்லை... எனக்கு இதெல்லாம் பழக்கமில்லைன்னு தயங்கினாங்க. நான்தான் எதுவும் பேசக்கூடாது. இன்னிக்கு மட்டும் நான் சொல்ற மாதிரி செய்யுங்கண்ணி என்று சொல்லி உட்கார வைத்தேன்... என் தோழி.. "பேசாமல் போய் ஏதாவது 'மாகஸீனைப்' படி.... நான் கூப்பிட்டப்போ, வந்தா போதும்... அதுவரை எதுவும் பேசக்கூடாது... ஓ.கே..." என்றாளா... நானும் ஃபெமீனா... இன்டியா டுடேன்னு எதையோ புரட்டிக் கொண்டிருந்தேன். நேரமும் மறந்து போனது. அப்புறம்



"அடியே... புவன்... வந்து பார்" என்று தோழி அழைத்ததும்... போய் பார்த்தால்.. உங்களை மாதிரிதான் பிரமித்து விட்டேனாக்கும்... இப்ப என்ன சொல்றீங் கண்ணா..." என்று புவனா கேட்க...

"ப்யூட்டி ஃபுல்..." என்று பதில் சொன்னவனின் கண்கள் மனைவியின் வதனத்தை மொய்த்தன...

என்ன மாற்றம்... அதுவும் அழகான மாற்றம்!

மாடப்புறா அன்னப்பட்சியாய் மாறிய அதிசயம்!

பட்டாய் பளபளத்த கேசம்... ஷாம்பூ பாத் தந்து.. அழகாய் 'யூ கட்' செய்யப்பட்டிருந்தது. அலை அலையாய் அசைந்த கருங் கூந்தலை மேலாய் எடுத்து 'கிளிப்' செய்யப்பட்டிருந்தது.

முகத்தின் பளபளப்பு கூடியிருந்தது. சருமம் பளிங் காய் மிளிர்ந்தது... புருவங்களை சீர் செய்து... கண்களுக்கு கவர்ச்சியைச் சேர்க்க ஐ லைனர் தீட்டி... வடிவான இதழ்களுக்கு லேசாய் 'லிப்ஸ்டிக்' பூசி.. ஆகா... நானா!

கண்ணாடியில் தன் தோற்றத்தைப் பார்த்த மீனாவுக்கு நம்பவே முடியவில்லை...

"நானே நானா... இல்லை யாரோதானா..." என்று முணுமுணுத்தாள்.

இத்தனை நாள் ஒளிந்து கிடந்த வசீகரத்தையெல்லாம் ஒட்டு மொத்தமாய் வெளிக் கொணர்ந்து விட்டாளே அந்த அழகு கலை நிபுணி... ஒரு மணி நேரத்தில் அதிசயத்தக்க மாற்றம்தான்...

வட்ட முகம் ஓவல் வடிவத்திற்கு மாறிய விந்தை!

கரும்பட்டு கேசம் காற்றில் அலை பாய்ந்த அழகும்.. வைரமாய் ஜொலித்த கண்களின் மினுமினுப்பும் கண்ணாடியாய் மாறிப்போன கன்னங்களின் வழ வழப்பும்... மெய்மறந்து போய் நின்றாள் மீனா.

நான் அழகில்லையோ என்ற ஏக்கம் மறைந்து போய் நானும் அழகுதான் என்ற பெருமிதம் வந்தது.

ஸ்ரீகாந்தின் நினைவும் வந்தது... இப்போது என்னைப் பார்த்தால் அவருக்கு என்ன தோன்றும்... நளினாவின் அழகில் மயங்கியவரின் கண்களுக்கு இந்த அழகு எடுபடுமா... இல்லை.. முகத்தை சுளித்துக் கொண்டு... வான் கோழிக்கு வண்ண மயிலாக ஆசை ஏன் என்று சொல்வாரா... மனம் 'திக்திக்' என்று அடித்துக் கொண்டது. நல்லவேளை... 'கமெண்ட்ஸ்' எதுவும் அடிக்காமல்... அழகுதான் என்று ஒப்புக் கொண்டாரே... அது போதும். அதுக்கே நெஞ்சில் பட்டாம்பூச்சியின் படபடப்பு... இன்னும் ஆகா... ஓகோ என்று புகழ்ந்திருந்தால்... அவ்வளவுதான்... இந்த மீனா... வானத்துக்கே பறந்து போய் அதில் விண் மீனாய் திரிய மாட்டேனா...

"ரெடியா மீனா..." என்று கணவனின் குரல் கேட்டதும்,

"ஒரு நிமிஷம்..." என்று புன்னகையுடன் சொன்னாள்.

பட்டுப் புடவையில் அம்மன் சிலையைப் போல நின்றிருந்தவளைக் கண் கொட்டாமல் பார்த்தான் ஸ்ரீகாந்த்.

குங்கும வண்ணத்தில் நீலக்கரையில் ஜரிகை இழைத்த அழகிய காஞ்சிப் பட்டில் அம்சமாகத் தெரிந்தாள் மீனா.



காதில் முத்தும் சிவப்பு கற்களும் பதித்த காதணி அழகாய் அசைந்தது... விளக்கொளியில் கையில் இருந்த நெக்லஸ் டாலடித்தது. அதை அணியாமலே இருப்பதைப் பார்த்துவிட்டு "நான் போட்டு விடட்டுமா... இங்கே கொடு" என்று வாங்கிக் கொண்டவன் அதை அவளது சங்குக் கழுத்தில் அணிவித்தான்.

கொக்கியை மாட்டும்போது அவனது விரல்கள் மேனியை வருட... அந்த ஸ்பரிசத்தால் மேனி முழுவதும் சிலிர்ப்பு ஓடியது.

இதயம் வேகமாய் அடித்துக் கொண்டது.

அவனது கரங்கள் அங்கிருந்து விலகவும் பிடிக்காமல்... மெல்ல கீழிறங்கி தோள்களை வளைத்தன... அவளை... அவளை அணைத்து தன் மேல் சாய்த்துக் கொண்டான் ஸ்ரீகாந்த்.

எதிரே இருந்த நிலைக் கண்ணாடி அவர்களின் தோற்றத்தை வஞ்சமில்லாமல் திருப்பிக் காட்டியது. இதோ... அழகான ஜோடி! எப்படி இருக்கிறது என்பது போல...

எத்தனை நேரம் கழிந்தது என்பது தெரியாமல் ஒரு மெய் மறந்த நிலையில் நின்றிருந்தவர்களின் பார்வை கண்ணாடியில் சங்கமித்து...

கணவனின் கம்பீர அழகுக்கு தான் ஏற்றவள் தான் என்ற பூரிப்பு அவளது கண்களிலும்... இந்த தங்க மீன்... என்னுடன் தங்க வந்த மீனாய்... மனைவியாய் ஆன பெருமை அவனதுகளிலும் தெரிய... இருவரது உதடுகளிலும் புன்னகை!

கொழுக் கொம்பைச் சுற்றிய பூங்கொடியாய் நின்றவளின் முகத்தில் வெட்கத்தினால் செம்மை!

''அண்ணா... அண்ணி. என்ன செய்றீங்க...'' கூவிக் கொண்டு வந்த புவனாவின் குரலில் இருவரும் விலகி நின்றனர். அப்போதுதான் அவளுக்கு உறைத்தது... இப்படி கட்டுப்பாட்டை இழந்து அவனுடன் இழைந்து நின்றோமே... சே! அவன்தான் ஆண் பிள்ளை... தன் வசமிழந்து நடந்தாலும்... தனக்கு எங்கே புத்தி போயிற்று... அவர் இதைத் தவறாக எடுத்துக் கொண் டிருந்தால்... அவளுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.

ஸ்ரீகாந்த் என்ன நினைப்பார்... பணத்தில் மயங்கி... அவரைக் கவரப் பார்க்கிறதாய் தப்புக் கணக்குப் போட்டு விட்டால்... அதைவிடக் கேவலம் வேறு ஒன்றும் இல்லை... அதைவிட உயிரை விட்டு விடலாம்...

''அண்ணி... போகலாமா என்று அம்மா கேட்டு வரச் சொன்னார்கள். அண்ணா... அண்ணியைப் பார்த்துக் கொண்டிருப்பதை நிறுத்திவிட்டு... சீக்கிரம் புறப் படுங்கள்'' என்று விரட்டினாள்.

சேதுமாதவனின் உறவினர்களும் வேற்று மனிதர் களாய் இல்லாமல்... குதூகலத்துடன் வரவேற்று... ஒட்டுதலுடன் உறவாடினார்கள்...

புதுமணத் தம்பதிகள் என்பதால் ஸ்ரீகாந்த்தையும் மீனாவையும் கேலியும் பரிகாசமுமாய் நடத்தினார்கள்.

சாப்பாட்டு வேளையில் ஒரே ரகளைதான்.

''எங்கே... ஒருத்தருக்கு ஒருத்தர் ஊட்டி விடுங்கள்.. பார்க்கலாம்... உங்க கல்யாணத்தில் இந்த வேடிக்கை



யெல்லாம் நடக்கவில்லையாமே.. அதான்... இப்போது நடக்கட்டும்... பார்க்க நாங்க தயாரா இருக்கோம்...''

''ஒட்டிக் கொண்டு அமரலாம்... நாங்கள் உங்க பக்கமே திரும்ப மாட்டோம்... என்ஜாய்...''

''உங்களை சுத்தி எத்தனை கரடிகள்... உங்களை விட்டால் போதும் என்று இருக்கு... இல்லையா ஸ்ரீகாந்த்...''

இந்தக் கேலியும்... சிரிப்பும் மீனாவிற்கு பிடித்திருந்து. ஏதோ புது இடத்திற்கு வந்திருக்கோம் என்ற எண்ணம் இல்லவே இல்லை...

உண்மையிலேயே தாம் மனமொன்றிய தம்பதிகள் போன்ற பிரமை!

ஸ்ரீகாந்தும் அவர்களின் கலாட்டா பேச்சுக்கு சக்கு சரியாய் பதில் சொல்வதையும் கவனித்தாள்.

ஆக... ஆரம்பத்தில் அவனுக்கு இருந்த வெறுப்பும் சுளிப்பும் இப்போது இல்லை என்று தெரிகிறது. அப்படி இருந்திருந்தால் இந்தப் பேச்சையெல்லாம் ரசித்திருக் கவே மாட்டான்... எழுந்து வெளியேறியிருப்பான்.

இந்த மட்டும் மாறினாரே என்று சந்தோஷப்பட்டாள் மீனா..

அன்று இரவு அவளது சந்தோஷம் குலையப் போகிறது என்று அவள் அறியவில்லை...

ஸ்ரீகாந்தின் மாற்றத்தைக் கண்டு பூரிப்படைந்து... றெகு முளைக்காத குறையாய் வானத்தில் சஞ்சரித்தவள்... றெகு அறுந்த பறவையாய் கீழே விழுந்த பரிதாபம்!

அது...

# 14

விருந்து உண்டு வீடு திரும்பும்போது மணி ஒன்பதரை உடனே உறங்க விரும்பாமல் அனைவரும் அரட்டை அடித்தனர்...

பேசுவதற்கு விஷயங்களா இல்லை...

இளமை பருவத்து சுவையான சம்பவங்களை அசைப் போட்டனர்... கல்லூரி நாட்களை நினைவு கூர்ந்தனர். அலுவலகத்தில் நடந்த சுவாரஸ்யமான விஷயங்களையும் உறவினர் வீட்டு வைபவங்களில் நடைபெற்ற விநோத நிகழ்ச்சிகள்... இன்னும் எத்தனையோ ஃப்ளாஷ் பேக்குகள்...

சிரிப்பும் கும்மாளமுமாய் பொழுது கழிந்தது...

அந்த நேரத்தில் போன் மணி அடிக்க...

''மீனா... எடுத்துப் பேசும்மா... யார் என்று கேட்டு சொல்... ஸ்வீட் கேர்ள்...'' என்றார் சேது...

டைனிங் ஹாலுக்கு அவள் சென்று ரிஸீவரை எடுப்பதற்குள் ஸ்ரீநாத் தன் அறையிலிருந்து வெளிவந்து அதை எடுத்துப் பேசினான்.

''ஹலோ... ஸ்ரீநாத் ஸ்பீக்கிங்...'' என்றவன், ரிஸீவரை மூடிக்கொண்டு ''அண்ணி... யாரோ நளினாவாம்... இந்தாருங்கள்...'' என்று கொடுத்து விட்டுச் சென்றான்.

நளினாவா... அவள் எதுக்குப் போன் செய்யணும்... வியப்போடு வாங்கினாள். மறுமுனையில் நளினா இன்னும் பேசிக் கொண்டிருந்தாள்.



''இன்னும் எத்தனை நாட்களுக்கு அங்கே டேரா... ஸ்ரீ டார்லிங்... உங்களைப் பார்க்காமல் இருக்க முடிய வில்லை... ஆமாம்... எனக்கு 'பிராமிஸ்' பண்ணித் தந்த மாதிரி மீனாவைத் தொடவும் இல்லை தானே... எப்போதும் என் நினைவுதான் உங்களுக்கு இருக்க வேண்டும்... என்ன... புரிந்ததா... ஸ்ரீ... என்ன... பேச்சே இல்லை...'' கொஞ்சும் குரலில் பேசிக் கொண்டிருந்த வளுக்கு ஏதோ சந்தேகம் வர... கேட்டாள்.

''ஸ்ரீ டார்லிங்கா... பார்க்காமல் இருக்க முடிய வில்லையா...''

நளினாவின் வார்த்தைகள் தன் மீது நெருப்பு மழையாய் கொட்டுவது போல் உடம்பெல்லாம் எரிந்தது மீனாவிற்கு.

நளினாவுக்கும்... ஸ்ரீகாந்திற்கும் இடையே... கள்ளத் தொடர்பா! அவளுக்கு குமட்டிக் கொண்டு வந்தது...

மறுமுனையில் நளினா பொறுமையிழந்து கத்தினாள்.

''ஸ்ரீ... ஸ்ரீ டார்லிங்...''

''நான் ஸ்ரீ டார்லிங் இல்லை... அவருக்கு நீ பார்த்து வைத்த மனைவி மீனா தான் நீ சொல்வதைக் கேட்டு கொண்டிருப்பது...'' வேண்டா வெறுப்பாகச் சொன் னாள் மீனா. நளினாவின் மீது இருந்த மதிப்பு குறைந்து போனது... நளினா மலைத்துப் போனாளோ என்னவோ... மறுமுனையில் சில கணங்கள் மௌனம்...

அவளை விடப் பல மடங்கு அதிர்ச்சி தனக்கும் தான்... எதிர் பார்க்காத... நினைத்தும் பார்க்க முடியாத கேவல மான விஷயம்...

கட்டிய கணவனுக்கு துரோகம் செய்யும் மனைவி... தன்னை நம்பும் முதலாளிக்கு மோசம் செய்யும் நம்பிக்கைத் துரோகி... இவர்களின் கூட்டுச் சதியில் ஏமாந்து போனது தான்... நெஞ்சில் தகிப்பு...

''மீனா... மீனாதானே... அப்போ முதலில் பேசியது யார்... ஸ்ரீகாந்த் இல்லையா... அலோ...'' நளினாவின் குரல் கேட்க...

''அது ஸ்ரீகாந்த் இல்லை... ஸ்ரீநாத்... சித்தியின் பிள்ளை... என்ன நளினா... காதல் போதையில் எல்லாக் குரலும் ஒரே மாதிரி தோன்றுகிறதோ.''

மறுபடியும் அதிர்ச்சியோ... மறுமுனையில் சத்தத்தைக் காணோம்...

ஆங்... குரலைக் கனைத்துக் கொள்கிறாளே... சுதாரித்துக் கொண்டாள் போலும்...

''பரவாயில்லை... என்றைக்காவது ஒரு நாள் உனக்குத் தெரிந்து தானே ஆகணும்... இப்போதே தெரிந்து கொள். நானும் ஸ்ரீகாந்த்தும் காதலிப்பது நிஜம்தான்.. கல்லூரி நாளில் ஆரம்பித்த காதல்... என் தலைவிதி... சக்ர பாணியை மணக்க நேரிட்டது... ஆனால் ஸ்ரீகாந்த்திற்கு என் மேல் இருக்கும் காதல் குறையவே இல்லை என்பதை தெரிந்து கொண்டேன்...'' என்றாள் அழுத்தமாய்.

''பின்னே... ஏன் ஸ்ரீகாந்தை விட்டுக் கொடுத்தே... உனக்குப் பிடித்த எதையும் அத்தனை எளிதாய் நழுவ விடமாட்டாயே... நளினா...''

குரலில் ஏளனம் தெரிய அவள் கேட்டாள்.

''உண்மைதான்... ஆனால் சக்ரபாணிக்காக விட்டுக் கொடுக்க வேண்டியிருந்தது. ஒன்று தெரியுமா... மீனா...



எல்லாம் என்னோட திட்டம் தான். எங்கள் விஷயம் வினோத்திற்கு தெரிந்துவிட்டது... அவன் வாயை மூடிக் கொள்ள ஏதாவது செய்யணுமே... அதுவும் சீக்கிரமா... ஸ்ரீகாந்திற்கு இதில் சுத்தமா இஷ்டமில்லை... நான் தான் வற்புறுத்தி இதுக்கு ஒப்புக் கொள்ள வைத்தேன்... ஸ்ரீகாந்தின் அம்மாவும் நச்சரித்ததால் வேறு வழியின்றி சம்மதிக்க வேண்டியிருந்தது...''

''ஏன்... டைவர்ஸ் வாங்கிக் கொண்டு உன் ஸ்ரீ டார்லிங்கை மணந்திருக்கலாமே...'' ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு கேட்டாள் மீனா.

''செய்யலாம் தான். ஆனால் இன்னொரு அட்டாக் வந்தால் தாங்க மாட்டாரே அவர்... அவருடைய நலனையும் பார்க்க வேண்டுமே மீனா... அவருக்கு ஏதாவது ஆகி விட்டால் அந்தக் குற்ற உணர்வுடன் சந்தோஷமாய் எங்களால் வாழ முடியுமா... சொல்...''

''ஏன் பொய் சொல்கிறாய் நளினா... உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா... சக்ரபாணி மாமாவோட சொத்து கைக்கு வராதேங்கற பயம்... இல்லே... உன் பேச்சை உன் ஸ்ரீ டார்லிங் வேணாலும் நம்பலாம்... நான் நம்பத் தயாரில்லை நளினா...''

''மீனா... என் மீது கோபமா... என் நிலையை நிச்சயம் புரிந்து கொள்வாய்னு நினைத்தேன்...'' கெஞ்சும் குரலில் நளினா சொன்னாள்.

''எனக்கு... இந்த துரோகச் செயலில் என்னையும் ஈடுபடுத்தி விட்டாயே என்கிற கோபம்... இந்த ஈனமான நாடகத்தில் நானும் இருந்து விட்டேனே என்ற எரிச்சல்... ஒரு அப்பாவி மனிதரை அநியாயமாய் ஏமாற்றும்

படியாய் ஆயிற்றே என்ற குற்ற உணர்வு... ஆத்திரம்... போதுமா...''

''ஏன்... விஷயத்தை சொல்லியிருந்தால்... ஒத்துக் கொண்டிருக்க மாட்டாயா... பசப்பாதே... உனக்கும் பணம் தேவைப்பட்டது... அது நினைவில் இருக்கட்டும்.'' நளினாவின் குரலில் ஏளனம் ஒலித்தது.

''ஒரு நல்ல மனிதரின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு... இந்த மாதிரிக் காரியம் செய்ய நிச்சயம் ஒத்துக் கொண்டிருக்க மாட்டேன்...''

''டோன்ட் பி ஸில்லி மீனா... உனக்கும் இந்த விஷயத்திற்கும் சம்பந்தம் உண்டானதே... உனது பணத் தேவையினால்தான். எங்கே... உன் மனதைத் தொட்டு சொல்.. பார்க்கலாம்... இப்போது அந்தப் பணத்தைத் தூக்கி எறிந்து விடுவேன் என்று... நாய் விற்ற காசு குரைக்காது மீனா... அது உனக்கும் தெரியும்...''

சமயம் பார்த்து குத்து விட்டாள் நளினா... எங்கே பலவீனம் என்று உணர்ந்து அங்கே தாக்குகிறாள் பாவி!

உண்மையில் அந்தப் பணத்திற்கு எப்படி நாயாய்... பேயாய் அலைந்தோம்... வட்டியே இல்லாமல் வந்த பணம்...

இத்தனை குளறுபடி இருக்கிறது என்று தெரியாமல் ஒப்புக் கொண்டேனே...

இரு வருடத்திற்கு ஒப்பந்தம்! அதற்குள் நினைத்தது நிறைவேறி விடும் என்ற நம்பிக்கை!

ஆனால் நினைக்காதது எல்லாம் நடந்து விட்டதே...

ஒப்பந்த சரத்துக்களையெல்லாம் மீறி இந்தப் பாழும் மனம் ஸ்ரீகாந்திடம் தாவிவிட்டதே...



சே! என்னவெல்லாம் கோட்டைக் கட்டினேன்...

ஆகாசக் கோட்டை! அவனது மனதை வென்று... அவனது காதலைப் பெற்று... அவனுடன் சந்தோஷமாய் வாழவேண்டும் என்று... ஆனால்... இங்கே அஸ்திவாரமே ஆடிப் போய் விட்டதே.

ஸ்ரீகாந்தின் இதயம் மீனாய்... மோகத் தூண்டிலில் சிக்கிக்கிடப்பதை அறியாமல் என்னென்னவோ கனவுகள்... ஏதேதோ கற்பனைகள்... நிராசையில் நெஞ்சு வெந்து போனது.

''ஏய்... மீனா... என்ன பதில் இல்லை... ஓ! கை நீட்டி பணம் வாங்கி விட்டோமே என்ற தவிப்பாக்கும். எல்லாம் நல்லபடியாக முடியட்டும்... உன் வழியில் போவாயாம்...''

''டக்'' என்று ரிஸீவரை வைத்துவிட்டுத் திரும் பினவள் திகைத்தாள்.

ஸ்ரீகாந்த் அவளையே பார்த்துக் கொண்டு நின்றிருந் தான்.

''யார் மீனா... கோபியா... இந்த ஃபோன் நம்பர் அவனுக்கு எப்படித் தெரியும்...'' என்று கேட்டான்.

''பேசியது கோபி இல்லை... நளினா... இந்த போன் நம்பர் அவளுக்கு எப்படிக் கிடைத்தது...'' இப்போது அவள் கேட்க...

''ஏன்.. நான்தான் கொடுத்தேன்.. ஏதாவது அவசரத் தேவைக்கு இருக்கட்டும் என்று...''

அவசரத் தேவையா... எது... ஓ! சக்ரபாணிக்கு மாரடைப்பு ஆனால்...

சரிதான்.. அண்ணன் எப்போது இறப்பான்... அவனது இடத்தைப் பிடிப்போம் என்று காத்திருக்கிறாரோ...

சே! இருவருமாய் சேர்ந்து ஆடிய நாடகம்... என்ன நைச்சியப் பேச்சு... இவருக்குத் திருமணத்தில் விருப்பம் கிடையாதாம்... அம்மாவிற்காகத் திருமணமாம்!

ஊர்வாயை மூட இப்படி ஒரு நாடகம்... அதற்கு பலி கிடா... இந்த மீனா... பணத்தேவை என்ற பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு... பலி பீடத்தில் நிறுத்தி விட்டார்கள். இரை போடும் மனிதருக்கே இரையாகும் வெள்ளாடாய் ஆனதுதான் கொடுமை.

நளினாவின் சாணக்கிய புத்தியை மெச்சத்தான் வேண்டும். ஸ்ரீகாந்தை வேறொருத்தியிடம் தர மனமில்லை... ஏழை மீனா விசுவாசியாயிற்றே... அவளிடம் விட்டு வைத்தால் எந்தப் பயமும் இல்லையே... தரம் குறையாமல் மீண்டும் அழைத்துக் கொள்ளலாம்...

சரியான சுயநலப் பிண்டம்... அவளது உண்மையான சொரூபத்தை ஸ்ரீகாந்த் இன்னும் புரிந்து கொள்ள வில்லையே... ஒருவேளை... நளினாவின் அழகில் மயங்கிக் கிடந்த மனிதருக்கு அவளிடம் இருந்த... இருக்கும் குறைகள் ஏதும் கண்ணில் படவில்லையா...

''என்ன... மீனா... நான் கேட்டுக் கொண்டு இருக் கிறேன். எங்கேயோ வெறித்துக் கொண்டு நிற்கிறாய்...'' பொறுமையிழந்தவனாய் கேட்டான் ஸ்ரீகாந்த்.

''ம்ம்... என்ன..?''

''நளினா என்ன சொன்னாள்... ஏதாவது அவசரச் செய்தியா என்ன...''



'இன்னும் நீங்கள் எதிர்பார்க்கும் செய்தி வரவில்லை. பாவம்... காத்திருங்கள்...' மனதுக்குள் சொல்லிக் கொண்ட மீனா...

அவனிடம் ''இன்னும் எத்தனை நாட்கள் இருப்பீர்கள் என்று கேட்கத்தான்...'' என்று சொன்னாள்.

''ஓ!'' அவனது குரலில் தெரிந்தது ஏமாற்றமா... நிராசையா.. ஏதோ ஒன்று... அவளுக்கு எரிச்சலாக வந்தது.

அதற்குப் பின் அவளுக்கு எதுவும் பிடிக்கவில்லை... மற்றவர்களை சந்திக்கும் மனநிலையில் இல்லை...

தலைவலி என்ற காரணம் சொல்லி விட்டு அறைக்குள் சென்று படுத்தாள்.

''அடேய்... உன் மனைவிக்கு தலைவலின்னா... நீ போய் மருந்து தேய்த்துவிட வேண்டாமா... இங்கே உட்கார்ந்திருந்தா எப்படி... எழுந்து போ...'' என்று விரட்டினார் சேது.

சிரிப்புடன் எழுந்து சென்றான் ஸ்ரீகாந்த்.

கண்களை மூடிக் கொண்டு படுத்திருக்கும் மனைவி யின் அருகே வந்து அமர்ந்தான் அவன்.

''தலைவலி மாத்திரை தரட்டுமா மீனா... இல்லை... சூடா காபி கொண்டு வருகிறேன்... குடிக்கிறாயா...'' என்று கேட்டான்.

''எதுவும் வேண்டாம்...'' என்று மறுத்தாள் அவள்.

''போகட்டும்.. மருந்தை தடவினால் தலைவலி ஓடிடும்... அமிர்தாஞ்சன் தடவுகிறேன்...''

உள்ளுக்குள் கொதித்தது... அதை வெளிக்காட்டாது அமைதியாய் அவனைப் பார்த்தாள் மீனா.

இதுவும் பாசாங்கோ...

அவளது கண்கள் சிவந்திருப்பது கண்டதும் பதைப்புடன் அவளது நெற்றியில் கை வைத்து பார்த்தான்.

"ஜுரம் ஏதும் இல்லை..."

அவனது கரிசனத்தைப் பார்த்துவிட்டு குழம்பினாள் மீனா.

'உண்மையா... இல்லை... இதுவும் ஒருவகை நடிப்பா...' தெரிந்துகொள்ள முடியாமல் விழித்தாள்.

அவன் நீட்டிய தலைவலி மாத்திரையையும்... நீரையும் வாங்கிக் கொண்டு... மாத்திரையை விழுங்கி வைத்தாள்.

நளினாவின் போன் மட்டும் வராமல் இருந்திருந்தால் இவர் காட்டும் அன்பை உண்மை என்றே நம்பியிருப்பேன். நளினாவின் பேச்சு விஷ வித்தாய் ஊன்றி... நஞ்சாகப் பரவி நம்பிக்கைத் தளிரை சாகடித்து விட்டதே...

எல்லாமே பொய்யாகி விட்டதே... வேதனை தீயாய் சுட... உறங்க முடியாமல் தவித்தாள்.

பொய்யாகச் சொன்ன காரணம் உண்மையாகிப் போனது... தலை விண் விண் என்று வலித்தது... தலை மட்டுமா... இதயமும் தான்... ஒருதலைக் காதலை சுமந்த இதயத்திலும் வலிதான்...

அந்த வலியின் காரணமாக சுரந்த கண்ணீர் சூடாய் கன்னத்தில் இறங்கியது...

தலையணையில் முகம் புதைத்து வெடித்து வர இருந்த விம்மலை அடக்கினாள் மீனா...



மீண்டும்... மீண்டும்... நளினாவின் வார்த்தைகள்.. காதில் மறு ஒலிபரப்பு ஆக... நளினாவும் தன் கணவனும் சேர்ந்து இயக்கிய நாடகத்தில் தான் கோமாளியாகிப் போனோமே என்று வெம்பி வெதும்பிப் போனாள்...

எத்தனை நேரம் அப்படிக் கிடந்தாளோ... தெரியாது...

கணவனின் காலடி ஓசை கேட்டதும் கண்களை இறுக மூடிக் கொண்டாள்... தான் உறங்காமல் இன்னும் விழித்துக் கொண்டிருப்பது அவனுக்கு தெரியக்கூடாது என்று நினைத்தாள்.

விளக்கு அணைக்கப்பட்டது... விளக்கு மட்டுமா... அவளும் தான். அணைக்கப்பட்டாள்... கணவனின் கரங்களால்!

'மீனா' என்று குழைந்து அழைத்த ஸ்ரீகாந்த் அவளது தோள் வளைவில் முகம் புதைத்தான்...

அதை எதிர்பார்க்காத மீனா.. உடல் விறைத்துப் போனாள்...

## 15

ஸ்ரீகாந்த்தால் நம்ப முடியவில்லை...

தனக்குள் எப்படி இந்த மாற்றம் வந்தது... மீனாவுக்கு தாலிக் கட்டியபோது தரிசு நிலமாய் இருகிக் கிடந்த மனம் அதெப்படி நீர் வயலாய் நெகிழ்ந்து போனது...

தன்னையும் அறியாமல் எப்படி மீனா இதயத்தினுள் புகுந்தாள்... அது எப்போது!

தேனிலவில்... ஓட்டலில் குழந்தையாய் சுருண்டு கிடந்தவளை ஏந்திக் கொண்டு போனபோதா... இல்லை... ஆனால் ஒன்று மட்டும் சர்வ நிச்சயமாய் புரிந்தது...

முன்போல்... நளினாவின் நினைவில் இதயம் துடிப்பதில்லை. உடம்பில் ஜுரவேகம் இல்லை... நரம்பு நாடிகளில் பின்னோட்டம் இல்லை...

ஏன்... நளினாவின் நினைவே குறைந்து போனதே... பதிலாய்... மீனாவின் முகம் உள்ளத்தில் ஆழப் பதிந்து விட்டது உண்மை...

மீனா!... பிரமிப்புடன் ஒவ்வொன்றையும் பார்த்து ரசிக்கும் மீனா... பச்சைக் குழந்தையாய் பஞ்சு மெத்தையில் உறங்கிய மீனா... சின்னப் பொருளையும் ஆர்வத்துடன் ஏற்றுக் கொண்டு சிரிக்கும் மீனா... தன் தாய்க்கு மகளைப் போல சேவை செய்யும் மீனா... புவனாவிற்கு இணையாய் கொட்டமடிக்கும் மீனா... அவனது பாராட்டிற்காக தவமிருக்கும் மீனா... நான் அழகா என்று ஏக்கத்துடன் பார்க்கும் மீனா... எல்லோரின் பரிகாசத்தைக் கேட்டு விட்டு முகம் சிவக்கும் மீனா.. மீனா... மீனா மட்டுமே அவனது சிந்தையை ஆட்டிப் படைக்க ஆரம்பித்தாள்... அதுதான் விந்தை!

ஸ்ரீகாந்தின் இதயவானத்தில் உதய நிலவாய் ஜொலித்த நளினா... தேய்பிறையாய் தேய்ந்து காணாமல் போன அதிசயமும்... அந்த இடத்தில் மீனாவின்



மதிமுகமும் பூர்ண சந்திரனாய் பொலிவுடன் பொருந்தி விட்ட அற்புதமும் கேளாமலே நடந்து விட்ட விசித்திர செயல்... யாரையும் கேட்டுக் கொண்டு வருவதில்லை காதல்.. தானாய் கனிவதுதான் காதல்...

அவனுக்கு ஒன்று மட்டும் புரியவில்லை...

மீனாவின் மீது இப்போது ஏற்பட்டிருப்பது ஈர்ப்பா.. அல்லது காதலா... ஏன்... ஆரம்பத்தில் வரும் ஈர்ப்பு.. காதலாகவும் மாறியிருக்கலாம்...

இதுநாள் வரை... நளினாவின் மீது இருந்தது காதல் என்று நினைத்தது மடத்தனம்... அது காதல் அல்ல... மோகம்!

அவளது அழகை ஆள நினைத்த மோகம்... அவளது மனதைப் பார்க்க மறுத்த மோகம்...

இப்போது மீனாவிடம் வந்ததுதான் உண்மையான காதல்.. அவளது மேனியழகைப் பார்த்து வரவில்லை... அவளின் உள் அழகை... அக அழகை ரசித்து வந்த காதல்!

அதுநாள் வரை அவனது கண்களை மூடிக் கிடந்த திரை பட்டென்று அறுந்தது...

எல்லாம் நன்மைக்கே என்பது எத்தனை சத்தியமான வாக்கு...

நளினாவை மணக்கத் துடியாக துடித்தோமே...

நளினாவைத் தன் தாய் முழு மனதாய் விரும்பி இருப்பாரா இல்லை மருமகளாய் ஏற்றுக் கொண் டிருப்பாரா... சந்தேகம்தான்...

இங்கேயும் மீனாவுக்கு எத்தனை கௌரவமும்... மதிப்பும் எல்லோரிடமும் நல்ல பெயரும் பாராட்டை

யும் பெற்று விட்டாளே... நளினாவால் அது சாத்தியமாகி யிருக்குமா. எளிமையான மீனாவை இருகரம் நீட்டி வரவேற்றவர்கள்.. தனுக்கும் மினுக்குமாயிருக்கும் நளினாவை நிச்சயம் ஒத்துக்கொண்டிருக்க மாட்டார்கள் தான்... ஆக நடந்ததெல்லாம் நன்மைக்கே...

இனி... மீனாதான் என் உயிர்.. என் உயிருக்குயிரான மனைவி... என் உயிருடன் கலந்த உயிர்... என் காதலை... என் இதயத்தில் ததும்பும் நேசத்தை அவளுக்குக் காட்ட வேண்டும்...

நீ வெறும் ஒப்பந்த மனைவி இல்லை... இனி உண்மையான மனைவி...

நமக்குள் இருந்த அக்ரிமென்ட் எல்லாம் காலாவதி யாகி விட்டது... இனி நான் வேறு நீ வேறு கிடையாது. நானும்... நீயும் ஒன்று... என்பதை உணர்த்த வேண்டும் என்று துடித்தான்.

அதை செயல்படுத்தவும் முயன்றான். அவள் அருகே சென்று... அவளை அணைத்துக் கொண்டான்... அவளது தோளில் முகம் புதைத்துக் கொண்டு மீனா என்று முனகினான்...

மீனாவும் அதை ஏற்றுக் கொள்வாள் என்று நினைத்தவனுக்கு பெரும் அதிர்ச்சி...

தன்னைப் பிணைத்த கரங்களை விலக்கினவள் எழுந்து அமர்ந்து கொண்டாள்.

கோபத்துடன் அவனைப் பார்த்துக் கேட்டாள்.

"ஏன்... நளினாவின் நினைப்பு வந்து விட்டதாக்கும்... அவளது நினைவில் என்னை அணைக்கிறீர்களா..." ஸ்ரீகாந்த் அதிர்ச்சியில் உறைந்தான்.



பின்பு சுதாரித்துக் கொண்டு கேட்டான்... "உனக்கு.. எப்படி.... நீ என்ன... சொல்கிறாய்..." வார்த்தைகள் கோர்வையாய் வர மறுத்தது...

"உங்களது ரகசியமெல்லாம் வெட்ட வெளிச்சத்திற்கு வந்து விட்டது என்று சொல்கிறேன். எது தெரியக்கூடாது என்று நீங்க இரண்டு பேரும் மூடி மறைத்து வைத்தீர்களோ அது அம்பலமாகி விட்டது என்கிறேன்... போதுமா..."

உண்மையை மென்று மிழுங்க சிரமப்பட்டான் அவன்.

"நீ நினைக்கிற மாதிரி எல்லாம் இல்லை மீனா..." என்று ஆரம்பித்தவனை இடைமறித்தாள் மீனா...

"போதும்... இன்னும் ஏன் பூசி மெழுகுகிறீர்கள்... நளினா எல்லாவற்றையும் சொல்லி விட்டாள். வினோத்திற்கு உண்மை தெரிந்து விட்டது என்பதால் இந்த அவசரத் திருமணம்... இல்லையா... அதுக்கு அத்தையின் உடல்நிலை ஒரு சாக்கு... நல்ல நாடகம்... யாருக்கு இந்த எண்ணம் வந்ததோ அவர்களுக்கு 'அவார்டு'தான் தரணும்..."

கோபத்தில் நுனி மூக்கு சிவந்து விட்டது அவளுக்கு...

"நோ... மீனா... இப்ப நான் சொல்வது..."

"ப்ளீஸ்... இனி எந்த ஜாலப் பேச்சும் வேண்டாம்... நீங்க இப்படிப்பட்டவர் என்று எனக்குத் தெரியாமல் போனதே என்றுதான் என் வருத்தம்... எப்படி உங்களால் சக்ரபாணி மாமாவை நிமிர்ந்து பார்க்க முடிகிறது. அவரைப் பார்க்கும்போது உங்கள் மனசாட்சி குத்த

வில்லையா... அவருக்கு துரோகம் செய்கிறோமே என்று உங்களுக்கு உறுத்தவில்லையா... உங்களால் எப்படி அமைதியாய் நடிக்க முடிந்தது. உயர்ந்த பதவியோடு... அவரது மனைவியையும் அடையலாமே என்ற ஆசை... அதுக்காக எதுவும் செய்ய தயார்... ம்ம்...?'' ஒவ்வொரு வார்த்தையும் அமிலத் துளிகளாய் தெறித்தது.

''நிறுத்து மீனா... என்னோட படிப்புக்கு வேறு உயர்ந்த பதவி கூட கிடைக்கும்... தெரிந்து கொள்...''

''போக வேண்டியது தானே... ஓ! நளினா கிடைக்க மாட்டாள்.. இல்லையா.. சக்ரபாணி மாமா இறந்தால் அவரது இருக்கையும் கிடைக்கும்... அத்தோடு... சே! சொல்லவும் கூசுகிறது...'' அவளது வார்த்தைகள் அவனது நெஞ்சை வாளாய் அறுத்தன...

என்றைக்காவது ஒரு நாள் மீனாவிற்கு தெரியப் போகும் விஷயம்தான்... அப்படியே தெரிந்தாலும் என்ன... பணத்திற்காக நடிக்க வந்தவள் தானே... என்று அலட்சியமாய் நினைத்தவன்தான்.

ஆனால்... அது அப்போது... நளினாவின் பெயரை நாமபாராயணம் செய்து கொண்டிருந்த வேளையில்...

இப்போது... மீனா சத்தமில்லாமல் இதயத்தில் நுழைந்து தாளிட்டுக் கொண்ட பின்பு... செய்தது எல்லாமே அசிங்கமாகப் பட்டது. நளினாவின் திட்டம் படுமட்டமாக தெரிந்தது. அதற்கு உடன்பட்டதால்... மீனாவின் மதிப்பில் தான் தாழ்ந்து போய்... தரை மட்டமாய் போனதை நினைத்துக் குன்றிப் போனான்.

உண்மைதானே... மீனாவின் கண்ணோட்டத்தில்.. நளினாவின் சதித்திட்டம் மகாபாரத சகுனியின்



திட்டத்தை விட படு மோசமாகத் தெரியத்தான் செய்யும்... சூதாட்டம் என்று தெரிந்தும்... ஆடித் தோற்றவன் தருமன்... சகுனியின் தந்திர புத்தியும் தெரிந்த விஷயம்தான். எல்லாம் தெரிந்தே களம் இறங்கினான் மூத்தப் பாண்டவன்...

ஆனால் இங்கே... அப்படியில்லையே... ஒரு பாவமும் அறியாத சக்ரபாணியை நம்பிக்கை துரோகம் செய்தது மட்டுமில்லாமல் முதுகிலும் குத்தி... எங்கோ கிடந்த ஏமாளிப் பெண்ணான மீனாவை இதில் இழுத்து விட்டு... அவளையும் ஏமாற்றியது எந்த விதத்தில் நியாயம்...

நளினா மீது படு கோபம் வந்தது... அதைவிட தலையாட்டி பொம்மையாகிப் போன தன் மீதும் எரிச்சல் வந்தது.

இத்தனை தவறுகளிலும் ஒரு நன்மை... மீனாவை சந்தித்ததுதான்... அவளை மனைவியாய் அடைந்தது தான். அதற்கு நளினாவிற்கு நன்றி சொல்ல வேண்டும்... என் மீனாவை சந்தித்ததே அவளால்தானே...

இதையெல்லாம் மீனாவிடம் சொல்ல முடியுமா... சொன்னாலும் நம்புவாளா... வேளைக்கு ஒரு வேடம் என்று ஏளனம் செய்ய மாட்டாளா...

ஊகூம். கூடாது. இப்போது எதுவும் சொல்லாமல் இருப்பதே நல்லது... நல்ல நேரம் வரும்போது... என் காதலைச் சொல்ல வேண்டும்.

அதுவரையில் அவள் என்னை நயவஞ்சகன்... ஏமாற்றுக்காரன் என்று எண்ணிக் கொள்ளட்டும். அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டியது தான்...

உப்பு தின்றவன் நீர் குடிக்கத்தான் வேண்டும்... வேறு வழியில்லை...

மணமானவள் என்று அறிந்த பின்பும்... நளினாவின் மோகத்தில் விழுந்து கிடந்ததற்கு இதுவும் வேண்டும்.. இன்னமும் படத்தான் வேண்டும்..

"ஊருக்குப் போனதும் மற்ற விஷயங்களைப் பற்றி முடிவு எடுக்க வேண்டும். இனியும் இப்படி சேர்ந்து இருப்பதில் அர்த்தமே இல்லை என்று நினைக்கிறேன்..."

அவனது முகத்தைப் பார்க்காமல் எங்கேயோ வெறித்தவாறு சொன்னாள் அவள்.

சேர்ந்து வாழ்வதில் அர்த்தமில்லையா... அப்படி யென்றால்... பிரியப் போகிறாளா... கடவுளே...

என் உயிரைப் பிரிந்து எப்படி வாழ்வது...

மீனா இல்லாத வாழ்க்கையை நினைத்தும் பார்க்க முடியவில்லையே...

இவளை நிறுத்தி வைக்க ஏதாவது வழி கிடைக்காதா... யோசித்தான்... எதைச் சொல்லித் தடுக்க முடியும்... அப்போதுதான் 'பளிச்'சிட்டது...

யெஸ்... அவளை தடுத்து நிறுத்த ஒரே வழி... இதுதான்.

"இதுக்கு ஒத்துக்கொள்ள மாட்டேன்... ஒப்பந்தப் படி இரண்டு வருஷம் எனக்கு நீ மனைவியாக இருக்க வேண்டும்: இன்னும் ஒரு வருஷம் கூட ஆகவில்லை. அதற்குள் எப்படி நீ விலக முடியும்... கொடுத்த பணத்திற்காவது நீ இருக்கத்தான் வேண்டும். நடுவில் கழண்டு கொள்ளும் சமாச்சாரம் இல்லை. இது... இது



வாழ்க்கைப் பிரச்சனை... நீ ஒப்புக் கொண்டபடி எனக்கு மனைவியாக இருந்துதான் ஆக வேண்டும். இல்லா விட்டால் கொடுத்த பணத்தில் பாதியைத் திருப்பித் தந்துவிடு..." மிரட்டலாக சொன்னான் ஸ்ரீகாந்த்... அதைக் கேட்டதும் மிரண்டு போய் பார்த்தாள் அவள். கண்களில் மிரட்சி தெரிய... உதடுகள் இயலாமையில் நடுங்க... இக்கட்டில் சிக்கிக் கொண்டோமே என்று கைகள் பிசைய... அவள் நின்றிருந்த கோலம் அவனை என்னவோ செய்தது.

ஓடிச் சென்று அவளை இழுத்து அணைத்துக் கொண்டு அவளது மிரட்சியை... இயலாமையை.. தவிப்பைப் போக்க வேண்டும் போல அவனுக்குள் துடித்தது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான்..

"இதோ பார் மீனா... எனக்கும் உன்னை கட்டி வைக்க விருப்பமில்லை... நமக்குள் மனவேறுபாடு இருந்தாலும் ஊர் உலகுக்காகவாவது கொஞ்ச நாள் சேர்ந்து இருக்க வேண்டிய கட்டாயம்... மேலும்.. என் அம்மாவிற்காக வாவது பார்க்க வேண்டும். அவர் மனதை நோகடிக்க எனக்கு விருப்பமில்லை... அவருக்காகத்தான் இந்த அவசரத் திருமணம்... அதை நீ நம்பத்தான் வேண்டும். நீ என்னை விட்டுப் போனால்... அது அவரது உயிருக்கே ஆபத்தாகி விடும்... அவரது சாவிற்கு நாம்... நம்முடைய செயல் காரணமாகி விடக் கூடாது... அது வரைக்கும் பொறுமையாக இரு... ப்ளீஸ்... உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்..." என்று வேண்டிக் கொண் டான் ஸ்ரீகாந்த்.

பற்களால் உதட்டைக் கடித்தவாறு நின்றிருந்தாள் மீனா. 'ஸ்ரீகாந்த் செய்த தப்பிற்கு சாரதா அத்தை என்ன

பாவம் செய்தார்... என்னை மகளாகவே நினைத்து அன்பைப் பொழியும் அவரை நிர்கதியாக விட்டுவிட்டுச் செல்வது சரியா... பாவம்... நோயுடன் போராடும் அவர் எத்தனை காலம் வாழ்ந்து விடப் போகிறார்... ஸ்ரீகாந்த் சொன்னது போல... வாங்கிய பணத்தைத் திருப்பித் தர வக்கில்லாத எனக்கு... அதற்குப் பிரதி உபகாரமாய் அவருக்கு சேவை செய்யலாமே... அப்படியாவது என் கடன் கழியட்டும்...'

அந்த எண்ணத்தில் ஸ்ரீகாந்திடம் சொன்னாள்.

''சரி... அத்தைக்காக நான் இருக்கிறேன். அத்தைக்காக மட்டுமே... ஒருவேளை... ஒரு வேளை அவருக்கு ஏதாவது. ஊகூம்... வேண்டாம்... எதுவும் ஆக வேண்டாம். ஆனால் தெய்வ சித்தத்தால் ஏதாவது ஆனால் அதற்கப்புறம் ஒரு வினாடியும் தங்க மாட்டேன். அதுவரைக்கும் தான் நம் ஒப்பந்தம் செல்லும்... சம்மதமா...''

இதைத்தான் எதிர்பார்த்தான் ஸ்ரீகாந்த்... அப்படியாவது மீனா தன்னுடன் இருப்பாள் என்ற எதிர்பார்ப்பு தான். அதில் வெற்றியும் பெற்றான்...

சந்தோஷத்தில் திக்கு முக்காடினாலும் அதை வெளிக் காட்டாமல் கொஞ்சம் இறுகியே இருந்தான்... அதுதான் இப்போதைக்கு நல்லது...

மறுநாள் அனைவரும் ஊருக்குக் கிளம்பினார்கள். சேது மாதவனும் கௌரியும் பிரியா விடை தந்து அனுப்பினார்கள். புவனாவிற்கு அழுகை வராத குறை... 'இன்னும் கொஞ்ச நாள் தங்கக் கூடாதா அண்ணா' என்று கெஞ்சினாள்...



மீனாவிற்கு அந்த அன்பு உள்ளங்களைப் பிரிகிறோமே என்ற துக்கம்.. கண்களைக் கரித்தது.

''அடுத்த தடவை வருகிறபோது ஒரு மாதமாவது தங்க வேண்டும் மீனா... இப்படி காலில் கஞ்சியை ஊற்றிக் கொண்டு கிளம்பக் கூடாது... என்ன...'' என்று கௌரி சொன்னதும்... சிரித்தாள் மீனா.

அடுத்த முறையா... இதுதான் கடைசி... இனி ஸ்ரீகாந்துடன் வாழ்வதே கேள்விக் குறி என்ற ஆன பின்பு... இங்கு நான் வ்ருவது ஏது... மன்னித்துக் கொள்ளுங்கள் சித்தி... என்று நினைத்துக் கொண்டாள்.

அந்த 'சித்தி' என்ற உறவுகூட இல்லாமல் போகும்... சொந்தம் அறுந்து போகும்... எண்ணும்போது அழுகை பொங்கி வந்தது.

இத்தனை உறவுகளை வாரிக் கொடுத்த அந்த இறைவனுக்கு ஏன் சீக்கிரமே சலிப்பு வந்து விட்டது... உடனே பறித்துக் கொள்ளப் பார்க்கிறானோ அதென்ன விளையாட்டோ... கௌரி சித்தி குனிந்து அவளது கன்னத்தை செல்லமாய் தட்டினாள்...

''மீனா... அடுத்த தடவை உன்னைப் பார்க்கிறப்போ நல்ல செய்தியோடு பார்க்கணும்.. என்ன... புரிந்ததா...'' என்றாள் பரிகாசத்துடன்.

வெட்கத்திற்கு பதில் வேதனைதான் வந்தது... 'குபுக்' என்று கண்ணீர் பொங்க... தலை குனிந்து கொண்டாள்.

நடக்காத ஒரு விஷயத்திற்காக வாழ்த்துகிறார்களே... ஸ்ரீகாந்த்துடன் தான் நடத்துவது வரட்டு தாம்பத்தியம்

என்று தெரியாமல் பாவம்... ஏதேதோ ஆசைகளைத் தெளிக்கிறார்கள். கேட்கவும் இம்சையாக இருக்கிறது...

கார் வேகம் பிடித்தது... திரும்பிப் பார்த்தாள்... அந்த பாச உறவுகள் கையசைத்தவாறே நின்றிருந்தனர் ..

நெஞ்சு கனத்துப் போனது... இனி இவர்களைப் பார்ப்போமா... இதுதான் கடைசியா...

அவர்கள் புள்ளிகளாக மாறி கண்ணில் இருந்து மறையும் வரை பார்த்தாள்.

கோபிக்காக காத்திருந்தாள் மீனா... அவசரமாய் அவளை அழைத்திருந்தான்.. ஏதோ பேச வேண்டுமாம்.

மீனாவைப் பார்த்ததும் அவனது முகத்தில் தெரிந்த மலர்ச்சியைக் கண்டதும் பாசத்தில் உள்ளம் விம்மியது...

நளினா - ஸ்ரீகாந்த்தின் துரோகத்தினால் துவண்டு போயிருந்தவளுக்கு... கோபியின் சந்திப்பு சஞ்சீவினி மாத்திரையாய் இழந்த உற்சாகத்தை மீட்டுத் தந்தது...

எந்த அளவு கோபியை 'மிஸ்' பண்ணியிருக்கிறோம் என்பதை அப்போதுதான் உணர்ந்தாள்... மறுபடியும் அந்த பழைய சூழல் வராதா என்ற ஏக்கம் மனசுக்குள்... சிறகுகளால் அரவணைத்த அத்தை... வேடிக்கையும் விளையாட்டுமாய் பேசி தன்னை மகிழ வைக்கும் கோபி... ஆனந்தமாய் கழிந்த நாட்கள்... கடவுளே... அந்த நாளும் வந்திடாதோ... பெருமூச்சு வந்தது.

''எப்போ ஊரிலிருந்து வந்தே மீனா...'' என்று கேட்டான் கோபி.

''நேற்றுதான் கோபி... சரி... நீ எப்படி இருக்கே...'' என்று கேட்டாள் பதிலுக்கு.



''நீயே சொல்லு மீனா... எப்படி இருக்கேன்னு...'' சிரிப்புடன் கேட்டான் அவன்.

''ம்ம்... கொஞ்சம் உடம்பு பிடித்திருக்கிறது.. ஓட்டல் சாப்பாட்டினாலா...''

''இல்லை... வீட்டு சாப்பாடுதான்.''

''பரவாயில்லையே... சமைக்கத் தெரிந்து விட்டதா... நானும் இல்லாததும் நல்லதா போய் விட்டதுன்னு சொல்லு...''

''நான் கிச்சன் பக்கம் போறதே இல்லை...''

''பின்னே... மாயா பஜார் படத்தில் வர்ற மாதிரி தட்டு தட்டா சாப்பாடு. உன்கிட்டே தவழ்ந்து வருகிறதாக்கும்.''

''நம்ம தீபா இல்லே...''

''நம்ம... தீபாவா...'' வியப்புடன் கேட்டாள் அவள்.

''வந்து... நம்ம வீட்டில் வேலை பார்த்த தீபான்னு சொல்ல வந்தேன்... அவதான் சமைத்து எனக்குக் கொடுத்தனுப்பறா மீனா... அதுதான்... அதாவது... அந்த விஷயமாத்தான் உன் கிட்ட பேசலாம்னு...''

''இதிலே என்கிட்டே பேசறதுக்கு என்ன இருக்கு... உனக்குப் பிடிச்சிருந்தா பேஷா சாப்பிட வேண்டியது தானே.. உடம்புக்கும் நல்லது.. வயித்துவலி.. வாயுத் தொல்லை எதுவும் வராது...''

''அய்யோ... நான் சொல்ல வந்தது அது இல்லே... அவளும் என்கிட்டே பிரியமா இருக்கிறாள். அவளை... நான்... கல்யாணம் பண்ணிக்கலாம்னு...''

''ஆ... அப்படி வா வழிக்கு... எனக்கு அப்பவே சந்தேகம் தான்... ஏதோ இருக்குன்னு நினைத்தது சரியாகி விட்டது...''

அவன் முகம் மலர்ந்து போனது...

''அப்போ... உனக்கு இதில் சம்மதமா மீனா...'' ஆவலாய்க் கேட்க...

''சரி... சம்மதம் இல்லைன்னா... விட்டு விடுவா யாக்கும்...'' என்றாள் விளையாட்டாய்...

அவனது முகத்தில் தெரிந்த வாட்டத்தைப் பார்த்ததும் சிரித்து விட்டு ''அசடு... சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். எனக்கும் தீபாவைப் பிடித்து விட்டது. போதுமா, அத்தை பேச்சுவாக்கில் ஒரு தடவை சொன்னது கூட நினைவுக்கு வருகிறது கோபி... 'தீபா மாதிரி ஒரு பொறுப்பான பொண்ணு நம்ம கோபிக்கு மனைவியா அமைஞ்சா... நல்லா பார்த்துப்பா...' என்று ஒரு வேளை அத்தை வாக்கு பலித்து விட்டதோ என்னவோ...''

''இருக்கலாம் மீனா.. அம்மாதான் தெய்வமா இருந்து இதை நடத்துகிறாள்னு நினைக்கிறேன்...''

''ஆனால் ஒரு விஷயம் கோபி... அத்தை இறந்து சில மாதங்களே ஆகியிருப்பதால்... கல்யாணத்துக்கு அவசரப் படாமல் இருக்க வேண்டும்... பெரியவர்களைக் கேட்டு விட்டு முகூர்த்தம் நிச்சயிக்க வேண்டும்... அது வரையில் நீங்கள் காத்திருக்க வேண்டும் கோபி.. முடியுமா..''

''என்ன பேச்சு இது மீனா... நாங்க இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் உயிரா காதலிக்கிறோம் மீனா... அதே சமயம் கல்யாணத்துக்கு அலையவும் இல்லை... நேரம் வரும் வரை காத்திருப்போம்... அவசரம் ஒன்றும் இல்லை...''



''குட்... அவசரப்பட்டு செய்யும் திருமணம் அவசரமாகவே முறிந்துவிடும் கோபி.. அதான் சொல்கிறேன்...'' குரல் கரகரக்க சொன்னாள் மீனா.

''ஆங்.. கேட்க மறந்து விட்டேனே.. நீ எப்படி இருக்கே மீனா.. சந்தோஷமா இருக்கே தானே... பார்த்தாலே தெரிகிறது... உன்கிட்டே அழகான மாற்றம்... கல்யாண வாழ்க்கை உனக்கு ரொம்பவும் பொருந்தி விட்டது மீனா... பார்... நிறம் கூடி... லேசாய் சதை போட்டு... அலங்காரமும் பொருத்தமாய்... பணக்கார களை உனக்கு வந்து விட்டது.

என் பழைய மீனாவைக் காணோம்... என் தங்கை மீனா... அழகான தங்க மீனா மாறினது எப்படின்னு வியப்பா இருக்கு மீனா...''

''கவலை வேண்டாம் கோபி. இந்த தங்க மீன்... மீண்டும் உன் தங்கை மீனாவா வந்து விடுவாள்... அப்புறம் பழைய மீனாதான் நான்...'' கண்களைத் தாழ்த்திக் கொண்டு சொன்னாள் அவள்...

திகைத்தான் கோபி...

''என்ன சொல்றே மீனா... திரும்பி வருவியா... அப்ப இந்தக் கல்யாணம்...''

''நிரந்தரமானது இல்லை... உன்கிட்டே ஒரு உண்மையை மறைத்து விட்டேன் கோபி... என்னை மன்னித்து விடு... உனக்குத் தெரிந்தால் இந்தக் கல்யாணத்திற்கு ஒத்துக் கொள்ள மாட்டேன்னுதான் சொல்லவில்லை... ஒரு நிபந்தனை பேரில்தான் இந்த கல்யாணம் நடந்தது... அதாவது... பெயருக்கு மனைவியா இருக்க

வேண்டும்... அதுவும் அவரது தாய் இருக்கும் வரை தான். அது எத்தனை நாள்... எத்தனை வருடம்னு சொல்ல முடியாது. ஏன்னா... அம்மா கேட்டுக் கொண்டதற்காக இந்த திருமணமாம்... இந்த நிபந்தனைக்கு ஒத்துக் கொண்டுதான் கழுத்தை நீட்டினேன் கோபி...''

தலையில் கை வைத்துக் கொண்டான் கோபி...

''நீ தப்பு செய்துட்டே மீனா... என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லியிருந்தா... நான் வேண்டவே வேண்டாம் என்று சொல்லி இருப்பேன்... ஏற்கனவே என்னால்தான் இந்த அவசரக் கல்யாணம் என்று குமைந்து கொண்டு இருந்தேன்... போகட்டும்.. நீ சந்தோஷமாக இருக்கிறாயே என்று நிம்மதி வந்தது. ஆனால் இப்போ... ப்ச்சு... என்னால்... என் பொறுப்பில்லாத தனத்தால் உன் வாழ்க்கையே பாழாகி விட்டது என்று நினைக்கறப்போ என் மேலே எனக்கு வெறுப்பா வருகிறது மீனா... ஒரு நல்ல மாப்பிள்ளையா பார்த்து உன்னைக் கட்டிக் கொடுத்திருக்காமல் போனேனே...''

அவன் நொந்து கொண்டு பேசுவதைப் பார்த்து சிரித்தாள் அவள்...

''நீ நினைக்கிற மாதிரி எனக்கு ஒண்ணும் வருத்த மில்லை கோபி... என்னால ஒரு ஜீவன் சந்தோஷமா இருந்து விட்டு இவ்வுலகை விட்டுப் போகிறது என்ற ஆத்ம திருப்தியோட வருவேன்... சாரதா அத்தை மிகவும் நல்லவர்... ஸ்ரீகாந்திற்கு மனைவியாக இல்லாவிட்டாலும்... அவருடைய தாய்க்கு ஒரு நல்ல மருமகளாய் இருக்கும் பாக்கியம் கிடைத்ததே... அதுவே போதும்... ஏதோ.. வாங்கிய பணத்திற்கு அந்தப் பெரியவருக்கு சேவை செய்த திருப்தி...''



''அது மட்டுமே போதுமா... உனக்கு என்று ஒரு குடும்பம்... குழந்தை எதுவும் வேண்டாமா..''

''வேண்டும்... எனக்கும் ஸ்ரீகாந்துடன் குடும்பம் நடத்த வேண்டும் அவருடைய குழந்தைக்குத் தாயாக இருக்க வேண்டும் என்று ஆசை இருந்து என்ன பிரயோசனம்... அது நடக்காத ஒன்றாயிற்றே...'' மனதுக்குள் புழுங்கினாள் அவள்.

இப்பவே துடித்துப் போகும் கோபி... நளினா... ஸ்ரீகாந்த் காதலை அறிந்தால்... நேரே சண்டைக்கே போய் விடுவானே... ஊகூம்... இந்த விஷயம் கோபிக்கு தெரியவே கூடாது.

கலகலவென்று சிரித்துவிட்டுச் சொன்னாள் அவள்.

''அதையெல்லாம் நான் யோசித்தும் பார்க்கவில்லை கோபி. அந்தக் கனவுகள் எல்லாம் நான் காண்பதும் இல்லை. ஏதோ ஒரு கம்பெனியில் இரு வருட காண்ட்ராக்டில் வேலை பார்த்துவிட்டு... பணத்தை வாங்கிக் கொண்டு வருகிற மாதிரி தான் இதுவும்... குடும்பம் தானே... உனக்குத் திருமணம் ஆகி... குழந்தைகள் பிறந்தால்... அவங்களுக்கு செல்ல அத்தையாய் இருந்து விடுகிறேன்...''

கோபிக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

வாழ்க்கையை விளையாட்டாக நினைத்துப் பேசும் இவளை என்ன சொல்வது...

''சரி கோபி... எனக்கும் நேரமாச்சு. புறப்படுகிறேன்... தீபாவைப் பார்த்தேயானால் 'கங்கிராட்ஸ்' சொல்லிடு... சரியா'' என்று அவள் எழுந்திருக்க...

''வா... உன்னை ஆட்டோவில் ஏற்றி அனுப்பி விட்டுப் போகிறேன்...'' என்று அவனும் எழுந்திருந்தான்.

இருவர்நெஞ்சிலும் கனம்... பாறையாய் அழுத்தியது.

## 16

திடீரென்று சாரதா மயங்கி விழுந்தது கண்டு அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

இரத்த அழுத்தம் அதிகமாகியதன் காரணம் என்று சொன்ன டாக்டர்... உடனே 'அட்மிட்' செய்யும்படிக் கூறினார்.

மீனா...அத்தையின் அருகிலேயே இருந்து பணிவிடை செய்தாள். இப்படி ஒரு தங்கமான மருமகளைக் கொடுத்தஇறைவன்...

தன் வாழ்நாளை நீடிக்க வைத்தால் தேவலை... இப்படி ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்கும் அலையும்படி ஆகிறதே என்று வருந்திய அதே சமயம்... இந்த மட்டும் மருமகளைப் பார்த்து விட்டுச் செல்லும் பாக்கியமாவது கிடைத்ததே அது போதும் என்று திருப்திப் பட்டார் சாரதா.

என்ன... மகனுக்கு ஒரு பேரக் குழந்தைப் பிறக்கும் வரையாவது உயிருடன் இருந்தால் போதும்... அதற்கப்புறம் இந்தக் கட்டை வேகும்... இந்த ஒரு வரம் மட்டும் தாயேன், தெய்வமே என்று வேண்டிக் கொண்டாள்.



அது என்னவோ... அதிசயமாய் நளினா ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தாள்... ஸ்ரீகாந்த்துடன் ஈஷியவாறு...

அதாவது... நானும் அக்கறையாய் வந்து பார்க்கிறேன் என்று காட்டிக் கொள்ளத்தான்.

ஆனால்... ஆஸ்பத்திரியின் டெட்டால் வாசனையும்... மருந்து நெடியும் அவளை முகம் சுளிக்க வைத்தது. நோயாளியின் அருகே அதிக நேரம் நின்றால் எங்கே நோய் தொற்றிக் கொள்ளுமோ என்ற கிலி வேறு... முள் மீது இருப்பது போல இருந்துவிட்டுச் சென்று விட்டாள்.

மீனாவுக்கு அவளிடம் பேசவும் பிடிக்கவில்லை... அவளை நளினாவும் கண்டு கொள்ளவில்லை... அவளை ஒரு பொருட்டாகவும் கருதவில்லை...

ஸ்ரீகாந்த்திற்கும் வேலை இருக்கிறது என்று புறப்பட்டு விட்டான்..

நளினாவின் அதீத அலங்காரத்தையும்... அலட்டலையும் பார்த்துவிட்டு முகம் சுளித்தார் சாரதா..

''யார் இவளைக் கூப்பிட்டது... என்னமோ சண்டிக் குதிரை மாதிரி 'டக் டக்' என்று வந்துட்டுப் போறா... அவளும் அவளது ஒய்யாரமும்...'' என்று சாரதா உரக்கவே முணுமுணுத்தாள். அதைக் கேட்டு மீனா சிரித்து விட்டாள்... நளினாவை சண்டிக் குதிரைக்கு ஒப்பிட்டதைப் பார்த்து...

இரண்டு நாட்களில் சாரதாவை வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள்...

''ஆஸ்பத்திரி சகவாசம் போதும் என்றாகி விட்டது மீனா... எப்படா வீட்டிற்கு வருவோம்னு ஆகி விட்டது...

உடம்பெல்லாம் மருந்து வாசனை... முதல்ல நல்லா உடம்பு தேய்த்துக் குளிக்கணும்மா...'' அலுப்புடன் சொன்னார் சாரதா.

மாமியாரை உட்கார வைத்து குளிப்பாட்டி விட்டாள் மீனா. தலை ஈரம் போக சாம்பிராணி புகையும் காட்டினாள். உடம்பு அலுப்பெல்லாம் மாயமானது போல இருந்தது சாரதாவிற்கு.

தனக்குப் பார்த்துப் பார்த்துச் செய்யும் மீனாவை வாத்சல்யத்தோடு பார்த்தாள் அத்தை. எந்த ஜென்மத்தில் செய்த புண்ணியமோ... இப்போது மருமகள் வடிவத்தில் வந்திருக்கிறது... நெகிழ்ந்து போனாள் சாரதா.

அவர் மட்டுமா... மகனும் தான்... எங்கிருந்தோ வந்தவள்... தன் தாயிடம் காட்டும் பரிவையும் பாசத்தையும் கண்டு வியந்தான்... இத்தனைக்கும் பெயருக்கு மனைவியாய் வந்தவள்...

'நீ என்ன நிஜத்தாலி கட்டினவனா... நீயே எனக்கு முறையான கணவன் இல்லை என்றப்புறம்... உன் அம்மா எதுக்கு...' என்று சொல்லி விடலாம் தான்... ஆனால் அப்படி அவள் சொல்லாமல்... கண்ணும் கருத்துமாய் கவனித்துக் கொண்டது தான் அவளது பெருந்தன்மை... அதுவும்... உண்மையை அறிந்த பின்னரும் கூட 'எனக்கென்ன வந்தது' என்று அசட்டையாக இல்லாமல்... 'நீயாச்சு... உன் தாயாச்சு' என்று உதறி விட்டுச் செல்லாமல்... அதே பழைய கரிசனத்துடன் நடந்து கொள்கிறாளே! இந்தப் பொறுமையும் கரிசனமும் நளினாவிற்கு இருந்திருக்குமா... அப்போதுதான் செய்ய இருந்த தவறு அவனுக்கு பெரும் பூதமாய் தெரிந்தது...



''உங்கம்மாவிற்காக உங்களுடன் இருக்க ஒப்புக் கொள்கிறேன்'' என்றாளே... அது போதும்... அவள் தன்னுடன் இருந்தால் போதும்...

''தாங்க்ஸ் மீனா.. அம்மாவுக்காக... அம்மா முன் பிரியமானவளாய் நடந்து கொள்வாயா... பாவம்... அம்மா... மனம் நொந்து விடுவார்... அதான்...'' என்றான் ஸ்ரீகாந்த்.

அம்மாவிற்காக மட்டுமே... அவனுக்காக வேண்டாம்...

பற்களைக் கடித்துக் கொண்டு தலையசைத்தாள்.

''ஆனால்.. ஒரு நிபந்தனை...''

''என்ன...''

''நான் இங்கு உங்க மனைவியாய் இருக்கும் வரை நளினாவை சந்திக்கவோ... அவளை அழைத்து வருவதோ கூடாது...''

அவ்வளவுதானா...

அவளது வார்த்தைகளில் புளாங்கிதமானான் அவன்... அவன் ஏன் பார்க்கப் போகிறான்... நளினாவைத் தவிர்க்க அல்லவா முயற்சி செய்து கொண்டிருந்தான்.

அந்த மனநிலையில் மீனாவின் வார்த்தைகள் தேனாய் இனித்தன... மேலும் சொல்லப்போனால்... பொறாமையால் வந்த வார்த்தைகளாய் இருக்கலாமோ என்று கற்பனையில் மிதந்தான்.

ஏன் என்றால்... நளினாவுடன் தொடர்பு வைத்துக் கொண்டால்... அந்தப் பாவத்தில் எனக்கும் பங்குண்டு என்று குறுகுறுக்கும்... அதனால்தான்...

பொங்கும் பாலாய் எழுந்த ஆனந்தம் அப்படியே அடங்கிப் போனது... ஆக... காதலில் சொல்லவில்லை... ஒழுக்கக் கேடு என்ற நினைப்பு... சே!

அதற்காக அவன் வாடிவிடவில்லை... என்றைக்காவது ஒரு நாள் மீனாவின் இதயம் மலரும்... அதுவரைக்கும் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்... அவளது அன்பைப் பெறுவதில் வெற்றியடைவது தான் நோக்கம்.. அது கனியும் வரை பொறுத்துத்தான் போக வேண்டும்... உள்ளுக்குள் உருவேற்றிக் கொண்டான் அவன்.

அதன்படி... வேலை முடிந்ததும் நேரே வீட்டிற்கு வந்து விடுவான்... தாயாருடன் வம்பளப்பான்.. அப்போது மீனாவையும் அருகில் அமர்த்திக் கொள் வான்... வேண்டும் என்றே அவளைச் சீண்டுவான்... அவளும் பதிலுக்கு வேடிக்கையாய் பேசுவாள்...

குறைந்த பட்சம்... அம்மாவின் முன்னிலையில் 'நடிப்பு' என்ற பெயரில் அவளுடன் சகஜமாய்... சந்தோஷமாய் பேச முடிந்ததே என்ற மனநிறைவு அவனுக்கு...

அன்றைக்கு வீட்டிற்கு தேவையான மளிகை சாமான் கள் வாங்க சூப்பர் மார்க்கெட்டுக்கு சென்றாள் மீனா.

அங்கேதான் வினோத்தை அவள் சந்திக்க நேர்ந்தது. வியப்பில் வினோத்தின் புருவங்கள் உயர்ந்தன.

''அடே! மிஸஸ் மீனாவா... வாவ்! என்ன வியக்கத் தக்க மாற்றம்... கங்கிராட்ஸ்...'' என்று புன்சிரிப்புடன் கேட்டான் அவன்.

''ஹலோ. வினோத்... எப்படி இருக்கீங்க...'' என்று கேட்டாள் மீனா.



''அது நான் கேட்க வேண்டிய கேள்வி மிஸஸ் ஸ்ரீகாந்த். உங்கள் தாம்பத்திய வாழ்க்கை சந்தோஷமாக இருக்கிறது தானே...'' தாம்பத்திய என்ற வார்த்தையில் சற்று அழுத்தம் கொடுத்துக் கேட்டான் அவன்.

''அன்றைக்கு... விருந்தில் நீங்க கேட்டபோது அதன் உள்ளர்த்தம் எனக்குப் புரியவில்லை. இப்போது அதை தெரிந்து கொண்டேன்...''

''பரவாயில்லையே... வெளித்தோற்றத்தில் மட்டு மல்ல... உள்ளுக்குள்ளும் நல்ல மாற்றம்தான்... ஆமாம்... உன் தோழி... நளினா அம்மையார்...''

''உங்கள் சித்தி என்று சொல்லுங்களேன்...''

சிரித்தான் அவன்...

''ஓகே... என் மாண்புமிகு சித்தி அவர்கள் இன்னும் உன்னைப் பார்க்கவில்லையா... பாவம்... தனக்குச் சரியான ஒரு போட்டி முளைத்து விட்டது என்று தெரிந்தால்... அவ்வளவுதான்... தொட்டியிலிருந்து துள்ளி வெளியே விழுந்த மீனாய் துடித்துப் போவாள்...'' ஏளனப் புன்னகையுடன் அவன் சொல்லவும்...

''எல்லாவற்றிற்கும் சூத்ரதாரியே நீங்கள் தானே. நீங்கள் பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பித்து வைத்த நாடகம் இது... என்றைக்கு திரை விழும் என்று தெரியாமல்... தினமும் நடிக்கிறேன்னா... அதுக்குக் காரணமே நீங்கதான் வினோத்...'' கோபத்துடன் சொன்னாள் மீனா...

''சாரி... மீனா... நாம் இங்கு நின்னு பேசறது சரியாகப் படவில்லை... ஏதாவது ஓட்டலில் அமர்ந்து பேசலாமே'' என்று அழைத்தான் வினோத்.

முதலில் தயங்கியள்... கொஞ்சம் யோசித்து விட்டு சம்மதித்தாள். 'ஏன் கூடாது... வினோத் தெரிந்தவர் தானே... சக்ரபாணி மாமாவின் மகன் ஆயிற்றே... மறுப்பது சரியல்ல...' என்று எண்ணி உடன் சென்றாள்.

வினோத் பற்றிய தவறான எண்ணம் முற்றிலும் மாறிப் போனது. மகா கர்வி... ஏழைகளைக் கண்டாலே இளப்பம்... என்று அவனைப் பற்றி நினைத்தது உண்மை... இனிய சுபாவத்தைக் கொண்ட சக்ரபாணிக்கு இப்படி ஒரு தலைகனம் பிடித்த மகனா என்றுகூட எண்ணியது உண்டு.

ஆனால் அவனுடன் பழகிய பின்புதான் தெரிந்தது... தன்னை அவன் அத்தனைக் கீழாய் பார்த்த காரணமே.. நளினாவின் தோழி என்பதால்தான் என்று...

அதே மாதிரி.. முதன் முதலாய் அவன் பேசிய பேச்சில் ஊசி முனை இருந்ததைக் கண்டு எரிச்சல் அடைந்தவள்... பின்பு தான் உணர்ந்தாள்... அதை அவன் காரணமாகத் தான் பேசினான் என்று... உண்மையில்.. வினோத்திற்கும் ஆரம்பத்தில் மீனாவைப் பற்றி தப்பான அபிப்ராயம் இருந்தது.

நளினாவின் தோழியாச்சே... பணத்தாசையில் இந்த நாடகத்தில் பங்கேற்று இருப்பாள்... எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்! என்ற கேவலமான எண்ணம், மீனாவின் சுபாவத்தை அறிந்து கொண்டதும் போயேப் போச்சு!

அவள் ஒழுக்கம் தவறாதவள்... இழிவான செயலில் இறங்க மாட்டாள்.. அப்படிப்பட்ட செயல்களை மன்னிக்கவும் மாட்டாள் என்பதை அவனுடைய பேச்சிலிருந்து தெரிந்து கொண்டான்...



மேலும் நளினாவின் சாமர்த்தியமான திட்டத்தைப் பற்றி அறியாமலே... நியாயமான அவசர பணத் தேவைக் காக இதற்கு சம்மதித்திருக்கிறாள் என்றும் அறிந்து கொண்ட பின் மீனாவின் மீது மரியாதை வந்தது.

வியப்புதான்... நளினாவிற்கு இப்படியொரு நாணய மான தோழியா...

கசாப்புக் கடைக்காரனுக்கு காந்தியவாதியின் நட்பா... மீனாவுடன் பேச.. பேச அவளது அகத்தின் அழகு வெளிப்பட்டது... அது அவளின் வனப்பை இரட் டிப்பாக்கியது... இத்தகைய அருமையான பெண்... ஸ்ரீகாந்த்தை நம்பி மோசம் போவதுதான் பரிதாபம்...

நளினாவை நம்பி ஏமாந்து விட்டாளே இந்த பேதைப் பெண் என்ற அனுதாபம் கூட எழுந்தது.

நிச்சயம் ஸ்ரீகாந்த் இவளை ஏறெடுத்தும் பார்த்திருக்க மாட்டான்... அவன் தான் கையில் கிடைத்த தங்கத்தை ரசிக்கத் தெரியாமல்... வெய்யிலில் மினுக்கும் கண் ணாடியைப் பார்த்து ஏங்கும் ரகம் ஆயிற்றே...

நளினாவிற்கு இவள் எந்தவிதத்தில் குறைவு... பார்க்கப் போனால் நளினாவை விட குணத்தில்... புத்தி சாலித்தனத்தில் பழகும் பண்பில்... மீனா உயர்ந்தவள் தான்.

வெறும் அழகு மட்டுமே தகுதியாகி விடுமா என்ன...

பாம்பு கூட பளபளவென்று அழகாக இருக்கிறது... அதற்காக அதை யாராவது அருகில் சேர்க்க முடியுமா... அது மாதிரிதான் நளினாவும்...

இனிய பண்புகள் தான் வேண்டும்... அது சுத்தமாக அவளிடம் இல்லையே... பாவம்... அப்பா... நச்சுப்

பாம்பை மணந்திருப்பதை அறியாமலே வாழ்ந்திருக் கிறார்...

யாருக்கும் நளினா மாதிரி மனைவி அமையக்கூடாது... மீனா மாதிரி மனைவி அமைந்தால் வாழ்வே சொர்க்க மாகத் தெரியும்...

எனக்கு.. மீனா மனைவியாக வாய்த்திருந்தால்.. ''நானே அதிர்ஷ்டசாலி'' என்று இந்த உலகிற்கே கேட்கும்படிச் சத்தம் போட்டுக் கூவியிருப்பேன்... ஆனால்...

சே! எத்தனை முறை இவளை சந்தித்திருப்பேன்... கைநழுவ விட்டு விட்டேனே... ஸ்ரீகாந்த் அதிர்ஷ்ட சாலி. கடைசி வார்த்தையை உரக்கவே சொல்லிவிட.... குடித்துக் கொண்டிருந்த சர்பத்தை நிறுத்திவிட்டு கேள்வியாய் அவனைப் பார்த்தாள். ''ஏன்?''

''உன்னை மனைவியாய் அடைந்ததற்கு...'' அந்நிய ஆடவன் தன்னைப் புகழ்வதைக் கேட்டு கூச்சத்துடன் பார்வையைத் தாழ்த்தினாள்.

''உண்மைதான் மீனா... மனைவியின் அருமை ஸ்ரீகாந்த்திற்குத் தெரியவில்லையே... நீ எனக்கு மனைவியா வந்திருந்தால் உன்னை, உள்ளங்கையில் வைத்து தாங்கியிருப்பேன் மீனா...''

மீனா சிரித்தாள்... ''வினோத்... இப்போது நான் இன்னொருத்தரோட மனைவி... உங்க தந்தையை மணந்த சித்தியிடம் ஸ்ரீகாந்த் பழகுவது குற்றம் என்றால்... திருமணமான என்னிடம் இப்படி வழிவது எந்தவிதத்தில் நியாயம்... சொல்லுங்க...'' என்றாள்.



''அவுச்... சரியான நெத்தியடி.... நான் அம்பேல்..'' சரணடைந்த பாவனையில் அவன் தன் இருகரங்களை உயர்த்தியதும் அவளது சிரிப்பு அதிகரித்தது.

அதை ரசித்த வினோத்... அவளது கண்களை உற்றுப் பார்த்துக் கேட்டான்.

''மீனா... உண்மையில் நீ ஸ்ரீகாந்துக்கு மனைவியா... நான் கேட்டதன் அர்த்தம் உனக்குப் புரிந்திருக்கும். அதற்கு பதில் 'ஆம்' என்றால்... உன் வழிக்கும் வரமாட்டேன்.. ஆனால் பொய்யை மெய்யாக்கி மட்டும் சொல்லாதே...''

மீனா எதுவும் பேசவில்லை... அவளால் பேசவும் முடியவில்லை...

''பார்த்தாயா... உன்னால் பதில் சொல்ல முடியவில்லை. தெரியும்... இன்னும் வெறும் மீனாவாகத்தான் நீ இருக்கேன்னு... இப்பவும் சொல்றேன் மீனா... தொடர்ந்து ஸ்ரீகாந்த் உன்னை உதாசீனம் செய்தால்... தயங்காமல் என்னிடம் வந்துவிடு... உன்னை ராணியாக வைத்துக் கொள்வேன்...'' என்று அவன் சொல்லவும்.

மீனா தன் கைப்பையை எடுத்துக் கொண்டு எழுந்தாள்.

''உங்க பெரிய மனதுக்கு ரொம்பவும் நன்றி... ஆனால்... சாரி... வினோத்... என் வழிவேறு... உங்கள் வழியே வேறு... தெரிந்தோ தெரியாமலோ இந்த வழியில் ஒழுக்கெட்டு விட்டேன்... நாளை நளினாவை ஸ்ரீகாந்த் ஏற்றுக் கொண்டாலும்... நான் என் பழைய வாழ்க்கைக்கே போய் விடுவேன்... ஏன்னா... காரணம்... வந்து...'' என்ன சொல்வது என்று விழித்தாள் அவள்.

"ஏன் என்றால்... நீ ஸ்ரீகாந்தை காதலிக்கிறாய்... அப்படித்தானே..." அவளது தடுமாற்றத்தின் காரணத்தை ஊகித்த வினோத்... முடித்து வைத்தான்.

அவளும் ஆம் என்று தலையசைத்தாள்.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால் தான் உன்னை புத்திசாலின்னு நினைத்தேன்.. அதை தப்புன்னு நிரூபித்து விட்டாய் மீனா. பெண் புத்தி பின்புத்திங்கறது சரியாகத்தான் இருக்கிறது. உண்மையில் உன் காதலுக்கு அருகதையில்லாதவன் அந்த ஸ்ரீகாந்த்... அது எப்படி.... வேண்டாம் என்று ஒதுக்குபவனிடமே ஓடிப்போக மனம் வருகிறது. இந்தப் பெண்களின் போக்கே புதிர்தான். சுய கௌரவம்... தன்மானம் எல்லாவற்றையும் துறந்து... எப்படி முடிகிறது.. கடைசியாய்.. மறுபடியும் சொல்கிறேன் மீனா... என் வீட்டுக் கதவு எப்பவும் உனக்காகவே திறந்திருக்கு என்பதை மனதில் வைத்துக் கொள்... எப்ப வேண்டுமானாலும் என் உதவியை நீ நாடலாம்..." என்றவன் பில்லுக்கு பணம் வைத்துவிட்டு எழுந்தான்.

அவர்கள் இருவரும் பேசிக் கொண்டு வெளியேறுவதை... அதே ஓட்டலில் அமர்ந்திருந்த ஸ்ரீகாந்தும் கவனித்தான்.

அவனுள் பந்தாய் ஒன்று தகதக என்று எரிந்தது. அது பொறாமைத் தீ என்று நன்றாகப் புரிந்தது.

## 17

**ஸ்ரீ**காந்த் அன்று கம்பெனியின் வாடிக்கையாளரை சந்திக்க வேண்டி.... அவரது அலுவலகத்திற்கு வந்திருந்



தான்... பேச்சு மும்முரத்தில் நேரம் கழிந்தது தெரியாமல் இருந்துவிட... அந்தப் பிரமுகர் ஸ்ரீகாந்தை தன்னுடன் உணவு அருந்தும்படி வேண்டினார்.

அதைத் தட்டிக் கழிக்க மனமின்றி அவருடன் புறப்பட்டான் ஸ்ரீகாந்த்... அவர்... ஒரு ஓட்டலின் பெயரைச் சொல்லி "அதில் சாப்பிட்டிருக்கிறீர்களா... ஸ்ரீகாந்த்.. அங்கே சாப்பாடு முதல் தரமா இருக்கும்... வாங்களேன்... இன்றைக்கு நமக்கு அங்கேதான் சாப்பாடு..." என்று அழைத்துச் சென்றார். உண்மையிலேயே உணவு... சுவையிலும்... தரத்திலும் உயர்ந்ததாகவே இருந்தது... அதை ரசித்து... ருசித்துச் சாப்பிட்டான்...

மீனாவும் பட வேண்டுமா...

வாயில் வைத்த பழ சாலட் கசந்து வழிந்தது.

நெஞ்சில் கொந்தளிப்பு... உடம்பெல்லாம் தகிப்பு...

வினோத் ஏதோ கேட்க... அவள் சிரித்துக் கொண்டே ஏதோ சொல்வதைக் கண்டவனுக்கு... ஓடிப்போய் வினோத்தின் முகத்தில் குத்த வேண்டும் போல் ஒரு ஆவேசம்... மனைவியை அவனிடம் இருந்து விலக்கி... கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வீட்டிற்குச் செல்ல வேண்டும் போலத் துடிப்பு...

அவள் என்னுடையவள்.. எனக்கு மட்டுமே சொந்தமானவள்... அவளிடம் இருந்து தள்ளியே இரு என்று அவனை எச்சரித்து அனுப்ப வேண்டும்... உள்ளக் குமுறலுடன் எழுந்தவன்...

"சாப்பிட்டவுடன்... புறப்பட்டுவிட வேண்டாம் ஸ்ரீகாந்த்... அலுவலக சம்பந்தமாய் உங்க ஆலோசனை

தேவைப்படுகிறது. உங்களுக்கு ஒன்றும் அர்ஜெண்ட் இல்லையே...'' என்று அந்தப் பிரமுகர் கேட்டதும் பெருமூச்சு விட்டவாறு அப்படியே அமர்ந்தான்...

சட்! என்ன காரியம் செய்ய இருந்தேன்... வந்த வேலையை மறந்துவிட்டு... வினோத்தை எதிர்க்கப் பார்த்தேனே... ஏதாவது ரசாபாசமாய் நடந்திருந்தால்...

வாடிக்கையாளர் என்ன நினைத்திருப்பார்... ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மிருகம் ஒளிந்திருக்கிறது என்பது உண்மைதான்... அந்த விலங்குணர்வு விழித்துக் கொண்டு விட்டால் போச்சு... எல்லாவற்றையும் மறந்து விடுகிறோம்... இடம்... பொருள்... சூழல்... எல்லாவற்றையும் தான்... மெல்ல.. விலங்குணர்வை அடக்கி... ஆவேசத்தைத் தணித்தான்... அலை பாயும் மனதைக் கட்டுப்படுத்தி... அதை சமனப்படுத்தினான்...

கஷ்டப்பட்டு... தனது வாடிக்கையாளரின் பேச்சை காதில் வாங்க ஆரம்பித்தான்... அதுவும் அரை மனதுடன்...

இரவு கொஞ்சம் நேரம் கழித்தே வீட்டிற்கு வந்தான் ஸ்ரீகாந்த்...

சாப்பிடும் வேளையில்... தாள முடியாமல் கேட்டான்.

''இன்றைக்கு வினோத்தை சந்தித்தாய் போலிருக் கிறது.''

அப்பளத்தை அவனது தட்டில் வைத்துக் கொண் டிருந்தவள் வியப்புடன் பார்த்தாள்.

''ஆமாம்... நீங்கள்.. எப்படி....''

''ஓட்டலில் உங்க இரண்டு பேரையும் பார்த்தேன்.. முன்னேயே பேசி வைத்து ஏற்பாடு செய்து கொண்ட



சந்திப்போ..'' அன்னத்தைப் பிசைந்தவாறு கேட்டான் அவன்.

''இல்லையே... தற்செயலாய் சந்தித்ததுதான்.. ஏன் கேட்கிறீர்கள்..''

''இல்லை... உனக்கு திடீர் என்று ஓட்டலில் சாப்பிட வேண்டும் போல் தோன்றியிருந்தால் என்னிடம் சொல்லியிருக்கலாம். நானே அழைத்துச் சென்றிருப் பேனே.. மீனா...''

''கொஞ்சம் மளிகை சாமான் வீட்டிற்கு வாங்க வேண்டி இருந்தது... சூப்பர் மார்க்கெட்டுக்கு போனபோது தான் வினோத் கிடைத்தார்... பேச்சு வாக்கில் ஓட்டலுக்குப் போகலாம் என்றார்.. எனக்கும் தாகமாக இருந்ததால் சரியென்றேன்... தட்ஸ் ஆல்.''

''கையில் சாமான் பை ஏதும் இல்லையே... மீனா... அதான் கேட்டேன்...''

கணவனைக் கூர்ந்து நோக்கினவள்...

''இதோ பாருங்கள்.. எதையும் நீங்கள் நேரிடையாக் கேட்கலாம். நான் ஏதோ வினோத்தை விரும்பிச் சந்தித்தது மாதிரி இருக்கு உங்களோட பேச்சு...'' என்றாள் கோபத்துடன்.

''நீங்கள் இரண்டு பேரும் சுற்றுப்புறத்தை மறந்து பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தபோது எனக்கு அப்படித்தான் தோன்றியது...''

பொறாமையில் என்ன பேசுகிறோம் என்று உண ராமல் வார்த்தைகளைக் கொட்டினான் ஸ்ரீகாந்த்.

''அது அவரவர் மனதைப் பொறுத்தது... காமாலைக் கண்களுக்கு காண்பதெல்லாம் மஞ்சளாய் தெரியுமாம்...''

"அப்படியென்றால்..."

"புரியவில்லை... கல்யாணம் ஆன ஒரு மாதுவைச் சுற்றி வந்த உங்களுக்கு எல்லாமே தப்பு தப்பாகத்தான் படும். சரி... இருக்கட்டும்... அப்படியே வினோத்தை நான் விரும்பித் தான் சந்தித்தேன் என்றாலும் அதில் என்ன தப்பு..."

"நீ... வினோத்தை..."

"அதெல்லாம் இல்லை... வினோத்திற்கு எல்லாமே தெரிந்திருக்கிறது. இந்தக் கண் துடைப்பு நாடகம் முடிவுக்கு வந்ததும் நீ எங்கும் போக வேண்டாம்... நான் இருக்கிறேன்... உன்னை ஏற்றுக் கொள்ளத் தயாராய்.." என்றார்... தெரிந்து கொள்ளுங்கள்."

கையை உதறிக் கொண்டு எழுந்தான் ஸ்ரீகாந்த்.

"என் மனைவியை ஏற்றுக் கொள்ள இவன் யார்... ஸ்கௌன்ட்ரல்" என்று உறுமினான்.

சிரித்தாள் மீனா.

"நான்... உங்கள் மனைவி! அதை சொல்வது நீங்கள்! எத்தனை நாளுக்கு... ம்ம்... இரண்டு வருஷம்னு சொன்னதும் நீங்கள்... அதற்குப் பிறகு... நான் உங்களுக்கு என்ன சொல்லுங்கள்..."

அவன் எதுவும் பேசாமல் கைக் கழுவப் போனான். அவனுள்ளும் போராட்டம்... 'ஐ லவ் யூ' என்று சொல்லும் வேளை இதுவல்ல... சொன்னாலும் மீனா நம்பப் போவதில்லை... எப்போதும் எனக்கு நீதான் மனைவி என்று சொல்லிவிட வேண்டும் என்று எழுந்த உத்வேகத்தை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான்.



எலியும் பூனையுமாய் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் வேளையில்... மனக்கசப்புடன் அவள் இருக்கும் சமயத்தில் சொல்லும் வார்த்தைகள் இல்லை...

அதற்கும் நேரம் வரும்... இனிமையான பொழுதில்... இருவரிடையே சுமுகமான உறவு நிலவும் போது... என்னுடன் சிரித்துப் பேசும் உல்லாச வேளையில்... என் மீனாவிடம் என் காதலை வெளிப்படுத்த வேண்டும்.

அதுவரை... பொறு மனமே... பொறு... பொறுமை அவசியம்... தனக்குள் சொல்லிக் கொண்டான்...

அன்று இரவு படுப்பதற்கு முன்... சாரதாவுக்குத் தேவையானதை எடுத்து வைத்துவிட்டு... அவருக்கு கொடுக்க வேண்டிய மாத்திரைகளையெல்லாம் கொடுத்து விட்டு... கிளம்பும்போது தான் கவனித்தாள் மீனா.

அத்தையின் முகத்தில் சுரத்தே இல்லை...

"அத்தை... உங்களுக்கு என்ன செய்யுது... தலைவலியா என்ன..." பதைப்புடன் விசாரித்தாள் அவள்.

"தெரியலைம்மா.. தலைக்குள் வலி குடையுது... இது சாதாரண வலியா தெரியலைம்மா... என்னால தாள முடியாலை மீனா... வாந்தி வர்ற மாதிரி இருக்கு... உவ்..வே..." வாந்தி எடுத்த சாரதா... அப்படியே மயங்கி விழுந்தாள்.

"ஸ்ரீகாந்த் சீக்கிரம் இங்கே வாங்களேன்..." என்று அலறினாள் மீனா.

அவளது அலறலைக் கேட்டு ஓடி வந்தான் ஸ்ரீகாந்த்... முதன் முதலாய் மீனா... அவளையும் அறியாமல் பெயர்

சொல்லி அழைத்திருக்கிறாள் என்ற சந்தோஷம் குமிழிட்டாலும்... அந்த அலறல் ஏன் என்ற பதற்றத் துடன் வந்தான்.

''அத்தை மயங்கிட்டாங்க.. முதல்ல டாக்டர் கிட்ட போகணும் வாங்க...''

உடனே ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தான். அதில் சாரதாவை படுக்க வைத்துவிட்டு இருவரும் ஏறிக் கொள்ள...

ஆம்புலன்ஸ் ஊளையிட்டுக் கொண்டு கிளம்பியது.

''மீனா... அக்காக்கு என்னம்மா ஆச்சு...'' கெளரி சித்தியின் குரல் கேட்டு வியப்புடன் திரும்பினாள் மீனா.

''சித்தி! எப்ப வந்தீங்க சித்தி...''

''இப்பத்தான்... ஸ்ரீகாந்த் ஃபோன் பண்ணி சொன்னதும் இருக்கப் பிடிக்காமல் ஓடிவந்து விட்டேன்... அக்காவிற்கு ஒண்ணும் இல்லேதானே... என்ன சொன்னார் டாக்டர்...'' மீனாவின் கண்கள் கலங்கின...

''இல்லை சித்தி... அத்தை அப்பப்போ தலை சுத்துது என்று சொன்னதும்.. மயங்கி விழுந்ததும் இரத்த அழுத்தத்தால் இல்லையாம்.. தலையில் இரத்தம் உறைந்து கட்டிக் கொண்டிருக்காம்.. எப்போதோ அவங்க கீழே விழுந்து... தலையில் அடிபட்டிருக்க வேண்டும்... அதோட விளைவு இப்போது வெளிப்படையா தெரி கிறது என்கிறார் டாக்டர்... எனக்கு தெரிந்து அத்தைக்கு தலையில் அடிபடவில்லை சித்தி... ஸ்ரீகாந்தும் அப்படித் தான் சொல்கிறார்... ஒருவேளை... அத்தை அதை மறைத்து விட்டாரோ என்னவோ... உங்களுக்கு ஏதாவது தெரியுமா... உங்களிடம் சொல்லி இருக்கிறாரா சித்தி...''



''அவள் சொன்னதா எனக்கு நினைவில்லையேம்மா... சில விஷயங்களில் உன் அத்தை அழுத்தக்காரிம்மா... டாக்டர் என்ன சொல்கிறார் மீனா... பயப்படும்படியாய் இல்லைதானே...''

''அப்படியும் சொல்ல முடியாது சித்தி.. இப்போ நவீன சிகிச்சையெல்லாம் வந்திருக்கிறது... தலையில் துளை போட்டு கட்டியிருக்கும் இரத்தத்தைக் கரைத்து விடலாம். ஆனால்... அதைத் தாங்கும் சக்தி அத்தையின் உடம்புக்கு இல்லை என்று டாக்டர் சொல்கிறார். எனக்கு பயமாக இருக்கு சித்தி.... அத்தைக்கு எதுவும் ஆகிடுமோன்னு...''

கண்ணீர் பொங்கி வழிய சொன்ன அவளை அணைத்துக் கொண்டுத் தேற்றினாள் கெளரி.

''உஷ்.. மீனா... அக்காவிற்கு எதுவும் ஆகாதும்மா... கவலைப்படாதே.. நிச்சயம் கடவுள் கைவிட மாட்டார். பார்த்துக் கொண்டிரு... நாளைக்கே எழுந்து உட்கார்ந்து... வா மீனா... வீட்டுக்குப் போகலாம்னு சொல்லப்போறா...''

''அப்படி நடந்ததுன்னா... கடவுளுக்கு கோடி நன்றி சொல்வேன் சித்தி... எனக்கு அவர் அத்தை மட்டும் இல்லை... அன்னையும் தான்... அந்த வீட்டில் எனக்கு இருக்கும் ஒரே ஆறுதல் அவர்தான்... அவருக்கு ஏதாவது ஆகி விட்டால்... என் கதி... அய்யோ...''

குலுங்கிக் குலுங்கி அழுதாள் மீனா... அழட்டும் என்று விட்டு விட்டு மெளனமாக இருந்தாள் கெளரி.

கண்ணீரின் சேமிப்பு தீர்ந்ததும் அழுகை நின்றது.

"சாரி.. சித்தி... கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டு விட்டேன்..."

"ஏன் மீனா... ஸ்ரீகாந்த் உன்னை சந்தோஷமா வைத்துக் கொள்ளவில்லையா... உன் மனசில் ஏதோ ஒரு வலி இருக்குன்னு தெரிகிறது... மனம் விட்டுப் பேச விரும்பினால் நான் கேட்கத் தயார்..."

"உங்களுக்கு... எப்படி..." வியப்புடன் கேட்டாள் மீனா.

"அசடு. உணர்ச்சி வேகத்தில் வார்த்தைகளை கொட்டி விட்டு இப்போ கேட்கிறே... ம்ம்... கொஞ்ச நேரத்திற்கு முன்னால் சொன்னாயே... அந்த வீட்டில் எனக்கு இருக்கும் ஒரே ஆறுதல் அத்தைன்னு... அப்போ... ஸ்ரீகாந்த்...? உன்னை சரியா கவனித்துக் கொள்ள வில்லைன்னு தானே அர்த்தம்... இப்போ சொல்லு... என்ன சங்கதின்னு..." மீனா தயங்குவது தெரிந்தது.

"என் பிள்ளையைப் பத்தி என்னிடம் குறை கூறணுமாங்கற தயக்கமா... மீனா.. இப்ப நான் அத்தை ஸ்தானத்தில் இருந்து கேட்கவில்லை... உன் அம்மாவா கேட்கிறேன். சொல்லும்மா..."

அம்மாவாக... அந்த வார்த்தையில் நெக்குருகி போனாள் மீனா.

மனதில் ரசகுண்டாய் அடைத்துக் கொண்டிருக்(பற்சி வேதனைச் சுமையை இறக்க ஒரு தோளைத் தே'க்கை கொண்டிருந்தவளுக்கு தாயின் மடியே கிடைத்(.. மகிழ்ச்சி...

தன் வினோத திருமணத்தைப் பற்றி... அதன் சரத் துக்களைப் பற்றி... அதனால் நடக்கும் கண்ணாமூச்சி



விளையாட்டைப் பற்றி ஆதியோடு அந்தமாய் கௌரி யிடம் சொன்னாள் அவள்.

கேட்டுக் கொண்டிருந்த கௌரிக்கு பிரமிப்பு... இப்படியும் நடக்குமா... என்ற அதிர்ச்சி... ஸ்ரீகாந்த்தா இப்படி என்ற திகைப்பு... எல்லாவற்றையும் விட அப்பாவி மீனாவை ஆட்டுவித்த அந்த நளினாவின் மீது அருவருப்பு...

ஸ்ரீகாந்த்திற்கு பிடிவாத குணம் உண்டு என்று அவளுக்குத் தெரியும்.. பிடித்தால் உடும்புப் பிடிதான்

அதனால்தான் நளினாவை நழுவ விடக்கூடாது என்று பிடித்துக் கொண்டான் போலும்...

ஆனால் கடவுள் கருணை மிக்கவன்.. அவனது வாழ்வை பாழாக்காமல் ஒரு நல்ல... அருமையான வாழ்க்கைத் துணையை அமைத்துத் தந்து விட்டான்...

யானை தன் தலையில் தானே மண்ணை வாரி இறைத்துக் கொள்ளுமாம்... அது மாதிரி... அந்த நளினா தெரியாமலே ஸ்ரீகாந்திற்கு நல்லது செய்திருக்கிறாள். றி'னா சொல்வதை வைத்துப் பார்த்தால்... ஸ்ரீகாந்த் மேல் மலழுந்து பழகியிருக்க மாட்டான்... அப்படிப்பட்ட த்தரமானவன் அவன் இல்லை... அந்த மயக்கு ாகினிதான் வசியம் பண்ணி இவனை இழுத் 1 'ப்பாள்... எல்லாம் கலிகாலம்!

ண்மையை நன்றாக உணர்ந்து கொண்ட கௌரி சா ஊமாய்... ஒவ்வொரு வார்த்தையையும் யோசித்து பட்டு ( னாள்...

சாரதூனா... ஸ்ரீகாந்தையும் நாம் குற்றம் சொல்ல ஆப்ரேவுது. ஒரு பெண் மேல் விழுந்து பழகினால் எந்த

ஆம்பிளையும் தடுமாறத்தான் செய்வான். ஆனானப்பட்ட விசுவாமித்திரரே மேனகாவிடம் நிலை குலைந்து போகவில்லையா என்ன... சாதாரண ஆண் பிள்ளை எம்மாத்திரம்! விதிதான் உன்னையும் ஸ்ரீகாந்தையும் சேர்த்திருக்கு... நீங்க இரண்டு பேரும் சேரணும் என்பதுதான் கடவுளின் விருப்பம்... அதை யாராலும் தடுக்க முடியாது. பாரேன்... சீக்கிரமே... நளினா மேல் இருப்பது வெறும் மோகம்தான்... காதல் இல்லைன்னு ஸ்ரீகாந்த் புரிஞ்சுப்பான்... இந்த நளினி விஷயத்தை ஒரு கெட்ட கனவா நினைச்சு மறந்துடும்மா...''

''நான் மறந்தாலும் அவர் மறக்கணுமே சித்தி... அவள் மீது அவருக்கு இன்னும் ஆசை அப்படியே இருக்கு... கொஞ்சமும் குறையவில்லை...'' குரல் தழுதழுத்தது.

ஒரு வினாடி அவளை ஆழமாய் பார்த்துவிட்டு நிதானமாய் கேட்டாள் கௌரி.

''ஏம்மா... நீ ஸ்ரீகாந்தை மனமார விரும்பரே... அப்படித்தானே...''

அந்தக் கேள்வியைச் சற்றும் எதிர்பார்க்காத மீனா கொஞ்சம் விழித்துவிட்டு.. 'ஆம்' என்று தலையசைத்தாள்.

''அப்போ... அவன் மனம் மாற நீயும் முயற்சி செய்யணும். முதல்ல அவன் மாறுவான் என்ற நம்பிக்கை உனக்கு வரணும் மீனா...''

''ஒரு வேளை... சித்தி.. அது நடக்காமல் போனா...'' அவளது குரல் கம்மியது.



''அதை அப்புறம் யோசிக்கலாம்.. என்ன... அது வரைக்கும் நம்பிக்கையோடு இரும்மா... உங்க ரெண்டு பேரையும் சேர்த்து வைத்த தெய்வத்திற்கு... வாழ வைக்கவும் தெரியும்... மீனா...''

அந்த நேரத்தில் அங்கு வந்த நர்ஸிடம் மீனா கேட்டாள்.

''ஸிஸ்டர்... டாக்டர் ரவுண்ட்ஸ் முடிந்து விட்டதா... நாங்க பேஷண்டைப் பார்க்கலாமா...''

''ஒரு பத்து நிமிஷம் 'வெயிட்' பண்ணுங்க... இன்னும் பேஷண்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் பெரிய டாக்டர்'' என்று சொல்லிவிட்டு நடந்தாள் அந்த நர்ஸ்.

''சரி... வாம்மா மீனா.. அதுவரைக்கும் இங்கே உட்காருவோம்...'' என்று அங்கு போட்டிருந்த நாற்காலியில் அமர்ந்தாள் கௌரி.

வார்த்தைகளில் தெம்பு திரும்பக் கண்டாள்.

சித்தி வந்ததும்கூட நல்லதுக்குத்தான் என்று தோன்றியது. மனசுக்குள் மலையாய் அழுத்திய சுமையும் மறைந்து போனது.

## 18

**சா**ரதா வீட்டிற்கு வந்ததும் கௌரி ஊருக்குப் புறப்பட்டு விட்டாள்.

சாரதாவின் உடல்நிலை தேறிய 'பின்புதான் ஆப்ரேஷன் செய்ய முடியும். அதுவரையில் சாரதா

ரெஸ்டில் இருக்க வேண்டும். மருந்து மாத்திரையில் இரத்த அழுத்தத்தை முதலில் நார்மலுக்கு கொண்டு வந்தால்தான் முடியும் என்று கூறி டாக்டர் 'டிஸ்சார்ஜ்' செய்து விட்டதால்...

நோயாளியை அழைத்து வந்துவிட்டனர்.

ஆப்ரேஷன் என்றதும் சாரதாவிற்கு பயம் வந்து விட்டது.

"அதெல்லாம் வேண்டாமேப்பா... போற உசுரு அதுவா போகட்டுமே... எதுக்குப்பா இந்த ரண இம்சையெல்லாம்..." என்று புலம்ப...

"அக்கா.. நீ கொஞ்சம் சும்மா இருக்கேயா... குழந்தைகள் உன்னோட நல்லதுக்காக கஷ்டப்பட்டா... அதை வேண்டாம் என்று சொல்லிக் கொண்டு... இந்த காலத்தில் பெத்தவங்களை முதியோர் இல்லத்தில் சேர்த்து விட்டு பிள்ளைகள் ஜாலியா இருக்கப் பார்க்கிறாங்க... ஆனா உன் பிள்ளை அம்மான்னு உசிரையே விடுகிறான். தங்கமான மருமகள் வேறு... உன் காலடியிலே விழுந்து கிடக்கிறாள்.. எல்லாம் நல்லபடியா நடந்து... நீ இன்னும் நீண்ட வருடம் உயிரோட இருக்கணும்ன்னு தான் இவர்களோட பிரார்த்தனை. அது வீணாக வேண்டுமா... இன்னும் என்னவெல்லாம் நீ பார்த்து மகிழ வேண்டும்.. மகனும் மருமகளும் சந்தோஷமா வாழ்வதை... அவர்களுக்கும் குழந்தைகள் பிறந்து 'பாட்டி' 'பாட்டி'ன்னு உன்னை சுத்தி வருவதை... இதெல்லாம் நீ ரசிக்க வேண்டாமாக்கா..." என்றாள் கௌரி.

கௌரியின் பேச்சில் இருந்த உள்ளர்த்தம் மீனாவிற் புரிந்தது... அத்தை நன்றாக இருந்தால்தான் மீனாவி



நல்லது. தாய்க்காக நிச்சயம் மீனாவுடன் வாழ்ந்து தான் ஆக வேண்டும். அதற்காக அக்கா வாழ வேண்டும். வாழ்வாள்.... பார்...

இதை சூசகமாக உணர்த்துகிறாள் சித்தி...

ஆனால் அந்த மாதிரி வாழ்க்கை மீனாவிற்கு பிடிக்கவும் இல்லை...

தாய்க்காக... கணவன் மனைவி பந்தமா... வேண்டாமே... காய்ந்து போன உறவில் சந்தோஷம் வருமா என்ன... வரண்ட பாலைவனத்தில் பயிர் வளரவும் இயலுமா. அதே மாதிரி தான்... வரண்டு போன தாம்பத்தியமும்... அதில் உயிர் இருக்காது...

சவத்தை உட்கார வைத்து சடங்கு செய்வது மாதிரி தான். ஆனால் அதை கௌரி சித்தியிடம் சொல்லவில்லை. பாவம்... எப்படியாவது ஸ்ரீகாந்த் மீனாவுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று கனவு காண்பவரிடம்... இதைச் சொல்லி வருத்தப்பட வைக்கவும் பிடிக்கவில்லை.

ஊருக்குப் போனதும் சித்தி போனில் பேசி விசாரித்ததும் மனதிற்கு இதமாய் இருந்தது.

"மீனா... அங்கே நிலைமை எப்படி இருக்கிறது... ஸ்ரீகாந்திடம் மாற்றம் தெரிகிறதா... அவன் என்ன பேசினாலும் சரி... நீ பொறுமையை இழக்காதே... தெரிகிறதா... உன்னோட நன்மைக்குத்தான் சொல்கிறேன்... ஸ்ரீகாந்திற்கு தாயிடம் மரியாதை இருக்கிறது. என் அக்கா இருக்கும் வரை எந்தக் கவலையும் இல்லை... அதே மாதிரி... அந்த மேனா மினுக்கிக்கும் புருஷன் இருக்கிற வரை ஸ்ரீகாந்தை நெருங்கவும் முடியாது...

நீதான் சொன்னியே.. புருஷனோட பணத்திற்காக தான் பத்தினி வேஷம்னு... அப்படி இருக்கிறப்போ அவளால எதுவும் செய்ய முடியாது... அதுவரைக்கும் நல்லதுதான். ஏதாவது இருந்தா எனக்கு உடனே போன் பண்ணி சொல்லும்மா மீனா... எந்த உதவியானாலும் கேள்... நானும் சித்தப்பாவும் தயார்.. வச்சுடட்டுமா...''

கௌரி சித்தியுடன் பேசியதில் ஏதோ ஒரு பாரம் 'சட்'டென்று குறைந்தது போல பிரமை...

அவரின் இதமான பேச்சா... இல்லை.. எனக்கு என்று உதவ உறவுகள் இருக்கின்றன என்ற தெம்பா... இல்லை... அவர் கடைசியாக சொன்னாரே.

நளினாவிற்கு விடுதலை கிடைக்காதவரை... அவள் ஸ்ரீகாந்துடன் வாழ வழியில்லை என்று... அதனாலா...

என்னதான்.. தாம்பத்தியத்தின் அஸ்திவாரமான அன்பு அமையாத வாழ்க்கை தேவையில்லை என்று எண்ணினாலும்... மனம் கேட்க மறுக்கிறதே... மீண்டும் மீண்டும் ஸ்ரீகாந்தையே சுற்றி வருகிறதே... இதைத்தான் பேதை மனம் என்...

சித்தி சொன்னதுபோல்... சக்ரபாணி மாமா ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் கூட வாழக்கூடும்... யார் கண்டது.

நிச்சயம் நளினா 'டிவோர்ஸ்' கேட்கப் போவதில்லை...

அதனால் அவரை விட்டு வரவும் சாத்தியமில்லை...

அப்படி நடந்து விட்டால்... நடத்திக் கொடு இறைவா... மனம் இறைஞ்சியது.

சில நேரங்களில் வேண்டுதல்கள் இறைவனுக்குப் போய் சேருவதில்லையோ...



''ஸ்ரீ டியர்... இதுக்காகத்தான் நான் காத்திருந்தேன். எத்தனை நாளாச்சு இல்லே... அம்மாடி.. இப்ப நான் சுதந்திரப் பறவை. இனி யாரைப் பற்றியும் கவலை ல்லை... யாருக்காகவும் பயப்பட வேண்டியது இல்லை. என்ன சொல்றீங்க... ஸ்ரீ டியர். ஓகே.. இப்ப சொல்லுங்க. ஸ்ரீ... எங்கே போகலாம்... ஹனிமூனுக்கு சிங்கப்பூர்... மொரீஷியஸ்... லண்டன்... என்ன ஆச்சு ஸ்ரீ... ஆங்.. மீனாவைப் பத்திதானே... டோன் ஒர்ரி... டார்லிங்... அவள்தானா ஒதுங்கிடுவாள்.. விடுங்க...'' களிப்பில் வார்த்தைகளைக் கொட்டினாள் அவள்.

''உன் கணவர் இறந்து மாதம் கூட ஆகவில்லை... அதற்குள் இப்படிப் பேசினால்... மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் நளினா...'' என்றான் ஸ்ரீகாந்த்... உள்ளூர எரிச்சலாய்...

''எனக்கு யாரைப் பற்றியும் கவலை கிடையாது. இத்தனை நாள் மற்றவர்களுக்கு அஞ்சினது எல்லாம் போதும் ஸ்ரீ. இனியும் அப்படி இல்லை... எனக்கு விடுதலை கிடைத்து விட்டது. யாரும் என்னைத் தப்பா எடுத்துக்க மாட்டாங்க...! அப்படியே செய்தாலும் ஐ டோன்ட் கேர்... உங்களுக்கு ஒன்று தெரியுமா ஸ்ரீ... எனக்காக... என் கணவர் இந்த வீடு.. கம்பெனி ஷேர்ஸ்... இன்னும் வேறு ஷேர்ஸ்... அரைக் கோடிக்கு பாங்க் பாலன்ஸ்... எல்லாம் வைத்து விட்டுப் போயிருக்கிறார்... அவருடன் வாழ்ந்ததற்கு பரிசு! இப்போ நான் சொன்னது புரிந்ததா... இத்தனை பணமும் நமக்குத்தான்... புது வாழ்க்கையை ஆரம்பிப்போம் ஸ்ரீ டியர்.

வாவ்! இனி... சொர்க்கம் நம் பக்கம் தான்!''

''நளினா பணத்திற்காகத்தான் சக்ர பாணியைத் தொற்றிக் கொண்டு இருக்கிறாள். அது உங்க மயக்கக் கண்களுக்குத் தெரியலை என்பதுதான் பரிதாபம்!''

காதோரம் ஒரு குரல் ஒலித்தது.

மீனாவின் ஏளனக் குரல்!

அது எவ்வளவு உண்மை... அவள் சொன்னது போ நளினா சகஸ்ரநாமத்தில் மூழ்கிக் கிடந்ததில் அறிவு மயங்கி போயிருந்ததோ.. அதனால்தான் அவளது அழகு மட்டுமே தெரிந்த கண்களில் அவளின் அசிங்கமான குறைகள் படாமல் போய் விட்டது..

அவனது கரத்தைப் பற்றிய நளினா கொஞ்சும் குரலில் சிணுங்கினாள்.

"என்ன... ஸ்ரீ... ரொம்ப நாளைக்கப்புறம் சந்திக்கிறோம். சுரத்தில்லாமல் இருக்கிறீர்களே... எனக்கு இருக்கும் மகிழ்ச்சியில் இன்னிக்கே நாம ரெண்டு பேரும் எங்கேயாவது தூரமா... வெகு தொலைவிற்குப் போய்.. ஆனந்தமா இருக்கணும் போலத் தோன்றுகிறது... மீனாவிடம் என்ன சொல்வது என்ற யோசனையா... ஸ்ரீ டியர்.. அதை என்னிடம் விட்டு விடுங்கள்... நான் பேசற விதத்தில் பேசி... பணத்தைக் கொடுத்து அனுப்பி விடுகிறேன்..."

அவளது கரத்தை ஒதுக்கிவிட்டு சொன்னான் அவன்..

"ஒன்றை மறந்து விட்டாயே நளினா... மீனாவை மணந்த காரணமே என் அம்மாவின் ஆசைக்காக.. இன்னும் அவங்க உயிரோட இருக்கிறார்கள்... அவரைப் பொறுத்தவரை மீனாதான் மருமகள்... அவருக்கு மீனா வின் மேல் கொள்ளைப் பிரியம். அதைத் தெரிந்து கொள்..."

"களுக்" என்று சிரித்தாள் நளினா...

"ஆமாம் இல்லே... அதை மறந்து விட்டுப் பேசு கிறேன்... பாருங்கள்... இருக்கட்டும்... அதுவும் எத்தனை நாளுக்கு...



இல்லை... போய் சேர்ந்தும் இறைவனின் திரு விளையாடலோ... யாருக்குத் தெரியும்.

ஸ்ரீகாந்திடம் இருந்து போன் வந்தது...

"மீனா... சக்ரபாணி சாருக்கு மாஸிவ் அட்டாக் வந்துவிட்டது. அவரைப் பிழைக்க வைக்க டாக்டர்கள் முயற்சி செய்து கொண்டு இருக்கிறார்கள். நான் நளினாவிற்கு உதவியாக இருக்கிறேன். வரத் தாமத மாகலாம்..."

அதிர்ச்சியில் ரிஸீவர் நழுவி விழ... திக் பிரமையுடன் நின்றாள் மீனா.

காற்றும் ஏன் நளினாவிற்கு சாதகமாகவே வீசுகிறது.

எல்லாமே தனக்குப் பாதகமாக அமைகிறதே... ஏன்..

விதியும் கூட அல்லவா நளினாவிடம் மதி மயங்கிக் கிடக்கிறது.

அதே விதி எனக்குச் சதி செய்து சிரிக்கிறது...

இனி... அதுதானே தெரியவில்லை...

சக்ரபாணி மாமா பிழைப்பாரா...

பிழைக்க வேண்டும் என்று மனிதாபத்துடன்... சுயநலமும் சேர்ந்து கொள்ள... உள்ளம் வேண்டியது.

என்ன நடக்குமோ... ஏது நடக்குமோ என்று இதயம் 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது...

போனில் அணுகுண்டை வைத்திருப்பது போல பீதியுடன் அதைப் பார்த்தாள்.

நல்ல செய்தி வரணுமே... எதிர்பார்ப்புடன் காத்திருந்தாள் ஆனால்...

மீண்டும் ஸ்ரீகாந்திடம் இருந்து போன்... அது நல்ல செய்தி இல்லை...

சக்ரபாணி இறந்து விட்டார்... அப்படியே தொய்ந்து போய் அமர்ந்தாள்.

எல்லாமே முடிந்து விட்டது... ஸ்ரீகாந்தும் நளினாவும் எதற்காக காத்துக் கிடந்தார்களோ... அது நடந்து முடிந்து விட்டது...

திரை விழ வேண்டியதுதான்...

அடடா... அத்தை இன்னும் எனக்குத் துணையாக இருப்பதை எப்படி மறந்தேன்... அவர் இருக்கும் வரை எனக்கு... அய்யோ... அப்படித்தானே... சக்ரபாணி மாமாவைப் பற்றி நினைத்தேன்... ஆனால் எதிர் மறையாக அல்லவா நடந்து விட்டது.

வேண்டாம்... எந்த வேண்டுதலும் இனி வேண்டாம்... எது நடக்கணுமோ அது நடக்கட்டும். தெய்வ சித்தம்!

கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

ஸ்ரீகாந்திற்கு சக்ரபாணி இறந்தது வருத்தம்தான்.

அதே சமயம் ஏதோ விடுதலைக் கிடைத்த மாதிரி உணர்வு. தினமும் அவரைச் சந்திக்கும்போது... அவருக்கு செய்த துரோகம் அவனுள் ஈட்டியாய் குத்தி வதைக்கும். தன்னிடம் பாசம் பொழிந்த மனிதரை ஏமாற்றினோமே என்ற குற்ற உணர்ச்சி அவனைக் கொத்திப் பிடுங்கியது.

'மைசன்' என்று உரிமையுடன் தோள்தட்டிப் பேசும் அவரைக் காணவே உடம்பெல்லாம் குறுகி... உள்ளம் கூசிப் போகும்.

மீனாவை மணந்த பின்பு அந்த உறுத்தலின் வீரியம் அதிகம் தான்.. அதுவரை கண் மூடிக்கிடந்த மனசாட்சி



திடீர் என்று கண் விழித்துப் பார்த்தது மட்டும் இல்லாமல் அவனைக் கிழி கிழியென்று கிழித்துக் கூறு போட்டது. அப்போதுதான் தன் பிழையை உணர்ந்து குமைந்தான். அந்த உளைச்சலில் நளினாவின் மீதிருந்த கவர்ச்சியும் கொஞ்சம் கொஞ்சமாய் இறங்கி வந்தது.

அவள் அருகில் வந்தாலே கள் குடித்த கடுவனாய் கிறங்கிப் போய் நிற்பவன். அதெப்படி அதிலிருந்து மீண்டான்... அவனுக்கு அது ஆச்சர்யம்தான். அதைவிட பெரும் வியப்பு... மீனாவின் மீது உண்டான பிரேமை! அவனுக்கே புரியாத புதிர்.. அதெப்படி!

என் தாயின் அன்பைப் பெற்று விட்டாளே என்ற மதிப்பினாலா என் உறவுகளின் உள்ளங்களைக் கவர்ந்து விட்டாளே என்ற பிரமிப்பாலா...

இல்லை... என் தாலியைச் சுமக்கும் பெருமையாலா... தாலியின் மகிமையாகவும் இருக்கலாமோ...

அப்படித்தான் இருக்கும்...

மனைவி... மனைவிதான்... அதுதான் நிரந்தரம்...

அதே சமயம் அவனுள் கலக்கம்...

நளினாவிடம் உண்மையை உள்ளபடி சொல்லும் நேரம் வந்துவிட்டது... இனியும் தயக்கம் கூடாது...

அந்தத் தீர்மானத்தில்... அவளிடம் தனிமையில் பேசுவதற்கு சமயம் எதிர்பார்த்து.. காத்திருந்தான்.

அவன் மட்டும் என்ன... நளினாவும் தான்.

ஸ்ரீகாந்தை தனிமையில் பார்த்து எத்தனை மாதங்கள் ஆகி விட்டது! அவனைப் பார்க்க வேண்டும் என்று உள்ளம் அடம் பிடித்தது.

ஸ்ரீகாந்தை சந்திக்க முடியாமல் பல தடைகள்..

தேனிலவு பயணம்... அடுத்து திருச்சி விசிட்... அப்புறம் தாய்க்கு உடல்நலம் சரியில்லை என்று அடுத்து அடுத்து தொல்லைகள்... கடைசியில்... கணவரின் சாவு... ஆயிற்று... அவரின் இறப்புக்காக காத்தாகிவிட்டது. இனியும் பொறுக்க முடியாது... அவனைப் பார்த்தே ஆக வேண்டும். உடம்பின் அணுக்கள் எல்லாம் சேர்ந்து போராட்டம் செய்தன. ஆனால் அவன்தான் சிக்காமல் விலாங்கு மீனாய் நழுவுகிறானே. அது அவளுக்கு எரிச் சலைத் தந்தது. கோபம் உச்சிக்கு ஏறியது. ஒரு வழியாய்... அன்றைக்கு தன்னை சந்திக்க வருவதாய் போன் செய்ததும்... ஆத்திரம் அடங்கி... ஆசைப் பெருகியது...

ஊருக்கு சோக வேஷம் போட்டது போதும்... இனி வாழ்க்கையெல்லாம் வசந்தம்தான்... ஆனந்தம் இன்றே ஆரம்பம் ஆகப் போகிறது... இதயம் நெஞ்சுக் கூட்டினுள் 'டால்பினாய்' துள்ளி விளையாடியது. 'லல... லா... லா..' என்று பாடியவாறே தன்னை அலங்கரித்துக் கொண்டாள் அவள்.

நான்கு மணி நெருங்க... நெருங்க... அவளது மேனி யில் சொல்ல முடியாத பரபரப்பு... ஏதோ எதிர்பார்ப் புடன் கூடிய டென்ஷன்... சந்தோஷ மிகுதியால்...

நான்கு மணியாகிறதே என்று நினைக்கையில்... டென்ஷனில் உடம்பு முறுக்கிக் கொண்டது ஸ்ரீகாந் திற்கு. நளினாவைப் பார்க்கப் போகிறோம் என்று இறக்கைக் கட்டிக் கொண்டு பறந்த காலம் ஒன்று... இப்போதோ... தயக்கமும் சலிப்பும் வந்தது.

கால்களை இழுத்துப் பிடித்து நடந்து வீட்டினுள் வந்தான். அவனைக் கண்டதும் ஓடி வந்து வரவேற்றாள் நளினா. நீண்ட நாட்களுக்குப் பின் கிடைத்த சந்திப்பா யிற்றே.



உங்கம்மாவுக்கும் உடல் நலமும் சரியில்லையே... டாக்டர் சொல்வதைப் பார்த்தால்... ரொம்ப நாள் இருக்க மாட்டார் போல் தெரிகிறது. அதுவரைக்கும் பொறுமையோட இருக்கணும்தான்... ம்ம்... ஆக்கப் பொறுத்தாச்சு... ஆறப் பொறுத்துட்டாப் போச்சு... இப்ப... நாம இறந்த காலத்தை மறந்துட்டு... எதிர் காலத்தை ஒதுக்கிட்டு... நிகழ்காலத்தை மட்டு யோசிப்போமே. அதுவும் இன்றைய சிந்தனை மட்டும் தான் இருக்கணும்.. என்ன.. தெரிந்ததா... ஸ்ரீ டார்லிங் இப்ப மாடிக்குப் போவோமா..." தாபத்துடன் அவனது தோள்களில் தலை சாய்த்து கேட்டாள்...

அவளிடமிருந்து வந்த லாவண்டரின் மணம் கிளர்ச் சியை தருவதற்கு பதில்... எரிச்சலைத் தந்தது. எப்படி இவளால் இப்படி நடந்து கொள்ள முடிகிறது. சக்ரபாணியைப் புதைத்த இடத்தில் இன்னும் புல்லும் முளைக்கவில்லை... அதற்குள் சரச சல்லாபம்...

இறந்த ஜீவனுக்கு காட்டும் மரியாதையா இது...

அவரது பணம் மட்டுமே கணக்கா... அவருடன் வாழ்ந்த சில வருடங்களுக்கு ஒரு அர்த்தமும் இல்லையா... அடுத்த வீட்டில் இறந்த ஒரு உயிருக்கே 'அய்யோ' என்று உருகும்போது.. கட்டிய கணவர்! அதுவும் அன்பைப் பொழிந்த மனிதர்... அதைக் கூடவா அவருடன் புதைத்து விட்டாள்...

என்ன கான்கிரீட் மனசு... சிமெண்ட் பூசியது போல இறுகிக் கிடக்கிறது அவளது இதயம்... அதில் அன்பு... பாசம்... மனித நேயம் எதற்கும் இடம் இல்லை.

அதுதான் சொல்கிறாளே... உங்கம்மா எத்தனை நாள் இருக்கப் போகிறார் என்று... நாளை எண்ண ஆரம்பித்து விட்டாள் போலும்...

தன் வாழ்வு... தன் சந்தோஷம்... தனக்கு இன்பம் என்று மட்டும் நினைக்கும் ஒரு சுயநலப் பிசாசையா காதலித்திருக்கிறேன்... வெட்கம்.. மகா வெட்கம்!

ஊகூம்... அது காதல் கிடையாது... நான் விரும்பியது அவள் அழகை... அழகு மேனியை மட்டுமே... இது காதலாக இருக்க முடியாது. வெறும் இனக்கவர்ச்சி மட்டுமே... கல்லூரிக் காதல் பெரும்பாலும் இனக் கவர்ச்சியாகவே இருக்கும் என்று சொல்வது உண்மைதான்.

கள்ளை பால் என்று நினைப்பது மாதிரிதான். ஆனால் கள் சத்தியமாய் பாலாகாது என்பது இப்போது புரிகிறது.

தோளை அழுத்திய அவளது தலையை விலக்கி விட்டு எழுந்து கொண்டான் அவன்.

''நளினா... உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும்'' என்று சொன்னான்.

என்ன என்பதுபோலப் பார்த்தாள் அவள்.

''உனக்கும்... எனக்கும் இனி சரி வராது... நாம் பொருத்தமில்லாதவர்கள்... நாம் இனி சேர்ந்து வாழ்வது என்பதெல்லாம் நடக்காத விஷயம்...''

அப்பாடா... ஒரு வழியாக விஷயத்தை வெளிப் படுத்தி விட்டோம் என்ற திருப்தி அவனுக்கு...

ஆனால் அவளுக்கு...

தலையில் இடி விழுந்த மாதிரி செயலற்று.. அவனையே வெறித்தாள்.

கொஞ்ச நாளாய்... அவன் விலகிச் செல்கிறானோ என்ற ஐயம் அவளுக்கு தோன்றினாலும்... ஒரு போதும் இருக்காது. தனது அழகும்.. கவர்ச்சியும் அவனை எப் போதும் கட்டி வைத்திருக்கும் என்ற அபார நம்பிக்கை இருந்தது.. ஆனால் அதற்கு இன்று சரியான மரண அடி!



ஒருவாறு சுதாரித்துக் கொண்டு கேட்டாள் நளினா...

''நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை ஸ்ரீ... நீங்களும் நானும் காதல் பறவைகளாச்சே... அதை மறந்து ஏதேதோ பிதற்றுகிறீர்கள்... ஓ! இப்ப.. புரிந்தது ஸ்ரீ... சக்ரபாணி எனக்கு நிறைய சொத்து வைத்துவிட்டு போனதால்... பொருத்தம் இல்லை என்கிறீர்களாக்கும்... என் செல்ல... அசட்டு ஸ்ரீ... பணம் இப்போத்தான்... அதற்கு முன்னாலே நாம் பொருத்தமான ஜோடியாயிற்றே. கல்லூரி மாணவர்கள் பொருமலுடன் சொன்னதை மறந்து விட்டீர்களா ஸ்ரீ... 'மேட் ஃபார் ஈச் அதர்' ஜோடின்னு... பணத்தை மறந்துவிட்டு... அன்பா பழகுவதை மட்டுமே நினைப்போமே... ப்ளீஸ்... சியர் அப்... டார்லிங்..''

இல்லை ...து கன்னத்தை வருடி அவள் சொல்ல... தீயைத் வந்ததா...'' போல விலகிச் சென்றான் ஸ்ரீகாந்த்.

எகத்தாளமாய் கேட்டாய் பற்றிக் குறிப்பிடவில்லை.

''மீனாவை இதில் இழுக்காதே...டியும் நளினா... நான் அவன். ...த்திலும் பொருந்த

''ஏன்... ஏன் இழுக்கக் கூடாது... நான் இல்லை... வைத்து உங்களுக்கு மனைவியாக்கியதற்கு.. எ... உலை வைத்து விட்ட துரோகி அவள்... அவளைப் பற்... பேசக்கூடாதோ...

உண்மையில் உங்களுக்கு குற்ற உணர்வு... அவளை 'டம்மி' மனைவியாக வைத்திருக்கோமே என்ற குறுகுறுப்பில் தான் வந்திருக்கும்... யோசித்துப் பாருங்கள் ஸ்ரீ...''

''ஆம்... அவளை இந்தப் பொய்யான நாடகத்தில் சம்பந்தப் படுத்தியதில் எனக்கும் சங்கடம்தான்...

"நிதானமாய் யோசித்துப் பார் நளினா... முறை கேடான உறவுக்கு நாம் இருவருமே பொறுப்புதான்... தப்பு என்று தெரிந்தும் நாம் பழகினோம்... உன்னை மறுபடியும் பார்த்தபோது பழைய நினைவுகளில் தடுமாறிப் போனது நிஜம். அதை ஒத்துக் கொள்கிறேன்... அப்போதே இன்னொருத்தரோட மனைவியென்பதை நினைவில் வைத்துக் கொண்டு 'அலோ' என்று கைக் குலுக்கி விட்டுச் சென்றிருக்க வேண்டும்தான். ஆனால் வயதானவருக்கு வாழ்க்கைப்பட்டதை நினைத்து நீ அழுததைப் பார்த்து... பணத்தைத் தவிர வேறு சுகமும் எனக்கில்லை என்று கண்ணீர் சிந்தியதைக் மனம் கரைந்து விட்டது... எனக்குள் தடுமாற்ற போது நீ என்னிடம் குழைந்து பேசியதும் படவில்லை... உனக்கு மணவாழ்க்கை ...ணடும்" யென்றால்... 'டிவோர்ஸ்' வாங்கி வா.. தயார் என்றேன்..."

...த்தாள் அவள்.

"அது எப்படி ...கும் இனி சரி வராது... நாம் ஆரம்பித்தவ ...ர்கள்... நாம் இனி சேர்ந்து வாழ்வது

"நா... ம நடக்காத விஷயம்..."

ஆ... ாடா... ஒரு வழியாக விஷயத்தை வெளிப் ...தி விட்டோம் என்ற திருப்தி அவனுக்கு...

ஆனால் அவளுக்கு...

தலையில் இடி விழுந்த மாதிரி செயலற்று.. அவனையே வெறித்தாள்.

கொஞ்ச நாளாய்... அவன் விலகிச் செல்கிறானோ என்ற ஐயம் அவளுக்கு தோன்றினாலும்... ஒரு போதும் இருக்காது. தனது அழகும்.. கவர்ச்சியும் அவனை எப் போதும் கட்டி வைத்திருக்கும் என்ற அபார நம்பிக்கை இருந்தது.. ஆனால் அதற்கு இன்று சரியான மரண அடி!



"அடடா... எட்டாத பழமாய் இருந்தப்போ இனித்த நளினா.. இப்போ கைக்கிட்டிய போது கசந்து போய் விட்டாள்... அப்படித்தானே.." குத்தலாக அவள் கேட்டாள்.

"ஊகூம்... அருகில் இருந்தபோதெல்லாம் அறிவுக்கு எட்டாத உண்மைகள்... விலகி இருந்தபோதுதான் உறைத்தது.

அந்த கசப்பான உண்மை என்ன தெரியுமா... உன்னையும் என்னையும் ஈர்த்து இணைய வைத்தது காதல் இல்லை... வெறும் இனக்கவர்ச்சிதான்... காதல் என்பது ஒரு புனிதமான உணர்வு... அது இதயத்தை தொட்டு வரும். நம்மிடையில் சத்தியமாய் அப்படி இல்லை... அதை நன்கு உணர்ந்து கொண்டேன்..."

"ஓகோ.. இதை நீங்களாக உணர்ந்த உண்மையா... இல்லை அந்த மீனா ஊட்டிய ஒழுக்க உணர்வால் வந்ததா..."

எகத்தாளமாய் கேட்டாள் நளினா.

"மீனாவை இதில் இழுக்காதே... ப்ளீஸ்..." என்றான் அவன்.

"ஏன்... ஏன் இழுக்கக் கூடாது... நானே பார்த்து வைத்து உங்களுக்கு மனைவியாக்கியதற்கு.. எனக்கே உலை வைத்து விட்ட துரோகி அவள்... அவளைப் பற்றி பேசக்கூடாதோ...

உண்மையில் உங்களுக்கு குற்ற உணர்வு... அவளை 'டம்மி' மனைவியாக வைத்திருக்கோமே என்ற குறுகுறுப்பில் தான் வந்திருக்கும்... யோசித்துப் பாருங்கள் ஸ்ரீ..."

"ஆம்... அவளை இந்தப் பொய்யான நாடகத்தில் சம்பந்தப் படுத்தியதில் எனக்கும் சங்கடம்தான்...

ஆனால் இப்போ நான் சந்தோஷப்படுகிறேன்.. மீனா மாதிரி ஒரு மனைவி எனக்குக் கிடைத்ததில் பெருமைப் படுகிறேன்... உண்மையில் நான் அதிர்ஷ்டசாலிதான்... அதற்கு உனக்குதான் நான் நன்றி சொல்ல வேண்டும் நளினா..."

"ஓ! இப்போது புரிகிறது. இப்போது நான் ஏன் வேண்டாதவளாகிப் போனேன் என்று. ஏறுவதற்கு ஏணி மாதிரி நான் தேவைப்பட்டேன். ஏறியதும் எட்டி உதைத்தாகி விட்டது. ம்ம்... எத்தனை நாளைக்கு இந்த மீனா மோகம். அதுவும் கொஞ்ச நாள் தான். அப்புறம் ஒரு வீணா கிடைத்தால்... மீனாவைத் துரத்தி விடுவீர்கள். ஆம்பிளையோட சபல புத்தி எனக்குத் தெரியாதாக்கும். மலர்களைச் சுற்றும் வண்டு ரகம்..." மனக்குமுறலைக் கொட்டினாள் நளினா.

ஒரு ஏழை மீனா... அனாதை மீனா.. தன்னை வென்று விட்டாளே என்ற ஆத்திரம் அவளை ஆட்டிப் படைத்தது.

அதற்கு மேல் அங்கு இருக்கப் பிடிக்காமல் புறப் பட்டான் ஸ்ரீகாந்த்.

"வருகிறேன். நளினா... உன் மனதைப் புண் பண்ணி யிருந்தால் தயவு செய்து மன்னித்து விடு. குட்பை!" என்று சொல்லிவிட்டு நடந்தவனைத் தொடர்ந்தாள் அவள்.

"நில்லுங்கள் ஸ்ரீ... நிச்சயமாகத் தெரியுமா... மீனாதான் வேண்டும் என்று... அப்புறம்... மீனா இல்லை என்றால் மறுபடியும் என்னிடம் தான் நீங்கள் வரவேண்டும்.."

"நிச்சயமாய் அது நடக்காது... நெவர்... இத்தனை நாள் இருந்த மாதிரி கண் மூடித்தனம் இல்லை இது... நன்கு உணர்ந்த பின்பு எடுத்த முடிவு இது... இன்னொரு விஷயம்... என் வேலையை விட்டுவிட உத்தேசம்.



முடிக்க வேண்டிய அலுவல்களை சீக்கிரம் முடித்துவிட்டு வினோத்திடம் ஒப்படைக்கிறேன். ஒரு வாரத்தில் ராஜினாமாக் கடிதத்தை தந்து விடுவேன்... இதுதான் நம் கடைசி சந்திப்பு."

வெளிவந்தபோது... ஏதோ மலையாய் அழுத்திய பாரம் சட்டென்று இறங்கியது போல ஒரு நிம்மதி யுணர்வு...

மனம் பஞ்சுபோல இலேசாகியது...

இதுநாள் வரை இதயத்தைச் சுற்றி இருந்த இரும்பு சுவர் பட்டென்று அறுந்து விழுந்து... இதயம் சீராய் துடிக்க ஆரம்பித்தது போல பிரமை...

'லப்டப்' என்ற ஓசையில்லாமல்... மீனா.. மீனா என்ற முணுமுணுப்பாய்...

அந்த ஆனந்தத்தில் அவனையும் அறியாமல் விசில் அடித்தான்... உல்லாசமாய்...

இனி எந்தத் தடையும் இல்லை... என் மனதை என்ன வளுக்கு திறந்து காட்டி.. என்னுள் நிறைந்திருப்பவள் நீதான் என்பதை உணர்த்தி... இனிய வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும்... உடம்பெல்லாம் சிலிர்த்தது... ஆனால்... அதற்கும் நேரம் வரவில்லையே.

# 19

திரும்பத் திரும்ப ஸ்ரீகாந்திற்கு போனில் தொடர்பு கொள்ள முயன்று... அது முடியாமல் தவித்தாள் மீனா...

அவனது 'செல்போன்' அணைக்கப்பட்டிருந்தது.

அத்தையை உடனே ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்ல வேண்டும்... மறுபடியும் நினைவிழந்து போன அவரை எத்தனை நேரம் வீட்டில் வைத்திருக்க முடியும்...

அடுத்த மாதம் ஆப்ரேஷனை வைத்துக் கொள்ளலாம் என்றாரே டாக்டர்... இப்படி மூச்சுப் பேச்சில்லாமல் கிடக்கிறதைப் பார்த்தால் அடுத்த மாதம் வரை தாங்குமா என்று தெரியவில்லை...

கடவுள்... மறுபடியும் மறுபடியும் ஏன் சோதிக்கிறார்.

என் மீது அன்பைப் பொழியும் ஜீவன்களை இப்படி துடிக்க வைத்து சோதிக்கிறாரே... அது நான் செய்த பாவமா...

ஸ்ரீகாந்த் இப்போது எங்கிருக்கிறாரோ...

ஏதாவது விபரீதம் ஆகிவிட்டால்...

ஒருவேளை... நளினா வீட்டில் இருப்பாரோ...

நினைக்கவே நெஞ்சில் வலித்தது...

ஆனாலும் பேசித்தான் ஆக வேண்டும்... பெற்ற தாய் ஆயிற்றே... அவர் வந்தால் தான் நிம்மதி...

உடனே நளினாவின் எண்ணை அழுத்தினாள். 'ரிங்'கானது...

"ஹலோ..." நளினாவின் குரல் கேட்டது.

"நான்... மீனா பேசுகிறேன்... அவர்... என் கணவர் அங்கே இருக்கிறாரா... அவரிடம் அவசரமாய் பேச வேண்டும்." இதயத்தைக் கையில் பிடித்துக் கொண்டு காத்திருந்தாள். தெய்வமே... அவர் அங்கே இருக்கக் கூடாது இறைஞ்சியது உள்ளம்.



ஆனால்...

"டார்லிங்... மீனாவிடம் இருந்து போன்... ஏய்... மீனா.. ஒரு நிமிஷம் இரு... பெட்ரூமில் படுத்து இருக்கிறார்.. போய் கூப்பிடுகிறேன்..." என்று வைத்தவள்... சில நிமிடங்களுக்குப் பின் மறுபடியும் ரிஸீவரை எடுத்துப் பேசினாள்.

"சாரி மீனா... அவருக்கு பேச விருப்பம் இல்லையாம்... என்ன விஷயம் என்று கேட்டு வைக்கச் சொல்கிறார்..."

"இல்லை... அவர்கிட்டே கொஞ்சம் பேச வேண்டும்... அவரைக் கூப்பிடு..."

"என்ன மீனா இது. நான் சொல்ல வேண்டாம் என்று நினைத்தாலும் என்னை சொல்ல வைக்கிறாய்... ஸ்ரீ என்ன சொல்ல வேண்டுமோ... அதை நீங்களே சொல்லக் கூடாதா... நான் எதற்கு நடுவே... எழுந்து வாங்களேன்."

"ஹலோ... நளினா... இப்படி நீட்டி முழங்காமல் நீயே சொல்லிவிடேன். அது என்ன என்று... எனக்கு நேரமாகிறது" பொறுமையிழந்து கேட்டாள் மீனா.

"ஓகே... விஷயத்திற்கு வருகிறேன்... ஸ்ரீகாந்த் என்னுடன் சேர்ந்து வாழ விரும்புகிறார். உன்னிடம் இருந்து சீக்கிரமே மணவிலக்கு கிடைத்தால் பரவா யில்லை என்று நினைக்கிறார். உங்க இரண்டு பேரையும் சேர்த்து வைத்தது நான் என்பதால் இதற்கு என்னையே தீர்வு காணச் சொல்கிறார். இப்ப நிலைமையைப் புரிந்து கொண்டே தானே... எவ்வளவு சீக்கிரம் விலகிக் கொள்கிறாயோ அவ்வளவுக்கு அவருக்கு மகிழ்ச்சியாம்."

"இதை அவரே என்னிடம் சொல்லியிருக்கலாமே... எதற்காக உன்னைத் தூது அனுப்ப வேண்டும்..."

"உன் முகத்தைப் பார்த்து இதையெல்லாம் சொல்ல முடியலையாம்.. அதுதான்... அப்புறம் கண்டிஷன்படி... உன் கணக்கில் பணத்தைப் போட்டு விடுகிறாராம்..."

"தேவையில்லை... முதலில் தந்த பணமே அதிகம். அந்தச் சுமையே உறுத்துகிறது என்று சொல்... அப்படியே இதையும் அவரிடம் சொல்லிவிடு... அவருடைய அம்மாவிற்கு சீரியஸ்... இப்போ ஆஸ்பத்திரியில் சேர்க்கப் போகிறேன் என்று... தாய் மீது பாசம் இருந்தால் வரட்டும்..."

"என்ன... அவருடைய தாய்க்கு சீரியஸா... நல்லதா போச்சு... அவருக்காக போட்ட வேஷம் கலையும் நேரம் வந்தாச்சுன்னு சொல்லு..." நளினாவின் சிரிப்பைக் கேட்டு பற்களைக் கடித்தாள் மீனா.

கிராதகி... வயதான ஜீவன் ஒன்று ஜீவ மரணப் போராட்டத்தில் இருக்கிறது. அது இவளுக்கு வேடிக்கையாக இருக்கிறதாக்கும்...

'டக்' என்று ரிஸீவரை வைத்தாள் மீனா.

இங்கே நளினா பலமாய் சிரித்தாள்.

வெற்றிக் களிப்பில் வந்த சிரிப்பு... மீனாவை வார்த்தைகளால் வாட்டி வதைத்து விட்டோம் என்ற எக்காளச் சிரிப்பு.

என்னவோ மாய்மாலம் செய்து என் ஸ்ரீகாந்தை வளைத்து விட்டாளே... அவளை சும்மா விடுவதா... குரூரமாய் நினைத்தாள் நளினா.

லாட்டரி அடித்துக் கொண்டிருந்தவளை... லாட்டரி அதிர்ஷ்டம் வந்தது மாதிரி ஒரு வாழ்க்கை அமைத்துக்



கொடுத்ததற்கு என்னையே பதம் பார்க்கிறாளா... வளர்த்த கடா மார்பில் முட்ட வருவது போல...

இந்த நளினா யார் என்று காட்ட வேண்டும்... அவளைப் பழி வாங்க வேண்டும் என்று கொதித்தவள்...

மீனாவே போன் செய்ததும்... தன்னுடன் ஸ்ரீகாந்த் சேர்ந்து உல்லாசமாய் இருப்பது போல பாவனை செய்து... மீனாவின் மிருதுவான உள்ளத்தை நார் நாராய் கிழித்து விட்டாள். இத்தனை நேரம் அம்மணி பெட்டி படுக்கையெல்லாம் மூட்டைக் கட்டிக் கொண்டிருப்பாள்.

நீயாச்சு... உன் அம்மா ஆச்சு.. எனக்கெதுக்கு தலைவலி என்று உதறிவிட்டு கிளம்பப் போகிறாள்.

பாவம்... மகா கனம் பொருந்திய ஸ்ரீமான் ஸ்ரீகாந்த் அவர்கள் விழிக்கப்போகிறார்.

அதை நான் கண்ணாரப் பார்க்க முடியவில்லையே... திரும்ப என்னிடமே ஓடி வருவார். அப்போது வைத்துக் கொள்கிறேன்...

உள்ளுக்குள் கொக்கரித்தாள் நளினா... கோபத்தில் அவள் முகத்தின் அழகு காணாமல் போய்... பதிலாய் வக்கிரமாய் தெரிந்தது.

மறுபடியும் மருத்துவமனை வருகை... சலித்துப் போனது மீனாவிற்கு...

சாரதாவை அள்ளிப் போட்டுக் கொண்டு மருத்துவ மனைக்கு வந்தாள் அவள்...

சாரதாவின் நிலையைப் பார்த்து பதட்டம் அடைந்தார் டாக்டர்... "ஏம்மா.. உடனே அழைத்துக் கொண்டு வரக்கூடாதா.. நிலைமை கொஞ்சம் சீரியஸாகவே

தெரிகிறது... உடம்பு தாங்குகிறதோ.. இல்லையோ... உடனே சிகிச்சையை ஆரம்பிக்க வேண்டும்.. பேஷண்டோட 'சன்' வரவில்லையா... அவர் கையெழுத்து போட்டாக வேண்டும்மா. உடனே வரச்சொல்லும்மா.. இனி காலம் தாழ்த்துவது நல்லதல்ல...'' என்றார்.

மீனாவிற்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. தாயின் நிலைமை கவலைக்கிடம் என்று தெரிந்தும்... தன் காதலியுடன் உல்லாசத்துடன் இருக்கிறார் என்று டாக்டரிடம் சொல்ல முடியுமா என்ன...

இப்படிப்பட்ட மகனைப் பெற்ற அத்தையைப் பார்க்க பரிதாபம் ஏற்பட்டது...

அதைவிடக் கொடுமை... நளினா போன்ற கொடூர மனம் படைத்தவள் மருமகளாக வர இருப்பது தான்...

அந்தக் கஷ்டத்தை விட இப்போதே அத்தையின் உயிர் போவதே மேல்... நெஞ்சை வெடித்துக் கொண்டு விம்மல் வந்தது...

அத்தைக்காக அழுகிறோமா... இல்லை... ஸ்ரீகாந்தை விட்டுப் பிரியப் போகிறோமே என்று அழுகிறோமா... என்று தெரியாமல் அழுதாள்.

மறுபடியும் ஸ்ரீகாந்தின் 'செல்'லுக்கு முயன்றாள். ஊகூம் பலன் இல்லை...

இந்த மனிதர் வெளி உலகத் தொடர்பே வேண்டாம்... நளினா தான் உலகம் என்று அங்கேயே இருந்து விட்டாரா...

அய்யோ... அத்தைக்கு ஏதாவது ஆகி விட்டால்...

ஆகிவிட்டால் என்ன... ஆக வேண்டும் என்று தானே நளினாவின் எதிர்பார்ப்பும்... அப்புறம் எந்தத் தடையும்



கிடையாது... இருவரும் சேர்ந்து கொட்டமடிக்கலாம்... சோர்ந்து போய் நாற்காலியில் அமர்ந்து கண்களை மூடிக் கொண்டாள் மீனா.

நிமிடங்கள் கழிந்தன.

''மீனா... மீனா... அம்மாவுக்கு என்ன ஆச்சு...!'' ஸ்ரீகாந்தின் பதட்டக் குரலில் விழித்தாள்.

ஓ... இப்பத்தான் பெற்றவளின் நினைவு வந்ததாக்கும்.

''ஆபீஸுக்குப் போனபோது... நீ ஃபோன் பண்ணினதாக சொன்னார்கள்... அதான் ஓடிவந்தேன்...''

''ஓகோ... அப்ப அந்த மகாராணி வாய் திறக்கவில்லையோ... தெரியும். அவள் சொல்லியிருக்க மாட்டாள் என்று...''

''உங்க 'செல்'லுக்கு 'டிரை' பண்ணினேன்... அதை அணைத்து வைத்திருந்தீர்கள் போலிருக்கு...''

''ஆமாம்... ஏதோ முக்கியமான விஷயம் பேச வேண்டி இருந்தது... அதான்... இடைஞ்சலாய் இருக்க வேண்டாமே என்று...''

''எங்கே.. நளினாவின் வீட்டிலா...''

திகைப்புடன் கேட்டான்... ''உனக்கு எப்படித் தெரியும்...''

''நான் கேட்டதற்கு நீங்க முதல்ல பதில் சொல்லுங்கள்... அப்புறம் நான் சொல்கிறேன்.''

''ஆமாம் நளினாவைப் பார்க்கத்தான் போயிருந்தேன்.. அவளிடம் பேச வேண்டியிருந்தது... அதான்..''

பேச மட்டுமா... இல்லை... அதற்கு மேலும்... சே!

ஆக நளினா சொன்னதெல்லாம் உண்மை... அங்கிருந்தவாறே... பேசப் பிடிக்காமல்... நளினாவைப் பேசச் சொல்லியிருப்பதும் நிஜம்... கொஞ்ச நஞ்சம் இருந்த நம்பிக்கையும் செத்துப் போனது.

''ஆமாம்.. நளினா வீட்டிற்குப் போனது உனக்கு எப்படித் தெரியும்...''

''நளினாவிற்குப் போன் பண்ணி உங்ககிட்டே பேச வேண்டும் என்றேன்.. அப்போதுதான் நீங்க அங்கே போனது தெரிய வந்தது. அத்தை சீரியஸ்னு சொன்னேனே... நளினா சொல்லவில்லையா... இப்ப உங்க கையெழுத்து வேண்டுமாம். டாக்டர் காத்திருக்கிறார். சீக்கிரமா போய் போடுங்க... அத்தையோட நிலைமை கவலைக்கிடமாய் இருக்கிறதாம்...'' சொல்லும்போதே நெஞ்சையடைத்தது அவளுக்கு.

ஸ்ரீகாந்த் டாக்டரை நோக்கி விரைந்தான்.

அவசர கதியில் டாக்டர்கள் செயல்பட்டனர். சாரதாவை ஓ.டி.க்குள் கொண்டு சென்றார்கள்.

வினாடிகள் கரைந்து நிமிடங்களாகி... நிமிடங்கள் கரைந்து மணித்துளிகளாகக் கடந்தன...

மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு காத்திருந்தனர் ஸ்ரீகாந்த்தும்... மீனாவும்.

எப்போதும் ஓ.டி. கதவு திறக்குமோ. டாக்டர் வந்து என்ன சொல்வார்களோ என்று பதைப்புடன் காத்திருந்தனர் இருவரும்...

இதயத் துடிப்பு பலமாய் கேட்டது.

அத்தைக்கு மட்டும் இது வாழ்வா சாவா போராட்டம் இல்லை... தனக்கும்தான்...



அத்தைப் பிழைத்து வந்தால் அவளுக்கு வாழ்க்கை... இல்லையென்றால்... அதை நினைக்கவும் பிடிக்கவில்லை. இத்தனைக்குப் பிறகும் இந்த வாழ்க்கை தேவையா என்று மனக்குரல் இடித்தது...

ச்சீ... போ என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளும்வரை இருக்கக் கூடாது என்று தன்மானம் அடம் பிடித்தது.

ஆனால் ஸ்ரீகாந்த்தை விட்டுப் பிரிந்து வாழ வேண்டுமே என்ற ஏக்கம் அவளை பரிதவிக்க வைத்தது...

ஆப்ரேஷன் தியேட்டரின் வெளியில் எரிந்த விளக்கு அணைந்தது.

வெளியே வந்த டாக்டர் ஸ்ரீகாந்தின் அருகே வந்து சொன்னார்.

''எங்களது கடமையை செய்திருக்கிறோம்... பேஷண்ட் நிலைமையைப் பற்றி... இருபத்து நான்கு மணி நேரம் கழித்துதான் சொல்ல முடியும்... மிஸ்டர் ஸ்ரீகாந்த்... காலையிலிருந்து உங்க மனைவி எதுவும் சாப்பிடாமலே இருக்காங்க. முதல்ல அவரைக் கவனியுங்கள்...'' அவரது வார்த்தைகளில் வயிற்றைப் புரட்டிப் போட்டதைப் போல உணர்வு...

அவர் அங்கிருந்து சென்றதும்... மீனாவைப் பார்த்து, ''ஓட்டலுக்குப் போகலாமா மீனா'' என்று கேட்டான்.

''எனக்கு எதுவும் வேண்டாம். பிளாஸ்க் இருக்கு... எனக்கு சூடா காபி வாங்கி வந்தால் போதும்...'' என்றாள் அவள்.

அவனும் வற்புறுத்தவில்லை... பிளாஸ்கை வாங்கிக் கொண்டான்.

''ஒரு நிமிஷம்... கௌரி சித்திக்கு ஃபோன் பண்ணி சொல்லி விடுங்கள்...'' என்றதும் தலையசைத்துவிட்டுச் சென்றான் ஸ்ரீகாந்த்.

இருபத்தி நான்கு மணி நேரம் கழிய வேண்டும்...

'டென்ஷனில்' இறுகிப் போனாள் மீனா...

மெல்ல மெல்ல நேரம் கரைந்தபோது... நம்பிக்கைத் துளிர் விட ஆரம்பித்தது...

அந்த நம்பிக்கைத் தந்த தெம்பில்... சுவற்றில் தலையை சாய்த்து கண்களை மூடிக் கொண்டாள்.

களைப்பும்.. டென்ஷனுமாய் சேர்ந்து அவளைத் தூங்க வைத்தன.

எத்தனை நேரம் தூங்கினாளோ... தெரியாது.

திடீர் என்று ஸ்ரீகாந்த் அவளை உலுக்குவது தெரிந்தது.

''மீனா... மீனா... எழுந்திரேன்...''

கண்களைத் திறந்தாள்.

ஸ்ரீகாந்த்தின் முகத்தில் இருந்த கலக்கத்தைக் கண்டதும் வயிற்றில் பகீர் என்றது.

''என்ன ஆச்சு... அத்தைக்கு...''

''அம்மா போயிட்டாங்க... டாக்டரால் பிழைக்க வைக்க முடியவில்லை... கடைசியில் எதுவும் பேசாமலே போயிட்டாங்க மீனா...'' என்று கதறினான்.

அப்படியே தொய்ந்து விழுந்தாள் அவள்.

கண்களில் தாரையாய் கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

சிறு பிள்ளையாய் கலங்கி அமர்ந்திருந்த கணவனை நெஞ்சில் சாய்த்துக் கொண்டு ஆறுதல் சொல்ல வேண்டும் என்று துடித்தாள்...



ஆனால்.. தயக்கம் அவளை இறுத்தி நிறுத்தியது.

எனக்கு அந்த உரிமை ஏது...

அத்தையின் சாவுதான் முடிவுரை... இனியென்ன... திரையும் விழுந்துவிட்டது...

இனி... மிஸஸ் மீனா ஸ்ரீகாந்த்... வெறும் மீனாவாக திரும்பிச் செல்லும் நேரம் வந்துவிட்டது...

அழுகை வெடித்துக் கிளம்பியது... அழுதாள்...

அது அத்தைக்காகவா... தன் அவல வாழ்விற்காகவா என்பதுதான் தெரியவில்லை.

## 20

உடையை மாற்றிக் கொண்டு ஒரு தடவை வீட்டைச் சுற்றிப் பார்த்தாள் மீனா...

இருந்தது கொஞ்ச காலம் தான்... விரல் விட்டு எண்ணக் கூடிய நாட்கள் தான்.

ஆனால் ஏதோ காலம் காலமாய் அங்கேயே வாழ்ந்த மாதிரியும்... அங்கிருந்து செல்வது இயலாத காரியம் போல... ஒரு வேதனை அவளைப் பிடுங்கியது.

சாரதாவின் போட்டோவில் இருந்த பூவும்... அருகில் சுடர் விடும் விளக்கும் அவர் தெய்வமாகிப் போனதை உணர்த்தினாலும் இன்னும் அவளால் அதை நம்ப முடியவில்லை...

அத்தை இன்னும்... இந்த வீட்டில் படுத்திருப்பது போல பிரமை...

'அம்மா... மீனா... ஸ்ரீகாந்த் வந்தானா... எதாச்சும் சாப்பிட்டேயா...' அந்தப் பாசக்குரல் எங்கிருந்தோ ஒலிப்பது போல உணர்ந்தாள்.

'அத்தை... நான் போகிறேன்... இனி இந்த வீட்டில் எனக்கு இடமில்லை... உங்கள் பிள்ளையின் வாழ்க்கையிலும்தான். அவர் வந்து நீ புறப்படு என்று சொல்லும் வரை எனக்கு இருக்கப் பிடிக்கவில்லை... உங்களுக்கு மருமகளாக இருந்த திருப்தியே எனக்குப் போதும்... உங்கள் ஆசிமட்டும் வேண்டும்...' மனமுருக... மானசீகமாக... அந்த அன்புத் தெய்வத்தை வேண்டிக் கொண்டாள்....

மருத்துவமனையில் ஸ்ரீகாந்த் அவளை எழுப்பி... தன் தாய் இறந்த செய்தியை சொன்னதும் அவளது சப்த நாடியும் ஒடுங்கினாற்போல சரிந்தாள்...

தன்னை வளர்த்த அத்தை இறந்துவிட்ட துக்கத்தை... தாயாக இருந்து பாசம் காட்டிய மாமியாரின் மூலம் மறந்தவள்... இப்போது அவரும் போய்விட்டாரே என்ற துயரம் அலைகழித்தது.

அதுமட்டுமா... அவருடன் இந்த உறவு சங்கிலியும் 'பட்'டென்று அறுந்து விட்டது! ஸ்ரீகாந்திற்கு மனைவியாக இல்லாவிட்டாலும்... சாரதாவிற்கு நல்ல மருமகளாய் இருந்தாயிற்று. அது மட்டும் நடிப்பல்ல... மனப்பூர்வமாய் அவருக்கு பணிவிடை செய்தது உண்மை. அவர் மறைந்ததும் இந்த நாடகத்திற்கும் முடிவு வந்து விட்டது விழட்டுமா... விழட்டுமா என்று காத்திருந்த திரையும் விழுந்துவிட்டது.

இனி... நான் யாரோ... இந்த ஸ்ரீகாந்த் யாரோ... இத்தனை சீக்கிரம் இப்படியெல்லாம் நடந்து முடிந்து விடும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை....



இப்படி ஆகும் என்று தெரிந்திருந்தால்... ஒருவேளை ஸ்ரீகாந்த் இந்த திருமணத்திற்கு ஒத்துக் கொண்டிருக்க மாட்டாரோ... என்னவோ... அதுதான்... சொல்வது. நாளை நடப்பது யார் அறிவார்...

மனித வாழ்வே மூடு திரை... மர்ம நாவல்... திருப்பங்களும்... எதிர்பாராத சிக்கல்களும் நிறைந்த திகில் சித்திரம்!

பாவம்... ஸ்ரீகாந்த்தும் நளினாவும்... இன்னும் கொஞ்ச நாட்கள் பொறுமையாக இருந்திருக்கலாம்....

எங்கேயோ இருந்த ஏமாளி மீனா இதில் சம்பந்தப்பட்டிருக்க வேண்டாம்... என்று எண்ணியவள்...

அய்யோ... பாவம்... அத்தையை நினைத்துப் பார்க்க வேண்டாமா அவரை யார் கவனித்திருப்பார்கள்... நளினா திரும்பியும் பார்த்திருக்க மாட்டாளே...

குதிரை மாதிரி அல்லவா திரிவாள்...

அதுவும் அத்தை சொன்னமாதிரி சண்டிக் குதிரை!

அதை நினைத்த போது அந்த நேரத்திலும் அவளுக்கு சிரிப்பு வந்தது...

அத்தை சரியாகத்தான் கணித்திருக்கிறார்... அந்த நல்ல உள்ளத்திற்காகவே கடவுள் என்னை இங்கு அனுப்பி வைத்தாரோ என்னவோ...

இருக்கலாம்...

இனி இங்கே என்ன வேலை... புறப்பட வேண்டியதுதான்.

ஸ்ரீகாந்த் வருவதற்கு முன் புறப்பட வேண்டும்.

ஆயிற்று... தன் உடைமைகளை எடுத்து வைத்துக் கொண்டாயிற்று... அவன் வாங்கித் தந்த நகைகளை

யும்... உடைகளையும் பீரோவில் வைத்துப் பூட்டி விட்டு... சாவியை அவனது பார்வை படும் இடத்தில் வைத்தாகி விட்டது.

என்ன... ஸ்ரீகாந்திடம் 'போகிறேன்' என்று கூட சொல்ல முடியவில்லையே... என்ற ஏக்கம் உள்ளத்தை அரித்தது.

இப்போதைய மனநிலையில் அவனது முகத்தைப் பார்க்கவும் திராணி இல்லை...

அவன்மீது எரிச்சலும் கோவமும் வந்ததே தவிர... ஏனோ வெறுப்பு வர மறுத்தது.

மறுபடியும் விளக்கைத் தொடும் விட்டில் பூச்சியாய் நளினாவிடம் விழுந்து கிடக்கிறாரே என்ற எரிச்சல்...

அவருக்கு வெட்கம்... மானம்... சுரணை இல்லையா என்ற கோபம்...

அதைவிட பாழும் பெண்மனம்... கணவராக இருந் தவனை மறக்க முடியாமல் தவிக்கும் தவிப்பு..

பெருமூச்சு விட்டவள் பெட்டியை எடுக்கப் போகும் போது வாசல் கதவு தட்டப்பட்டது...

ஸ்ரீகாந்த் வந்துவிட்டாரோ... கடவுளே... இத்தனை சீக்கிரமாகவா... அதான் சொல்லிவிட்டுப் போனாரே...

'மீனா... இன்றைக்கு உன்னிடம் மனம் விட்டுப் பேச வேண்டும். அம்மா இறந்து போன துக்கம்... இத்தனை நாள் தள்ளிப்போட்டது ஆயிற்று.... இன்றைக்கு நாம் பேசியே தீர வேண்டும்... ஆபீஸிக்கு போய் விட்டு வந்து விடுகிறேன்... வந்ததும் ஆர அமற பேசி இதற்கு ஒரு தீர்வு காண்போம்...' என்றாரே...



சீக்கிரமே தீர்வு காணவேண்டும் என்ற அவசரத்தில் வந்து விட்டாரோ...

சீக்கிரமே என்னை வெட்டிவிட வேண்டும் என்ற துடிப்பு!

மெல்லப் போய் கதவை திறந்தவள்... வெளியே புன்னகையுடன் நின்றிருந்த சேது மாதவனைக் கண்டதும் திகைத்துப் போனாள்....

இவரா... திடீர் என்று வந்திருக்கிறாரே... எதற்கு... 'பே' என்று விழித்து நின்றிருந்த மீனாவிடம்...

''என்னம்மா... என் தலையில் ஏதாவது புதுசா கொம்பு முளைத்திருக்கா... விசித்திரமா பார்க்கிறே...'' என்று கிண்டல் செய்ய...

அப்போதுதான் விருந்தோம்பல் நினைவு வந்தது அவளுக்கு.

''வாங்க சித்தப்பா... என்ன... திடீர் என்று... போனும் பண்ணாமல்...'' என்று கேட்டாள்.

வீட்டுக்குள் நுழைந்தவாறே பேசினார் அவர்.

''அதை ஏன் கேட்கிறே... இங்கே வந்து விட்டு ஊர் போனதிலிருந்து உன் சித்திக்கு சரியா தூக்கமே இல்லை... உன்னைப் பத்திய கவலைதான்... அக்கா துணை இப்ப இல்லையே... ஒண்டியாய் என்ன செய்கிறாளோ.. என்ற பயம் தான்... என்னை நச்சரித்து விட்டாள்... காலம் கெட்டுக் கிடக்கு... நீங்க ஒரு நடை போய் பார்த்துவிட்டு வரக்கூடாதான்னு துளைத்து விட்டாள்... பொண்டாட்டிப் பேச்சை மீற முடியுமா... அப்புறம் ஒரு வாய் சாப்பாடும் கிடைக்காதே... அதான் கிளம்பி வந்தேன்...''

அவரது கண்களில் தயாராக இருந்த பெட்டி பட்டது.

"அதென்னம்மா பெட்டி... எங்கேயாவது புறப்பட்டாயா... என்ன.. நீயும் ரெடியா இருக்கே... ஸ்ரீகாந்தைக் காணோமே... என்னம்மா மீனா... என்ன விஷயம்" என்று அவர் கேட்டதும்...

என்ன சொல்வது என்று திகைத்து 'வந்து... மாமா...' என்று மென்று விழுங்கினாள்.

"உன் சித்தி இதுக்காகத்தான் என்னை அனுப்பிவைத்தாள் போல.. இங்கே ஏதோ ஏசகு பிசகாய் நடந்திருக்க வேண்டும்.... உன் கண்களில் வீக்கம் தெரிகிறது... அழுதாயா... என்கிட்ட என்ன பிரச்சனைன்னு சொல்லும்மா... என்னை உன் அப்பாவா நினைச்சுக்கோ... புவனா மாதிரி நீயும் எனக்கு பொண்ணுதான்..." சேது சித்தப்பா சொன்னதும்...

ஏதாவது தோள் கிடைக்காதா... தலை சாய்த்து அழ மாட்டோமா என்று ஏங்கி தவித்தவளுக்கு... வாஞ்சையோடு அவர் கேட்டதும்... அவரது தோளில் சாய்ந்து விம்மினாள். விம்மலுக்கு இடையே... சக்ரபாணி இறந்ததிலிருந்து நடந்ததைச் சொன்னாள்... ஸ்ரீகாந்த் காதலிப்பது நளினாவைத்தான்... தான் உப்புக்குச் சப்பாணியாய் வந்த மனைவி... அத்தைக்காக தன்னை மணந்திருப்பது என்பதால்... இப்போது தன் நிலை கேள்விக்குறியாய் ஆகியதை விளக்கமாகச் சொன்னாள்.

சிறிது நேரம் ஏதோ யோசனையில் இருந்த அவர்... நிதானமாய் கேட்டார்.

"சரிம்மா... இப்போது எங்கே கிளம்பினாய்..."



"தெரியவில்லையே சித்தப்பா... எங்குபோவது என்று குழப்பத்தில் இருக்கிறேன்... ஏதாவது வேலைத் தேடிக் கொண்டு..."

"அதெல்லாம் தேவையில்லை... இந்த மடையன் உன் அருமையை உணரணும்.. அவனுக்குப் பாடம் கற்பிக்கணும்னா நான் சொல்கிறபடி செய்... இப்போது என்னோடு கிளம்பு. எங்கள் வீட்டிற்கு வர அவனுக்கு முகம் கிடையாது. அப்படியே வந்தாலும் நாங்கள் 'நறுக்'கென்று நாலு வார்த்தை கேட்டு விட மாட்டோமா... நல்ல வேளை... நான் இங்கே வந்ததும் நல்லதாச்சு... உடனே கிளம்பும்மா..." என்றார் சேதுமாதவன்.

கண்களைத் துடைத்துக் கொண்டாள் அவள்...

உறவு சங்கிலி அறுந்து விட்டது என்று நினைத்தோமே...

இதோ... இந்த உறவுகள் இன்னும் தொடர்கிறதே...

அன்பு இருந்தால் போதும்... உறவு என்றும் நிலைத்திருக்கும்... பொங்கும் மனதுடன் அவருடன் புறப்பட்டாள்.

பித்துப் பிடித்தவன் போல அமர்ந்திருந்தான் ஸ்ரீகாந்த்.

மீனா எங்கே போனாள்...

நான்கு நாட்கள் முழுசாய் ஓடிவிட்டன... மீனாவைப் பற்றி எதுவும் தெரியவில்லை.

கோபியிடம் நாசூக்காய்... அவனுக்கு சந்தேகம் வராதபடி கேட்டாயிற்று... பலனில்லை...

வினோத்தை துளைத்து விசாரித்தாயிற்று... பிரயோசனம் கிடையாது...

தெரிந்த இடம் எல்லாம் கேட்டுப் பார்த்தாயிற்று... பின்னே எங்கே அவள்... சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டு விட்டாள் என்றால்... அவள் மனதில் ஏதோ துக்கம் இருக்க வேண்டும்....

நான் ஏதாவது அவள் மனம் புண்படும்படி பேசினேனோ... இல்லையே... அப்படிப் பேசியதா நினைவுக்கு வரவில்லையே. காலையில் புறப்பட்ட போது அவளிடம் சொன்னது இவ்வளவுதான்.

'மாலையில் ஆபீஸிலிருந்து வந்ததும்... மனம் விட்டுப் பேச வேண்டும்... பேசி தீர்வு காண்போம்' என்று சொன்ன ஞாபகம்... இதில் என்ன இருக்கிறது... புண்படுத்த...' அப்படியே இருந்தாலும் இருந்து சொல்லியிருக்கலாமே... மனம் விட்டுச் சொல்லியிருந்தால் பிரச்சனை இருந்திருக்காது. மனசுக்குள் புழுங்கும்படி அப்படி என்ன நடந்தது... கடவுளே..' தலையைப் பிய்த்துக் கொண்டான் அவன்.

அப்போது நளினாவிடம் இருந்து போன் வந்தது.

"என்ன ஸ்ரீ... உங்க அருமை மனைவி இப்போ உங்களுடன் இல்லை போலிருக்கு..." என்று அவள் சொன்னதும்... அவனுக்கு பொறித் தட்டியது... இவளது கையாடலாய் இருக்கலாமோ...

சந்தேகத்துடன் கேட்டான் "யாரிடம் இருந்து கேள்விப் பட்டாய்" ஒரு கணம் தயங்கிவிட்டு...

"யாரோ... அது முக்கியமா... மீனா ஓடிப் போனது தான் இப்ப முக்கியம்... பார்த்தீங்களா... நான் சொன்னது சரியாச்சா... நாயைக் குளிப்பாட்டி அழகா நடு வீட்டில் வைத்தீர்கள்... இப்ப என்ன ஆச்சு... அது வாலைச் சுருட்டிக் கொண்டு ஓடி விட்டதே... இப்போதாவது அவளோட கீழ்த்தரமான புத்தியைப் புரிந்து கொண்டீர்களா... பாவம்... உங்களைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது..." என்று சொல்லிச் சிரித்தாள் அவள்...



பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு அமைதியாய்... அதே சமயம் அழுத்தமாய் கேட்டான் அவன்.

"மீனா எங்கே... நளினா..."

"என்னைக் கேட்டால்... அந்த ஓடுகாலி கழுதை எங்கே போனாள் என்று யாருக்குத் தெரியும்" இளப்பமாய் சொன்னாள் அவள்.

தாடை இறுகியது அவனுக்கு...

"அவள் சென்ற காரணம் உனக்குத் தான் தெரியும்... உண்மையைச் சொல்..." பற்களை நறநறத்தவாறு வினவினான்.

மறுமுனையில் அவளது 'கலீர்' என்று சிதறிய கண்ணாடியாய் சிரிப்புக் கேட்டது.

"உங்க சகவாசமே வேண்டாம்னு ஓடிவிட்டாளோ என்னவோ... ஒரு தடவை 'செக்' பண்ணுங்க ஸ்ரீ... ஏதாவது விலை உயர்ந்த நகைகள்... பொருள்கள் திருடு போயிருக்கிறதா என்று... ஏழையாச்சே... ஆசை விட்டிருக்காது..."

நளினா மட்டும் எதிரில் இருந்திருந்தால்... அவளது கழுத்தைப் பிடித்து நெறித்திருப்பான்... அத்தனை வெறி அவனுக்கு வந்தது....

இவளுடன் பேசிப் பிரயோசனம் இல்லை என்று தொடர்பைத் துண்டித்தான்.

நிராசை அழுத்த... கண்களை மூடிக் கொண்டு பின்னே சாய்ந்தான்.

மனத்திரையில் மீனா விசுவரூபம் எடுத்து நின்றாள்.

அவனைப் பார்த்துக் கை கொட்டிச் சிரிக்கிறாள்.

மீனா... மீனா... எங்கே இருக்கிறாய்...

என்னை இப்படித் தவிக்க வைத்துவிட்டு எங்கே போனேம்மா... உள்ளம் கிடந்து தவித்தது.

அவள் எங்கே இருக்கிறாள் என்று துளி செய்தி எனக்குக் கிடைத்தாலும் போதுமே.. ஓடிப்போய் அவளை...

மறுபடியும் போனின் சிணுங்கல்...

அசிரத்தையாய் எடுத்துப் பேசினான்.

''ஹலோ...''

''ஹலோ... ஸ்ரீகாந்த்... நான்... கௌரி சித்தி பேசறேன்...'' விட்டேற்றியாய் விசாரித்தான் அவன்.

''எப்படி இருக்கீங்க... சித்தி...''

''நாங்க எல்லோரும் இங்கே நல்லாத்தான் இருக்கோம்... நீ எப்படி இருக்கே.. அதைச் சொல்லு...''

''ப்ச்சு... ஏதோ... இருக்கேன் சித்தி...'' என்றான் விரக்தியுடன்.

''ஸ்ரீகாந்த்... என்ன சுரத்தில்லாமல் பேசறே... உன் அம்மாவோட நினைப்பா.. சரி... உன் அம்மா மாதிரி இப்ப நான் சொல்றேன்ப்பா.. ஏன்... உன் அம்மா



இருந்திருந்தாலும் இதைத்தான் சொல்லியிருப்பாள்... நீ செய்வது நன்றாக இருக்கா... யோசி... நம்ப குடும்ப மானத்தை காற்றில் பறக்க விடாதேப்பா... ஒரு தடவைக்கு இரு தடவை தீவிரமா யோசித்து எந்த முடிவுக்கும் வா... நீ செய்யறது தப்பா இருந்தா... உன் அம்மாவோட ஆத்மா சாந்தியடையாமல் கண்டபடி அலையும்... அது தேவையா... சரி... ஒண்டியாய் இருக்கே... வெளியில் எங்கும் சுத்தாதே... வேளா வேளைக்கு சாப்பிடு... என்ன... சரி வைக்கட்டுமா...'' ஸ்ரீகாந்திற்கு தலையும் புரியவில்லை... காலும் புரியவில்லை. எதற்கு சித்தி திடீர் என்று போன் செய்தார்கள்.. போனில் ஒரு முழத்திற்கு புத்திமதி வேறு.

நான் செய்வது நன்றாக இல்லையாமே... அப்படி என்ன செய்தேன்...

குடும்ப மானத்தைக் காற்றில் பறக்கவிடாதேன்னு அறிவுரை வேறு... அப்புறம் அம்மாவோட ஆத்மா சாந்தியடையாதுன்னு பயமுறுத்தல்.. அப்படி என்ன தப்பு செய்து விட்டேன்...

அதுசரி ஒண்டியாக நான் இருப்பது இவங்களுக்கு எப்படித் தெரியும்... மீனா இங்கு இல்லை என்ற விஷயத்தை நான் யாருக்கும் சொல்லாதபோது...

மேலும்... மீனாவைப்பத்தி விசாரிக்கவும் இல்லை... அப்படியென்றால்...

அவனது மூளையில் பல்ப் எரிந்தது...

மீனா எங்கும் போகவில்லை... கௌரி சித்தியின் வீட்டில் தான் இருக்கிறாள்... பத்திரமாய்...

நிம்மதியுடன் பெருமூச்சு விட்டான்.

அதேசமயம்... நளினா விஷயமும் தெரிந்துதான் இப்படிப் பூடகமாய் பேசியிருக்கிறார் சித்தி என்று நினைக்கும் போது உடம்பு குன்றியது.

மீனாவின் மூலம் எல்லாமே தெரிந்துவிட்டது... ஒப்பந்தத் திருமணம் பற்றி மீனா சொல்லிவிட்டிருப் பாள்...

இனி மீனாவுடன் வாழமாட்டான்... நளினாவை மணக்கப் போகிறான் என்ற பரிதவிப்பில் அப்படி பேசி யிருக்கவேண்டும். மீனா இருக்கும் இடம் தெரிந்து விட்டது என்ற களிப்பில் மான அவமானம் எல்லாம் மறந்தேப் போனது.

தோள்களில் திடீர் என்று சிறகு முளைத்து விட்டது போலவும் வானத்தில் சஞ்சரிப்பது போலவும் பிரமை ஏற்பட....

உடனே புறப்பட்டுவிட்டான்... மீனாவைத் தேடி...

## 21

தொலைவில் இருந்து 'க்க்கூ' என்று குயிலின் குரல் இன்னிசையாய் ஒலித்தது...

மீனாவிற்கு அது சோககீதமாய் பட்டது.

ஒருவேளை அதுவும் தன்னைப்போல் துணையின்றி ஒற்றையாய் நின்று புலம்புகிறதோ என்னவோ...



ஸ்ரீகாந்தின் நினைவு அவளை வாட்டி வதைத்தது. நாள் செல்லச் செல்ல அது குறைவதாய் தெரியவில்லை.

இப்படியா தன் புத்திபேதலித்து நிற்கும்... சமீபத்தில் வந்த உறவு... அதுவும் முழுமையானதும் அல்ல... அரைகுறை மனைவி... மிஸஸ் ஸ்ரீகாந்த் என்று பெயரில் மட்டும்தான்... இதைத் துறக்க முடியாமல்... கணவன் என்ற பெயரில் கல் இதயம் கொண்ட மனிதரை மறக்கவும் இயலாமல்... தத்தளிக்கிறேனே...

கோபியிடம் பெரியதாய் சொல்லிவிட்டு வந்தேன்...

'பழைய மீனாவாய் திரும்பி வருவேன்' என்று...

ஆனால்... அந்தப் பழைய மீனாவாக நான் இல்லையே... நிர்மலமான மனதுடன்... எந்தவித சிந்தனையும் இல்லாமல் சுதந்திரமாய் திரிந்து கொண்டிருந்த மீனா மறைந்துவிட்டாள்.

இப்போது இருப்பது... புது மீனா... சில மாதங்களே தன் கழுத்தில் தாலியை சுமந்த கடனுக்கு தன் மனதைப் பறிக்கொடுத்துவிட்ட முட்டாள் மீனா!

இனி... காலமெல்லாம் கண்ணீரும் பெருமூச்சும்தான். இரண்டு லட்சத்திற்கு விலை பேசியது தன் இதயத்தைத் தானோ... அதை விற்ற பின்பு யோசித்து என்ன பயன்... முடிந்து விட்ட கதைக்கு முன்னுரை எழுத முடியாது தான். நடந்தது நடந்ததுதான்...

''அண்ணி... இங்கே என்ன செய்து கொண்டிருக் கீங்க...'' என்று அருகில் வந்த புவனா... அவளது கண்கள் கலங்கியிருப்பதைப் பார்த்துவிட்டுப் பதறினாள்.

''என்ன அண்ணி... உங்களை தைரியசாலின்னு நினைத்தேன். ஆனா... இப்படிக் கலங்கி நிற்கிறீங்களே... இதோ பாருங்க அண்ணி... உங்க மனசை தேத்திக்கணும் இல்லாவிட்டால்... வாழ்க்கையே நரகமாகிவிடும். நீங்க இங்கு வந்திருப்பது எல்லாத்தையும் மறந்து சந்தோஷமா இருக்கணும்தான்... ஆனால் இங்கேயும் இப்படி அழுதா எப்படி'' என்று தேற்றினாள் புவனா.

''நீ சொல்வதுபோல தைரியமா இருக்கணும்... இனி கலங்கக் கூடாதுன்னு தான் நினைக்கிறேன் புவனா... ஆனால் என்னையும் மீறி வந்து விடுகிறது இந்தக் கண்ணீர். என்ன செய்ய...!'' என்று விம்மினாள் மீனா.

அவளது தோள்களை ஆதரவாய் அணைத்துக் கொண்டு கூறினாள் புவனா.

''அண்ணி... உங்க நல்ல உள்ளத்திற்கு கடவுள் நல்லது தான் செய்வார்... பாருங்களேன்... நல்ல வழி பிறக்கத் தான் போகிறது.... அதை உறுதியா நம்புங்க அண்ணி...''

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு... ஒரு பலவீனப் புன்னகையுடன் சொன்னாள் அவள்.

''நீங்கள் எல்லோரும் பேசும்போது எனக்குத் துணிவும் நம்பிக்கை வருகிறது.. ஆனால் தனியாக இருக்கும் போதுதான்...''

''தனியாக ஏன் இருக்க வேண்டும். தனிமையில்தான் மனசு பேயாய் அலையும் டி.வி. பாருங்க.... மாகஸின் படிங்க... வி.ஸி.டியில் படம் போட்டு ரசிங்க... எங்களோடு கேரம்... செஸ்னு ஆடலாம்... அப்போ எந்த நினைப்பும் வர வழியில்லை... சரி... இப்ப உள்ள வாங்க... டி.வி.யில் நல்ல படம் ஓடுகிறது... வந்து பாருங்க அண்ணி...''



கையைப் பிடித்து இழுத்துச் சென்றாள் புவனா.

அந்த வீட்டில் மீனாவும் ஒருத்தியாய் ஒன்றிப்போனாள்.

அந்த வீட்டில் இருந்தவர்கள் தன் சுற்றம் என்ற ஒட்டுதலுடன் வளைய வந்தாள்.

இங்கு வந்து ஐந்து நாட்கள் ஓடிப்போனது தெரிய வில்லை.

அன்று வெள்ளிக்கிழமை என்று புவனாவையும் மீனாவையும் கோவிலுக்கு அனுப்பி வைத்தாள் கௌரி.

அவர்கள் சென்ற ஒருமணி நேரத்தில் வாசலில் கார் வந்து நின்றது.

ஸ்ரீகாந்த் இறங்கினான்.

அவன் மீது கோபம் இருந்தாலும் ''வாப்பா'' என்று வரவேற்றார் சேது.

வந்ததும் ''மீனா எங்கே சித்தப்பா...'' என்று கேட்டான்.. அவனது பார்வை அவளைத் தேடி அலைந்தது.

அதே நேரம் கௌரியும் வந்தாள்.

''மீனா இங்கு இல்லை... கோவிலுக்குப் போயிருக்கா... ஆமாம்... அவள் இங்குதான் இருக்கிறாள் என்று உனக்கு எப்படித் தெரிந்தது...'' கள்ளச்சிரிப்புடன் கேட்டாள் கௌரி.

''ஆமாம்... எங்கப்பன் குதிரினுள் இல்லை என்று சொல்லிவிட்டாயே... அவனும் ஓடிவந்து விட்டான். அப்பா... ஸ்ரீகாந்த்... நீ மீனாவைப் பார்க்கறதுக்கு முன்... உன்கிட்ட நாங்க பேசணும்... அதைப்பேசறதுக்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது என்று நம்பறோம்... இதை உன் சித்தப்பா... சித்தியா கேட்கவில்லை... மீனாவோட கார்டியனா இருந்து ஒரு விஷயத்தைத் தெளிவுப் படுத்திக் கொள்ளத்தான் இப்ப நாங்க பேசுவது... அந்த நளினாங்கற பெண் விஷயத்தில் என்ன

முடிவு எடுத்திருக்கே... அவளுடைய நட்பு உனக்கு வேணும்னு தோன்றினால்.. மீனாவை மறந்து விடு... இல்லை... அவளைக் கைக்கழுவியாச்சுன்னு சொன்னா... எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை... தாராளமா நீ மீனாவை உன்னுடன் அழைத்துக் கொண்டு போக லாம்... நாங்க தடையா இருக்கமாட்டோம்..." கண்டிப் பான குரலில் சேது சொன்னார்.

"சித்தப்பா... நீங்கள் முழு விபரத்தையும் தெரிந்து கொள்ளாமல் பேசுகிறீர்கள்... உங்க முகத்தையெல்லாம் பார்க்க எனக்குத் துணிவு இல்லை... அந்த மாதிரியான ஒரு அசிங்கமான செயலை செய்தது என் தப்புதான். ஆனால் எப்போ மீனாவை மணந்தேனோ... அன்றிலிருந்து நான் நளினா பக்கம் திரும்பவே இல்லை... கள்ளுக் குடித்த மாதிரி அவள்கிட்டே மயங்கி இருந்ததை ஒப்புக் கொள்கிறேன்... அதைச் சொல்றதுக்கு நாக்கு கூசுகிறது... இப்போ நான் தெளிவா இருக்கேன் சித்தப்பா... என் மனசில் இருப்பது மீனாதான்... எனக்கு மீனா வேண்டும்... அவள் முன் நளினாவெல்லாம் தூசுக்கு சமம் என்று நன்றாகப் புரிந்து கொண்டு விட்டேன்..." அவனது குரலில் தெரிந்த உறுதியைக் கண்டு இருவரும் விழித்தனர்.

"என்னப்பா... நீ இப்படிச் சொல்றே... ஆனா... அந்த நளினா... மீனாவிடம் ஏதேதோ பிதற்றினாளாமே... மீனா போன் செய்தபோது... நீ அங்கிருந்தவாறே பேசப் பிடிக்கவில்லைன்னு சொன்னதாய்..." என்றாள் கௌரி.

"அதெல்லாம் நளினா செய்த தில்லுமுல்லுத்தனம் சித்தி... அவளிடம் போய் என் வாழ்க்கையில் மீனா மட்டும்தான்... இனிக் குறிக்கிடாதே... என்று சொல்லி விட்டு ஆபீஸிக்கு போய்விட்டேன். அந்தக் கோபத்தை



எல்லாம் மீனாவிடம் காட்டிவிட்டாள்... அந்த நேரம் பார்த்து அம்மா சீரியஸ் என்ற விஷயம் சொல்லப் போன் பண்ணியிருக்கிறாள் மீனா... ஏதேதோ கதையளந்து... மீனாவிடம் எனக்குப் பேச விருப்பம் இல்லைன்னு சொன்னதாகப் பொய் சொல்லி வஞ்சம் தீர்த்து விட்டாள்... அவளுடைய கேவலமான குணம் அப்புறமாதான் எனக்குத் தெரியவந்தது சித்தப்பா... மீனாவிடம் மனம் விட்டுப் பேச வேண்டும் என்று நினைத்தபோதுதான் அம்மா இறந்து போனது. அந்த துக்கத்தில்... மீனாவிடம் எதையும் சொல்ல முடியாமல் போனது என் துர் அதிர்ஷ்டம்... பாவம் மீனா... நளினா சொன்னதை வைத்து... இனி இருக்கக் கூடாது என்று புறப்பட்டுவிட்டாள்... இதுதான் உண்மை... சித்தப்பா..." அவனது முகத்தில் வருத்தம் தெரிந்தது.

"அப்பப்பா... அவள் என்ன... பெண்ணா... இல்லை... ராட்சசியா... இந்த மாதிரி அரக்கியை நான் பார்த்ததே இல்லைப்பா... நல்லவேளை. நீ அவளை உதறிவிட் டாய்... உன் அதிர்ஷ்டம்... மீனா உனக்கு மனைவியா வந்தது... மீனா... குடும்பத்துக்கு ஏத்த ரத்தினம்ப்பா..."

"திருஷ்டி கழிஞ்சமாதிரி எல்லாம் முடிந்துவிட்டது. இனிமே உங்க வாழ்க்கையில் எந்தக் கஷ்டமும் வரா துப்பா..." என்று கௌரி சொன்னாள்.

"மீனாவை உடனேப் பார்க்க வேண்டுமே சித்தி..." கெஞ்சும் குரலில் அவன் சொல்ல...

அவனது தவிப்பை உணர்ந்த கௌரி... "சீக்கிரம் வந்து விடுவாள்... அதோ வந்தாச்சு... பார்..." என்று வாசலைச் சுட்டிக் காட்டினாள்.

வீட்டிற்குள் நுழைந்ததும் மீனாவின் கண்ணில் பட்டது ஸ்ரீகாந்தின் கார்தான்.

அதைப்பார்த்ததும் இதயம் வேகமாய் துடித்த.

கோவிலில் வேண்டியது வீண் போகவில்லை.

"தாயே... சின்ன வயதிலிருந்து எனக்காக எதையும் வேண்டியதில்லை... இன்று... முதன்முதலாய் உன் முன் கை ஏந்தி நிற்கிறேன்... என் வாழ்க்கையை எனக்குத் திருப்பிக் கொடு... என் கணவர் மனம் மாறி என்னைத் தேடி வரும்படி செய்..." என்று அந்த அகிலாண்ட .யகியை கண்ணீர் மல்க வேண்டியது நடந்தே வி அ ள் பரவசம் பரவியது..

வீட்டினுள் நுழைந்தபோது... ஸ்ரீகாந்த் அ அமர்ந்திருப்பதைக் கண்டதும் நின்றுவிட்டாள்...

அவர் வந்திருப்பது எனக்காகவா... இல்லை...

மீனாவைப் பார்த்ததும் ஸ்ரீகாந்த் எழுந்து நின்ற

அவள் ஒவ்வொரு படியாய் ஏறிவருவதை ப வாறு... கண்களை விலக்க சக்தியின்றி நின்றிருந்தா

அங்கு மட்டும் யாரும் இல்லாமல் இருந்திருந ஓடிச்சென்று அவளை அணைத்திருப்பான்... அத்த வேகம் உள்ளுக்குள்...

அவனது பார்வையிலேயே கணவனின் மன அறிந்து கொண்ட மீனாவிற்கு உடம்பு முழுக்க சிலி

எல்லோரும் மாயமாகி... அந்த இடத்தில் தானு ஸ்ரீகாந்தும் மட்டுமே இருப்பதுபோல உணர்ந்தாள்.

இருவரின் பார்வை பரிமாற்றத்தைப் பார்த்து விட்டு சேது சித்தப்பா... கௌரிக்கு சைகைக்காட்டிவிட்டு செல்ல... கௌரி. மகளுக்கு கண்சாடைக் காட்டிவிட்டு நகர்ந்தாள். புவனா அங்கிருந்து நழுவினாள்.

எத்தனை நேரம் கழிந்ததோ... இருவரும் உணரும் நிலையில் இல்லை...



'இங்கு வாயேன்' என்பது போல அவன் தன் இரு கரங்களையும் விரித்து... நீட்டி அழைக்க... அதுக்காகவே காத்து இருந்தாற்போல அவளும் ஓடிவந்து அவனிடம் ஒன்றினாள்.

அவனது வலிய கரங்களில் அரவணைப்பில் ஒன்றி... அகன்ற மார்பில் முகம் புதைத்தவளுக்கு உலகமே மறந்து போனது... பூரிப்பில் இதயம் வெடித்துவிடும் போல ந்தது.

தன் வாழ்க்கையில் இந்த கணத்திற்காகவே வாழ்ந்த திரி ஒரு 'சிலீர்' உணர்வு அவனுள் சிலுப்பிக் கொண்டு டுருவியது...

"மீனா... நான் செய்த மகா தப்பிற்கு மன்னிப்பு ண்டா..." என்று கேட்டான் அவன்.

அவன் எதைக் குறிப்பிடுகிறான் என்பது அவளுக்கு ந்தது.

'நளினா' என்ற பெயரை உச்சரிக்கவும் அவனுக்குப் பிடிக்கவில்லை என்பதை அறிந்து கொண்டாள்...

"நிச்சயம் உண்டு.. ஏன் தெரியுமா... அந்த நளினா தான் ம் சந்திப்பதற்கு காரணமாக இருந்தது... நம் கல்யாணத் றகும் அவள்தான் காரணம்... அந்த விதத்தில் அவளுக் நான் நன்றி சொல்லணும்... இனி பழசைப் பத்தி நினைக் கவே வேண்டாம்.. கசப்பான பழைய நினைவுகளைக் கெட்ட கன வா நினைத்து மறந்து விடுவோம்... நல்லதை மட்டுமே நாம் நினைப்போமே..."

"உண்மைதான் மீனா... பழைய குப்பை நினைவுகளின் மத்தியில் உன்னைச் ந்தித்த நினைப்பு மட்டும் என்னுள் பொக்கிஷமா இருக்கு ம்..." என்று சொன்னபோது அவனது அணைப்பு இன் வும் இறுகியது.

"நான் வீட்டிற்கு வந்தபோது நீ அங்கே இல்லாததைக் கண்டு நான் பட்ட தவிப்பு... என்னில் பாதி கழண்டு போனது மாதிரி இருந்தது... அப்போதுதான் தெரிந்தது. நீயில்லாமல் நான் வாழவே முடியாது என்று... நீ எங்கே போனாயோ... எப்படியெல்லாம் கஷ்டப்படுகிறாயோ என்ற கலக்கம் வேறு. நளினாவின் பேச்சை உண்மைன்னு நினைத்து என்னை வெறுத்து விட்டாயோ... இனி உன்னைப் பார்க்கவே முடியாதோங்கற பயம்... எல்லாம் சேர்ந்து என்னை ஆட்டுவித்தது மீனா... இனி காலம் முழுவதும் உன்னுடன் தான்... உன்னைப் பிரிந்து ஒரு நிமிஷமும் என்னால் இருக்க முடியாது. நீ என்னை வெறுத்தாலும் பரவாயில்லை... நீதான் வேண்டும் என்று உன்னிடம் சொல்ல ஓடிவந்தேன் மீனா... நீ என்னை வெறுக்கவில்லை தானே..."

அவளது முகத்தை நிமிர்த்தி... கேட்டான்.

"என் கண்களில் வெறுப்பா தெரிகிறது... எங்கே பாருங்கள் விரிந்த கண்களால் அவனைப் பார்க்க..." அவனும் அவளது விழிகளை உற்றுப் பார்த்தான்...

மனதைப் படம் பிடித்துக் காட்டும் விழிகளில் எதைப் படித்தானோ தெரியாது...

அதைப் புரிந்து கொண்டதன் அடையாளமாய் அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

மறுபடியும் எங்கிருந்தோ மாமரத்துக் குயில் 'க்கூ'வ என்று கூவியது...

மழை வருமோ... அதுதான் கூவுகிறதோ...

மீனாவிற்கு அது சோககீதமாய் இப்போது படவில்லை...

சந்தோஷத்தின் வெளிப்பாடாகத் தெரிந்தது...

தனது இதயத்தின் ராகம் போல...!

❋